www.Padasalai.Net www.CBSEtips.in

ஏழ்மையும் அறியாமையும் கனவுகளை
அழித்துவிட அனுமதியோம்...

# தமிழ்

## திறனறித் தேர்வு – பயிற்சி ஏடு

(11–ம் வகுப்பு மாணவர்கள்)

**6 முதல் 10–ம் வகுப்பு வரையிலான**
**பாடத்திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது**

**TNPSC – GROUP – II, IIA, IV, VII, VIII, VAO,**

**TET PAPER – I, II, TNUSRB, POLICE SI**

ஆகிய அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும்
பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(இந்தப் புத்தகம் விற்பனைக்கு அன்று,
வேண்டுபவர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்)

---

பேரன்புடன்...
கோ.செந்தில்குமார், எம்.ஏ., எம்ஃபில்., பி.எட்
பட்டதாரி தமிழாசிரியர்
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி,
அல்லிநகரம்,
தேனிமாவட்டம் – 625531
பேசுவதற்கு : 99420 52222

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



# பொருளடக்கம்

## ஆறாம் வகுப்பு


| வ.எண் | பாடத்தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| | **கவிதைப்பேழை** | |
| 1 | இன்பத்தமிழ் | 1 |
| 2 | தமிழ் எங்கள் | 1 |
| 3 | தமிழ்க்கும்மி | 1 |
| 4 | சிலப்பதிகாரம் | 2 |
| 5 | காணிநிலம் | 2 |
| 6 | திருக்குறள் | 3 |
| 7 | அறிவியல் ஆத்திச்சூடி | 4 |
| 8 | அறிவியலால் ஆள்வோம் | 4 |
| 9 | மூதுரை | 4 |
| 10 | துன்பம் வெல்லும் கல்வி | 5 |
| 11 | ஆசாரக்கோவை | 5 |
| 12 | கண்மணியே கண்ணுறங்கு | 5 |
| 13 | திருக்குறள் | 6 |
| 14 | நானிலம் படைத்தவன் | 7 |
| 15 | கடலோடு விளையாடு | 7 |
| 16 | பாரதம் அன்றைய நாற்றங்கால் | 8 |
| 17 | பராபரக் கண்ணி | 8 |
| 18 | நீங்கள் நல்லவர் | 8 |
| 19 | திருக்குறள் | 9 |
| 20 | ஆசியஜோதி | 10 |
| | **உரைநடை உலகம்** | |
| 21 | வளர்தமிழ் | 10 |
| 22 | சிறகின் ஓசை | 12 |
| 23 | கணியனின் நண்பன் | 13 |
| 24 | கல்விக்கண் திறந்தவர் | 13 |
| 25 | தமிழர் பெருவிழா | 14 |
| 26 | வளரும் வணிகம் | 15 |
| 27 | தமிழ் நாட்டில் காந்தி | 16 |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

சே. செந்தில்குமார் எம்.ஏ., எம்.பில்., பி.எட்., பட்டதாரி தமிழ் ஆசிரியர்
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, அல்லிநகரம், தேனி மாவட்டம். பேசுவதற்கு: 99420 52222

| | | |
|---|---|---|
| 28 | பசிப்பிணி போக்கிய பாவை | 16 |
| 29 | மனிதநேயம் | 17 |
| | **விரிவானம்** | |
| 30 | கனவு பலித்தது | 18 |
| 31 | கிழவனும் கடலும் | 18 |
| 32 | ஒளி பிறந்தது | 18 |
| 33 | நூலகம் நோக்கி | 19 |
| 34 | மனம் கவரும் மாமல்லபுரம் | 20 |
| 35 | உழைப்பே மூலதனம் | 20 |
| 36 | வேலுநாச்சியார் | 20 |
| 37 | பாதம் | 21 |
| 38 | முடிவில் ஒரு தொடக்கம் | 21 |
| | **இலக்கணம்** | |
| 39 | தமிழ் எழுத்துகளின் வகை தொகை | 22 |
| 40 | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | 22 |
| 41 | மொழிமுதல், இறுதி எழுத்துகள் | 23 |
| 42 | இன எழுத்துகள் | 24 |
| 43 | மயங்கொலிகள் | 25 |
| 44 | சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள் | 26 |
| 45 | நால்வகைச் சொற்கள் | 27 |
| 46 | பெயர்ச்சொல் | 28 |
| 47 | அணி இலக்கணம் | 29 |
| 48 | புத்தக வினா வங்கி | 30 |

## ஏழாம் வகுப்பு

| வ.எண் | பாடத்தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| | **கவிதைப்பேழை** | |
| 1 | எங்கள் தமிழ் | 40 |
| 2 | தமிழ்மொழி மரபு | 40 |
| 3 | ஓடை | 41 |
| 4 | காடு | 41 |
| 5 | திருக்குறள் | 42 |
| 6 | கலங்கரை விளக்கம் | 43 |
| 7 | கவின்மிகு கப்பல் | 43 |
| 8 | இன்பத்தமிழ்க் கல்வி | 44 |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| 9 | கல்வி அழகே அழகு | 44 |
| 10 | ஒரு வேண்டுகோள் | 45 |
| 11 | கீரைப்பாத்தியும் குதிரையும் | 45 |
| 12 | திருக்குறள் | 45 |
| 13 | விருந்தோம்பல் | 46 |
| 14 | வயலும் வாழ்வும் | 47 |
| 15 | புலி தங்கிய குகை | 47 |
| 16 | தேசிங்குராசன் | 48 |
| 17 | புதுமை விளக்கு | 48 |
| 18 | அறம் என்னும் கதிர் | 49 |
| 19 | திருக்குறள் | 49 |
| 20 | மலைப்பொழிவு | 50 |
| 21 | தன்னை அறிதல் | 51 |
| **உரைநடை உலகம்** | | |
| 22 | பேச்சுமொழியும் எழுத்துமொழியும் | 51 |
| 23 | விலங்குகள் உலகம் | 52 |
| 24 | தமிழரின் கப்பற்கலை | 52 |
| 25 | வாழ்விக்கும் கல்வி | 54 |
| 26 | பேசும் ஓவியங்கள் | 54 |
| 27 | திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி | 55 |
| 28 | பசும்பொன் முத்துராமலிங்கரின் பேச்சாற்றல் | 57 |
| 29 | ஒப்புரவு நெறி | 59 |
| 30 | கண்ணியமிகு தலைவர் | 60 |
| **விரிவானம்** | | |
| 31 | சொலவடைகள் (பொம்மலாட்டம்) | 61 |
| 32 | இந்திய வனமகன் | 62 |
| 33 | ஆழ்கடலின் அடியில் | 62 |
| 34 | பள்ளி மறுதிறப்பு | 62 |
| 35 | தமிழ் ஒளிர் இடங்கள் | 62 |
| 36 | திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் | 64 |
| 37 | கப்பலோட்டிய தமிழர் | 65 |
| 38 | உண்மை ஒளி | 67 |
| 39 | பயணம் | 67 |
| **இலக்கணம்** | | |
| 40 | குற்றியலுகரம், குற்றியலிகரம் | 67 |
| 41 | நால்வகைக் குறுக்கங்கள் | 68 |
| 42 | இலக்கியவகைச் சொற்கள் | 69 |



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| 43 | ஓரெழுத்து, ஒருமொழி, பகுபதம், பகாப்பதம் | 70 |
| 44 | தொழிற்பெயர் | 72 |
| 45 | அணி இலக்கணம் | 72 |
| 46 | வழக்கு | 73 |
| 47 | அணி இலக்கணம் | 75 |
| 48 | ஆகு பெயர் | 75 |
| 49 | புத்தக வினா வங்கி | 77 |

## எட்டாம் வகுப்பு

| வ.எண் | பாடத்தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| | **கவிதைப்பேழை** | |
| 1 | தமிழ்மொழி வாழ்த்து | 87 |
| 2 | தமிழ்மொழி மரபு | 87 |
| 3 | ஓடை - வாணிதாசன் | 88 |
| 4 | கோணக்காத்துப் பாட்டு | 88 |
| 5 | நோயும் மருந்தும் | 89 |
| 6 | வருமுன் காப்போம் | 89 |
| 7 | நீதிநெறி விளக்கம் - கல்வி அழகே அழகு | 90 |
| 8 | புத்தியைத் தீட்டு | 90 |
| 9 | திருக்கேதாரம் | 90 |
| 10 | பாடறிந்து ஒழுகுதல் | 91 |
| 11 | வளம் பெருகுக | 91 |
| 12 | மழைச்சோறு | 92 |
| 13 | படை வேழம் | 92 |
| 14 | விடுதலைத் திருநாள் | 92 |
| 15 | ஒன்றே குலம் | 93 |
| 16 | மெய்ஞ்ஞான ஒளி | 93 |
| 17 | உயிர்க்குணங்கள் | 94 |
| 18 | இளைய தோழனுக்கு | 94 |
| | **உரைநடை உலகம்** | |
| 19 | தமிழ் வரிவடிவ வளர்ச்சி | 95 |
| 20 | நிலம் பொது | 96 |
| 21 | தமிழ் மருத்துவம் | 96 |
| 22 | பல்துறைக் கல்வி – திரு. வி. க | 97 |
| 23 | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் | 98 |
| 24 | கொங்குநாட்டு வணிகம் | 99 |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



## தமிழ் - திறனறித் தேர்வு பயிற்சி ஏடு (பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள்)


| | | |
|---|---|---|
| 25 | பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் | 102 |
| 26 | அயோத்திதாசர் சிந்தனைகள் | 103 |
| 27 | சட்டமேதை அம்பேத்கர் | 106 |
| | **விரிவானம்** | |
| 28 | சொற்பூங்கா | 109 |
| 29 | வெட்டுக்கிளியும் சருகுமானும | 110 |
| 30 | தலைக்குள் ஓர் உலகம் | 110 |
| 31 | ஆன்ற குடிப்பிறத்தல் | 112 |
| 32 | தமிழர் இசைக்கருவிகள் | 112 |
| 33 | காலம் உடன் வரும் | 116 |
| 34 | அறிவுசால் ஔவையார் | 116 |
| 35 | மனித யந்திரம் | 116 |
| 36 | பால் மனம் | 117 |
| | **இலக்கணம்** | |
| 37 | எழுத்துகளின் பிறப்பு | 117 |
| 38 | வினைமுற்று | 118 |
| 39 | எச்சம் | 119 |
| 40 | வேற்றுமை | 120 |
| 41 | தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் | 124 |
| 42 | புணர்ச்சி | 127 |
| 42 | வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் | 128 |
| 44 | யாப்பு இலக்கணம் | 129 |
| 45 | அணி இலக்கணம் | 130 |
| 46 | புத்தக வினா வங்கி | 131 |

## ஒன்பதாம் வகுப்பு

| வ.எண் | பாடத்தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| | **கவிதைப்பேழை** | |
| 1 | தமிழோவியம் - ஈரோடு தமிழன்பன் | 141 |
| 2 | தமிழ்விடுதூது | 141 |
| 3 | பட்ட மரம் | 142 |
| 4 | பெரியபுராணம் | 143 |
| 5 | புறநானூறு | 143 |
| 6 | மணிமேகலை– சீத்தலைச் சாத்தனார் | 144 |
| 7 | திருக்குறள் | 145 |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com Whatsapp No: 7358965593

சே. செந்தில்குமார் எம்.ஏ., எம்.பில்., பி.எட்., பட்டதாரி தமிழ் ஆசிரியர்,
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, அல்லிநகரம், தேனி மாவட்டம். பேசுவதற்கு: 99420 52222

| | | |
|---|---|---|
| 8 | ஓ, என் சமகாலத் தோழர்களே! | 146 |
| 9 | குடும்ப விளக்கு– பாரதிதாசன் | 147 |
| 10 | சிறுபஞ்ச மூலம் | 148 |
| 11 | இராவண காவியம் - புலவர் குழந்தை | 149 |
| 12 | நாச்சியார் திருமொழி | 149 |
| 13 | சீவக சிந்தாமணி | 150 |
| 14 | முத்தொள்ளாயிரம | 151 |
| 15 | மதுரைக்காஞ்சி | 152 |
| 16 | ஒளியின் அழைப்பு– நா. பிச்சமூர்த்தி | 152 |
| 17 | தாவோ தே ஜிங் - லாவோட்சு | 153 |
| 18 | அக்கறை | 154 |
| 19 | குறுந்தொகை | 154 |
| **உரைநடை உலகம்** | | |
| 20 | திராவிட மொழிக் குடும்பம் | 155 |
| 21 | நீரின்றி அமையாது உலகு | 157 |
| 22 | ஏறுதழுவுதல் | 159 |
| 23 | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் | 160 |
| 24 | கல்வியில் சிறந்த பெண்கள் | 162 |
| 25 | சிற்பக்கலை | 164 |
| 26 | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | 165 |
| 27 | பெரியாரின் சிந்தனைகள் | 167 |
| 28 | விரிவாகும் ஆளுமை | 168 |
| **விரிவானம்** | | |
| 29 | வளரும் செல்வம் | 170 |
| 30 | தண்ணீர் - (கந்தர்வன்) | 171 |
| 31 | அகழாய்வுகள் | 171 |
| 32 | விண்ணையும் சாடுவோம் | 172 |
| 33 | வீட்டிற்கோர் புத்தகசாலை | 174 |
| 34 | செய்தி – தி. ஜானகிராமன் | 176 |
| 35 | சந்தை | 176 |
| 36 | மகனுக்கு எழுதிய கடிதம் - நா. முத்துக்குமார் | 177 |
| 37 | தாய்மைக்கு வறட்சி இல்லை! – சு. சமுத்திரம் | 177 |
| **இலக்கணம்** | | |
| 38 | தொடர் இலக்கணம் | 178 |
| 39 | துணைவினைகள் | 182 |


Padasalai.Net

## தமிழ் - திறனறித் தேர்வு பயிற்சி ஏடு (பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள்)


| | | |
|---|---|---|
| 40 | வல்லினம் மிகும் இடங்கள் | 183 |
| 41 | வல்லினம் மிகா இடங்கள் | 185 |
| 42 | இடைச்சொல் - உரிச்சொல் | 186 |
| 43 | புணர்ச்சி | 189 |
| 44 | ஆகுபெயர் | 191 |
| 45 | யாப்பிலக்கணம் | 193 |
| 46 | அணியிலக்கணம் | 195 |
| 47 | புத்தக வினா வங்கி | 198 |

## பத்தாம் வகுப்பு

| வ.எண் | பாடத்தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| | **கவிதைப்பேழை** | |
| 1 | அன்னை மொழியே | 202 |
| 2 | இரட்டுற மொழிதல் - | 202 |
| 3 | காற்றே வா – பாரதியார் | 202 |
| 4 | முல்லைப்பாட்டு – நப்பூதனார் | 203 |
| 5 | காசிக்காண்டம் - அதிவீரராம பாண்டியர் | 203 |
| 6 | மலைபடுகடாம் - பெருங்கௌசிகனார் | 204 |
| 7 | பெருமாள் திருமொழி – குலசேகராழ்வார் | 205 |
| 8 | பரிபாடல் - கீரந்தையார் | 205 |
| 9 | நீதிவெண்பா –கா.ப. செய்குதம்பிப் பாவலர் | 206 |
| 10 | திருவிளையாடற்புராணம் | 206 |
| 11 | பூத்தொடுத்தல் - உமாமகேஸ்வரி | 207 |
| 12 | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர் | 207 |
| 13 | கம்பராமாயணம் | 208 |
| 14 | ஏர் புதிதா?– கு. ப. ராஜகோபாலன் | 208 |
| 15 | சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள் | 209 |
| 16 | ஞானம் - தி.சொ. வேணுகோபலன் | 210 |
| 17 | காலக்கணிதம் - கண்ணதாசன் | 210 |
| 18 | சித்தாளு – நாகூர் ரூமி | 211 |
| 19 | தேம்பாவணி– வீரமாமுனிவர் | 211 |
| | **உரைநடை உலகம்** | |
| 20 | தமிழ்ச்சொல் வளம் - தேவநேயப் பாவாணர் | 212 |
| 21 | கேட்கிறதா என் குரல் | 214 |
| 22 | விருந்து போற்றுதும்! | 215 |
| 23 | செயற்கை நுண்ணறிவு | 216 |

| | | |
|---|---|---|
| 24 | மொழிபெயர்ப்புக் கல்வி | 217 |
| 25 | நிகழ்கலை | 219 |
| 26 | சிற்றகல் ஒளி – ம.பொ சிவஞானம் | 220 |
| 27 | சங்க இலக்கியத்தில் அறம் | 222 |
| 28 | ஜெயகாந்தம் - நினைவு இதழ் | 223 |
| **விரிவானம்** | | |
| 30 | உரைநடையின் அணிநலன்கள் - எழில் முதல்வன் | 224 |
| 31 | புயலிலே ஒரு தோணி – ப. சிங்காரம் | 225 |
| 32 | கோமல்லபுரத்து மக்கள் - கி. ராஜநாராயணன் | 226 |
| 33 | விண்ணைத்தாண்டிய தன்னம்பிக்கை | 226 |
| 34 | புதிய நம்பிக்கை – கமலாலயன் | 228 |
| 35 | பாய்ச்சல் - சா. கந்தசாமி | 228 |
| 36 | மங்கையராய்ப் பிறப்பதற்கே.... | 228 |
| 37 | இராமானுசர்- நாடகம் | 230 |
| 38 | ஒருவன் இருக்கிறான் - கு. அழகிரிசாமி | 230 |
| **இலக்கணம்** | | |
| 39 | எழுத்து சொல் | 230 |
| 40 | தொகைநிலைத் தொடர்கள் | 232 |
| 41 | தொகாநிலைத் தொடர்கள் | 233 |
| 42 | இலக்கணம் - பொது | 234 |
| 43 | வினாவிடைவகை, பொருள்கோள் | 236 |
| 44 | அகப்பொருள் இலக்கணம் | 238 |
| 45 | புறப்பொருள் இலக்கணம் | 240 |
| 46 | பா- வகை அலகிடுதல் | 241 |
| 47 | அணி | 242 |
| 48 | புத்தக வினா வங்கி | 244 |
| | | |
| 1 | **மாதிரி வினா வங்கி** | 248 |


Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# ஆறாம் வகுப்பு
# கவிதைப் பேழை
## இயல் 1
## இன்பத்தமிழ்

### தமிழ் எங்கள்

| | | |
|---|---|---|
| ➢ உயிர்க்கு | - | நேர் |
| ➢ விளைவுக்கு | - | நீர் |
| ➢ நிருமித்த | - | ஊர் |
| ➢ புலவருக்கு | - | வேல் |
| ➢ இளமைக்கு | - | பால் |
| ➢ உயர்வுக்கு | - | வான் |
| ➢ அறிவுக்கு | - | தோள் |
| ➢ வயிரத்தின் | - | வாள் |

- ஆசிரியர் : பாரதிதாசன்
- பாரதிதாசன் தமிழை அமுது, நிலவு, மணம், இளமை, உயர்வு, அறிவு என்று உருவகப்படுத்தியுள்ளார்.
- பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்.
- பாரதியாரின் மீது கொண்ட பற்றினால் தன் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார்.
- பாரதிதாசன் பெண்கல்வி, கைம்பெண்மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடியுள்ளார்.
- புரட்சிக்கவி, பாவேந்தர் என்று அழைக்கப்பட்டவர் பாரதிதாசன்.

**தமிழே உன்னை நினைக்கும்**

**தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்"**

என்ற பாடலைப் பாடியவர்

- **கவிஞர் காசி ஆனந்தன்**

**தமிழே உயிரே வணக்கம்**

**அமிழ்தே நீ இல்லை என்றால்**

**அத்தனையும்**

**வாழ்வில் கசக்கும் புளிக்கும்**

என்று பாடியவர் - **காசி ஆனந்தன்**

**பொருள் கூறுக**

| | | |
|---|---|---|
| ➢ நிருமித்த | - | உருவாக்கிய |
| ➢ சமூகம் | - | மக்கள் குழு |
| ➢ விளைவு | - | விளைச்சல் |
| ➢ அசதி | - | சோர்வு |

## தமிழ்க்கும்மி

- ஆசிரியர் : பெருஞ்சித்திரனார்

**கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி இளங்**

**கோதையரே கும்மி கொட்டுங்கடி – நிலம்**

**எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்**

**எட்டிடவே கும்மி கொட்டுங்கடி!**

**சொல்லும் பொருளும்:**

| | | |
|---|---|---|
| ஆழிப்பெருக்கு | - | கடல்கோள் |
| ஊழி | - | நீண்டதொரு காலப்பகுதி |
| மேதினி | - | உலகம் |
| உள்ளப்பூட்டு | - | உள்ளத்தின் அறியாமை |

- பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் - மாணிக்கம்.
- மாணிக்கம் அவர்கள் பாவலரேறு என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்படுகிறார்.
- பெருஞ்சித்திரனார் எழுதிய நூல்கள் கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம்.
- பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்கள் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்.
- தனித்தமிழையும் தமிழ் உணர்வையும் பரப்பியவர் பாவலர் பெருஞ்சித்திரனார்.
- தமிழ்கும்மி என்ற பாடல் இடம்பெற்ற நூல்

  - கனிச்சாறு.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

இந்நூல் 8 தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

- தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டுள்ள நூல் கனிச்சாறு
- **“வான் தோன்றி, வளிதோன்றி, நெருப்புத்தோன்றி” என்ற பாடலை இயற்றியவர் - வாணிதாசன்.**

## இயல் 2
## சிலப்பதிகாரம்

**திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**கொங்கு அலர்தார்ச் சென்னி**
**குளிர் வெண்குடை போன்றுஇவ்**
**அங்கண் உலகு அளித்த லான்.**

**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு**
**மேரு வலம் திரிதலான்.**

**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்**
**மேல்நின்று தான் சுரத்தலான்.**

**- இளங்கோவடிகள்.**

### சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| திங்கள் | - நிலவு |
| பொற்கோட்டு | - பொன்மயமான சிகரத்தில் |
| கொங்கு | - மகரந்தம் |
| மேரு | - இமயமலை |
| அலர் | - மலர்தல் |
| நாமநீர் | - அச்சம் தரும் கடல் |
| திகிரி | - ஆணைச் சக்கரம் |
| அளி | - கருணை |

- ஆசிரியர் இளங்கோவடிகள்.
- நிலவின் குளிர்ச்சியையும் கதிரவனின் வெம்மையையும், மழையின் பயனையும் சிலப்பதிகாரம் பாராட்டுகிறது.
- சோழ மன்னனின் மாலை - ஆத்தி மலர் மாலை.
- சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் சேர மரபைச் சேர்ந்தவர்.
- இளங்கோவடிகள் கிபி 2ம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
- சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
- சிலப்பதிகாரம் தமிழின் முதல் காப்பியம்.
- முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றெல்லாம் போற்றப்படும்.
- இரட்டைக் காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை.
- திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாக சிலப்பதிகாரம் தொடங்குகிறது.

## காணிநிலம்

**காணி நிலம் வேண்டும் - பராசக்தி**
**காணி நிலம் வேண்டும் - அங்குத்**
**தூணில் அழகியதாய் நன்மாடங்கள்**
**துய்ய நிறத்தினதாய் - அந்தக்**
**காணி நிலத்திடையே - ஓர் மாளிகை**
**கட்டித் தரவேண்டும் - அங்குக்**
**கேணி அருகினிலே - தென்னைமரம்**
**கீற்றும் இளநீரும்**
**பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்**
**பக்கத்திலே வேணும் - நல்ல**
**முத்துச்சுடர் போலே - நிலாவொளி**
**முன்பு வரவேணும் - அங்குக்**
**கத்துங் குயிலோசை - சற்றே வந்து**
**காதில் படவேணும் என்றன்**
**சித்தம் மகிழ்ந்திடவே நன்றாய் இளம்**
**தென்றல் வரவேணும்**

**- பாரதியார்**

# தமிழ் - திறனறித் தேர்வு பயிற்சி ஏடு (பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள்)

**சொல்லும் பொருளும்**

காணி - நில அளவைக் குறிக்கும் சொல்
மாடங்கள் - மாளிகையின் அடுக்குகள்
சித்தம் - உள்ளம்

- ஆசிரியர் - பாரதியார்.
- வீடு என்பது எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனை செய்தவர் - பாரதியார்.
- பாரதியார் காணி நிலத்தில் மாளிகை, மாடம், கேணி,தென்னைமரம், நிலவொளி, குயிலோசை ஆகியவற்றை பாடியுள்ளார்.
- 20ம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களுள் ஒருவர் பாரதியார் ஆவார்.
- பாரதியின் இயற்பெயர் சுப்பிரமணியன். இளமையில் கவிபாடும் திறன் பெற்று விளங்கியவர் - பாரதியார்.
- எட்டையபுரம் மன்னரால் "பாரதி" என்னும் பட்டம் சுப்பிரமணியனுக்கு வழங்கப்பட்டது.
- பாரதி தன் கவிதையின் வழியாக விடுதலை உணர்வை ஊட்டியவர். மண் உரிமைக்காவும், பெண் உரிமைக்காவும் பாடியவர் பாரதியார்.
- நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்க பாடல்களைப் பாடிய புலவர் பாரதியார்.
- பாரதியார் எழுதிய நூல்கள் - பாஞ்சாலி சபதம், கண்ணன்பாட்டு, குயில்பாட்டு முதலியன பல நூல்களை இயற்றி உள்ளார்.
- 'காணி நிலம்' பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

## திருக்குறள்

- மக்கள் பயனுள்ள முறையில் வாழ வழிகாட்டிகளாக அமைபவை - அறநூல்கள்.
- திருக்குறள் 'உலகப் பொது மறை' என்று போற்றப்படும் நூல்.
- வள்ளுவரின் வேறு பெயர்கள் வான்புகழ் வள்ளுவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர்.
- திருக்குறளில் உள்ள 3 பிரிவுகள் அறத்துப்பால்,பொருட்பால், காமத்துப்பால்.
- திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- திருக்குறள் 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களை கொண்டது
- "திருக்குறளில் இல்லாததும் இல்லை சொல்லாததும் இல்லை" என்ற வகையில் சிறந்து விளங்குகிறது.
- திருக்குறளுக்கு வழங்கும் சிறப்பு பெயர் பொதுமறை, வாயுறை வாழ்த்து, தெய்வநூல்.

**கடவுள் வாழ்த்து**

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

**பொருள்:** அகரமே எழுத்துக்களுக்குத் தொடக்கம். அதுபோல ஆதி பகவனே உலகுக்குத் தொடக்கம்.

**வான் சிறப்பு**

2. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

**பொருள்:** மழை உரியகாலத்தில் பெய்யாது போனால், உலகத்து உயிர்களை எல்லாம் பசி துன்புறுத்தும்.

3.கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

**பொருள்:** உரிய காலத்தில் பெய்யாது கெடுப்பதும் மழைதான். உரிய காலத்தில் பெய்து காப்பதும் மழைதான்.

**நீத்தார் பெருமை**

4. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

www.Padasalai.Net www.CBSEtips.in


**பொருள்:** முடியாத செயலையும் முடித்துக் காட்டுபவர் பெரியோர். முடியாது என்பவர் சிறியோர்.

**மக்கட்பேறு**

5. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து

மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

**பொருள்:** தம்மைவிடத் தம் பிள்ளைகள் அறிவுடையோர் என்றால் மக்களுக்கு அதுதான் மகிழ்ச்சி.

6. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்.

**பொருள்:** தன் பிள்ளையின் புகழைக் கேட்ட தாய் பெற்றெடுத்த போது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெருமகிழ்ச்சி அடைவாள்.

**அன்புடைமை**

7. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு.

**பொருள்:** அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்.

8. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு.

**பொருள்:** அன்பு இருப்பதுதான் உயிருள்ள உடல். அன்பு இல்லாதது வெறும் எலும்பும் தோலும் தான்.

**இனியவை கூறல்**

9. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணியல்ல மற்றுப் பிற.

**பொருள்:** பணிவும் இன்சொல்லுமே ஒருவருக்கு மிகச்சிறந்த அணி.

10. இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

**பொருள்:** இனிய சொல் இருக்கும்போது இன்னாச்சொல் பேசுவது கனி இருக்கும் போது காயை உண்பதைப் போன்று.

## இயல் 3
## அறிவியல் ஆத்திச்சூடி

**அறிவியல் சிந்தனை கொள்**

**ஆய்வின் மூழ்கு**

**இயன்றவரை புரிந்துகொள்**

**ஈடுபாட்டுடன் அணுகு**

**உண்மை கண்டறி**

**ஊக்கம் வெற்றிதரும்**

**என்றும் அறிவியலே வெல்லும்**

**ஏன் என்று கேள்**

**ஐயம் தெளிந்து சொல்**

**ஒருமித்துச் செயல்படு**

**ஓய்வற உழை**

**ஔடதமாம் அனுபவம்**

**- நெல்லை சு.முத்து**

- ஆத்திசூடி என்பது அகரவரிசையில் அறிவுரைகளைச் சொல்லும் இலக்கியம்.
- ஆத்திசூடி நூலை எழுதியவர் ஔவையார்.
- புதிய ஆத்திசூடி நூலை எழுதியவர் பாரதியார்.
- அறிவியல் ஆத்திச்சூடி நூலை எழுதியவர் நெல்லை.சு.முத்து.
- தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர் என்று மேதகு அப்துல்கலாம் அவர்களால் பாராட்டப் பெற்றவர் நெல்லை.சு. முத்து.
- சு. முத்து எழுதிய நூல்கள் எண்ணிக்கை 80-க்கும் மேற்பட்டவை.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- நெல்லை. சு. முத்து அவர்கள் பணியாற்றிய நிறுவனங்கள் விக்ரம்சாராபாய் விண்வெளி மையம், சதீஷ்தவான் விண்வெளி மையம், இந்திய விண்வெளி மையம்.
- "ஔடதமாம் அனுபவம்" என்ற அடியில் ஔடதம் என்பதன் பொருள் மருந்து.

## அறிவியலால் ஆள்வோம்

**ஆழக் கடலின் அடியில் மூழ்கி**
**ஆய்வுகள் செய்து பார்க்கின்றான்**
**நீல வானின் மேலே பறந்து**
**நிலவில் வாழ நினைக்கின்றான்.**

**பாடநூல் ஆசிரியர் குழு.**

## மூதுரை

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**

**மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்**

**தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்**

**சென்ற இடமெல்லாம் சிறப்பு.**

- மூதுரை ஆசிரியர் பெயர் - ஔவையார்.
- மாசற - குறை இல்லாமல்
- சீர்தூக்கின் - ஒப்பிட்டு ஆராய்ந்து
- தேசம் - நாடு
- ஔவையார் எழுதிய நூல்கள் கொன்றை வேந்தன், ஆத்திசூடி, நல்வழி.
- மூதுரை என்னும் சொல்லுக்கு பொருள் 'மூத்தோர் கூறும் அறிவுரை'.
- மூதுரை பாடல் எண்ணிக்கை 31.

## துன்பம் வெல்லும் கல்வி

**ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே – நீ**

**ஏன்படித்தோம் என்பதையும் மறந்து விடாதே**

**நாட்டின் நெறிதவறி நடந்து விடாதே – நம்**

**நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே**

**மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக் கூடாது – பண்பு**

**முறைகளிலும் மொழிதனிலும் மாறக்கூடாது**

**மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக் கூடாது – தன்**

**மானமில்லாக் கோழையுடன் சேரக்கூடாது.**

- எளிய தமிழில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்.
- திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர்.
- 'மக்கள் கவிஞர்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

### சொல்லும் பொருளும்

- தூற்றும் படி - இகழும் படி
- மூத்தோர் - பெரியோர்
- மேதைகள் - அறிஞர்கள்
- மாற்றார் - மற்றவர்
- நெறி - வழி
- வற்றாமல் - அழியாமல்

## இயல் 5
## ஆசாரக்கோவை

**நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு**

**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு**

**ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை**

**நல்லினத் தாரோடு நட்டல் - இவையெட்டும்**

**சொல்லிய ஆசார வித்து.**

**- பெருவாயின் முள்ளியார்.**

- நற்பண்புகளை பின்பற்ற வேண்டும் என்று கூறுவது அறநூல்கள்.
- நன்றியறிதல் - பிறர் செய்த உதவி மறவாமை.
- ஒப்புரவு - பிறருக்கு உதவி செய்தல்.
- நட்டல் - நட்புக் கொள்ளுதல்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


- ஆசாரக்கோவை கூறும் நல்லொழுக்கங்களின் எண்ணிக்கை எட்டு.
- ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார்.
- முள்ளியார் பிறந்த ஊர் - கயத்தூர்.
- ஆசாரக்கோவையின் பொருள் - நல்லொழுக்கங்களின் தொகுப்பு.
- ஆசாரக்கோவை 100 வெண்பாக்களைக் கொண்டது.
- ஆசாரக்கோவை பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

## கண்மணியே கண்ணுறங்கு

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

நந்தவனம் கண் திறந்து
நற்றமிழ்ப் பூ எடுத்து
பண்ணோடு பாட்டிசைத்து
பார் போற்ற வந்தாயோ!

- ஏட்டில் எழுதப்படாத இசைப்பாடல்கள் தமிழில் அதிகம் உள்ளன.
- தமிழர்களின் வாழ்க்கை முறைகளைப் படம் பிடித்துக் காட்டுவது நாட்டுப்புறப் பாடல்கள்.
- சேர நாடு - முத்தேன்
- சோழநாடு - முக்கனி
- பாண்டியநாடு - முத்தமிழ்

### தொகைச் சொற்கள்

- முத்தேன் - கொம்புத்தேன், பொந்துத்தேன், கொசுத்தேன்
- முக்கனி - மா, பலா, வாழை
- முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
- தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று
- தால் என்பதன் பொருள் நாக்கு
- தால் + ஆட்டு – தாலாட்டு
- குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல் தாலாட்டு

## திருக்குறள்

### விருந்தோம்பல்

1. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று

**பொருள்:** அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் இருக்கும்போது தான்மட்டும் உண்பது விரும்பத்தக்கது அன்று.

2. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

**பொருள்:** மோந்து பார்த்தால் அனிச்ச மலர் வாடிவிடும். நம் முகம் மாறினாலே விருந்தினர் உள்ளம் வாடிவிடும்.

### கள்ளாமை

3.உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்

**பொருள்:** அடுத்தவர் பொருளைக் களவாடலாம் என உள்ளத்தால் நினைப்பது கூடத்தீமையானது.

4. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்

**பொருள்:** களவு மூலம் சேர்க்கப்படும் செல்வம் வளர்வது போலத் தோன்றினாலும் முடிவில் அழிந்துவிடும்.

### ஊக்கமுடைமை

5.உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**பொருள்:** ஊக்கமே நிலையான செல்வம். மற்றவை எல்லாம் நிலைத்து நில்லாமல் அழிந்து விடும்.

6. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை

**பொருள்:** தளராத ஊக்கம் உடையவனிடம் ஆக்கமானது தானே வழிகேட்டுக் கொண்டு செல்லும்.

7. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு

**பொருள்:** தண்ணீரின் உயரத்துக்கு ஏற்ப நீர்ப்பூக்கள் வளரும். ஊக்கத்தின் அளவுக்கு ஏற்ப மனிதர்கள் உயர்வார்கள்.

8. உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து

**பொருள்:** எண்ணுவதை உயர்வாகவே எண்ணுக. எண்ணியதை அடையாவிட்டாலும் எண்ணமே மனநிறைவைத் தரும்.

## பயனிலை சொல்லாமை

9. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்

**பொருள்:** நன்மை எது என ஆராயும் அறிவு உடையவர்கள் பயன்தராத சொற்களைப் பேசமாட்டார்கள்.

10. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்

**பொருள்:** பயனுடைய சொற்களை மட்டுமே பேசுக. பயன் இல்லாத சொற்களைப் பேசாமல் விட்டு விடுக.

# இயல் 6
## நானிலம் படைத்தவன்

**கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை**
**மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளப்படுத்தி**
**ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற**
**பேராக்கி வாழ்ந்த பெருமை அவன்பெற்றான்**
**மாநிலத்தில் முல்லை மருதம் குறிஞ்சி நெய்தல்**
**நானிலத்தைக் கண்டபெரும் நாகரிக மாந்தன்அவன்**

**- முடியரசன்**

## சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| மல்லெடுத்த | - | வலிமைபெற்ற |
| சமர் | - | போர் |
| நல்கும் | - | தரும் |
| கழனி | - | வயல் |
| மறம் | - | வீரம் |
| எக்களிப்பு | - | பெருமகிழ்ச்சி |
| கலம் | - | கப்பல் |
| ஆழி | - | கடல் |

- முடியரசனின் இயற்பெயர் - துரைராசு.
- பாடியநூல்கள் வீரகாவியம், பூங்கொடி, காவியப்பாவை.
- திராவிட நாட்டின் வானம்பாடி என்றழைக்கப்பட்டவர் முடியரசன்.
- **"நானிலம் படைத்தவன்" என்னும் இப்பாடல் இடம்பெற்ற நூல் - புதியதொரு விதி செய்வோம்.**

## கடலோடு விளையாடு

**விடிவெள்ளி நம்விளக்கு - ஜலசா**
**விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா**
**அடிக்கும்அலை நம்தோழன் - ஜலசா**
**அருமைமேகம் நமதுகுடை - ஜலசா**
**தொழும்தலைவன் பெருவானம் - ஜலசா**
**துணிவோடு தொழில்செய்வோம் - ஜலசா**


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

- நெய்தல் நிலம் - கடலும், கடல் சார்ந்த இடமும்
- நெய்தல் பூ - தாழம் பூ
- நெய்தல் மக்கள்- பரதர், பரத்தியர், எயினர், எயிற்றியர்
- நெய்தல் தொழில்- மீன்பிடித்தல், உப்பு விளைத்தல்

**மீனவர்களுக்கு...**

| | | |
|---|---|---|
| விடிவெள்ளி | - | விளக்கு |
| விரிந்த கடல் | - | பள்ளிக்கூடம் |
| கடல் அலை | - | தோழன் |
| மேகம் | - | குடை |
| வெண்மையான மணல் | - | பஞ்சு மெத்தை |
| இடி | - | கூத்து |
| புயல் | - | ஊஞ்சல் |
| பனிமூட்டம் | - | போர்வை |
| கதிரவன் ஒளிச்சுடர் | - | மேற்கூரை |
| கட்டுமரம் | - | வாழும் வீடு |
| மின்னல் கோடு | - | அடிப்படைப்பாடல் |
| கிடைக்கும் மீன்களே | - | செல்வம் |
| முழுநிலவு | - | கண்ணாடி |
| நீச்சல் | - | தவம் |

- உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் படும் பாடல் - நாட்டுபுறப் பாடல்.
- நாட்டுப்பறப் பாடல் - வாய்மொழி இலக்கியம் என்றும் அழைக்கப்படும்.
- “நாட்டுப்புற இயல் ஆய்வு” என்ற நூல் தொகுத்தவர் - சு. சக்திவேல்.
- ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு முதலானவை தொழில் பாடல்கள்.
- தாலாட்டுப் பாடல் - நாட்டுப்புறப் பாடல்.
- காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால், இதனை வாய்மொழி இலக்கியம் என்பர்.

## இயல் 7
## பாரதம் அன்றைய நாற்றங்கால்

**புதுமைகள் செய்த தேசமிது**
**பூமியின் கிழக்கு வாசலிது!**
**தெய்வ வள்ளுவன் செய்த குறள்தான்**
**தேசம் உடுத்திய நூலாடை!**
**மெய்களைப் போற்றிய இந்தியத் தாய்க்கு**
**மெய்யுணர்வு என்கிற மேலாடை**
**அன்னை நாட்டின் அமுத சுரபியில்**
**அன்னிய நாடுகள் பசிதீர**
**அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி**
**அறத்தின் ஊன்று கோலாக**
**புதுமைகள் செய்த தேசமிது**
**பூமியின் கிழக்கு வாசலிது!**

**- தாராபாரதி**

- “கன்னிக் குமரியின் கூந்தலுக்காகக் காஷ்மீர் தோட்டம் பூத்தொடுக்கும்”- தாராபாரதி.
- தாராபாரதியின் இயற்பெயர் - இராதாகிருஷ்ணன்.
- தாராபாரதியின் அடைமொழி - கவிஞாயிறு.
- “பாரதம் அன்றைய நாற்றங்கால்” கவிதை இடம்பெற்ற தொகுப்பு -தாராபாரதியின் கவிதை.
- தாராபாரதியின் நூல்கள் - புதியவிடியல், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள்.

www.Padasalai.Net www.CBSEtips.in



## இயல் 8
## பராபரக் கண்ணி

**1. தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்**

**செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!**

**2. அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்**

**இன்பநிலை தானேவந்த எய்தும் பராபரமே!**

**3. எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே**

**அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!**

- திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணிபுரிந்தவர் தாயுமானவர்.
- தமிழ் மொழியின் உபநிடதம் தாயுமானவர் பாடல்கள்.
- கண்ணி என்பது இரண்டு(2) அடிகளில் பாடப்படும்.
- பராபரக்கண்ணி என்னும் பகுதி தாயுமானவர் பாடல்கள், நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## நீங்கள் நல்லவர்

**வாழ்க்கை பின்திரும்பிச் செல்லாது**

**நேற்றுடன் ஒத்துப் போகாது**

**கொடுப்பவரின் பரிசுடன்**

**அவரக்குச் சமமாக எழுங்கள்**

**சிறகுகளின் மீது எழுவது போல**

**கொடுப்பது பழத்தின் இயல்பு**

**பெறுவது வேரின் இயல்பு**

**- கலீல் கிப்ரான்**

- உங்கள் குறிக்கோளை நோக்கி நடக்கையில் நீங்கள் நல்லவர் - கலீல் கிப்ரான்
- கலீல் கிப்ரான் - லெபனான் நாட்டைச் சேர்ந்தவர்.
- இப்பாடப்பகுதி கவிஞர் புவியரசு மொழிபெயர்த்த ‘தீர்க்கதரசி’ என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

## திருக்குறள்

### அறன் வலியுறுத்தல்

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற.

**பொருள்:** உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும். மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரமே.

2.அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்.

**பொருள்:** பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் பேசுதல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் ஆகும்.

### ஈகை

3. வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்

குறியெதிர்ப்பை நீரது உடைத்து

**பொருள்:** இல்லாதவர்க்கு தருவதே ஈகை ஆகும். மற்றவை எல்லாம் பயனை எதிபார்த்துச் செய்பவை ஆகும்.

4.ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை

வைத்திழக்கும் வன்க ணவர்.

**பொருள்:** இல்லாதவர்க்குத் தருவதால் உண்டாகும் இன்பத்தை அறியாதவர்கள் பொருளைச் சேர்த்து வைத்துப் பின் அதனை இழந்து விடுவார்கள்.

### இன்னா செய்யாமை

5. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்த விடல்

**பொருள்:** நமக்குத் துன்பம் செய்தவர் நாணும்படி அவருக்கு நன்மை செய்வதுதான் அவரைத் தண்டிக்கும் வழியாகும்.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

6. அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்

தந்நோய்போல் போற்றாக் கடை

**பொருள்:** பிற உயிரின் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதாவிட்டால் தாம் பெற்றுள்ள அறிவால் எந்தப் பயனும் இல்லை.

7.எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்

மாணாசெய் யாமை தலை

**பொருள்:** நம் உள்ளம் ஏற்றுக் கொள்ளாத எச்செயலையும் எக்காலத்திலும் யார்க்கும் சிறிதளவுகூடச் செய்யக்கூடாது.

**கொல்லாமை:**

8. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

**பொருள்:** தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். அதுவே அறநூல்களில் கூறப்படும் அறங்களுள் சிறந்தது.

**பெரியாரைப் பிழையாமை**

9. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்

போற்றலுள் எல்லாம் தலை

**பொருள்:** ஆற்றல் உடையவர்களை இகழக்கூடாது. அதுவே தம்மைத் தீங்கிலிருந்து காத்துக் கொள்ளும் வழிகளுள் சிறந்த வழியாகும்.

10. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்

பெரியார்ப் பிழைத்தொழுகு வார்

**பொருள்:** தீயினால் சுடப்பட்டவர்கூடப் பிழைத்துக் கொள்ள முடியும். ஆனால் பெரியவர்களுக்குத் தீங்கு செய்தவர் தப்ப முடியாது.

## ஆசியஜோதி

**நின்றவர் கண்டு நடுங்கினாரே – ஐயன்**

**நேரிலே நிற்கவும் அஞ்சினாரே;**

**துன்று கருணை நிறைந்த வள்ளல் - அங்கு**

**சொன்ன மொழிகளைக் கேளும் ஐயா!**

**ஆதலால் தீவினை செய்யவேண்டா – ஏழை**

**ஆட்டின் உயிரையும் வாங்கவேண்டா;**

**பூதலந் தன்னை நரகம்அது ஆக்கிடும்**

**புத்தியை விட்டுப் பிழையும் ஐயா!**

**- கவிமணி தேசிக விநாயகனார்**

- "உலக உயிர்கள் எல்லாம் துன்பம் இன்றி இன்புற்று வாழ வேண்டும் என்று விரும்புபவர்"– புத்தர்.

**சொல்லும் பொருளும்**

கும்பி - வயிறு பூதலம் - பூமி

- அரசவாழ்வைத் துறந்து நள்ளிரவில் அரண்மனையை விட்டு வந்தவர் - புத்தபிரான்.
- பிம்பிசார மன்னன் யாகத்துக்கு ஆடுகள் கொண்டு செல்லப்பட்டன.
- **"தீயவும் நல்லவும் செய்தவரைவிட்டுச் செல்வது ஒருநாளும் இல்லை ஐயா!**

**- ஆசியஜோதி**

- தேசிய விநாயகனார் பெற்ற பட்டம் – கவிமணி.
- கவிமணி இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.
- கவிமணி ஆசிரியராகப் பணியாற்றிய வருடம்-36.
- ஆசியஜோதி எதனைத் தழுவி எழுதப்பட்டது - லைட் ஆ∴ப் ஆசியா.
- லைட் ஆப் ஆசியா எழுதியவர் - எட்வின் அர்னால்டு.
- ஆசியஜோதி புத்தருடைய வரலாற்றைக் கூறும் நூல்.

************


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# உரைநடை உலகம்

## அலகு 1

### வளர்தமிழ்

- உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கும் மொழி – தமிழ்
- மனித இனம் கண்டறிந்த சிறந்த கண்டுபிடிப்பு மொழி
- உலகில் 6000 (ஆறாயிரத்துக்கும்) மேற்பட்ட மொழிகள் உள்ளன.
- உலகமொழிகளில் இலக்கண, இலக்கியவளம் பெற்றுத் திகழும் மொழிகளில் சிறப்பு மிக்க செம்மொழி – தமிழ்மொழி
- தமிழ் இலக்கியங்கள் பலவும் இனிமையானவை ஓசை, இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை
- **“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்”** என்று கூறியவர் **பாரதியார்.**
- **“என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்” என்று தமிழ்த்தாயின் தொன்மையைப் பாடியவர் - பாரதி**
- தொல்காப்பியம் தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல்.
- தமிழ் எழுத்துக்கள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே உள்ளன. வலஞ்சுழி எழுத்துகள் - அ, எ, ஔ, ண, ஞ
- இடஞ்சுழி எழுத்தகள் - ட, ய,ழ

| சொல் | முதலில் ஆளப்படும் இலக்கியம் | மேற்கோள் |
|---|---|---|
| **தமிழ்** | தொல்காப்பியம் | தமிழன் கிளவியும் அதனோ ரற்றே |
| **தமிழ்நாடு** | சிலப்பதிகாரம் (வஞ்சிக் காண்டம்) | இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இது நீ கருதினை ஆயின் |

- இருதிணை – உயர்திணை, அ∴றிணை
- அ∴றிணை – உயர்வுஅல்லாத திணை என்று பொருள் (அல்+திணை)
- தமிழ் இலக்கண நூல் - தொல்காப்பியம், நன்னூல்
- பூவின் ஏழு நிலைகள் அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல்
- “மா” என்ற ஒரு சொல் பல பொருளை தருகிறது மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல்,துகள், மேன்மை, வயல், வண்டு.
- தமிழுக்கு முத்தமிழ் என்ற பெயரும் உண்டு
  இயல் தமிழ் - எண்ணத்தை வெளிப்படுத்தும்
  இசைத்தமிழ் - உள்ளத்தை மகிழ்விக்கும்
  நாடகத்தமிழ் - உணர்வில் கலந்து வாழ்வை நல்வழிப்படுத்தும்
- தமிழின் கவிதை வடிவம்: துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள்
- தமிழின் உரைநடைவடிவம்: கட்டுரை, புதினம், சிறுகதை
- தற்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று வளர்ந்த கொண்டு வருகிறது.

**தாவர இலைப் பெயர்கள்**

- ஆல், அரசு, மா, பலா, வாழை - இலை
- அகத்தி, பசலை, முருங்கை - கீரை
- அருகு, கோரை - புல்
- நெல், வரகு - தாள்
- மல்லி - தழை
- சப்பாத்திக்கள்ளி, தாழை - மடல்
- கரும்பு, நாணல் - தோகை
- பனை, தென்னை - ஓலை
- கமுகு - கூந்தல்

- தொல்காப்பியம், நன்னூல் போன்றவை எண்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை.
- மொழியைக் கணினியில் பயன்படுத்த, அவை எண்களின் அடிப்படையில் அமைய வேண்டும்.
- தமிழ் கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படத்தக்க வகையில் திகழ்கிறது.

**சொல்லும், அமைந்த நூல்களும்**

- குறுந்தொகை – பாம்பு, முதலை, மீன், செய்
- பதிற்றுப்பத்து – வெள்ளம்
- அகநானூறு – கோடை, மருந்து
- கலித்தொகை – வேளாண்மை
- நற்றிணை – உழவர்
- திருக்குறள் – வேளாண்மை, மகிழ்ச்சி, அரசு
- திருமுருகாற்றுப்படை - உலகம்
- பெரும்பாணாற்றுப்படை- பார்
- தொல்காப்பியம் -உலகம் (கிளவியாக்கம்)
  - ஊர் (அகத்திணையியல்)
  - உயிர் (கிளவியாக்கம்)
  - அன்பு (களவியல்)
  - மகிழ்ச்சி (கற்பியல்)
  - புகழ்(வேற்றுமையில்)
  - செல் (புறத்திணையியல்)
  - ஒழி (கிளவியாக்கம்)
  - முடி (வினையியல்)

**கூடுதல்செய்தி**

"நீண்ட நீண்ட காலம் - நீ", என்று தொடங்கும் பிறந்த நாள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் - கவிஞர் அறிவுமதி.

## அலகு 2
## சிறகின் ஓசை

- பறவைகள் கடல், கண்டம், பெருங்கடல் தாண்டி இடம் பெயர்ந்து புறப்பட்ட இடத்திற்கே திரும்பும் நிகழ்வு வலசைபோதல் எனப்படும்.
- நீர்வாழ்ப் பறவைகளே அதிகமாக வலசை போகின்றன.
- பறவைகள் இடம் பெயர்வதற்கான காரணம் தட்பவெப்பநிலை, இனப்பெருக்கம், உணவு, இருப்பிடம்.
- பறவைகள் நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப்புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இடம்பெயர்கின்றன.
- பறவைகள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் வலசை போகின்றன.
- வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்
  - ✓ தலையில் சிறகு வளர்தல்.
  - ✓ இறகுகளின் நிறம் மாறுதல்.
  - ✓ உடலின் கற்றையாக முடி வளர்தல்.
- சிறகடிக்காமல் கடலையும் தாண்டிப் பறக்கும் பறவை கப்பல் பறவை (Frigate Bird)
- கப்பல்பறவை தரையிரங்காமல் 400 கிமீ வரை பறக்கும்.
- கப்பல் பறவை 'கடற்கொள்ளை பறவை' என்று அழைக்கப்படும்
- சத்திமுத்தப்புலவர் 1500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்
- "நாராய், நாராய், செங்கால் நாராய்" என்ற பாடலைப் பாடியவர் சத்திமுத்தப்புலவர்.
- **"தென்திசை குமரி ஆடி வடதிசைக்கு ஏகுவீர ஆயின்" என்ற பாடலை இயற்றியவர் - சத்திமுத்தப் புலவர்**


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

- செங்கால் நாரை தற்போதும் ஐரோப்பாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகை தரும்.
- வெளிநாட்டு பறவைகளுக்குப் புகலிடமாக திகழ்வது தமிழ்நாடு.
- ஆண்சிட்டுக்குருவி நிறம் கருப்பு (தொண்டைப்பகுதி) அடர்பழுப்பு (உடல்பகுதி).
- பெண்சிட்டுக்குருவி நிறம் மங்கிய பழுப்பு (உடல் முழுவதும்).
- சிட்டுக்குருவி வாழ்நாள் - 10 முதல் 13 வருடங்கள்.
- சிட்டுக்குருவி கூடு கட்டி வாழும் பறவை.
- கூடுகட்டிய பின் 3 முதல் 6 முட்டைகள் வரை இடும்.
- அடைகாக்கும் நாட்கள் 14 நாட்கள்.
- பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளிவரும்.
- சிட்டுக்குருவி மனிதன் வாழும் இடங்களில் எல்லாம் வசிக்கும் (துருவப் பகுதிகளைத் தவிர)
- இமயமலைத் தொடரில் 4000 மீ உயரத்தில் கூட சிட்டுகுருவி வாழும்.
- சிட்டுக்குருவி உணவு தானியங்கள், புழுபூச்சி, மலர் அரும்புகள், இளந்தளிர்கள், தேன்.
- சிட்டுக்குருவியின் குஞ்சுகளின் உணவு பெரும்பாலும் புழு, பூச்சி.
- சிட்டுக்குருவி உருவத்தில் சிறியது ஆனால் வேகமாக பறக்கும்.
- சிட்டுக்குருவி அழிவிற்கு காரணம் பூச்சிக்கொல்லி பயன்பாடு,
- காக்கை குருவி எங்கள் சாதி- பாரதியார்
- பறவையியல் ஆய்வாளர்களுச்கு முன்னோடி– சலீம்அலி
- இந்தியாவின் பறவை மனிதர்– சலீம்அலி
- சலீம்அலி தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்கு **“சிட்டுக்குருவியின் வீழ்ச்சி” (The Fall of Sparrow)** என்று பெயரிட்டுள்ளார்.
- உலகிலேயே நெடுந்தொலைவு (22,000கி.மீ) பயணம் செய்யும் பறவை ‘ஆர்டிக்ஆலா’
- பறவை பற்றி படிப்பு ஆர்னித்தாலஜி (ornithology)
- உலகச் சிட்டுக்குருவிகள் தினம் மார்ச் 20.
- **“மனிதன் இல்லாத உலகில் பறவைகள் வாழமுடியும்!**
  **பறவைகள் இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது”**- என்கிறார் சலீம்அலி.

## அலகு 3
## கணியனின் நண்பன்

- “ரோபோ” என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் காரல் கபெக்.
- காரல் கபெக் செக் நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர்.
- “ரோபோ” என்ற வார்த்தை இடம்பெற்ற நாடகம் வெளிவந்த ஆண்டு 1920.
- நாடகத்தில் “ரோபோ” என்னும் சொல்லின் பொருள் அடிமை.
- நாடகத்தில் ரோபோ தொழிற்சாலையில் வேலை செய்வதாகக் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. மனிதன் தன் வேலைகளை எளிதாகச் செய்ய முதலில் கண்டுபிடித்தவை எந்திரங்கள்.
- ஒரே மாதிரியான வேலைகளை மனிதரை விட விரைவாகத் தானே செய்து முடிக்கும் எந்திரம் தானியங்கி.
- தானியங்கியைக் கட்டுப்படுத்துவது கணினி.
- மனித முயற்சிகளுக்கு மாற்றாக தானே இயங்கும் எந்திரம் தானியங்கி.
- ‘தானியங்கி மனிதரைப் போல் இல்லாமலும் இருக்கலாம் ஆனால் மனிதர்களைப் போல செயல்களை நிறைவேற்றும்’ - பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com, Whatsapp No: 7358965593

**தானியங்கி பயன்கள்**

- உற்பத்தி செய்தல் , பழுதுகளை நீக்குதல்
- நோயின் அறிகுறிகளைக் கண்டறிய
- செயற்கைக்கோள்களை இயக்க
- உறைநிலைக்கு கீழே உள்ள துருவப் பகுதிகளில் ஆய்வு நடத்த.
- எந்திர மனிதருக்கும் தானியங்கிக்கும் இடையே உள்ள வேறுபாடு செயற்கை நுண்ணறிவு
- IBM உருவாகியது டீப்புளு மீத்திறன் கணினி
- 1997ம் ஆண்டு மே மாதம் சதுரங்கப்போட்டியில் கலந்து கொண்ட உலக சதுரங்க வெற்றியாளர் கேரி கேஸ்புரோவ்
- சதுரங்கப் போட்டியின் வெற்றியாளர் டீப்புளு (மீத்திறன் கணினி)
- உலகிலேயே முதன் முதலாக ரோபோவுக்கு குடியுரிமை வழங்கிய நாடு சவுதி அரேபியா
- சவுதி அரேபியா தயாரித்த ரோபோ **“சோபியா”**
- ஐ.நா சோபியாவுக்கு வழங்கிய பட்டம் “புதுமைகளின் வெற்றியாளர்”.

## அலகு 4
## கல்விக்கண் திறந்தவர்

- ஆடு மேய்க்கும் சிறுவர்களைப் பார்த்து ஊர்தோறும் பள்ளிக்கூடங்களைத் திறக்க வேண்டும் என்றவர் - காமராசர்.
- தமிழ்நாடு முழுவதும் காமராசர் 5000 பள்ளிகளை திறக்க முடிவுசெய்து உள்ளோம் என்று பள்ளி விழாவில் குறிப்பிட்டார்.
- ஒரு மைல் தூரத்தில் - ஆரம்பப்பள்ளி
- 3 மைல் தூரத்தில் - நடுநிலைப்பள்ளி
- 5 மைல் தூரத்தில் - உயர்நிலைப்பள்ளி
- மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் “காமராசர்”.
- கல்விக்கண் திறந்தவர் என்று காமராசரைப் பாராட்டியவர் தந்தை பெரியார்.
- எந்த ஊரில் காட்டாற்றினால் பள்ளி செல்ல முடியாத சிறுவர்களுக்கு பக்கத்தில் வேறு பள்ளிக்கு ஏற்பாடு காமராசர் அவர்களால் அறிவிக்கப்பட்டது – பரமக்குடி.
- பள்ளிக்கு படிக்க வரும் மாணவர்களுக்கு ஒரு வேளை உணவாவது வழங்க வேண்டும் என்று நினைத்தவர் காமராசர்.
- காமராசர் முதலமைச்சராக பதவியேற்ற போது எத்தனை பள்ளிகள் திறக்கப்பட்டன - 6000 தொடக்கப்பள்ளிகள்.
- இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றி தீவிரமாக நடைமுறைப்படுத்தியவர் காமராசர்.
- பள்ளிகளில் காமராசர் குழந்தைகள் ஏற்றத்தாழ்வின்றி கல்வி கற்க கொண்டு வந்த திட்டம் - சீருடைத்திட்டம்.
- காமராசர் ஆற்றிய பணிகள்
  - ✓ பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்
  - ✓ பல கிளை நூலகங்கள்
  - ✓ உயர்கல்வி பெறப் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களை உருவாக்கினார்.
- கல்வி புரட்சிக்கு வித்திட்டவர் - காமராசர்.
- மதுரை பல்கலைக்கழகம் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு 1966.
- நடுவணரசு பாரதரத்னா விருதை காமராசர் அவர்களுக்கு வழங்கிய ஆண்டு 1976.
- நினைவு இல்லங்களாக அரசால் மாற்றியமைக்கப்பட்டவை காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் (ம) விருதுநகர் இல்லம்.
- காமராசர் சிலை -சென்னை மெரினா கடற்கரை.
- சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் பெயர் காமராசர் விமான நிலையம்.
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்ட ஆண்டு 2.10.2000.

## அலகு 5
## தமிழர் பெருவிழா

- விழாக்கள் தமிழரின் நாகரிகம், வீரம் -எடுத்துக் காட்டுபவையாக உள்ளன.
- பொங்கல் விழா எவ்வாறு போற்றப்படுகிறது - தமிழர் திருநாள், அறுவடைத் திருவிழா.
- உழவர்கள் விதைக்கும் மாதம் - ஆடித்திங்கள்.
- **“பழையன கழிதலும் புதியன புகுதலும்”** என்ற நன்னூலின் படி கொண்டாடப்படுவது

  – போகித்திருநாள் (மார்கழி இறுதி நாள்).
- வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக்கடவுளை வழிபடும் நோக்கில் போகிப்பண்டிகை இந்திரவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.
- திருவள்ளுவராண்டு தொடங்கும் நாள் தை முதல் நாள்.
- திருவள்ளுவர் தினம் தை 2ம் நாள்.
- மாடு என்னும் சொல்லின் பொருள் செல்வம்.
- மாடுகளை அடக்கி தழுவும் வீர விளையாட்டு மஞ்சு விரட்டு.
- மஞ்சுவிரட்டுவின் மற்ற பெயர் மாடு பிடித்தல், ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல்.
- மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல்.
- திருவள்ளவர் பிறந்த ஆண்டு கிமு. 31.
- திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடும் முறை.
- 2018யை திருவள்ளுவர் ஆண்டாக மாற்றுக 2018 + 31 = 2049.
- அறுவடைத்திருநாள் பல்வேறு பெயர்களில் பல மாநிலங்களில் கொண்டாடப்படுகிறது.
- மகரசங்கராந்தி - ஆந்திரா,கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம்.
- லோரி - பஞ்சாப்.
- உத்தராயன் - குஜராத், ராஜஸ்தான்.

## அலகு 6
## வளரும் வணிகம்

- ஒரு பொருளை பிறரிடம் இருந்து வாங்குவதும், பிறருக்கு விற்பனை செய்வதும் - வணிகம்.
- பொருள்கள் விற்பவர் - வணிகர்.
- பொருள்கள் வாங்குபவர் - நுகர்வோர்.
- நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களை கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களை பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம்.
- நெல்லைக் கொடுத்து பண்டைய காலத்தில் பெற்றது - உப்பு.
- ஆட்டின் பால் கொடுத்து பெற்றது - தானியம்.
- **“தந்நாடு விளைந்த வெண்ணெல் தந்து
  பிறநாட்டு உப்பின் கொள்ளைச் சுற்றி
  உமணர் போகலும்”**

  **- நற்றிணை (183)**
- **“பாலொடு வந்து கூழொடு பெயரும்”**

  **- குறுந்தொகை (23)**
- **பொன்னொடு வந்த கறிறொடு பெயரும்**

  **- அகநானூறு (149)**
- வணிகத்தின் வகைகள் -2

  1)தரைவழி வணிகம், 2)நீர்வழி வணிகம்.
- தரைவழிப் பொருள்கள் கொண்டு செல்ல பயன்பட்டது - எருது, கழுதை குதிரை, வண்டிகள்.
- நீர்வழிப் பொருள்கள் கொண்டு செல்ல பயன்பட்டது - கப்பல்கள்.
- வண்டிகளில் பொருள்களை குழுவாக ஏற்றி செல்லும் வணிகர்களின் குழு எவ்வாறு அழைக்கப்படுகிறது – வணிகச்சாத்து.
- கப்பல்கள் வந்து நிற்கும் இடங்கள் - துறைமுகம்.
- துறைமுக நகரங்கள் - பட்டினம் , பாக்கம்.
- தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகம் - பூம்புகார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

- நம் அன்றாட தேவைகளான பால், கீரை, காய்கறிகள் போன்றவற்றை விற்பனை செய்பவர்கள் - சிறுவணிகன்.
- சிறு முதலீட்டில் பொருள்களை வாங்கி வந்து வீதிகளில் வைத்து விற்பவர் - சிறுவணிகர்.
- நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு கொள்பவர் - சிறுவணிகர்.
- பெருந்தொகையை முதலீடு செய்து பொருள்களை அதிக அளவில திரட்டி வைத்து விற்பனை செய்வது – பெருவணிகம்
- நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு கொள்வது அரிதானது – பெருவணிகம்
- ஒரு நாட்டில் உற்பத்தி செய்த பொருள்களை பிற நாடுகளுக்கு அனுப்புவது – ஏற்றுமதி.
- பிற நாடுகளில் இருந்து பொருள்களை வாங்குவது - இறக்குமதி
- தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டவை – தேக்கு, மயில்தோகை, அரிசி , சந்தனம், இஞ்சி, மிளகு
- தமிழ்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டவை-
  - ✓ சீனா- கண்ணாடி, கற்பூரம், பட்டு
  - ✓ அரேபியா - குதிரை
- **“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தம்போல் செயின்”**

  **– திருக்குறள்.**
- **“நடுவு நின்ற நன்னெஞ்சினோர்”**

  **– பட்டினப்பாலை.**
- இணையதளம் மூலம் பொருள்கள் வாங்குவது **- இணையவழி வணிகம்.**
- **“கொள்வதும் மிகை கொளாது**

  **கொடுப்பதும் குறைபடாது”**

  **– பட்டினப்பாலை.**

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி**

**– திருக்குறள்.**

## அலகு 7
## தமிழ் நாட்டில் காந்தி

- பெண்கள் முன்னேற்றம், சமுதாய மறுமலர்ச்சி தீண்டாமை ஒழிப்பு முதலிவற்றுக்காகவும் பாடுபட்டவர் - காந்தியடிகள்.
- எப்போது காந்தியடிகள் சென்னைக்கு வந்தார் - 1919/பிப்ரவரி.
- காந்தியடிகள் சென்னைக்கு வந்த போது எந்த சட்டம் நடைமுறையில் இருந்தது – ரௌலட் சட்டம்.
- காந்தியடிகள் ரௌலட் சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்த ராஜாஜி வீட்டில் கருத்தாய்வுக் கூட்டம் நடத்தினார்.
- இராஜாஜி “இவர் எங்கள் தமிழ்நாட்டுக் கவிஞர்” என்று பாரதியாரை– காந்தியடிகளிடம் கூறினார்.
- காந்தியடிகள் எப்போது மதுரைக்கு வந்தார் - 1921/செப்டம்பர்
- காந்தியடிகள் தோற்றத்தில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தது – தமிழ்நாடு
- காந்தியடிகள் எங்கு வாழும் போது தமிழ் மொழியை கற்கத் தொடங்கினார் - தென்னாப்பிரிக்கா.
- தமிழ்க்கையேடு எழுதியவர் - ஜி.யு. போப்.
- காந்தியடிகள் தம்மைக் கவர்ந்த நூல் திருக்குறள்.
- சென்னை இலக்கிய மாநாடு நடைபெற்ற ஆண்டு – 1937.
- சென்னை இலக்கிய மாநாட்டுக்கு தலைமை தாங்கியவர்- காந்தியடிகள் .
- சென்னை இலக்கிய மாநாட்டு வரவேற்புக்குத் தலைவர் - உ.வே.சா.
- உ.வே.சா. -வின் உரையைக்கேட்டு “இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும்” என்னும் ஆவல் உண்டாகிறது என்று கூறியவர் - காந்தியடிகள்.

Padasalai.Net

## அலகு 8
## பசிப்பிணி போக்கிய பாவை

- **“தனி ஒருவனுக்கு உணவில்லை என்றால் இச்செகத்தினை அழித்திடுவோம்” என்றவர் - பாரதியார்.**
- “மணிமேகலையை மணிபல்லவத் தீவில் கொண்டு வந்து சேர்த்தது “ - மணிமேகலா தெய்வம்.
- மணிபல்லத் தீவு (ம) புத்த பீடிகையை காவல் செய்து வருபவள் - தீவதிலகை.
- மணிபல்லத் தீவில் உள்ள பொய்கை பெயர் - கோமுகி.
- கோமுகி – கோ +முகி , பசு முகம்.
- மணிபல்லவத் தீவில் உள்ள பொய்கை நீரின் மேல் ஓர் அரிய பாத்திரம் எப்போது தோன்றும் - வைகாசி திங்கள் முழு நிலவு நாள்.
- கோமுகியில் தோன்றும் அந்த அரிய பாத்திரத்தின் பெயர் - அமுதசுரபி.
- அமுதசுரபி பாத்திரத்தில இட்ட உணவு எடுக்க எடுக்க குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும்.
- “உயிர்களின் பசிபோக்கும் அமுதசுரபியைப் பெற்றவள்” – மணிமேகலை.
- “அமுதசுரபியில் உணவு பெற மணிமேகலை யாரிடம் சென்றாள்”- ஆதிரை.
- உணவு கொடுத்தவர்கள், உயிரைக் கொடுத்தவர்கள் மணிமேகலை
- “ஏழை மக்களின் பசியைப் போக்குவதே மேலான அறம்” என்றவள் - மணிமேகலை
- ஆதிரையிடம் மணிமேகலை பெற்ற உணவை யார் யாருக்கு வழங்கினார்- உடல் குறையுற்றோர், பிணியாளர், ஆதரவற்றோர்.
- எந்த சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கு மணிமேகலை உணவளிக்கிறாள் - பூம்புகார்.
- “சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற வேண்டும்”– மணிமேகலை.

## அலகு 9
## மனிதநேயம்

**தமக்கென முயலா நோன்றாள் - பிறர்க்கென முயலுவர் உண்மையானே’**

**- புறநானூறு**

**தம்பொருளைக் கவர்ந்தவரிடம் கூட அன்பு காட்டியவர் வள்ளலார்**

**“வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்”**

**- வள்ளலார்.**

- வள்ளலார் சத்திய தருமச்சாலை தொடங்கி உணவளித்த இடம் - வடலூர்
- தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கருணை உள்ளம் கொண்டு தொண்டு செய்து காத்தவர்- அன்னை தெரசா.
- அன்னை தெரசாவுக்கு அளிக்கப்பட்ட பரிசு அமைதிக்கான ‘நோபல் பரிசு’
- **“வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில்நீ வாழும் வரை”**

  - அன்னை தெரசா
- அன்னை தெரசாவிற்கு அடுத்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இந்தியர் கைலாஷ் சத்யார்த்தி.
- குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க கைலாஷ் சத்யார்த்தி அவர்கள் தொடங்கிய இயக்கம் - குழந்தைகளைப் பாதுகாப்போம்.
- கைலாஷ் சத்யார்த்தி அவர்கள் 30 ஆண்டுகளில் 86000 குழந்தைத் தொழிலாளர்களை மீட்டுள்ளார்.
- குழந்தை கல்வி உரிமைக்கு கைலாஷ் சத்யார்த்தி சென்ற நடைப்பயண தூரம் 80000 கி.மீ.
- கல்வி உரிமைக்கு கைலாஷ் சத்யார்த்தி சென்ற நாடுகள் 103 நாடுகள்.
- “குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம்”- கைலாஷ் சத்யார்த்தி.
- “உலகத்தைக் குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள் உலகம் அழகானது”-கைலாஷ் சத்யார்த்தி.

***********


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


## விரிவானம்

### இயல் 1
### கனவு பலித்தது

- **"நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்."**
  இடம் பெற்ற நூல் - தொல்காப்பியம்
- 'ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தி கூறுவது – தொல்காப்பியம்.
- கடல் நீர் ஆவியாகி மேகமாகும், மேகம் குளிர்ந்து மழையாக பொழியும் என்பதை கூறும் நூல்கள் முல்லைப்பாட்டு, பரிபாடல், திருக்குறள், கார்நாற்பது, திருப்பாவை.
- ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் நாழி முகவாது நால் நாழி - ஔவையார் பாடல்.
- கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி - கார்நாற்பது.
- **"நெடு வெள்ளூசி நெடுவசி பரந்த வடு"** (போர்க்களத்தில் வீரன் மார்பில் ஏற்பட்ட காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி) **- பதிற்றுப்பத்து.**
- சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை, நரம்பினால் தைத்த செய்தி – நற்றிணை.
- தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்று கூறியவர் - கலிலியோ.
- தினையளவு போதாச் சிறு புல் நீர் நீண்ட பனையளவு காட்டும் - திருவள்ளுவமாலை.
- தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர் மேதகு அப்துல்கலாம் (முன்னாள் குடியரசுத்தலைவர்), இஸ்ரோ அறிவியல் அறிஞர்- மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோ தலைவர் - சிவன்.

### இயல் 2
### கிழவனும் கடலும்

- கிழவனும் கடலும் (The oldman and the Sea) என்னும் ஆங்கில புதினம் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.
- இந்நூல் 1954 ல் நோபல் பரிசு பெற்றது.
- கிழவனும் கடலும் நூலின் ஆசிரியர் எர்னெஸ்ட்ஹெமிங்வே.
- இக்கதையின் நாயகன் சாண்டியாகோ.
- சாண்டியாகோவுக்கு மீன்கள் 84 நாட்கள் வரை கிடைக்கவில்லை.
- சாண்டியாகோவிடம் மீன் பிடிக்க கற்றுக் கொள்வதற்காக வந்த சிறுவன் மனோலின்.

### இயல் 3
### ஒளி பிறந்தது

- அப்துல்கலாம் அவர்களுக்குப் பிடித்த புத்தகம் திருக்குறள்.
- அப்துல்கலாம் அவர்களின் வாழ்க்கைக்கு வலு சேர்த்த குறள்.
  "அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கல் ஆகா அரண்"
- அப்துல்கலாம் அவர்களுக்குப் பிடித்த வேறு நூல் - விளக்குகள் பல தந்த ஒளி. (Lights from many Lamps)
- "விளக்குகள் பல தந்த ஒளியின்" ஆசிரியர் லிலியன் வாட்சன்.
- போலியோவினால் பாதிக்கப்பட்டவர்களின் செயற்கை கால்களின் எடையை கலாம் அவர்கள் 3 கிலோவிலிருந்து 300 கிராம் எடையாகக் குறைந்தார்.
- சுதந்திர இந்தியாவின் வெற்றிகளாக எதை கலாம் கருதுகிறார்?
  - ✓ உணவு உற்பத்தியில் தன்னிறைவு
  - ✓ தகவல் தொழில் நுட்பத் துறையில் வளர்ச்சி


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- ✓ செயற்கைக் கோள் ஏவும் திறன் நம்மிடம் உள்ளது
- ✓ அணு வலையிலிருந்து மின்சாரம்
- ✓ மருந்து, பாரம்பரிய வளர்ச்சி

- ➢ பாதுகாப்புத் துறையைப் பொறுத்த வரை "அக்னி" (ம) 'பிரித்வி' ஏவுகணைகளைச் செலுத்தி உள்ளது.
- ➢ இந்தியா 525 எடையுள்ள ஆளில்லாச் செயற்கை கோளை நிலவுக்கு அனுப்பியுள்ளது.
- ➢ வெற்றியை அடைய வழியாக கலாம் கூறியவை.
  1. அறிவை வளர்க்கும் அனைவரின் பேச்சையும் கவனியுங்கள்.
  2. வியர்வை! வியர்வை! வியர்வை!

## சொல்வளம்

- ➢ கம்ப்யூட்டர் - கணினி
- ➢ மிஷின் - எந்திரம்
- ➢ ரோபோ - எந்திர மனிதன்
- ➢ செயற்கை நுண்ணறிவு - Artificial Intelligience
- ➢ மீத்திறன் கணினி - Super Computer
- ➢ செயற்கைக்கோள் - Satelite
- ➢ நுண்ணறிவு - Intgelligince

## இயல் 4
## நூலகம் நோக்கி

### நூலகத்தின் வகைகள்

- தனியாள் நூலகம்
- மாவட்டநூலகம்
- கிளைநூலகம்
- ஊர்ப்புற நூலகம்
- பகுதி நேர நூலகம்

- ➢ ஆசியாவிலேயே 2 வது பெரிய நூலகம் அண்ணா நூற்றாண்டு நூலகம்.
- ➢ ஆசியாவிலேயே முதல் பெரிய நூலகம் உள்ள நாடு சீனா.
- ➢ அண்ணா நூலகம் எத்தனை தளங்களைக் கொண்டது 8 தளங்கள்.
- ➢ அண்ணா நூலகம் பரப்பளவு 8 ஏக்கர்.
- ➢ நூலக விதிகளை உருவாக்கியவர் - இரா. அரங்கநாதன்.
- ➢ இந்திய நூலக அறிவியலின் தந்தை - இரா. அரங்கநாதன்.

### தளங்களும் நூல்களும்

- ❖ தரைத்தளம் - சொந்த நூல் படிப்பகம் பிரெய்லி நூல்கள்
- ❖ முதல் தளம் - குழந்தைகள் பிரிவு பருவ நூல்கள்
  - ✓ குழந்தைகள் பிரிவில் 2000 மேற்பட்ட பல்லூடக குறுந்தகடுகள் உள்ளன.
  - ✓ மேலும் பிறநாடுகளிலிருந்து திரட்டப்பட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.
- ❖ 2ம் தளம் - தமிழ்நூல்கள்
- ❖ 3ம் தளம - கணினி அறிவியல்,தத்துவம், அரசியல்நூல்கள்
- ❖ 4ம் தளம் - பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி
- ❖ 5ம் தளம் - கணிதம், அறிவியல், மருத்துவம்.
- ❖ 6ம் தளம் - பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை
- ❖ 7ம் தளம் - வரலாறு, சுற்றுலா, புவியியல், போட்டித்தேர்வு நூல்கள், அனைத்து துறைசார்ந்த மின்நூலகம், மின் இதழ்.
- ❖ 8ம் தளம் - நூலகத்தின் நிர்வாகப்பிரிவு.
  - ➢ நூலகத்தில் படித்து உயர்நிலை அடைந்தவர்கள் அறிஞர் அண்ணா, அம்பேத்கர், நேரு, காரல் மார்க்ஸ்.

- நூலகம் இல்லாத ஊர்களில் நூலகத்திற்காக தமிழக அரசு கொண்டு வந்த திட்டம் நடமாடும் நூலகம்.
- சிறந்த நூலகர்களுக்கு வழங்கும் விருது டாக்டர். எஸ். ஆர் அரங்கநாதன் விருது.

## இயல் 5
## மனம் கவரும் மாமல்லபுரம்

- மற்போரில் சிறந்தவன், மாமல்லன் என்ற சிறப்பு பெயர் கொண்டவர் - நரசிம்மவர்மன்.
- மாமல்லபுரத்தில் ஒரே பாறையில் செதுக்கிச் செய்யப்பட்ட கோவில் ரதம் (தேர்) போன்ற வடிவில் உள்ள கோவில் இரதக்கோவில்.
- மாமல்லர் 7ம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
- நரசிம்மவர்மனின் தந்தை மகேந்திரவர்மன்.
- சிற்பப்பணி யாருடைய காலத்தில் தொடங்கியது மகேந்திரவர்மன்.
- சிற்பக்கலையின் உச்சகட்டம் அர்ச்சுனன் தபசு.
- பாறையில் நேரில் பார்ப்பது போல அழகாக உள்ள சிற்பங்கள் மனிதர், விலங்குகள், பறவைகள் வடிவில செதுக்கப்பட்டிருந்தன.
- 2 பாறைகளிலும் எத்தனை சிற்பங்கள் காணப்படுகின்றன - 150க்கும் மேற்பட்ட சிற்பங்கள்.
- அர்சுனன் தவம் செய்யும் காட்சி உள்ள பாறை அர்ச்சுனன் தபசு.
- அர்ச்சுனன் தபசு எவ்வாறு அழைக்கப்படுகிறது பகீரதன் தவம்.
- இரண்டு பாறைகளுக்கும் இடையில் நீர் வடியும் தடம் ஆகாய கங்கை.
- உயிருள்ளவை போலச் செதுக்கப்பட்ட சிற்பங்கள் எவை? சிங்கம், புலி, அன்னப்பறவை, உடும்பு, குரங்கு, யானை, மான்.
- சிற்பக்கலைக் கூடம் என்று அழைக்கப்படுவது மாமல்லபுரம்.
- **சிற்பக்கலை 4 வகைப்படும்.**
  - ✓ குடைவரைக்கோயில்
  - ✓ கட்டுமானக்கோயில்
  - ✓ ஒற்றைக்கல் கோயில்
  - ✓ புடைப்புச் சிற்பங்கள்
- சிற்பக்கலையின் 4 வகைளும் காணப்படும் ஒரே இடம் மாமல்லபுரம்.
- **மாமல்லபுரத்தில் காண வேண்டிய இடங்கள்**
  - ✓ அர்ச்சுனன் தபசு
  - ✓ கடற்கரைக்கோவில்
  - ✓ பஞ்சபாண்டவர் ரதம்
  - ✓ ஒற்றைக் கல் யானை
  - ✓ குகைக் கோயில்
  - ✓ புலிக்குகை
  - ✓ திருக்கடல் மல்லை
  - ✓ கிருஷ்ணரின் வெண்ணெய்ப்பந்து
  - ✓ கலங்கரை விளக்கம்

## இயல் 6
## உழைப்பே மூலதனம்

- **"பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைக்காதீர்"**

  **– ஔவையார்.**
- பணத்தை பயன்படுத்தாமல் வைத்திருப்பது மடமை. பிறருக்கு உதவுவதே பணத்தின் பயன் - எனும் கருத்தை இச்சிறுகதை உணர்த்துகிறது.

## இயல் 7
## வேலுநாச்சியார்

- இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்ல முத்து மன்னரின் மகள் - வேலுநாச்சியார்.
- வேலுநாச்சியார் கற்ற மொழிகள் - தமிழ், ஆங்கிலம் , பிரெஞ்சு , உருது.
- வேலுநாச்சியார் கற்ற பயிற்சிகள் சிலம்பம், குதிரைஏற்றம் , வாள்போர், வில்பயிற்சி.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- வேலுநாச்சியார் மணம்புரிந்த மன்னர் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர்.
- முத்துவடுகநாதர் வீரமரணம் அடைந்த இடம் - காளையார் கோவில்.
- வேலுநாச்சியார் ஒருபடையைத் திரட்டி எங்கு பயிற்சி அளித்தார் - திண்டுக்கல்.
- அமைச்சர் - தாண்டவராயர்.
- தளபதிகள் - பெரிய மருது, சின்ன மருது.
- மைசூரில் இருந்து ஐதர் அலி அனுப்பிய படை வீரர்கள் - 5000 குதிரைப் படை வீரர்கள்.
- வேலுநாச்சியார் முதலில் கைப்பற்ற நினைத்தது காளையார் கோவில்.
- வேலுநாச்சியாரின் படைப்பிரிவுக்கு தலைமை ஏற்றவர்கள்.
  - ✓ ஆண்கள் - மருது சகோதர்கள்
  - ✓ பெண் - குயிலி
- வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் காளையார்கோவிலில் நடைபெற்றது.
- காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் தோற்று ஓடியது ஆங்கிலேயர் படை.
- சிவகங்கை கோட்டைக் கதவுகள் எப்போது திறக்கப்படும் என வேலுநாச்சியார் கூறினார் விஜயதசமி.
- வேலுநாச்சியார் யாருக்கு நடுகல் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அமைச்சரிடம் கூறினார் - உடையாள்.
- வேலுநாச்சியார் உடையாள் நடுகல்லுக்கு எதை காணிக்கையாகச் செலுத்தினார் - தாலி.
- வேலுநாச்சியார் காலம் - 1730- 1796
- வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு 1780
- ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர் வேலுநாச்சியார்.

## சொல்லும் பொருளும்

- வீரம் - வேலுநாச்சியார்
- ஆற்றல் - மருது சகோதரர்கள்
- உதவி - ஐதர் அலி
- தியாகம் - குயிலி

## இயல் 8
## பாதம்

1. தற்காலத்தமிழ் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் எஸ். இராமகிருஷ்ணன்.

2. இராமகிருஷ்ணன் நூல்கள் உபபாண்டவம், கதாவிலாசம், தேசாந்திரி, கால் முளைத்த கதைகள்.

3. 'பாதம்' எதில் இருந்து எடுக்கப்பட்டது 'தாவரங்களின் உரையாடல்'.

## இயல் 9
## முடிவில் ஒரு தொடக்கம்

- மனித நேயத்தின் மகத்தான சாதனையாகத் தம் மகனின் துடிக்கும் இதயத்தையே கொடையாகத் தந்த இக்கால வள்ளல்கள் - அசோகன் புஷ்பாஞ்சலி.
- இதயத்தினை அளித்த இளைஞர் ஹிதேந்திரன்.

*********

# இலக்கணம்

## இயல் 1
## தமிழ் எழுத்துகளின் வகை தொகை

### தமிழ் மொழியின் இலக்கண வகைகள் ஐந்து

1. எழுத்து இலக்கணம்
2. சொல் இலக்கணம்
3. பொருள் இலக்கணம்
4. யாப்பு இலக்கணம்
5. அணி இலக்கணம்

### எழுத்து

❖ ஒலி வடிவாக எழுப்பப்படுவதும் வரிவடிவாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது

### உயிர் எழுத்துகள்

❖ உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும் போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன. வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல், ஆகிய எளிய செயல்பாடுகளால் 'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பிறக்கின்றன.

### மாத்திரை

❖ மாத்திரை என்பது இங்கு கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

❖ குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு - 1 மாத்திரை

❖ நெடில் எழுத்தை ஒலிக்கும் கலஅளவு - 2 மாத்திரை

❖ மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு - அரை மாத்திரை

### மெய்யெழுத்துகள்

❖ மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய 18ம் மெய்யெழுத்துக்கள்.

### உயிர் மெய்

❖ மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றுபவை உயிர்மெய் எழுத்துகள்.

❖ மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்தால் உயிர்மெய்க் குறில் தோன்றுகிறது. மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்தால் உயிர்மெய் நெடில் தோன்றுகிறது. ஆகவே உயிர்மெய் எழுத்துகளையும் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இருவகைப்படுத்தலாம்

❖ உயிர் மெய்க் குறில் - 5×18 – 90

❖ உயிர் மெய் நெடில் - 7×18 – 126

### ஆய்த எழுத்து

❖ தமிழ் மொழியில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் தவிர தனி எழுத்து ஒன்றும் உள்ளது, அது ∴ என்னும் ஆய்த எழுத்தாகும்.

❖ ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு அரை மாத்திரை.

## இயல் 2
## முதலெழுத்தும் சார்பெழுத்தும்

எழுத்துகள் இரண்டு வகைப்படும்

1. முதல் எழுத்து
2. சார்பு எழுத்து


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## முதல் எழுத்து

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும்.
- பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.

## சார்பு எழுத்துகள்

- முதல் எழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்துகள். இவை பத்து வகைப்படும்

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலிகரம்
6. குற்றியலுகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

## உயிர்மெய்

- மெய் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன.
- உயிர்மெய் எழுத்தின் ஒலிவடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.
- வரிவடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும். ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்திருக்கும்.
- முதல் எழுத்துகளைச் சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்து வகையுள் அடங்கும்.

## ஆய்தம்

- மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்றது.
- முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, அஃ்கேனம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.
- நுட்பமான ஒலிப்புமுறையை உடையது.
- தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
- தனித்து இயங்காது.

# இயல் 3
# மொழிமுதல், இறுதி எழுத்துகள்

## மொழி முதல் எழுத்துகள்

- மொழி என்பதற்குச் சொல் என்னும் பொருளும் உண்டு. சொல்லின் முதலில் வரும் எழுத்துகளை மொழி முதல் எழுத்துகள் என்பர்.
- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
- க, ச, த, ந, ப, ம ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயர்மெய் எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- ங, ஞ, ய, வ ஆகிய உயர்மெய் எழுத்து வரிசைகளில் சில எழுத்துகள் மட்டுமே சொல்லின் முதலில் வரும்.
- ங – வரிசையில் 'ங' என்னும் ஓர் எழுத்து மட்டுமே சொல்லில் முதல் எழுத்தாக வருகிறது. (எ.கா –ஙனம்).

(இக்காலத்தில் ஙனம் என்னும் சொல் தனித்து இயங்காமல் அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் என்னும் சொற்களில் மட்டுமே வழங்கி வருகிறது)

www.Padasalai.Net www.CBSEtips.in


- ❖ ஞ – வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ ஆகிய நான்கு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- ❖ ய – வரிசையில் ய, யா, யு, யூ, யோ, யௌ ஆகிய ஆறு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- ❖ வ – வரிசையில் வ, வா, வி, வீ, வெ, வே, வை ஆகிய ஏழு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.

## மொழிக்கு முதலில் வராத எழுத்துகள்

- ❖ மெய்யெழுத்துகள் பதினெட்டும் சொல்லின் முதலில் வராது.
- ❖ ட, ண, ர, ல, ழ, ள, ற, ன ஆகிய எட்டு உயிர்மெய் எழுத்துகளின் வரிசையில் ஓர் எழுத்து கூடச் சொல்லின் முதலில் வராது.
- ❖ ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.
- ❖ ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் மொழி முதலில் வருவதாகக் குறிப்பிடப்பட்ட எழுத்துகள் தவிர பிற எழுத்துகள் சொல்லின் முதலில் வராது.

## மொழி இறுதி எழுத்துகள்

- ❖ சொல்லின் இறுதியில் வரும் எழுத்துகளை மொழி இறுதி எழுத்துகள் என்பர்.
- ❖ உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யுடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே மொழி இறுதியில் வரும்.
- ❖ ஞ், ண், ந், ம்,ய், ர், ல், வ், ழ், ள், ன் ஆகிய மெய்யெழுத்துகள் பதினொன்றும் மொழியின் இறுதியில் வரும்.

> - ❖ உயிர் எழுத்துகள் மெய்யெழுத்துடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே சொல்லின் இறுதியில் வரும்.
> - ❖ அளபெடை எழுத்துகளில் இடம் பெறும் போது உயிர் எழுத்துகள் சொல்லின் இறுதியில் வரும்..

## மொழி இறுதியாகா எழுத்துகள்

- ❖ சொல்லின் இறுதியில் உயிரெழுத்துகள் தனித்து வருவதில்லை.
- ❖ ஆய்த எழுத்து சொல்லின் இறுதியில் வராது.
- ❖ க், ங், ச், ட், த், ப், ற் ஆகிய ஏழு மெய் எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.
- ❖ உயிர்மெய் எழுத்துகளுள் 'ங' எழுத்து வரிசை சொல்லின் இறுதியில் வராது.
- ❖ எகர வரிசையில் கெ முதல் னெ முடிய எந்த உயர்மெய் எழுத்தும் மொழி இறுதியில் வருவதில்லை.
- ❖ ஒகர வரிசையில் நொ தவிர பிற உயிர்மெய் எழுத்துகள் மொழி இறுதியில் வருவதில்லை.
- ❖ (நொ என்னும் எழுத்து ஓரெழுத்து ஒரு மொழியாகத் துன்பம் என்னும் பொருளில் வரும்).

## சொல்லின் இடையில் வரும் எழுத்துகள்

- ❖ மெய் எழுத்துகள் பதினெட்டும் சொல்லின் இடையில் வரும்.
- ❖ உயிர்மெய் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.
- ❖ ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
- ❖ அளபெடையில் மட்டுமே உயிர் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.

# இயல் 4
# இன எழுத்துகள்

## இன எழுத்துகள்

- ❖ சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு.
- ❖ இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- ❖ ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும்.
- ❖ சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.

| மெல்லினம் | வல்லினம் |
|---|---|
| ங் | க் |
| ஞ் | ச் |
| ண் | ட் |
| ந் | த் |
| ம் | ப் |
| ன் | ற் |

- ❖ இடையின எழுத்துகள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாகும்.
- ❖ உயர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும்.
- ❖ குறில் எழுத்து இல்லாத 'ஐ' என்னும் எழுத்துக்கு 'இ' என்பது இன எழுத்தாகும்.
- ❖ ஔ என்னும் எழுத்துக்கு 'உ' என்பது இன எழுத்தாகும். சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும். (எ.கா) ஓஒதல், தூஉம், தழீஇ
- ❖ ஆ – அ    ஏ – எ    ஔ – உ
- ❖ ஈ - இ    ஐ - இ
- ❖ ஊ – உ    ஓ – ஒ
- ❖ **தமிழ் எழுத்துகளில் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.**

## இயல் 5
## மயங்கொலிகள்

### மயங்கொலிகள்

- ❖ உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகள் மயங்கொலிகள் என்கிறோம்.

(எ.கா)

- ▪ ண, ன, ந
- ▪ ல, ழ, ள
- ▪ ர, ற

ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

### ண, ன, ந எழுத்துகள்

- ❖ ண – நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறக்கிறது
- ❖ ன – நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் னகரம் பிறக்கிறது
- ❖ ந – நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் நகரம் பிறக்கிறது.
- ❖ டகரத்தை அடுத்து வரும் ணகரம் 'டண்ணகரம்' என்றும்
- ❖ தகரத்தை அடுத்து வரும் நகரம் 'தந்நகரம்' என்றும்
- ❖ றகரத்தை அடுத்து வரும் னகரம் றன்னகரம் என்றும் அழைக்கப்படுகிறது.

### ல, ள, ழ எழுத்துகள்

- ❖ ல – நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும்.
- ❖ ள – நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனைப் பொது ளகரம் என்கிறோம்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


- ழ – நாவின் நுனி மேல்நோக்கி வளைந்த வருடுவதால் ழகரம் தோன்றும் (ளகரமும் ழகரமும் ஒரே இடத்தில் ஒலிக்கப்படும்). ழ தமிழுக்கே சிறப்பானது. எனவே இதனைச் 'சிறப்பு ழகரம்' என்று அழைக்கிறோம்.

## ர, ற – எழுத்துகள்

- ர – நாவின் நுனி மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது.
- இ∴து இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்.
- ற – நாவின் நுனி மேல் அண்ணத்தில் மையப்பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது. வல்லின றகரம் என்கிறோம்.

# இயல் 6
# சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள்

## சுட்டு எழுத்துகள்

- ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துகளுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர்
- அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். ஆனால் இன்று 'உ' என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

## அகச்சுட்டு

- இவன், அவன், இது, அது - இச் சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை.
- இவ்வாறு, சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே (அகத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.

## புறச்சுட்டு

- அந்நீர்வீழ்ச்சி, இம்மலை, இந்நூல், இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.
- இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே(புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

## அண்மைச்சுட்டு

- இவன், இவர், இது, இவை, இம்மரம், இவ்வீடு - இச்சொற்கள் நம் அருகில் (அண்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன.
- எனவே இ∴து அண்மைச் சுட்டு எனப்படும் அண்மைச்சுட்டு எழுத்து 'இ' ஆகும்.

## சேய்மைச்சுட்டு

அவள்,அவர், அது, அவை, அவ்வீடு, அம்மரம் - இச்சொற்கள் தொலைவில் (சேய்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன.

- எனவே இ∴து சேய்மைச்சுட்டு எனப்படும் சேய்மைச்சுட்டு எழுத்து 'அ' ஆகும்.

## சுட்டுத்திரிபு

- அம்மரம், இவ்வீடு ஆகியவை புறச்சுட்டுகள் என்பதை அறிவோம். இச்சொற்களை அந்த மரம், இந்தவீடு என்றும் வழங்குகிறோம்.
- அ, இ, ஆகிய சுட்டு எழுத்துகள் மாற்றம் பெற்று (திரிந்து) அந்த, இந்த என வழங்குகின்றன.
- இவ்வாறு அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் அந்த, இந்த எனத் திரிந்து சுட்டுப் பொருளைத் தருவது சுட்டுத்திரிபு எனப்படும். (எ.கா) இப்பள்ளி - இந்தப்பள்ளி.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

### வினா எழுத்துகள்

- ❖ வினாப் பொருளைத் தரும் எழுத்துகளுக்கு வினா எழுத்துகள் என்று பெயர்.
- ❖ எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்தும் வினா எழுத்துகள் ஆகும்.
- ❖ மொழியின் முதலில் வருபவை - எ, யா (எங்கு, யாருக்கு)
- ❖ மொழியின் இறுதியில் வருபவை – ஆ, ஓ (பேசலாமா, தெரியுமோ).
- ❖ மொழி முதலிலும் இறுதியிலும் வருபவை – ஏ (ஏன், நீதானே).

### அகவினா

- ❖ வினா எழுத்துகள் சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தருமானால் அஃது அகவினா எனப்படும்.
- ❖ (எ.கா) எது,யார், ஏன் இச்சொற்களில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகளுக்குப் பொருள் இல்லை.

### புற வினா

- ❖ வினா எழுத்துகள் சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருமானால் அஃது புறவினா எனப்படும்.
- ❖ (எ.கா) அவனா, வருவானோ இச்சொற்களில் உள்ள ஆ, ஓ ஆகிய வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.

## இயல் 7
## நால்வகைச் சொற்கள்

- ❖ தமிழில் சில எழுத்துகள் தனித்து நின்று பொருள் தரும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தரும்.
- ❖ இவ்வாறு பொருள் தருபவை சொல் எனப்படும். (எ.கா) ஈ, பூ, மை,கல், கடல், தங்கம்,
- ❖ இலக்கண அடிப்படையில் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

### பெயர்ச்சொல்

- ❖ ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.
  (எ.கா) பாரதி, பள்ளி, காலை, கண், நன்மை, ஓடுதல்.

### வினைச்சொல்

- ❖ வினை என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருள். செயலைக் குறிக்கும் சொல் வினைச் சொல் எனப்படும்.
  (எ.கா) வா, போ, எழுது, விளையாடு.

### இடைச்சொல்

- ❖ பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் இடைச்சொல் ஈகும். இது தனித்து இயங்காது.

| | | |
|---|---|---|
| (எ.கா) உம் | - | தந்தையும், தாயும் |
| மற்று | - | மற்றொருவர் |
| ஐ | - | திருக்குறளை |

### உரிச்சொல்

- ❖ பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச்சொல் ஆகும்.
  (எ.கா) மா – மாநகரம்
  சால – சாலச்சிறந்தது

www.Padasalai.Net www.CBSEtips.in


# இயல் 8
# பெயர்ச்சொல்

## பெயர்ச்சொல்

❖ ஒன்றன் பெயரைக்குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல் ஆறு வகைப்படும் அவை

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர்
6. தொழிற்பெயர்

## பொருட்பெயர்

❖ பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும். இ∴து உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.

(எ.கா) மரம், செடி, மயில், பறவை, புத்தகம் நாற்காலி

## இடப்பெயர்

❖ ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

(எ.கா) சென்னை , பள்ளி, பூங்கா, தெரு

## காலப்பெயர்

❖ காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

(எ.கா) நிமிடம், நாள், வாரம், சித்திரை, ஆண்டு.

## சினைப்பெயர்

❖ பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.

(எ.கா) கண், கை, இலை, கிளை.

## பண்புப்பெயர்

❖ பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.

(எ.கா) வட்டம், சதுரம், செம்மை, நன்மை.

## தொழிற்பெயர்

❖ தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா) படித்தல், ஆடுதல், நடித்தல்

## இடுகுறிப்பெயர், காரணப்பெயர்

❖ நம்முன்னோர் பெயர்ச்சொற்களை அவை வழங்கும் அடிப்படையில் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இருவகைப்படுத்தினர்.

## இடுகுறிப்பெயர்

❖ நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் பெயரிட்டு வழங்கினர் அவ்வாறு இட்டு வழங்கிய பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் ஆகும்.

❖ (எ.கா) மண், மரம், காற்று

❖ இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர் என இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும்.

## இடுகுறிப் பொதுப்பெயர்

❖ ஓர் இடுகுறிப்பெயர் அத்தன்மை உடைய எல்லாப் பொருள்களையும் குறிப்பது இடுகுறிப்பொதுப்பெயர் எனப்படும்.

(எ.கா) மரம், காடு

## இடுகுறிச் சிறப்புப்பெயர்

❖ ஓர் இடுகுறிப்பெயர் குறிப்பாக ஒரு பொருளை மட்டும் குறிப்பது இடுகுறிச் சிறப்புப்பெயர் எனப்படும்.

(எ.கா) மா, கருவேலங்காடு


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

### காரணப்பெயர்

- ❖ நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதிப் பெயரிட்டனர். இவ்வாறு காரணத்தோடு ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.
  (எ.கா) நாற்காலி, கரும்பலகை
- ❖ இது காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் என இரு வகைப்படும்.

### காரணப்பொதுப்பெயர்

- ❖ காரணப்பெயர் குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறித்தால் அது காரணப் பொதுப்பெயர் எனப்படும்.
- ❖ (எ.கா) பறவை, அணி

### காரணச் சிறப்புப்பெயர்

- ❖ குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பாகக் குறிப்பது காரணச்சிறப்புப்பெயர் ஆகும்.
- ❖ (எ.கா) வளையல், மரங்கொத்தி

## இயல் 9
## அணி இலக்கணம்

- ❖ அணி என்பதற்கு அழகு என்பது பொருள்.
- ❖ கவிஞர் தமது கருத்தைச் சுவையோடு சொல்வதற்கு உதவுவது அணி. மருந்தைத் தேனில் கொடுப்பது போல் கருத்துகளைச் சுவைபடக் கூறுவது அணியாகும்.

### இயல்பு நவிற்சி அணி

- ❖ ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும். இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர்.

எ.கா:

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு – உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப்பசு – பாலை
நன்றாய் குடிக்குது கன்றுக்குட்டி

- கவிமணி தேசி விநாயகனார்

### உயர்வு நவிற்சி அணி

- ❖ ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

(எ.கா) குளிர்நீரில் குளித்தலால்
கூதல் அடிக்குமென்று
வெந்நீரில் குளித்தால்
மேலே கருக்குமென்னு
ஆகாச கங்கை
அனல் உறைக்குமென்று
பாதாள கங்கையைப்
பாடி அழைத்தார் உன் தாத்தா!

- ❖ என்று ஒரு தாய் தாலாட்டுப் பாடுகிறாள். இதில் உயர்வு நவிற்சி அணி அமைந்தள்ளது.

******

Padasalai.Net

## Book Back Question

### இயல் - 1

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. ஏற்றத் தாழ்வற்ற _____ அமைய வேண்டும்
   அ)சமூகம் ஆ)நாடு இ) வீடு ஈ) தெரு
2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு _____ ஆக இருக்கும்.
   அ) மகிழ்ச்சி ஆ) கோபம்
   இ) வருத்தம் ஈ) அசதி
3. நிலவு+ என்று என்பதைனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) நிலயென்று ஆ)நிலவென்று
   இ) நிலவன்று ஈ) நிலவுஎன்னறு
4. தமிழ்+ எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ)தமிழ்ங்கள் ஆ) தமிழெங்கள்
   இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்
5. அமுதென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) அமுது+ தென்று ஆ) அமுது+ என்று
   இ) அமுது+ஒன்று ஈ) அமு +தென்று
6. செம்பயிர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) செம்மை+பயிர் ஆ) செம்+பயிர்
   இ) செம்ப+ பயிர் ஈ) செம்பு+பயிர்
7. **பொருத்துக.**
   அ) விளைவுக்கு - 1) பால்
   ஆ) அறிவுக்கு - 2) வேல்
   இ) இளமைக்கு - 3) நீர்
   ஈ) புலவர்க்கு - 4) தோள்
   அ) 1 2 3 4 ஆ) 2 3 4 1
   இ) 3 4 1 2 ஈ) 4 3 2 1
8. தாய் மொழியில் படித்தால் ------- அடையலாம்
   அ) பன்மை ஆ) மேன்மை
   இ) பொறுமை ஈ) சிறுமை
9. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ______ சுருங்கிவிட்டது.
   அ) மேதினி ஆ) நிலா
   இ) வானம் ஈ) காற்று
10. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________
    அ)செந்+ தமிழ் ஆ) சென்மை+ தமிழ்
    இ) சென் + தமிழ ஈ) செம்மை+ தமிழ்
11. பொய்யகற்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________
    அ) பொய்+அகற்றும் ஆ) பொய்+கற்றும்
    இ) பொய்ய+கற்றும் ஈ) பொய்+கயற்றும்
12. பாட்டு+இருக்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____
    அ)பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும்
    இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்
13. எட்டு +திசை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ------------
    அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை
    இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை
14. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் _____
    அ)புதுமை ஆ) பழமை
    இ)பெருமை ஈ)சீர்மை
15. 'இடப்புறம்' என்ற சொல்லைப் பிரிக்க கிடைக்கும் சொல் _____
    அ) இடன் + புறம் ஆ) இடது + புறம்
    இ) இட+ புறம் ஈ) இடப் + புறம்
16. சீரிளமை என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்
    அ) சீர்+இளமை ஆ) சீர்மை+இளமை
    இ) சீரி+இளமை ஈ)சீற்+இளமை
17. சிலம்பு+அதிகாரம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
    அ) சிலம்பதிகாரம் ஆ)சிலப்பதிகாரம்
    இ) சிலம்புதிகாரம் ஈ) சிலபதிகாரம்

18. கணினி + தமிழ் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
அ)கணினிதமிழ் ஆ)கணினித்தமிழ்
இ)கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ்

19. “தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடியவர் _____
அ)கண்ணதாசன் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

20. ‘மா‘ என்னும் சொல்லின் பொருள் _____
அ) மாடம் ஆ) வானம்
இ) விலங்கு ஈ) அம்மா

## இயல் - 2

21. கழுத்தில் சூடுவது _____
அ) தார் ஆ) கணையாழி
இ) தண்டை ஈ) மேகலை

22. கதிரவனின் மற்றொரு பெயர் _____
அ) புதன் ஆ) ஞாயிறு
இ) சந்திரன் ஈ) செவ்வாய்

23. வெண்குடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) வெண் +குடை ஆ) வெண்மை + குடை
இ) வெம் + குடை ஈ) வெம்மை+ குடை

24. பொற்கோட்டு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) பொன் + கோட்டு ஆ) பொற் + கோட்டு
இ) பொண் + கோட்டு ஈ) பொற்கோ+இட்டு

25. கொங்கு +அலர் என்பதனைச் சேரத்து எழுதக் கிடைக்கும் சொல்
அ) கொங்குஅலர் ஆ) கொங்அலர்
இ) கொங்கலர் ஈ) கொங்குலர்

26. அவன் + அளிபோல் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
அ) அவன்அளிபொல் ஆ) அவனளிபோல்
இ) அவன்வளிபோல் ஈ) அவனாளிபோல்

27. கிணறு என்பதைக் குறிக்கும் சொல் _____
அ) ஏரி ஆ) கேணி இ) குளம் ஈ) ஆறு

28. சித்தம் என்பதன் பொருள் _____
அ) உள்ளம் ஆ) மணம்
இ)குணம் ஈ) வனம்

29. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் __
அ) அடுக்குகள் ஆ) கூரை
இ) சாளரம் ஈ) வாயில்

30. நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் _____
அ) நன் + மாடங்கள் ஆ) நற் + மாடங்கள்
இ) நன்மை+ மாடங்கள் ஈ) நல் + மாடங்கள்

31. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் _____
அ)நிலம் + இடையே
ஆ)நிலத்தின் + இடையே
இ) நிலத்து+ இடையே
ஈ) நிலத் + திடையே

32. முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
அ) முத்துசுடர் ஆ) முச்சுடர்
இ) முத்துடர் ஈ) முத்துச்சுடர்

33. நிலா + ஒளி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------------
அ) நிலாஒளி ஆ) நிலஒளி
இ) நிலாவொளி ஈ) நிலவுஒளி

34. **பொருத்துக.**
அ) முத்துச்சுடர்போல - 1) மாடங்கள்
ஆ) தாய நிறத்தில் - 2) தென்றல்
இ) சித்தம் மகிழ்ந்திட - 3) நிலாஒளி
அ) 3 1 2 ஆ) 1 2 3
இ) 2 3 1 ஈ) 2 1 3

35. தட்பவெப்பம் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் ----------
அ) தட்பம் + வெப்பம் ஆ) தட்ப + வெப்பம்
இ) தட் + வெப்பம் ஈ) தட்பு + வெப்பம்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

36. வேதியுரங்கள் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் _____

அ) வேதி + யுரங்கள் ஆ) வேதி + உரங்கள்

இ) வேத் + உரங்கள் ஈ) வெதியு +ரங்கள்

37. தரை + இறங்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) தரையிறங்கும் ஆ) தரை இறங்கும்

இ) தரையுறங்கும் ஈ) தரையறங்கும்

38. வழி + தடம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) வழிதடம் ஆ) வழித்தடம்

இ) வழிதிடம் ஈ) வழித்திடம்

39. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி _____

அ) துருவப்பகுதி ஆ) இமயமலை

இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

40. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது _____

அ) ஊக்கமின்மை ஆ) அறிவுடைய மக்கள்

இ) வன்சொல் ஈ) சிறிய செயல்

41. ஒருவர்க்குச் சிறந்த அணி _____

அ) மாலை ஆ) காதணி

இ) இன்சொல் ஈ) வன்சொல்

## இயல் -3

42. உடல் நோய்க்கு _____ தேவை.

அ) ஔடதம் ஆ)இனிப்பு

இ)உணவு ஈ)உடை

43. நண்பர்களுடன் _____ விளையாடு.

அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு

இ) தனித்து ஈ) பகைத்து

44. கண்டறி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) கண் + அறி ஆ) கண்டு+ அறி

இ) கண்ட + அறி ஈ) கண் + டறி

45. ஓய்வற என்னும் சொல்லைப் பிரிக்க கிடைக்கும் சொல் _____

அ) ஓய்வு + அற ஆ) ஓய் + அற

இ) ஓய் + வற ஈ) ஓய்வு+ வற

46. ஏன் + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) ஏன்என்று ஆ) ஏனென்று

இ) ஏன்னென்று ஈ) ஏனன்று

47. ஔடதம் + ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) ஔடதமாம் ஆ) ஔடதம்ஆம்

இ) ஔடதம் ஈ) ஔடதஆம்

48. **பொருத்துக.**

அ) அணுகு - 1) தெளிவு

ஆ) ஐயம் - 2) சோர்வு

இ) ஊக்கம் - 3) பொய்மை

ஈ) உண்மை - 4) விலகு

அ) 4 1 2 3 ஆ) 1 2 3 4

இ) 2 3 4 1 ஈ) 4 3 2 1

49. அவன் எப்போதும் உண்மையையே _____

அ) உரைக்கின்றான் ஆ) உழைக்கின்றான்

இ) உறைகின்றான் ஈ) உரைகின்றான்

50. ஆழக்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ)ஆழமான+ கடல் ஆ) ஆழ் + கடல்

இ) ஆழ + கடல் ஈ) ஆழம் + கடல்

51. விண்வெளி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) விண் + வளி ஆ) விண் + வெளி

இ) விண் + ஒளி ஈ) விண் + வொளி

52. நீலம் + வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) நீலம்வான் ஆ) நீளம்வான்

இ) நீலவான் ஈ) நீலவ்வான்

53. இல்லாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) இல்லாதுஇயங்கும் ஆ) இல்லாஇயங்கும்

இ) இல்லாதியங்கும் ஈ) இல்லதியங்கும்

54. நுட்பமாகச் சிந்தித்து அறிவது ________

அ) நூலறிவு ஆ) நுண்ணறிவு

இ) சிற்றிறவு ஈ) பட்டறிவு

55. தானே இயங்கும் இயந்திரம் __________

அ) கணினி ஆ) தானியங்கி

இ) அலைபேசி ஈ) தொலைக்காட்சி

56. நின்றிருந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) நின் + றிருந்த ஆ) நின்று + இருந்த

இ) நின்றி+ இருந்த ஈ) நின்றி + ருந்த

57. அவ்வுருவம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) அவ்வு + ருவம் ஆ) அ + உருவம்

இ) அவ் + வுருவம் ஈ) அ + வுருவம்

58. மருத்துவம் + துறை சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) மருத்துவம்துறை ஆ) மருத்துவதுறை

இ) மருந்துதுறை ஈ) மருத்துவத்துறை

59. செயல் +இழக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) செயலிழக்க ஆ) செயல்இழக்க

இ) செயஇழக்க ஈ) செயலிலக்க

60. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ____

அ) போக்குதல் ஆ) தள்ளுதல்

இ) அழித்தல் ஈ) சேர்த்தல்

61. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

அ) அரிது ஆ) சிறிது

இ)பெரிது ஈ) வறிது

62. மாணவர்கள் நூல்களை _____ கற்க வேண்டும்.

அ) மேலோட்டமாக ஆ) மாசுற

இ) மாசற ஈ) மயக்கமுற

63. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) இடம் + மெல்லாம் ஆ) இடம் + எல்லாம்

இ) இட+ எல்லாம் ஈ) இட+ மெல்லாம்

64. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) மாச + அற ஆ) மாசு + அற

இ) மாச + உற ஈ)மாசு+ அற

65. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) குற்றமில்லாதவர் ஆ) குற்றம்இல்லாதவர்

இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம்அல்லாதவர்

66. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) சிறப்புஉடையார் ஆ) சிறப்புடையார்

இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

## இயல் - 4

67. மாணவர் பிறர் _____ நடக்கக் கூடாது.

அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி

இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

68. நாம் --------- சொல்படி நடக்க வேண்டும்

அ) இளையோர் ஆ) ஊரார்

இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்

69. கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) கையில் + பொருள் ஆ)கைப்+பொருள்

இ) கை + பொருள் ஈ)கைப்பு+பொருள்

70. மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

அ) மானம்இல்லா ஆ) மானமில்லா

இ) மானமல்லா ஈ) மானம்மில்லா

Padasalai.Net

71. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம்

அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை

ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை

இ) வழி தெரியவில்லை

ஈ) பேருந்து வசதியில்லை

72. பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பசி+ இன்றி ஆ) பசி + யின்றி

இ) பசு + இன்றி ஈ) பசு + யின்றி

73. படிப்பறிவு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) படி+ அறிவு ஆ) படிப்பு + அறிவு

இ) படி + வறிவு ஈ)படிப்பு + வறிவு

74. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) காட்டாறு ஆ) காடாறு

இ) காட்டுஆறு ஈ) காடுஆறு

75. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?

அ) மஞ்சள் ஆ) வந்தான்

இ)கல்வி ஈ)தம்பி

76. தவறான சொல்லை வட்டமிடுக.

அ) கண்டான் ஆ) வென்றான்

இ) நண்டு ஈ) வண்டு

## இயல் - 5

77. பிறரிடம் நான் _____ பேசுவேன்

அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல்

இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்

78. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்வது _____ ஆகும்

அ) வம்பு ஆ) அமைதி

இ) அடக்கம் ஈ) பொறை

79. அறிவு + உடைமை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) அறிவுடைமை ஆ) அறிவுஉடைமை

இ) அறியுடைமை ஈ) அறிஉடைமை

80. இவை + எட்டும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _________

அ) இவைஎட்டும் ஆ) இவையெட்டும்

இ) இவ்வெட்டும் ஈ) இவ்எட்டும்

81. நன்றியறிதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் _________

அ) நன்றி + யறிதல் ஆ) நன்றி + அறிதல்

இ) நன்று+ அறிதல் ஈ)நன்று + யறிதல்

82. பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ)பொறுமை +உடைமை

ஆ)பொறை +யுடைமை

இ) பொறு +யுடைமை

ஈ)பொறை + உடைமை

83. பாட்டிசைத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) பாட்டி + சைத்து ஆ) பாட்டி + இசைத்து

இ) பாட்டு+ இசைத்து ஈ) பாட்டு+ சைத்து

84. கண்ணுறங்கு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) கண் + உறங்கு ஆ) கண்ணு + உறங்கு

இ) கண் + றங்கு ஈ) கண்ணு + றங்கு

85. வாழை + இலை என்னும் சொல்லைப் சேர்த்து எழுதக் கிடைப்பது -------

அ) வாழையிலை ஆ) வாழைஇலை

இ) வாழைலை ஈ) வாழிலை

86. கை + அமர்த்தி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ------

அ) கைமர்த்தி ஆ) கைஅமர்த்தி

இ) கையமர்த்தி ஈ) கையைமர்த்தி

Padasalai.Net

87. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்

அ) மறைந்த ஆ) நிறைந்த

இ) குறைந்த ஈ) தோன்றிய

88. கதிர் முற்றியதும் _____ செய்வர்

அ) அறுவடை ஆ) உரமிடுதல்

இ) நடவு ஈ) களையெடுத்தல்

89. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் _____ கட்டுவர்

அ) செடி ஆ) கொடி

இ) தோரணம் ஈ)அலங்கார வளைவு

90. பொங்கல் + அன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) பொங்கலன்று ஆ) பொங்கல்அன்று

இ) பொங்கலென்று ஈ) பொங்கஅன்று

91. போகிப்பண்டிகை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) போகி+ பண்டிகை ஆ) போ+ பண்டிகை

இ) போகு + பண்டிகை ஈ) போகி+ பண்டிகை

92. பழையன கழிதலும் _____ புகுதலும்

அ) புதியன ஆ) புதுமை

இ) புதிய ஈ) புதுமையான

93. பச்சைப் பசேல் என்ற வயலைக் காண இன்பம் தரும் பட்டுப் போன மரத்தைக் காண _____ தரும்

அ) அயர்வு ஆ) கனவு

இ) துன்பம் ஈ) சோர்வு

94. விருந்தினரின் முகம் எப்போது வாடும்?

அ) நம் முகம் மாறினால்

ஆ)நம் வீடு மாறினால்

இ) நாம் நன்கு வரவேற்றால்

ஈ) நம் முகவரி மாறினால்

95. நிலையான செல்வம் ----------------------

அ) தங்கம் ஆ) பணம்

இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

96. ஆராயும் அறிவு உடையவர்கள் _____ சொற்களைப் பேசமாட்டார்.

அ) உயர்வான ஆ)விலையற்ற

இ) பயன்தராத ஈ) பயன்உடைய

97. பொருளுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடக்கும் சொல்

அ) பொருளு + உடைமை

ஆ) பொரு + ளுடைமை

இ) பொருள் + உடைமை

ஈ) பொருள் + ளுடைமை

98. உள்ளுவது + எல்லாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) உள்ளுவதுஎல்லாம்

ஆ) உள்ளுவதெல்லாம்

இ) உள்ளுவத்தெல்லாம்

ஈ) உள்ளுவதுதெல்லாம்

99. பயன் + இலா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) பயனிலா ஆ) பயன்னில்லா

இ)பயன்இலா ஈ) பயன்இல்லா

## இயல் - 6

100. போர்க்களத்தில் வெளிப்படும் குணம்

அ) மகிழ்ச்சி ஆ) துன்பம்

இ) வீரம் ஈ) அழுகை

101. கல்லெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கல் + அடுத்து ஆ) கல் + எடுத்து

இ) கல் + லடுத்து ஈ) கல் + லெடுத்து

102. நானிலம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) நா + னிலம் ஆ) நான்கு + நிலம்

இ) நா + நிலம் ஈ) நான் + நிலம்

103. நாடு + என்ற என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) நாடென்ற ஆ) நாடன்ற

இ) நாடுஎன்ற ஈ) நாடுஅன்ற

104. கலம் + ஏறி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கலம்ஏறி ஆ) கலமறி

இ) கலனஏறி ஈ) கலமேறி

105. கதிர்ச்சுடர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கதிர்ச் + சுடர் ஆ) கதிரின் + சுடர்

இ) கதிரவன் + சுடர் ஈ) கதிர் + சுடர்

106. மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) மூச்சு+ அடக்கி ஆ) மூச் + அடக்கி

இ) மூச் + சடக்கி ஈ)மூச்சை + அடக்கி

107. பெருமை + வானம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) பெருமைவனம் ஆ) பெருவானம்

இ) பெருமானம் ஈ) பேர்வானம்

108. அடிக்கும் + அலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடக்கும் சொல்

அ) அடிக்குமலை ஆ) அடிக்கும் அலை

இ) அடிக்கிலை ஈ) அடியலை

109. **பொருத்துக**

அ) விடிவெள்ளி - 1) பஞ்சுமெத்தை

ஆ) மணல் - 2) ஊஞ்சல்

இ) புயல் - 3) போர்வை

ஈ) பனிமூட்டம் - 4) விளக்கு

அ) 1 2 3 4 ஆ) 2 3 1 4

இ) 4 1 2 3 ஈ) 4 3 2 1

110. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்

அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி

இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி

111. வணிகம் + சாத்து என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) வணிகசாத்து ஆ) வணிகம்சாத்து

இ) வணிகச்சாத்து ஈ) வணிகத்துசாத்து

112. பண்டம் + மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) பண்டமாற்று ஆ) பண்டம்மாற்று

இ) பண்மாற்று ஈ) பண்டுமாற்று

113. வண்ணப்படங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் ______ சொல்

அ) வண்ணம் + படங்கள்

ஆ) வண்ணப் + படங்கள்

இ) வண்ண + படங்கள்

ஈ) வண்ணமான + படங்கள்

114. விரிவடைந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடக்கும் சொல்

அ) விரி + வடைந்த

ஆ) விரி + அடைந்த

இ) விரிவு + அடைந்த

ஈ) விரிவ் + அடைந்த

## இயல் - 7

115. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல்

அ) திருவாசகம் ஆ) திருக்குறள்

இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

116. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம்

அ) காவிரிக்கரை ஆ) வைகைக்கரை

இ)கங்கைக்கரை ஈ) யமுனைக்கரை

117. கலைக்கூடமாக காட்சி தருவது

அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம்

இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


118. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) நூல் + ஆடை ஆ) நூலா +டை

இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆட

119. எதிர் + ஒலிக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடக்கும் சொல்

அ) எதிரலிக்க ஆ) எதிர்ஒலிக்க

இ) எதிரொலிக்க ஈ) எதிர்ரொலிக்க

120. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்

அ) கோவை ஆ) மதுரை

இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

121. காந்தியடிகள் எந்தப் பெரியவரின் அடிநிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்

அ) நாமக்கல் கவிஞர் ஆ) திரு.வி.க.

இ) உ.வே.சா. ஈ) பாரதியார்

**122. பொருத்துக**

அ) இலக்கிய மாநாடு - 1) பாரதியார்

ஆ) தமிழ்நாட்டின் சொத்து - 2) சென்னை

இ) குற்றாலம் - 3) ஜி.யு. போப்

ஈ) தமிழ்க் கையேடு - 4) அருவி

அ) 1 2 3 4 ஆ) 2 1 4 3

இ) 4 3 2 1 ஈ) 3 4 1 2

## இயல் - 8

123. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

அ) தம்முயிர் ஆ) தமுயிர்

இ) தம்உயிர் ஈ) தமுஉயிர்

124. இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடக்கும்சொல்

அ) இன்புற்றிருக்க ஆ) இன்புறுறிருக்க

இ) இன்புற்றுஇருக்க ஈ) இன்புறு இருக்க

125. தானென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) தானெ+ என்று ஆ) தான் + என்று

இ) தா + னென்று ஈ) தான் + னென்று

126. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ______

அ) அழிவு ஆ) துன்பம்

இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்

127. பரிசு பெறும்போது உன் மனநிலை ______ ஆக இருக்கும்

அ) கவலை ஆ) துன்பம்

இ) மகிழ்ச்சி ஈ) சோர்வு

128. வாழ்வில் உயர கடினமாக ______ வேண்டும்.

அ) பேச ஆ) சிரிக்க

இ) நடக்க ஈ) உழைக்க

129. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு ______

அ) இலங்கைத் தீவு ஆ) இலட்சத் தீவு

இ) மணிபல்லவத் தீவு ஈ) மாலத் தீவு

130. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் ------------

-அ) சுதமதி ஆ) ஆதிரை

இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை

131. இடுகுறிப்பெயரை வட்டமிடுக.

அ) பறவை ஆ) மண்

இ) முக்காலி ஈ) மரங்கொத்தி

132. காரணப்பெயரை வட்டமிடுக.

அ) மரம் ஆ) வளையல்

இ) சுவர் ஈ) யானை

133. இடுகுறிச்சிறப்புப் பெயரை வட்டமிடுக.

அ) வயல் ஆ) வாழை

இ) மீன்கொத்தி ஈ) பறவை

134. ஏழைகளுக்கு உதவி செய்வதே _____ ஆகும்.

அ) பகை ஆ) ஈகை

இ) வறுமை ஈ) கொடுமை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

135. பிற உயிர்களின் ______க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்
அ) மகிழ்வை ஆ) செல்வத்தை
இ) துன்பத்தை ஈ) பகையை

136. உள்ளத்தில் ---------------------- இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.
அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு
இ) துணிவு ஈ) குற்றம்

137. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல்
அ) ஜீவ ஜோதி ஆ) ஆசிய ஜோதி
இ) நவ ஜோதி ஈ) ஜீவன் ஜோதி

138. நேர்மையான வாழ்வை வாழ்பவர்
அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர்
ஆ) உயிர்களைத் துன்புறுத்துபவர்
இ) தம்மை மட்டும் காத்துக் கொள்பவர்
ஈ) தம் குடும்பத்தையே எண்ணி வாழ்பவர்

139. ஒருவர் செய்யக் கூடாதது
அ) நல்வினை ஆ) தீவினை
இ) பிறவினை ஈ) தன்வினை

140. எளிதாகும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) எளிது+ தாகும் ஆ) எளி + தாகும்
இ) எளிது + ஆகும் ஈ) எளிதா + ஆகும்

141. பாலையெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) பாலை+ யெல்லாம் ஆ) பாலை+எல்லாம்
இ) பாலை + எலாம் ஈ) பா +எல்லாம்

142. இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது
அ) இன்உயிர் ஆ) இனியஉயிர்
இ) இன்னுயிர் ஈ) இனிமைஉயிர்

143. மலை + எலாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது
அ) மலைஎலாம் ஆ) மலையெலாம்
இ) மலையெல்லாம் ஈ) மலைஎல்லாம்

## இயல் - 9

144. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்
அ) மனித வாழ்க்கை ஆ) மனித உரிமை
இ) மனித நேயம் ஈ) மனித உடைமை

145. தம் பொருளைக் கவர்ந்தவரிடமும் ______ காட்டியவர் வள்ளலார்
அ) கோபம் ஆ) வெறுப்பு
இ)கவலை ஈ) அன்பு

146. அன்னை தெரசாவிற்கு ______ க்கான 'நோபல் பரிசு' கிடைத்தது
அ) பொருளாதாரம் ஆ)இயற்பியல்
இ) மருத்துவம் ஈ) அமைதி

147. கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம்
அ) குழந்தைகளைப் பாதுகாப்போம்
ஆ) குழந்தைகளை நேசிப்போம்
இ) குழந்தைகளை வளர்ப்போம்
ஈ) குழந்தைகள் உதவி மையம்


Padasalai.Net

விடைக் குறிப்பு

| No. | key | No | key | No | key | No. | key |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | A | 38. | B | 75. | C | 112. | A |
| 2. | D | 39. | A | 76. | B | 113. | A |
| 3. | B | 40. | A | 77. | B | 114. | C |
| 4. | B | 41. | C | 78. | C | 115. | B |
| 5. | B | 42. | A | 79. | A | 116. | C |
| 6. | A | 43. | A | 80. | B | 117. | A |
| 7. | C | 44. | B | 81. | B | 118. | A |
| 8. | B | 45. | A | 82. | D | 119. | C |
| 9. | A | 46. | B | 83. | C | 120. | B |
| 10. | B | 47. | A | 84. | A | 121. | C |
| 11. | A | 48. | A | 85. | A | 122. | B |
| 12. | A | 49. | A | 86. | C | 123. | A |
| 13. | A | 50. | D | 87. | A | 124. | A |
| 14. | B | 51. | B | 88. | A | 125. | B |
| 15. | B | 52. | C | 89. | C | 126. | C |
| 16. | A | 53. | C | 90. | A | 127. | C |
| 17. | B | 54. | B | 91. | A | 128. | D |
| 18. | B | 55. | B | 92. | A | 129. | C |
| 19. | B | 56. | B | 93. | C | 130. | B |
| 20. | C | 57. | B | 94. | A | 131. | B |
| 21. | A | 58. | D | 95. | C | 132. | C |
| 22. | B | 59. | A | 96. | C | 133. | B |
| 23. | B | 60. | D | 97. | C | 134. | B |
| 24. | A | 61. | A | 98. | B | 135. | C |
| 25. | C | 62. | C | 99. | A | 136. | D |
| 26. | B | 63. | B | 100. | C | 137. | B |
| 27. | B | 64. | B | 101. | B | 138. | A |
| 28. | A | 65. | A | 102. | B | 139. | B |
| 29. | A | 66. | B | 103. | A | 140. | C |
| 30. | C | 67. | B | 104. | D | 141. | B |
| 31. | B | 68. | C | 105. | D | 142. | C |
| 32. | D | 69. | C | 106. | A | 143. | C |
| 33. | C | 70. | B | 107. | B | 144. | C |
| 34. | A | 71. | B | 108. | B | 145. | D |
| 35. | A | 72. | A | 109. | C | 146. | D |
| 36. | B | 73. | B | 110. | A | 147. | A |
| 37. | A | 74. | A | 111. | C | -- | -- |

Padasalai.Net



கோ. செந்தில்குமார் எம்.ஏ., எம்.பில்., பி.எட். பட்டதாரி தமிழ் ஆசிரியர்,
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, அல்லிநகரம், தேனி மாவட்டம். பேசுவதற்கு: 99420 52222

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# ஏழாம் வகுப்பு

## கவிதைப்பேழை
### இயல் - 1
### எங்கள் தமிழ்

- உலக மொழிகளில் தொன்மையானது நம் தமிழ்மொழி. அது மென்மையும், இனிமையும் வளமையும் உடையது.

**அருள்நெறி அறிவைத் தரலாகும்**
**அதுவே தமிழன் குரலாகும்**
**அன்பும் அறமும் ஊக்கிவிடும்**
**அச்சம் என்பதைப் போக்கிவிடும்**
**இன்பம் பொழிகிற வானொலியாம்**
**எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்**

**- இராமலிங்கனார்**

**பொருள் தருக**

- ஊக்கிவிடும் - ஊக்கப்படுத்தும்
- விரதம் - நோன்பு
- குறி - குறிக்கோள்
- பொழிகிற - தருகின்ற
- கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும், அறமும் உதவும்.
- நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்: அ∴து அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்; எங்கள் தமிழ் மொழி தேன் போன்ற மொழி ஆகும்.
- இராமலிங்கனார் நமக்கல் கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்.
- இவர் தமிழறிஞர், கவிஞர், விடுதலைப்போராட்ட வீரர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர்.
- காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் 'காந்தியக் கவிஞர்' என்றும் அழைக்கப்படுகிறார்.
- இராமலிங்கனார் தமிழகத்தின் 'முதல் அரசவைக் கவிஞராக' விளங்கினார்.
- மலைக்கள்ளன்,நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

**கூடுதல் விபரம்**

"கத்தியின்றி ரத்தமின்றி
யுத்த மொன்று வருகுது….."

**- நாமக்கல் கவிஞர்**

## தமிழ்மொழி மரபு

- வாழ்வுக்குரிய ஒழுங்குமுறைகள் 'ஒழுக்கம்' எனப்படும். மொழிக்குரிய ஒழுங்குமுறைகள் 'மரபு' எனப்படும்.
- செய்யுளுக்கும், மரபுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிக் கூறும் நூல் தொல்காப்பியம்.

**நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை**
**மரபுவழிப்பட்ட சொல்லின் ஆன**
**மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்**

**- தொல்காப்பியர்**

**பாடலின் பொருள்:**

இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும். உலகத்துப் பொருட்களை இரு திணைகளாகவும் ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும். இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும்.

தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

**சொல்லும் பொருளும்**

- விசும்பு - வானம்
- மயக்கம் - கலவை
- இருதிணை - உயர்திணை, அஃறிணை
- வழாஅமை - தவறாமை
- ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
- மரபு - வழக்கம்
- திரிதல் - மாறுபடுதல்
- செய்யுள் - பாட்டு
- தழாஅல் - தழுவுதல் (பயன்படுத்துதல்)
- தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர். தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம்.
- எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம் என்னும் 3 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. தொல்காப்பியம் ஒவ்வொரு அதிகாரமும் 9 இயல்களைக் கொண்டது.

## இயல் - 2
## ஓடை

**ஓடை ஆட உள்ளம் தாண்டுதே – கல்லில்**
**உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்.**
**நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி**
**நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்**
**கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்**
**குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி**
**- வாணிதாசன்**

**சொல்லும் பொருளும்**

1. தூண்டுதல் - ஆர்வம் கொள்ளுதல்
2. ஈரம் - இரக்கம்
3. முழவு - இசைக்கருவி
4. நன்செய் - நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்
5. புன்செய் - குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்
6. வள்ளைப்பாட்டு - நெல்குத்தும் போது பாடப்படும் பாடல்
7. பயிலுதல் - படித்தல்
8. நாணம் - வெட்கம்
9. செஞ்சொல் - திருந்திய சொல்

- 'ஓடை' பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல் வாணிதாசனது 'தொடுவானம்' என்னும் நூலில் உள்ளது. **தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்** என்று புகழப்படுவர் கவிஞர் வாணிதாசன்.
- தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வல்லவர் வாணிதாசன்.
- கவிஞரேறு, பாவலர்மணி முதலிய சிறப்புப் பெயர்களைப் பெற்றவர். இவருக்கு பிரெஞ்சு அரசு செவாலியர் விருது வழங்கியுள்ளது.
- தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் என்பன இவரது நூல்களில் சிலவாகும்.

## காடு

**கார்த்திகை தீபமெனக்**
**காடெல்லாம் பூத்திருக்கும்**
**பார்த்திட வேண்டுமடி – கிளியே**
**பார்வை குளிருமடி!**
**சிங்கம் புலிகரடி**
**சிறுத்தை விலங்கினங்கள்**
**எங்கும் திரியுமடி – கிளியே**
**இயற்கை விடுதியிலேயே-சுரதா**

## சொல்லும் பொருளும்

1) ஈன்று - பெற்று
2) கொம்பு - கிளை
3) அதிமதுரம் - மிகுந்த சுவை
4) களித்திட - மகிழ்ந்திட
5) நச்சரவம் - விடமுள்ள பாம்பு
6) விடுதி - தங்கும் இடம்

- சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். இவர் பாரதிதாசன் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். எனவே, தம் பெயரைச் சுப்புரத்தின தாசன் என்று மாற்றிக்கொண்டார். அதன் சுருக்கமே **'சுரதா'** என்பதாகும்.
- உவமைகளைப் பயன்படுத்திக் கவிதைகள் எழுதுவதில் வல்லவர் என்பதால் 'உவமைக் கவிஞர்' என்றும் அழைப்பர்.
- சுரதா கவிதைகள் என்னும் நூலில் 'இயற்கை எழில்' என்னும் பகுதியிலிருந்து இப்பாடல் எடுக்கப்பட்டது.

**கூடுதல் செய்தி**

**நெஞ்சில் உரமுமின்றி**
**நேர்மைத் திறமுமின்றி**
**வஞ்சனை சொல்வாரடி! –கிளியே**
**வாய்ச்சொல்லில் வீரரடி**

**- பாரதி**

**இதைப் படியுங்கள் முதலில்**

காட்டைக் குறிக்கும் வேறு பெயர்கள் கா, கால், கான், கானகம், அடவி, அரண், ஆரணி,புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை, இறும்பு, சுரம், பொச்சை, பொதி, அரில், முளி,அறல், பதுக்கை, கணையம்.

## திருக்குறள்

- "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று திருக்குறளின் பெருமையை ஔவையார் போற்றுகிறார்.
- தமிழ்நூல்களில் 'திரு' என்னும் அடைமொழியோடு வருகின்ற முதல் நூல் திருக்குறள். இது அறத்துப்பால், பொருட்பால்,இன்பத்துப்பால் என்று 3 பகுப்புகளைக் கொண்டது.
- இதில் அறம் -38, பொருள்-70, இன்பம்-25 என மொத்தம் 133 அதிகாரங்களை கொண்டது. அதிகாரத்திற்கு 10 குறள்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன.
- முப்பால், தெய்வநூல், பொய்யாமொழி என்றெல்லாம் திருக்குறள் போற்றப்படுகிறது.

**அழுக்காறாமை**

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு

**பொருள்:** ஒருவர் தன் நெஞ்சில் பொறாமையில்லாத குணத்தையே ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழ வேண்டும்.

2. அவ்விய செஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

**பொருள்:** பொறாமை கொண்டவருடைய செல்வமும், பொறாமை இல்லாதவருடைய வறுமையும் சான்றோரால் ஆராயப்படும்.

**புறங்கூறாமை**

3. கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல்.

**பொருள்:** ஒருவருக்கு நேர்நின்று கடுமையான சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம்.

ஆனால், அவர் இல்லாதபோது புறங்கூறுதல் கூடாது.

4. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

**பொருள்:** பிறருடைய குற்றத்தைக் காண்பது போல், தன்னுடைய குற்றத்தையும் காண்பவருடைய வாழ்வில் துன்பம் இல்லை.

### அருளுடைமை

5.அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

**பொருள்:** அருளாகிய செல்வமே செல்வங்களுள் சிறந்த செல்வமாகும். பொருட்செல்வம் இழிந்தவரிடத்திலும் உள்ளது.

6. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

**பொருள்:** ஒருவர் தன்னைவிட மெலிந்தவரை துன்புறுத்தும் போது, தன்னை விட வலிமையுடையவரின் முன்தான் அஞ்சி நிற்கும் நிலையை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

### வாய்மை

7. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

**பொருள்:** வாய்மை எனப்படுவது மற்றவர்க்கு ஒரு தீங்கும் தராத சொற்களைச் சொல்லுதல் சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

8. தன்நெஞ்சு அறிவது செய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

**பொருள்:** ஒருவர் தன் நெஞ்சறிய பொய் சொல்லக்கூடாது. அவ்வாறு கூறினால் அவர் நெஞ்சமே அவனை வருத்தும்.

9. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

**பொருள்:** உள்ளத்தில் பொய் இல்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவார்.

### இறைமாட்சி

10. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

பொருள்: பொருள் வரும் வழிகளை அறிதலும், அவ்வழிகளில் பொருள்களைச் சேர்த்தலும், சேர்த்த பொருளைப் பாதுகாத்தலும், காத்த பொருளைப் பயனுள்ள வகையில் திட்டமிட்டுச் செலவிடுதலும் சிறந்த அரசின் செயலாகும்.

## இயல் - 3
## கலங்கரை விளக்கம்

**வானம் ஊன்றிய மதலை போல**
**ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி**
**விண்பொர நிவந்த வேயா மாடத்து**
**இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி**
**உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்**
**துறை......**

கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

### சொல்லும் பொருளும்

1) மதலை - தூண்
2) ஞெகிழி - தீச்சுடர்
3) அழுவம் - கடல்
4) வேயா மாடம் -வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம்.
5) சென்னி - உச்சி
6) உரவுநீர் - பெருநீர்ப் பரப்பு
7) கரையும் - அழைக்கும்

➢ கடியலூர் உருத்திரங்கண்ணனார் சங்ககாலப் புலவர் ஆவர்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

- இவர் பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
- பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் தொண்டைமான் இளந்திரையன்.
- வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது ஆற்றுப்படை இலக்கியம்.

## கவின்மிகு கப்பல்

**உலகுகிளர்ந்த தன்ன உருகெழு வங்கம்**
**புலவுத்திரைப் பெருங்கடல் நீர்இடைப் போழ**
**இரவும் எல்லையும் அசைவுஇன்று ஆகி**
**விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்ட**
**கோடுஉயர் திணிமணல் அகன்துறை நீகான்**
**மாட ஒள்எரி மருங்குஅறிந்து ஒய்ய**
**- மருதன் இளநாகனார்.**

### பாடலின் பொருள்:

- உலகம் புடைபெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய்.
- உயர்ந்த கரையை உடைய மணல் நிறைந்த துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து நாவாய் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான்.

### சொல்லும் பொருளும்

1) உரு - அழகு
2) போழ - பிளக்க
3) வங்கூழ் - காற்று
4) நீகான் - நாவாய் ஓட்டுபவன்
5) வங்கம் - கப்பல்
6) எல் - பகல்
7) மாடஒள்ளெரி - கலங்கரை விளக்கம்
8) கோடு உயர் - கரை உயர்ந்த

- மருதன் இளநாகனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். கலித்தொகையின் மருதத்திணையில் உள்ள முப்பது ஐந்து பாடல்களையும் பாடியவர் இவரே. மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்.
- அகநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புலவர் பலரால் பாடப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது. இந்நூலினை நெடுந்தொகை என்றும் அழைப்பர்.

## இயல் - 4
## இன்பத்தமிழ்க் கல்வி

**ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட**
**என்னை எழுதென்று சொன்னது வான்**
**ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்**
**ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்**
**காடும் கழனியும் கார்முகிலும் வந்து**
**கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்**
**ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்**
**அன்பினைச் சித்திரம் செய்க என்றார்**
**. பாரதிதாசன்**

### சொல்லும் பொருளும்

1. எத்தனிக்கும் - முயலும்
2. வெற்பு - மலை
3. கழனி - வயல்
4. நிகர் - சமம்
5. அன்னதோர் - அப்படிஒரு
6. கார்முகில் - மழைமேகம்
7. துயின்றிருந்தார் - உறங்கியிருந்தார்
8. பரிதி - கதிரவன்

### நூல்வெளி

- கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் என்ப பன்முக ஆற்றல் கொண்டவர் பாரதிதாசன். கதை, கட்டுரை,நாடகம் படைப்பதில் வல்லவர்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

- பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்பவிளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். 'பிசிராந்தையார்' என்னும் நாடக, நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.
- இப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் என்னும் தொகுப்பில் தமிழ்ப்பேறு என்னும் தலைப்பில் உள்ளது.

## கல்வி அழகே அழகு

**கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்**
**மற்றோர் அணிகலன் வேண்டாவாம் -முற்ற**
**முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே**
**அழகுக்கு அழகுசெய் வார்**

**– குமரகுருபரர்**

### சொல்லும் பொருளும்

1. கலன் - அணிகலன்
2. முற்ற - ஒளிர

- கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு. அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் தேவையில்லை.

### நூல்வெளி

- குமரகுருபரர் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.
- நீதிகளைச் சுட்டிக்காட்டுவதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் என்பர் . கடவுள் வாழ்த்து உட்பட 102 செய்யுள்கள் இந்நூலில் உள்ளன.

## இயல் - 5
## ஒரு வேண்டுகோள்

**கலையுலகப் பிரும்மாக்களே**
**மண்ணின் வனப்புக்குப்**
**புதிய அழகுகள் சோப்பவர்களே**
**ஒரு மானுடத்தின் வேண்டுகோள்**
**மனிதன் இல்லாத - இணையாத**
**எந்த வனப்பும் வனப்பில்லை**
**அவன் கலவாத எதிலும்ஜீவ உயிர்ப்பில்லை**

**- தேனரசன்**

### சொல்லும் பொருளும்

- பிரும்மாக்கள் - படைப்பாளர்கள்
- வனப்பு - அழகு
- மேனி - உடல்
- நெடி - நாற்றம்

### நூல்வெளி

- தேனரசன் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இவர் வானம்பாடி, குயில், தென்றல் போன்ற இதழ்களில் கவிதைகள் எழுதியுள்ளார்.
- இவரது கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்,எள்ளல் சுவையோடு வெளிப்படும். மண்வாசல், வெள்ளை ரோஜா, பெய்து பழகிய மேகம் ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

## கீரைப்பாத்தியும் குதிரையும்
## இரட்டுற மொழிதல்

- ஒரே பாடலில் இரண்டு பொருள் தோன்றும்படி பாடப்படுவது இரட்டுறமொழிதல் எனப்படும்.இதனைச் "சிலேடை" என்றும் கூறுவர்.

**கட்டி அடிக்கையால் கால் மாறிப் பாய்கையால்**

**வெட்டி மறிக்கின்ற மேன்மையால் - முட்டப்போய்**

**மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்**

**ஏறப் பரியாகு மே.**

**- காளமேகப்புலவர்**

### சொல்லும் பொருளும்

- வண்கீரை - வளமான கீரை
- பரி - குதிரை
- முட்டப்போய் - முழுதாகச் சென்று
- கால் - வாய்க்கால், குதிரையின் கால்
- மறித்தல் - தடுத்தல்.

### நூல்வெளி

- காளமேகப்புலவரின் இயற்பெயர் வரதன். மேகம் மழை பொழிவது போலக் கவிதைகளை விரைந்து பாடியதால் இவர் காளமேகப்புலவர் என்று அழைக்கப்பட்டார்.
- திருவானைக்கா உலா, சரசுவதி மாலை, பரபிரம்ம விளக்கம், சித்திர மடல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவரது தனிப்பாடல்கள் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

## திருக்குறள்

### கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக

**பொருள்:** கற்க வேண்டியவற்றைப் பிழை இல்லாமல் கற்க வேண்டும். கற்றபின் கற்ற வழியில் நடக்க வேண்டும்.

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
   கண்ணென்ப வாழும் உயிர்க்கு

**பொருள்:** எண்ணும் எழுத்தும் வாழும் மக்களுக்குக் கண்கள் போன்றவை.

3. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத்து ஊறும் அறிவு

**பொருள்:** தோண்டும் அளவிற்கு ஏற்ப மணற்கேணியில் நீர் ஊறும். அதுபோல கற்கும் அளவிற்கு ஏற்ப மக்களுக்கு அறிவு வளரும்.

4. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
   மாடல்ல மற்றை யவை.

**பொருள்:** அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஒருவருக்கு அதனைவிடச் சிறந்த செல்வம் வேறு இல்லை.

### தெரிந்து செயல்வகை

5. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
   செய்யாமை யானும் கெடும்.

**பொருள்:** செய்யத்தகாத செயல்களைச் செய்வதாலும் செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதாலும் தீமை உண்டாகும்.

6. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
   எண்ணுவம் என்பது இழுக்கு.

**பொருள்:** எந்தச் செயலையும் நன்கு சிந்தித்த பின் தொடங்க வேண்டும். தொடங்கிய பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

7. நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்
   பண்பறிந்து ஆற்றாக் கடை.

**பொருள்:** நாம் ஒருவருடைய பண்பை அறிந்து அவருக்கு நன்மை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நன்மை செய்தாலும் தீமை வந்து சேரும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593
Padasalai.Net

**கற்றந்தழால்**

8. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.

**பொருள்:** காகம் தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் கற்றத்தாரைக் கூவி அழைத்து உண்ணும். அத்தகைய பண்பு உடையவர்களிடமே செல்வமும் சேரும்.

**மடியின்மை**

9. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

**பொருள்:** தம் குடியைச் சிறப்புடைய குடியாகச் செய்யவிரும்புபவர்,சோம்பலைத் துன்பமாகக்கருதி முயற்சியோடு வாழ்தல் வேண்டும்.

**இடுக்கண் அழியாமை**

10. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

**பொருள் :** துன்பம் வந்த போது வருந்திக் கலங்காதவர் அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதனை வென்று விடுவர்.

## இயல் - 6
## விருந்தோம்பல்

**மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்**

**பாரி மடமகள் பாண்மகற்கு – நீர்உலையுள்**

**பொன்திறந்து கொண்டு புகாவா நல்கினாள்**

**ஒன்றாகு முன்றிலோ இல்**

**- முன்றுறை அரையனார்**

**சொல்லும் பொருளும்**

- மடமகள் - இளமகள்
- புகவா - உணவாக
- நல்கினாள் - கொடுத்தாள்
- முன்றில் - வீட்டின் முன் இடம் (திண்ணை)

**பழமொழி** : ஒன்றாகு முன்றிலோ இல்

**பொருள்** : ஒன்று மில்லாத வீடு எதுவுமில்லை

**நூல்வெளி**

- பழமொழிநானூறு நூலின் ஆசிரியர் முன்றுரை அரையனார் ஆவார்.இவர் கி.பி. (பொ.ஆ) நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர்.
- கடவுள் வாழ்த்துப் பாடல் மூலம் இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என அறியமுடிகிறது.
- ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றியிருப்பதால் இது பழமொழி நானூறு என்னும் பெயர்பெற்றது.

## வயலும் வாழ்வும்

**ஓடை எல்லாம் தாண்டிப்போயி**
**- ஏலேலங்கிடி ஏலேலோ**

**ஒண்ணரைக்குழி நிலமும் பார்த்து**
**- ஏலேலங்கிடி ஏலேலோ**

**சீலையெல்லாம் வரிஞ்சுக்கட்டி**
**- ஏலேலங்கிடி ஏலேலோ**

**சேத்துக்குள்ளே இறங்குறாங்க**
**- ஏலேலங்கிடி ஏலேலோ**

**கால்படவும் கதிருபூரா**
**- ஏலேலங்கிடி ஏலேலோ**

**கழலுதையா மணிமணியா**
**- ஏலேலேங்கிடி ஏலேலோ**

**- கி.வா.ஜெகந்நாதன்**

**சொல்லும் பொருளும்**

- மணி - முற்றியநெல்
- சீலை - புடவை
- கழலுதல் - உதிர்தல்

www.Padasalai.Net www.CBSEtips.in


- சும்மாடு - பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக் கொள்ளும் துணிச்சுருள்
- நெல்தாளில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்வர் இதற்குப் போரடித்தல் என்று பெயர்.

**நூல்வெளி**

- நாட்டுப்புறங்களில் உழைக்கும் மக்கள் தங்கள் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடும் பாடலே நாட்டுப்புறப்பாடல் எனப்படுகிறது. இதனை வாய்மொழி இலக்கியம் என்றும் வழங்குவர்.
- நாட்டுப்புறப் பாடல்களை **'மலை அருவி'** என்னும் நூலில் கி.வா. ஜெகந்நாதன் தொகுத்துள்ளார்.

## இயல் - 7
## புலி தங்கிய குகை

**சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்**
**யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்**
**யாண்டுஉளன் அயினும் அறியேன் ஓரும்**
**புலிசேர்ந்து போகிய கல்அளை போல**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே**
**—காவற்பெண்டு**

**நூல்வெளி**

- காவற்பெண்டு சங்காலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவர். கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கியவர் என்பர். வீரத்தைக் கருப்பொருளாகக் கொண்டு இப்பாடலைப் பாடியுள்ளார் இவர் பாடிய ஒரே ஒரு பாடல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

**சொல்லும் பொருளும்**

- சிற்றில் - சிறுவீடு
- கல்அளை - கற்குகை
- யாண்டு - எங்கே

## தேசிங்குராசன்

**நானொரு வார்த்தை சொல்கிறேன்**
**கேளும் தோன்ற மல்லண்ணா**
**அவனும் மகாசூரனையா ராசா தேசிங்கு**
**செஞ்சிக் கோட்டை சிப்பாய் ஐயா ராசா தேசிங்கு**
**அவன் கண்ணை உருட்டிப்**
**பார்த்தானானால் சிப்பாய் தேசிங்கு**
**கால்பலங்களும் கைபலங்களும் கதறியோடுமே தான்**
**டாறு டாறாய்தீர்த்துப் போடுவான் ராசா தேசிங்கு**
**சண்டை பண்ணி ஜெயிக்க மாட்டாய்**
**தோன்றமல்லண்ணா**

- செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஒரு குறுநிலப் பகுதியை ஆண்டு வந்தவர் சொரூபசிங். அவரது மகன் தேசிங்கு. டில்லி பாதுஷாவுக்குச் சொந்தமான யாராலும் அடக்க முடியாத "நீலவேணி" என்னும் குதிரையைத் தேசிங்கு அடக்கினான்.
- ஆற்காடு நாவாப் தமக்குக் கப்பம் கட்டுமாறு கேட்டுத் தோன்றமல்லன் என்பவனை தூது அனுப்பினார்.
- ஷேக் முகமது என்பவன் தேசிங்குராசனின் வீரத்தை தோன்றமல்லனிடம் கூறினான்.

**நூல்வெளி**

- சுவடித் திரட்டும் பதிப்பும் என்னும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தொகுப்பு நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

**சொல்லும் பொருளும்**

- சாலம் - பாசாங்கு
- மூர்ச்சை - மயக்கம்
- சலாம் - வணக்கம்
- சூரன் - வீரன்

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## இயல் -8
## புதுமை விளக்கு

**வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடர்ஆழி நீங்குகவே என்று**
**—பொய்கை ஆழ்வார்.**

### சொல்லும்பொருளும்.

- இடர்ஆழி - துன்பக்கடல்
- சொல்மாலை - பாமாலை
- வெய்ய - வெப்பக்கதிர் வீசும்
- சுடர் ஆழியான் - ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால்
- பூமியை அகல்விளக்காகவும், ஒலிக்கின்ற கடலை நெய்யாகவும், வெப்பக்கதிர்வீசும் கதிர்வனைச் சுடராகவும் கொண்டவன் திருமால்.

### நூல்வெளி

- பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவெ.்.கா என்னும் ஊரில் பிறந்தவர்.
- நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதி இவர் பாடியதாகும்.

**அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புஉருகி**
**ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு**
**ஞானத்தமிழ் புரிந்த நான்**
**– பூதத்தாழ்வார்**

### சொல்லும் பொருளும்.

- தகளி - அகல்விளக்கு
- நாரணன் - திருமால்
- ஞானம் - அறிவு

### நூல்வெளி

- பூதத்தாழ்வார் சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் பிறந்தவர். இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டாம் திருவந்தாதியை இயற்றியுள்ளார்.

**தெரிந்து கொள்வோம்**

- ஒரு பாடலின் இறுதி எழுத்தோ அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவதை அந்தாதி. (அந்தம் -முடிவு, ஆதி- முதல்).
- அந்தாதியாக அமையும் பாடல்களைக் கொண்டு அமைவது அந்தாதி என்னும் சிற்றிலக்கிய வகையாகும்.

- திருமாலைப் போற்றிப் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகும்.

**தொகுத்தவர் நாதமுனி**

- பன்னிரு ஆழ்வார்களில் முதன்மையானவர் பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் முதலாழ்வார்கள் என்பர்.

## அறம் என்னும் கதிர்

**இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக**
**வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி**
**அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்**
**பைங்கூழ் சிறுகாலைச் செய்**
**– முனைப்பாடியார்.**


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

## சொல்லும் பொருளும்

- வித்து - விதை
- ஈன் - பெற
- களை - வேண்டாத செடி
- பைங்கூழ் - கடுஞ்சொல்

## நூல்வெளி

- முனைப்பாடியார் திருமுனைப்பாடி என்னும் ஊரைச்சேர்ந்த சமணப்புலவர்.
- இவர் இயற்றிய அறநெறிச்சாரம் 225 பாடல்களைக் கொண்டது. அறநெறிகளைத் தொகுத்துக் கூறுவதால் இந்நூல் அறநெறிச்சாரம் எனப் பெயர்பெற்றது.

# திருக்குறள்

## வினைசெயல் வகை

1. பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்

இருள்தீர எண்ணிச் செயல்.

**பொருள்** : வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தகுந்த காலம், மேற்கொள்ளும் செயலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தையும் ஐயம்தீர ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

2. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்

யானையால் யானையாத் தற்று.

**பொருள்:** ஒரு யானையைக் கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பர். அது போல ஒரு செயலைச் செய்யும் போதே அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல் வேண்டும்.

**அணி: உவமை அணி**

## அவை அஞ்சாமை

3. கற்றாருள் கற்றார் எனப்படுபவர் கற்றார்முன்

கற்ற செலச்சொல்லு வார்.

**பொருள்:**தாம் கற்றவற்றைக் கற்றவர்முன்தெளிவாகச் சொல்ல வல்லவர், கற்றவருள் மிகவும் கற்றவராக மதிக்கப்படுவார்.

4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற

மிக்காருள் மிக்க கொளல்.

**பொருள்:** கற்றவர் முன் தான் கற்றவற்றை மனத்தில்பதியும்படி சொல்லி அவர்கள் கற்றவற்றையும் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

## நாடு

5. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்

சேராது இயல்வது நாடு.

**பொருள்:** மிக்க பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும் பகையும் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.

6. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல

நாட வளம்தரு நாடு

**பொருள்:** பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம்தரும் நாடே சிறந்த நாடாகும். முயற்சி செய்து சேரும் வளத்தை உடைய நாடு சிறந்த நாடு ஆகாது.

## அரண்

7. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்

காடும் உடையது அரண்.

பொருள்: தெளிந்த நீரும், நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய நான்கும் உள்ளதே அரண் ஆகும்.

8. எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்

பொருள்: அரண் எவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும், செயல் சிறப்பு இல்லாதவரிடத்தில் அது பயனில்லாதது ஆகும்.

## பெருமை

9. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

**பொருள்** : பிறப்பால் மக்கள் அனைவரும் ஒத்த இயல்புடையவர்களே. அவர்கள் செய்யும் நன்மை, தீமையாகியச் செயல்களால் அவர்களது சிறப்பியல்புகள் ஒத்திருப்பதில்லை.

10. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்

**பொருள்:** உயர்ந்த பண்புகளை உடையவர் செய்வதற்கு அரிய செயல்களை உரிய நெறிமுறையில் செய்து முடிப்பர்.

## இயல் - 9
## மலைப்பொழிவு

**சாந்தம் உடையோர் பேறுபெற்றோர் எனத்**
**தத்துவமும் சொன்னார் - இந்தத்**
**தாரணி முழுவதும் அவர்களுக்கு உரியது**
**தலைவர்கள் அவர் என்றார்!**
**வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்**
**வாழ்க்கை பாலைவனம் - அவர்**
**தூய மனத்தில் வாழ நினைத்ததால்**
**எல்லாம் சோலைவனம்!**
**இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி**
**எத்தனை வீண்கனவு – தினம்**
**இவை இல்லாது அமைதிகள் செய்தால்**
**இதயம் மலையளவு!**

## சொல்லும் பொருளும்

- சாந்தம் - அமைதி
- மகத்துவம் - சிறப்பு
- பேதங்கள் - வேறுபாடுகள்
- தரணி - உலகம்
- தத்துவம் - உண்மை
- இரக்கம் - கருணை

## நூல்வெளி

- கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. இவர் தமிழக அரசவைக் கவிஞராகவும் இருந்துள்ளார்.
- இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது அறிவுரைகளையும் கூறும் நூல் இயேசுகாவியம் ஆகும்.

## தன்னை அறிதல்

அன்றைக்குத்தான் அம்மா காக்காவிற்கு
அது குயில் குஞ்சு என்று தெரிந்தது
தெரிந்த பிறகு
இனிமேல் நாம் சேர்ந்து வாழ முடியாது
போய்விடு என்றது.
ஒரு விடியலில் குயில் குஞ்சு
"கூ" என்ற கூவியது
அன்று தானொரு
குயில் என்று கண்டு கொண்டது."

- சே.பிருந்தா

## நூல்வெளி

- சே.பிருந்தா புகழ்பெற்ற பெண்கவிஞர்களுள் ஒருவர். மழை பற்றிய பகிர்தல்கள், வீடு முழுக்க வானம், மகளுக்குச் சொன்ன கதை ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

******


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


# உரைநடை
## இயல் - 1
## பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

- தனது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக மனிதனால் உருவாக்கப்பட்டதே மொழி ஆகும்.
- வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும். இவ்வாறு பேசுவதும் கேட்பதும் மொழியின் முதல் நிலை.
- கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது எழுத்து மொழியாகும்.இவ்வாறு எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் மொழியின் இரண்டாம் நிலை.
- தமிழ்மொழியில் பேச்சு, எழுத்து ஆகிய இரண்டு வடிவங்களும் பயன்பாட்டில் உள்ளன.
- உடல்மொழி, ஒலிப்பதில் ஏற்ற இறக்கம் ஆகியனவும் பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகள் ஆகும்.

**தெரியுமா?**

- பேசப்படுவதும், கேட்கப்படுவதுமே உண்மையான மொழி.
- எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும்.
- பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்கு (Diglossic Language) எனப்படும்.
- தமிழில் பழங்காலம் முதலே பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் வேறுபாடு இருந்துள்ளது. தொல்காப்பியர் இவற்றை உலக வழக்கு செய்யுள் வழக்கு என்று கூறியுள்ளார்.

- **எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்**
  **திரிபும் தத்தமில் சிறிது உள வாகும்**
  **- நன்னூல் நூற்பா.**
- பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.
- கன்னடம், தெலுங்கு, மலையாளம், முதலிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் ஆகும்
- பேச்சுமொழியை உலக வழக்கு என்றும், எழுத்து மொழியை செய்யுள் வழக்கு என்றும் கூறியவர் தொல்காப்பியர்.
- ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழியும், காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்துமொழியும் தேவைப்படுகின்றன.
- தமிழில் பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே வேறுபாடு உண்டு. எனவே தமிழை ‘இரட்டை வழக்கு மொழி’ என்பர்.
  - **“எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.**
  - **இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும். - பாவேந்தர்பாரதிதாசன்**

## இயல் -2
## விலங்குகள் உலகம்

- தமிழ்நாட்டில் இரண்டாவது மிகப்பெரிய காப்பகம் முண்டந்துறை புலிகள் காப்பகம். 895 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது.
- உலகில் இரண்டு வகையான யானைகள் உள்ளன. ஒன்று ஆசிய யானை, இன்னொன்று ஆப்பிரிக்க யானை.
- ஆசிய யானைகளில் ஆண் யானைக்கு தந்தம் உண்டு. பெண் யானைக்குத் தந்தம் இல்லை.
- கூட்டத்திற்கு ஒரு பெண் யானைதான் தலைமை தாங்கும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- ஒரு யானை நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகளை உணவாக உட்கொள்ளும்.
- அதற்குக் குடிக்க அறுபத்தைந்து லிட்டர் தண்ணீர் தேவைப்படும்.
- கரடி ஒரு அனைத்துண்ணி. கரையான் அதற்கு மிகவும் பிடித்த உணவு. நன்கு வளர்ந்த கரடி 160 கிலோ எடை வரை இருக்கும்.
- தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் மேட்டுப்பாளையம் (கோவைமாவட்டம்).
- கருவுற்ற புலியானது தொண்ணூறு நாட்களில் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் ஈனும்.
- உலகில் ஆசிய சிங்கம், ஆப்பிரிக்கச் சிங்கம் என இரண்டு வகைச் சிங்கங்கள் வாழ்கின்றன. இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் 'கிர் சரணாலயத்தில்' மட்டுமே ஆசியச் சிங்கங்கள் உள்ளன.
- இயற்கை விஞ்ஞானிகள் புலியையே காட்டுக்கு அரசன் என்கிறார்கள்.

## இயல் - 3
## தமிழரின் கப்பற்கலை

- **கடலோடா காவல் நெடுந்தேர் கடலோடும் நாவாயும் ஓடா நிலத்து - (திருக்குறள்)**
- திருவள்ளுவர் காலத்திலேயே பெரிய கப்பல்கள் இருந்தன என்பதற்கு சான்றாகும்.
- பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும், இறக்குமதியும் செய்யப்பட்டன என்பதைப் பட்டினப்பாலை விரிவாக விளக்குகிறது.
- உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம் என்று பெரிய கப்பலை அகநானூறு குறிப்பிடுகிறது. இதனையே பதிற்றுப்பத்து என்னும் நூலும்.

**"அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும் பெருங்கலி வங்கம்"**என்று குறிப்பிடுகிறது.

- பெரிய கப்பலை கூறும் நூல்கள் அகநானூறு, பதிற்றுப்பத்து.
- சேந்தன் திவாகரம் என்னும் நிகண்டு நூலில் பலவகையான கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்றைச் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தினர். கலம், வங்கம்,நாவாய் முதலியவை அளவில் பெரியவை. இவற்றைக் கொண்டு தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டனர்.
- கப்பல் கட்டும் கலைஞர்கள் 'கம்மியர்' என்று அழைக்கப்பட்டனர்.
- "கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇய்"— மணிமேகலை
- கப்பல் கட்டும் முறையை வியந்து பாராட்டியவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோபோலோ. முற்காலத்தில் இரும்பு ஆணிகள் துருப்பிடித்து விடும் என்பதால் மரத்தினாலான ஆணிகளையே பயன்படுத்தினர். இந்த ஆணிகளைத் 'தொகுதி' என்பர்.
- தமிழர்கள் கப்பல் கட்டுவதற்கு நீளம், அகலம், உயரம் ஆகியவற்றைச் சரியான முறையில் கணக்கிட்டுக் கப்பல்களை உருவாக்கினர்.இவற்றைத் 'தச்சுமுழம்' என்னும் நீட்டலளவையால் கணக்கிட்டனர்.
- பெரிய பாய்மரம், திருக்கைத்திப் பாய்மரம், காணப் பாய்மரம், கோசுப் பாய்மரம் போன்ற பலவகையான பாய்மரங்களைக் கட்டும் கயிறுகள். ஆஞ்சான் கயிறு, தாம்பாங்கயிறு, வேடாங்கயிறு, பளிங்கைச் கயிறு, மூட்டங்கயிறு, கோடிப்பாய்க்கயிறு என்பவை அவற்றுள் சில.
- பாய்மரக்கப்பலின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும் பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்தனர் என்று பரிபாடல் கூறுகிறது.

**இதைப் படியுங்கள் முதலில்**

- நியூசிலாந்து நாட்டு வெலிங்டன் அருங்காட்சியகத்தில் பழங்காலத் தமிழ்நாட்டுக் கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட மணி ஒன்று இடம் பெற்றுள்ளது. தமிழர்கள் அயல் நாடுகளுக்குக் கப்பல்களில் சென்றனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.
- பிற்காலச் சோழர்களில் இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் பெரிய கப்பற்படையைக் கொண்டு பல நாடுகளை வென்றனர்.
- "ஆங்கிலேயர் கட்டிய கப்பல்களைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பழுது பார்க்க வேண்டும். ஆனால் தமிழர் கட்டிய கப்பல்களை ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லை" என்று வாக்கர் என்னும் ஆங்கிலேயர் கூறியுள்ளார்.

- எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும். கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் **"எரா"** எனப்படும். குறுக்கு மரத்தைப் பருமல் என்பர்.
- கப்பலைச் செலுத்துவதற்கும், உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி **'சுக்கான்'** எனப்படும். கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும்.
- **சமுக்கு** என்னும் ஒரு கருவியையும் கப்பல்களில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. இது காந்த ஊசி பொருத்தப்பட்ட திசைகாட்டும் கருவியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.
- கப்பல் செலுத்துபவரை மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி முதலிய பல பெயர்களால் அழைப்பர்.

**நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளி தொழில் ஆண்ட உரவோன் மருக**
**- புறப்பாடல்- வெண்ணிக்குயத்தியார்**

- கலம் தந்த பொற்பரிசம்
  கழித்தோணியால் கரை சேர்க்குந்து
  **- புறநானூறு**

**தெரியுமா?**

- கடல்ஆமைகள் இனப்பெருக்கத்துக்காக தகுந்த இடம் தேடி நீண்ட தூரம் பயணம் செய்கின்றன.
- பழந்தமிழர்கள் ஆமைகளை வழிகாட்டிகளாகப் பயன்படத்திக் கடல் பயணம் செய்து இருக்கலாம் என்னும் கருத்தும் உள்ளது.

## இயல் - 4
## வாழ்விக்கும் கல்வி

- மகாத்மா காந்தியின் தாயார் புத்திலிபாய்.
- **"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை" - வள்ளுவர்**
- கல்வியறிவு இல்லாதவர்களைத் திருவள்ளுவர் போல் குறை கூறியவர் வேறு யாரும் இல்லை.
- "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர்" – என்று பாடுகிறார்.
- நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தார் பாரதியார். "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம் எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்" என்றார்.
- திருக்குறள் வகுப்புகள் நடத்தியும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

பரப்பும் பணி செய்தவர் திருக்குறளார்.வீ. முனிசாமி.

- வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி, திருக்குறளில் நகைச்சுவை நூல்களை எழுதியுள்ளார். உலகப் பொதுமறை திருக்குறள் உரைவிளக்கம் எனும் நூல் பெரும் புகழ்பெற்றது.

## இயல் 5
## பேசும் ஓவியங்கள்

- ஆயகலைகள் அறுபத்துநான்கனுள் ஒன்று ஓவியக்கலை. ஓவியத்தை நுண்கலைகளுள் முதன்மையான ஒன்றாகக் கருதுகின்றனர்.
- ஓவியங்களை உற்று நோக்கினால் பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளலாம்.
- தஞ்சைப் பெரியகோவில் சுவர் ஓவியங்களில் நாயன்மார்களில் ஒருவரான சுந்தரரின் வாழ்க்கை நிகழ்வுகளாக ஓவியங்கள் வரையப்பட்டிருக்கும்.
- ஓவியம் வரையப் பயன்படும் துணியை எழினி, திரைச்சீலை, கிழி,படாம் எனப் பல பெயர்களில் அழைப்பர்.
- சீவகசிந்தாமணிக் காப்பியத்தில்குணமாலை என்னும் தலைவி யானையைக் கண்டு அஞ்சிய காட்சியைச் சீவகன் துணியில் வரைந்ததாகக் கூறப்பட்டுள்ளது.
- ஓலைச் சுவடிகள் மீது எழுத்தாணிகளைக் கொண்டு கோட்டோவியமாகவும் வண்ணப்பூச்சு ஓவியமாகவும் வரைந்துள்ளனர்.
- தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்திற்கு சென்றால் இவற்றைக் காணலாம்.
- முற்காலத்தில் மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் செப்பேடுகளில் பொறிப்பது வழக்கம்.

**புனையா ஓவியங்கள் பற்றி நம் இலக்கியங்கள் கூறும் செய்திகள்**

- **புனையா ஓவியம் கடுப்பப் புனைவில் - நெடுநல்வாடை**
- **புனையா ஓவியம் புறம் போந்தன்ன - மணிமேகலை**
- யானை தந்தங்களின்மீது வரையப்பட்ட ஓவியங்கள் உள்ள இடம் - கேரளா.
- கண்ணாடி ஓவியங்கள் வரையும் ஓவியர்கள் தஞ்சாவூரில் உள்ளனர்.
- **தாள் ஓவியம்** : தற்காலத்தில் பரவலான பயன்பாட்டில் இருக்கும் ஓவியம். கரிக்கோல், நீர் வண்ணம், எண்ணெய் வண்ணம் ஆகியவற்றைப் பயன்படுத்தி வரைகின்றனர்.
- **கருத்துப்பட ஓவியம்:** இந்தியா இதழில் பாரதியார்தான் முதன்முதலில் தமிழில் அறிமுகப்படுத்தினார். இவற்றின் மற்றொரு வடிவமே கேலிச்சித்திரம்.

**வேறு பெயர்களை அறிவோம்**

| | |
|---|---|
| **ஓவியம்** | ஓவு,ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச்செய்தி |
| **ஓவியம் வரைபவர்** | கண்ணுள் வினைஞர், ஓவியப் புலவர், ஓவமாக்கள், கிளவி வல்லோன், சித்திரக்காரர், வித்தகர். |
| **ஓவியக் கூடம்** | எழுதெழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திரமாடம், சித்திரமண்டபம், சித்திர சபை |

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

**தெரியுமா?**

- ஐரோப்பியக் கலை நுணுக்கத்துடன் இந்தியக் கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் இராஜா இரவிவர்மா.
- நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் கொண்டையராஜு. நாட்காட்டி ஓவியங்களைப் பசார் பெயிண்டிங் என்றும் அழைப்பர்.

**கூடுதல் செய்தி**

- ஓவிய மண்டபத்தில் பல வகை ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கிக் கூறினர் என்ற செய்தி பரிபாடலில் இடம் பெற்றுள்ளது.
- "இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
  துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும்"
  - பரிபாடல்

## இயல்-6
## திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

- ஆற்றங்கரைகளில் சிறந்து விளங்கும் நகரங்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன. அவற்றுள் ஒரு நகரம் திருநெல்வேலி.
- திருநெல்வேலி தமிழகத்தின் பழமையான நகரங்களுள் ஒன்று. பாண்டியர்களின் தலைநகரமாக மதுரை விளங்கியது.
- அவர்களது இரண்டாவது தலைநகரமாகத் திருநெல்வேலி விளங்கியது.
- **'திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி'** என்று திருஞானசம்பந்தரும் **'தண்பொருநைப் புனல் நாடு'** என்று சேக்கிழாரும் திருநெல்வேலியின் சிறப்பைப் போற்றியுள்ளனர்.
- இப்பகுதியின் சிறப்புமிக்க மலையாகிய பொதிகை மலை இலக்கியங்களில் பாராட்டப்பட்டு உள்ளது.
- **"பொதியி லாயினும் இமய மாயினும்
  பதியெழு அறியாப் பழங்குடி"-இளங்கோவடிகள்.**
- இளங்கோவடிகள் பொதிகை மலைக்கு முதலிடம் கொடுத்துப் பாடுகிறார். இலக்கியங்களில் திரிகூடமலை என வழங்கப்படும் குற்றாலமலை புகழ் பெற்ற சுற்றுலா இடமாகத் திகழ்கிறது.
- **வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும் மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்—** குற்றால மலைவளத்தைத் திரிகூட இராசப்பக் கவிராயர் தம் குற்றாலக்குறவஞ்சி நூலில் பாடியுள்ளார்.
- திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு தாமிரபரணி. இதனைத்தண்பொருநை நதி என்று முன்னர் அழைத்தனர். இது பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி என்று பல கிளை ஆறுகளாகப் பிரிந்து திருநெல்வேலியை நீர்வளம் மிக்க மாவட்டமாகச் செய்கிறது.
- திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு தாமிரபரணி ஆற்றின் மூலம் கிடைக்கிறது.
- இருபருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. மானாவாரிப் பயிர்களாகச்சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள், காய்கனிகள், பருத்தி, பயறுவகைகள் போன்றன பயிரிடப்படுகின்றன.
- இராதாபுரம், நாங்குநேரி, அம்பாசமுத்திரம், தென்காசி போன்ற பகுதிகளில் பெருமளவில் வாழை பயிரிடப்படுகின்றது. இங்கு விளையும் வாழைத்தார்கள் தமிழ்நாடு மட்டுமன்றிக்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

கர்நாடகம், கேரளம் போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

**தெரிந்துகொள்வோம்**

- முற்காலத்தில் திருநெல்வேலிக்கு வேணுவனம் என்னும் பெயரும் இருந்துள்ளது. மூங்கில் காடு என்பது அதன் பொருளாகும். மூங்கில் நெல் மிகுதியாக விளைந்தமையால் அப்பகுதிக்கு நெல்வேலி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கருதுவர்.
- திருநெல்வேலி அருகிலுள்ள ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் இறந்தவர்களின் உடல்களைப் புதைக்கப் பழந்தமிழர்கள் பயன்படுத்திய முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

- நெல்லிக்காய் உற்பத்தியில் தமிழகத்தில் நெல்லை மாவட்டமே முதலிடம் வகிக்கின்றது.
- தாமிரபரணி கடலோடு கலக்கும் இடத்தில் கொற்கை என்னும் துறைமுகம்இருந்தது. இங்கு முத்துக் குளித்தல் சிறப்பாக நடைபெற்றதாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.
- கிரேக்க, உரோமாபுரி நாடுகளைச் சேர்ந்தவர்களான யவனர்கள் இந்த முத்துகளை விரும்பி வாங்கிச் சென்றனர்.
- பொருநை எனப்படும் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள நெல்லை மாநகரின் அமைப்பு சிறப்பானது. நகரின் நடுவே நெல்லையப்பர் திருக்கோவில் அமைந்துள்ளது. இங்குத் திங்கள் தோறும் திருவிழா நடைபெறும் என்பதை
- **"திங்கள் நாள்விழா மல்கு திருநெல் வேலியுறை செல்வர் தாமே"**

  - **திருஞானசம்பந்தர்** பாடல் அடிகளால் அறியலாம்.

- காவற்புரைத் தெரு என்று ஒரு தெரு உள்ளது. காவற்புரை என்றால் சிறைச்சாலை. அரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் இங்குச் சிறை வைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது.
- மேல வீதியை அடுத்துக் கூழைக்கடைத் தெரு உள்ளது. கூலம் என்பதுதானியத்தைக் குறிக்கும். கூலக்கடைத்தெரு என்பதே மருவிக் கூழைக்கடைத் தெரு என வழங்கப்படுகிறது.
- அக்கசாலை என்பது அணிகலன்களும் பொற்காசுகளும் உருவாக்கும் இடம். முற்காலத்தில் பொன் நாணயங்கள் உருவாக்கும் பணியாளர்கள் வாழ்ந்த பகுதி அக்கசாலைத் தெரு என்னும் பெயரில் அமைந்தள்ளது.
- நெல்லை நகரின் மேற்கே பேட்டை என்னும் ஊர் உள்ளது. வணிகம் நடைபெறும் பகுதியைப் பேட்டை என வழங்குதல் பண்டைய மரபு.
- பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை நெல்லை நகர மக்கள் எதிர்கொண்டு வரவேற்ற இடம் பாண்டியபுரம் எனவும், அவன் தேவியாகிய மங்கையர்க்கரசியை மகளிர் எதிர்கொண்டு வரவேற்ற இடம் திருமங்கை நகர் என்றும் வழங்கப்படுகின்றன.
- நாயக்க மன்னரின் தளவாயாக விளங்கிய அரியநாயக்கரின் வழித்தோன்றல் வீரராகவர். அவரது பெயரில் அமைந்த ஊர் வீரராகவபுரம் எனவும், மீனாட்சி அம்மையார் பெயரில் உள்ள ஊர் மீனாட்சிபுரம் எனவும் வழங்கப்பட்டு வருகின்றன.
- அகத்தியர் பொதிகை மலையில் வாழ்ந்தார். சங்கப் புலவரான மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார்,குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர்,
- கவிராசப் பண்டிதர் ஆகியோர் திருநெல்வேலிச் சீமையில் பிறந்து தமிழுக்குச் செழுமை சேர்த்துள்ளனர்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

- அயல்நாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்றோரையும் தமிழின்பால் ஈர்த்த பெருமைக்கு உரியது திருநெல்வேலி.

**தெரியுமா?**

- தாமிரபரணி ஆற்றின் மேற்குக் கரையில் திருநெல்வேலியும் கிழக்குக் கரையில் பாளையங்கோட்டையும் அமைந்துள்ளன. இவை இரட்டை நகரங்கள் என அழைக்கப்படுகின்றன.
- பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால் அந்நகரைத் தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்பர்.

## இயல்-7
## பசும்பொன் முத்துராமலிங்கரின் பேச்சாற்றல்

- பெரியார் பசும்பொன் முத்துராமலிங்கரைப் பற்றி "வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையம் விவேகப் பேச்சால் எத்தனையோ அறிவாளிகளையும் உண்டாக்கியவர்" எனக் கூறினார். உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனித்துணிச்சல் பெற்றவர். சுத்தத் தியாகி என்றும் அவரைப் பாராட்டியுள்ளார்.
- இராமநாதபுரத்தில் பள்ளிப்படிப்புப் படித்துக் கொண்டிருந்தபோது அவ்வூரில் பிளேக் நோய் பரவியதால் அவரது படிப்பு பாதியில் நின்றது.
- சாயல்குடி என்னும் ஊரில் உள்ள "விவேகானந்தர் வாசகசாலை" யில் முதல் பேச்சு. விவேகானந்தரின் பெருமை என்னும் தலைப்பில் மூன்று மணிநேரம் சிறப்பான சொற்பொழிவை நிகழ்த்தினார்.
- இது போன்ற ஒரு பேச்சை இதுவரை நான் கேட்டதில்லை, முத்துராமலிங்கரின் வீரம்மிக்க பேச்சு விடுதலைப் போருக்கு மிகவும் உதவும் என்று காமராசர் பாராட்டினார்.
- தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் அவர் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கினார்.

**கூடுதல் செய்தி**

- 1936 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் விருதுநகரில் போட்டியிடக் காமராசர் முன் வந்தார். நகராட்சிக்கு வரி செலுத்தியவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் என்னும் நிலை இருந்தது. முத்துராமலிங்கர் ஓர் ஆட்டுக்குட்டியை வாங்கிக் காமராசர் பெயரில் வரி கட்டி அவரைத் தேர்தலில் போட்டியிட வைத்தார்.
- பசும்பொன் முத்துராமலிங்கர் 1937, 1946, ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்றார். 1952, 1957 ஆகிய ஆண்டுகளில் நடந்த சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு இரண்டிலும் வெற்றி பெற்றார். 1962இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் உடல்நலக்குறைவு காரணமாக பரப்புரை செய்ய இயலாதபோதிலும் தேர்தலில் வெற்றி பெற்றார்.

- காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் அவர் மாணவர்களுக்காக ஆங்கிலத்தில் உரையாற்றினார்.
- சர்.சி.பி. ராமசாமி "ஆங்கிலம் உலகை ஆள்கிறது. நம் முத்துராமலிங்கர் மூன்று மணிநேரம் ஆங்கிலத்தை அடக்கி ஆண்டார்". என்று பாராட்டினார்.
- வடஇந்தியா வாய்ப்பூட்டுச் சட்டத்தின்படி பேசத்தடை விதிக்கப்பட்ட தலைவர்

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

பாலகங்காதர திலகர். தென்னாட்டில் பேச தடைவிதிக்கப்பட்டவர் தலைவர் முத்துராமலிங்கர்

- பர்மாவுக்கு சென்று பல இடங்களில் பேசி அங்குள்ள மக்களையும் கவர்ந்தார்.
- புத்தசமயத் தலைமைத் துறவியாகிய இச் சாண்டோ முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் புத்தரின் சிந்தனைகளைப் பற்றிச் சிறப்பாக உரையாற்றினார். உரையில் இடம்பெற்ற கருத்துகளை கேட்டுப் புத்த சமயத் துறவிகள் வியப்படைந்து முத்துராமலிங்கரைப் பாராட்டினர்.
- "இன்று அடிமை இந்தியனாகக் கொடி ஏற்றுகிறேன்: நாளை,தாயின் மணிக்கொடியைச் சுதந்திர இந்தியாவில் ஏற்றும் காலம் எதுவோ என எண்ணிக் கண்ணீர் விட்டேன்." என்று அவர் பேசியதைக் கேட்டு அங்குள்ள மக்கள் மனம் உருகினர்.

**தெரிந்து கொள்வோம்**

- ஆங்கில ஆட்சியில் மக்களை அடிமைப்படுத்த 1914 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது குற்றப்பரம்பரைச் சட்டமாகும்.
- 1948 இல் அச்சட்டம் நீக்கப்படும் வரையிலும் மக்களைத் திரட்டிப் போராடினார் முத்துராமலிங்கர்.
- 32 சிற்றூர்களில் தமக்குச் சொந்தமாக இருந்த விளைநிலங்களை உழுபவர்க்கே பங்கிட்டுக் கொடுத்தார். அவற்றை ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அளித்து மகிழ்ந்தார்.

- முத்துராமலிங்கர் 'நேதாஜி' என்னும் வார இதழை நடத்தினார். 1949ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாளன்று அந்த இதழின் தொடக்க விழா மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு ஏறத்தாழ மூன்று இலட்சம் பேர் திரண்டனர்.
- "தென்னாட்டுச் சிங்கம்" முத்துராமலிங்கர் பேசத் தொடங்கியதும் சிங்கத்தின் முழக்கம் போலவே இருந்தது. என்று அறிஞர் அண்ணா பாராட்டியுள்ளார்.
- முத்துராமலிங்கர் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது. உதடுகளிலிருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையெனப் பட்டத்தை மறைக்காமல் அப்படியே பேசிவிடுவது அவர் வழக்கம்"

**இதைப் படியுங்கள் முதலில்**

- அக்காலத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் செல்ல ஒரு சாராருக்குத் தடை இருந்தது. அத்தடையை எதிர்த்து மதுரை வைத்தியநாதர் கோவில் நுழைவுப் போராட்டம் நடத்தினார்.
- முத்துராமலிங்கர் அவருக்குத் துணை நின்று அப்போராட்டத்தை வெற்றிபெறச் செய்தார்.

- பாராளுமன்றத்தில் இவர் ஆங்கிலத்தில் பேசிய பேச்சு வெள்ளையர் காலத்தில் விட்டல்பாய், வல்லபாய் பட்டேல் போன்ற மேதைகள் பேசிய பேச்சைப் போல் இருந்ததாக வட இந்தியா இதழ்கள் பாராட்டின.

**முத்துராமலிங்கரின் சிறப்பு பெயர்கள்**

- தேசியம் காத்த செம்மல், வேதாந்த பாஸ்கர், பிரணவ கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்தசமய மேதை.
- பசும்பொன் முத்துராமலிங்கர் இம்மண்ணுலகில் வாழ்ந்த நாள்கள் 20,075 சுதந்திரப் போராட்டத்திற்காகச் சிறையில் கழித்த நாள்கள் 4000. தன் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கினைச் சிறையில் கழித்த தியாகச் செம்மல் முத்துராமலிங்கர் ஆவார்.

## இயல்-8
## ஒப்புரவு நெறி

- அறநெறியில் பொருளீட்டித் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பதே ஒப்புரவு நெறியாகும்.
- வாழ்க்கை, தொண்டினையே குறிக்கோளாக உடையது.
- திருக்குறள் நெறியில் மக்கள் ஒருவருக்கொருவர் கடமைகளைச் செய்வதற்கு உரியவர்கள், ஒருவர் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒருவருக்காகவும் என்னும் பொதுவுடமை நெறியே திருவள்ளுவரின் வாழும் நெறி.
- உதவியைக் கட்டுப்பாட்டு உணர்வுடன், உதவி பெறுபவரை உறவுப்பாங்கில்எண்ணி, உரிமை உடையவராக நினைத்து, உதவி செய்வதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல், ஒப்புரவு ஆகும்.

### பொருள் ஈட்டலும் ஒப்புரவும்

- வாழ்வு அறநிலையைப் பாதுகாவல் வாழ்வாக அமைய வேண்டும். இம்முறையை அப்பரடிகள் எடுத்துக் கூறினார். பாவேந்தர் பாரதிதாசனும் உலகம் உண்ண உண். உடுத்த உடுப்பாய் என்றார்.

**“செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புந பலவே”**

**– புறநானூறு**

- “ஊருணி நீர் நிறைந்து அற்றேஉலகவாம்
  பேரறி வாளன் திரு” (குறள் : 215)
- பயன்மரம் உள்ளூர்ப் பழுத்து அற்றால்செல்வம்
  நயனுடை யான்கண் படின். (குறள் : 216)

### நூல்வெளி

- மக்கள் பணியையே இறைப் பணியாக எண்ணித்தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.
- குன்றக்குடி திருமடத்தின் தலைவராக விளங்கிய இவர் தமது பேச்சாலும் எழுத்தாலும் இறைத்தொண்டும் சமூகத் தொண்டும் இலக்கியத் தொண்டும் ஆற்றியவர்.
- திருக்குறள் நெறியைப் பரப்பவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர். நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம் ஆலயங்கள் சமுதாய மையங்கள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- அருளோசை, அறிக அறிவியல் உள்ளிட்ட சில இதழ்களையும் நடத்தியுள்ளார்.

## இயல் - 9
## கண்ணியமிகு தலைவர்

- காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் எளிமை, நேர்மை, உழைப்பு, பொறுமை,நாட்டுப்பற்று முதலிய பண்புகளை ஒருங்கே கொண்டு சிறந்து விளங்கிய தலைவர் கண்ணியமிகு என்னும் அடைமொழியால் அழைக்கப்படுகிறார்.
- காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தபோது அதில் இளைஞர்கள் திரளாகக் கலந்து கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.
- காந்தியடிகளின் வேண்டுகோள் முகமது இஸ்மாயிலுக்கு தீராத விடுதலை வேட்கையை ஏற்படுத்தியது.
- “மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டேன்” என்று வெளிப்படையாக அறிவித்தார் காயிதே மில்லத்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


- "பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழிதான் என்றுநான் உறுதியாகச் சொல்வேன்.
- இன்னமும் விரிவாகப் பேசப்பட்ட மொழிகள். அவற்றுள் மிகவும் இலக்கியச் செறிவுகொண்ட தமிழ்மொழி தான் மிகப் பழமையான மொழி.
- எனவே தமிழ்மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார் - காயிதே மில்லத்.
- இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 1962 ஆம் ஆண்டு போர் மூண்டது.
- அப்போது தனது ஒரே மகனைப் போர்முனைக்கு அனுப்ப ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்து அப்போதைய முதன்மை அமைச்சர் ஜவகர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினார்.
- "காயிதே மில்லத்" என்னும் அரபுச் சொல்லுக்குச் 'சமுதாய வழிகாட்டி' என்று பொருள். அப்பெயருக்கேற்ப மக்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

**அரசியல் பொறுப்புகள்**

- காயிதே மில்லத் 1946 முதல் 1952 வரை அப்போதைய சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்.
- இந்திய அரசியலமைப்பு உருவாகக் குழு உறுப்பினராகவும் பணியாற்றினார்.

**கல்விப்பணி**

- "கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை" என்ற முதுமொழிக்கு ஏற்ப திருச்சியில் ஜமால் முகம்மது கல்லூரி, கேரளாவில் ஃபரூக் கல்லூரி ஆகியவற்றைத் தொடங்க அவரே காரணமாக இருந்தார்.

**தெரியுமா?**

- தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்கள் திகழ்ந்தார் – அறிஞர் அண்ணா.
- இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர். –தந்தை பெரியார்.

**தொழில்துறை**

- தொழில்துறை இந்திய நாட்டின் கனிம வளங்களைப் பற்றிப் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார். இதனால் இந்திய அரசு கனிம வளங்களைப் பயன்படுத்தும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

*********

## விரிவானம்
## இயல் - 1
## சொலவடைகள் (பொம்மலாட்டம்)

- சொலவடைகள் என்பவை சிறுசிறு தொடர்களாக வட்டார பேச்சு வழக்கில் வழங்கி வருபவை. இவை பேச்சு மொழியின் அழகியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருக்கும்.
- பொருட்செறிவுமிக்கச் சொலவடைகளை நாட்டுப்புற மக்களும் தம் பேச்சில் இயல்பாகப் பயன்படுத்துகின்றனர்.
- இவ்வாறு பயன்படுத்துவது தொன்மை வாய்ந்த மொழிகளுக்கே உரிய தனிச்சிறப்பாகும்.
- 'ஆளுக்கு ஒரு வேலை' என்னும் கதையைப் பொம்மலாட்டமாகப் பார்க்க போகிறோம்.
- புண்ணுக்கு மருந்து போட முடியும்: புடிவாதத்துக்கு மருந்து போட முடியுமா?


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- அணை உடைஞ்சு போன வெள்ளம் அழுதாலும் வராது.
- வெளைச்சலுக்கும் வெள்ளாட்டுக்கும் சென்மப் பகை.
- எறும்பு ஊறக் கல்லும் தேயும்.
- உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ள விலைபோகும்.
- அடை மழை விட்டாலும் செடி மழை விடாது.
- நினைச்சதாம் கழுதை எடுத்ததாம் ஓட்டம்.
- குடல் கூழுக்கு அழுவுதாம், கொண்டை பூவுக்கு அழுவுதாம்.
- சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா?
- நல்ல பாம்பு படம் எடுக்கலாம்: நாக்கலாம் பூச்சி படம் எடுக்கலாமா?
- ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும்.
- ஆள் கூடுனா பாம்பு சாகுமா? கைய ஊனித்தான் கரணம் போட முடியும்.
- காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குத்தான் தெரியும்
- இருப்பவனுக்குப் புளியேப்பம்: இல்லாதவனுக்குப் பசியேப்பம்.
- நாலு வீட்டில கல்யாணமாம். நாய்க்கு அங்கேயும் இங்கேயும் ஓட்டமாம்.
- அவப்பொழுது போக்குவதிலும்(வீணாகப் பொழுது போக்குதல்) தவப்பொழுது நல்லதும்பாங்க.
- பாடிப்பாடிக் குத்தினாலும் பதரு அரிசி ஆகுமா?
- அதிர அடிச்சா உதிர விளையும்.
- குத்துக்கல்லுக்கு என்ன குளிரா வெயிலாங்கிற மாதிரி
- அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்.
- கார்த்திகை மாசம் பிறையக் கண்ட மாதிரி.
- அதை விட்டாலும் கதி இல்ல, அப்பால போனாலும் விதி இல்ல.
- தட்டிப் போட்ட ரொட்டிக்குப் புரட்டிப் போட ஆளு இல்லாம.
- அள்ளுறவன் பக்கத்துல இருந்தாலும் கிள்ளுறவன் பக்கத்தில இருக்கக்கூடாது.
- அமாவாசை இருட்டில் பெருச்சாளிக்குப் போன இடமெல்லாம் வழிதான்.

## இயல் - 2
## இந்திய வனமகன்

- அஸ்ஸாம் மாநிலத்தின் ஜோர்விராட் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஜாதவ்பயேங். அவர் பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவில் உள்ள மிகப் பெரிய தீவில் முப்பது ஆண்டுகள் தனது கடின உழைப்பால் ஒரு காட்டை உருவாக்கியுள்ளார்.
- அசாம் வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜாதுநாத் ஜாதவிற்கு வழிகாட்டினார்.
- காட்டின் வளம் என்று குறிப்பிடுவது புலிகள் ஆகும்.
- 2012ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் ஜாதவுக்கு **‘இந்திய வனமகன் (Forest Man of India)** என்னும் பட்டத்தை வழங்கியுள்ளது.
- 2015-ம் ஆண்டு இந்திய அரசு **பத்மஸ்ரீ** விருதை வழங்கியுள்ளது.
- கௌகாத்தி பல்கலைக்கழகம் **‘மதிப்புறு முனைவர்’** பட்டம் வழங்கியுள்ளது.

## இயல் - 3
## ஆழ்கடலின் அடியில்

### நூல்வெளி

- அறிவியல் புனைகதைகளின் தலைமகன் என்று புகழப்படுபவர் ஜூல்ஸ் வெர்ன். இவர் பிரான்சு


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


நாட்டைச் சேர்ந்தவர். அறிவியல் கண்டுபிடிப்புகள் பல கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே அவற்றைப் பற்றித் தமது புதினங்களில் எழுதியவர். எண்பது நாளில் உலகத்தைச் சுற்றி, பூமியின் மையத்தை நோக்கி ஒரு பயணம் உள்ளிட்ட பல புதினங்களைப் படைத்துள்ளார்.

## இயல் - 4
## பள்ளி மறுதிறப்பு

### நூல்வெளி

- இக்கதையினை எழுதியவர் சுப்ரபாரதிமணியன், இவர் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற கருத்துகளை வலியுறுத்திச் சிறுகதை, புதினம், கட்டுரை முதலியவற்றை எழுதியுள்ளார். கனவு என்னும் இலக்கிய இதழை நடத்தி வருகிறார்.
- பின்னல் வேட்டை, தண்ணீர் யுத்தம், புத்துமண், கதை சொல்லும் கலை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

## இயல் - 5
## தமிழ் ஒளிர் இடங்கள்

### தஞ்சை சரசுவதி மகால் நூலகம்

- இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்று.
- கி.பி. (பொ.ஆ) 1122 முதல் இயங்கி வருவதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன.
- தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகளும் கையெழுத்துப் படிகளும் உள்ளன.
- தமிழ்ப் பல்கலைக் கழகம் - தஞ்சாவூர்
- தமிழக அரசால் கி.பி. (பொ.ஆ) 1981 இல் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்ப்பல்கலைக் கழகம். தஞ்சாவூரில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.
- வானத்தில் இருந்து பார்க்கும் பொழுது "தமிழ்நாடு" எனத் தெரியும் வகையில் இதன் கட்டட அமைப்பு உள்ளது.
- கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் ஆகிய ஐந்து புலங்களும் இருபத்தைந்து துறைகளும் உள்ளன.
- இந்திய ஆட்சிப்பணி பயிற்சியாளர்களுக்குத் தமிழ்மொழிப் பயிற்சினை இப்பல்கலைக்கழகமே வழங்குகிறது.

### உ.வே.சா நூலகம் - சென்னை

- கி.பி. (பொ.ஆ.) 1942 இல் தொடங்கப்பட்ட இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, வடமொழி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன. இங்கு 2128 ஓலைச்சுவடிகளும் 2941 தமிழ் நூல்களும் உள்ளன.

### கீழ்த்திசை நூலகம் - சென்னை

- இந்நூலகம் கி.பி. (பொ.ஆ) 1869 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகள் உள்ளன.
- கணிதம், வானியல், மருத்துவம், வரலாறு உள்ளிட்டபல்வேறு துறை நூல்களும் இடம்பெற்றுள்ளன. இது தற்போது "அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாம் தளத்தில்" இயங்கி வருகின்றது.

### கன்னிமாரா நூலகம் சென்னை

- கி.பி (பொ.ஆ) 1896 இல் தொடங்கப்பட்ட கன்னிமாரா நூலகம் தமிழ்நாட்டின் மைய நூலகம் ஆகும். இது இந்திய நாட்டின்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



களஞ்சிய நூலகங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

- இந்நூலகத்தில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள்,நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு பிரதி இங்குப் பாதுகாக்கப்படுகிறது.
- இந்நூலகத்தின் மூன்றாம் தளத்தில் “மறைமலை அடிகள் நூலகமும்” செயல்பட்டு வருகின்றது.

## வள்ளுவர் கோட்டம் - சென்னை

- கட்டுமானப் பணிகள் கி.பி (பொ.ஆ) 1973 இல் தொடங்கி 1976 இல் முடிக்கப்பட்டன. இதன் அடிப்பகுதி இருபத்தைந்து அடி நீளமும் இருபத்தைந்து அடி அகலமும் உடையது. தேரின் மொத்த உயரம் 128 அடி.
- வள்ளுவர் கோட்டத்தில் 1330 குறட்பாக்களும் செதுக்கப்பட்டுள்ளன. அறத்துப்பால் கருநிறப் பளிங்குக் கல்லிலும்,பொருட்பால் வெண்ணிறப் பளிங்குக் கல்லிலும், இன்பத்துப்பால்செந்நிறப் பளிங்குக் கல்லிலும் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

## திருவள்ளுவர் சிலை – கன்னியாகுமரி

- முப்பது அடி உயரப் பாறை மீது இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. கி.பி. (பொ.ஆ) 1990 ஆம் ஆண்டு இப்பணி தொடங்கியது. பொதுமக்கள் பார்வைக்காக 2000 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் அன்று திறந்துவைக்கப்பட்டது. பாறையிலிருந்து சிலையின் உயரம் மொத்தம் 133அடி.
- அறத்துப்பாலின் அதிகாரங்களை உணர்த்துவது போல் பீடம் முப்பத்தெட்டு அடி உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. பொருட்பால் இன்பத்துப்பால் ஆகியவற்றின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் சிலை தொண்ணூற்றைந்து அடி உயரம் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.
- திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு மூன்று டன் முதல் எட்டு டன் வரை எடை உள்ள 3681 கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருவள்ளவர் சிலை மொத்தம் ஏழாயிரம் டன் எடை கொண்டது.

## உலகத் தமிழ்ச் சங்கம் - மதுரை

- மதுரை மாநகரின் தல்லாகுளம் பகுதியில் காந்தி அருங்காட்சியகம் அருகில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இது சுமார் எண்பத்தேழு ஆயிரம் சதுர அடி பரப்பளவில் மனதைக் கவரும் வகையில் கட்டப்பட்டுள்ளது.
- கி.பி. (பொ. ஆ) 1981ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இக்கட்டடம் கட்டப்பட்டு கி.பி. (பொ.ஆ) 2016 ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது.
- உலகத் தமிழ்ச் சங்கத்தின் மற்றோர் அமைப்பான சங்கத்தமிழ்க் காட்சிக்கூடம் தனிக்கட்டிடத்தில் இயங்கி வருகிறது. தருமிக்குப் பாண்டிய மன்னன் பொற்கிழி வழங்கிய திருவிளையாடல் புராணக் காட்சி இதன் நுழைவுவாயிலில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.
- தொல்காப்பியர், ஔவையார், கபிலர் ஆகியயோரின் முழுஉருவ வெண்கலச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

**சிற்பக் கலைக்கூடம் - பூம்புகார்**

- இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழர்களின் தலைநகரமாகவும், துறைமுக நகரமாகவும் விளங்கியது பூம்புகார். இந்நகரைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்திலும், பட்டினப்பாலையிலும் இடம்பெற்றுள்ளன.
- மருவூர்ப்பாக்கம் என்னும் கடல் பகுதியும் பட்டினப்பாக்கம் என்னும் நகரப் பகுதியும் அமைந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.
- 1973 ஆம் ஆண்டு பூம்புகார் கடற்கரையில் சிற்பக் கலைக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.
- கண்ணகியின் வரலாற்றை விளக்கும் நாற்பத்தொன்பது சிற்பத் தொகுதிகள் இதில் இடம்பெற்றுள்ளன. மாதவிக்கும் ஒரு நெடிய சிலை இங்கு நிறுவப்பட்டுள்ளது

## இயல் - 6
## திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

- பாரதியார் பிறந்து வளர்ந்த இடம் எட்டையபுர சமஸ்தானம் நெடுகிலும் ஊர் ஊராய்ப் புலவர்களும் கவிராயர்களும் வாழ்ந்தனர். தேசிகவிநாயகனார் கன்னியகுமரிப் பக்கம் - அதாவது நாஞ்சில் நாட்டில் பிறந்து வளர்ந்தவராய் இருந்தாலும் அவர் தமிழை அழுத்தமாக ஆர்வத்தோடு கற்ற இடம் திருநெல்வேலி நகர்தான்.
- எட்டாயபுரத்தில் இருநூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர் கடிகைமுத்துப் புலவர். அவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.
- மணியாச்சியிலிருந்து ஏழெட்டு மைல் தூரத்தில் தாமிரபரணி நதியும் சிற்றாறும் கலக்கிற இடம்தான் சீவலப்பேரி என்கிற முக்கூடல். முக்கூடல் பள்ளு என்னும் பிரபந்தம் முக்கூடலைப் பற்றியதுதான்.
- முந்நூறு வருஷங்களுக்கு முன் மதுரைப் பக்கத்திலிருந்து பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் நெல்லைக்கு வந்து நெல்லையப்பர் கோவிலில் எழுந்தருளியுள்ள காந்திமதித் தாயைத் தரிசித்தார்.
- திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குப் போகிற மார்க்கத்திலே பதினெட்டாவது மைலில் ஆற்றுக்கு வடகரையில் ஸ்ரீவைகுண்டம் இருக்கிறது. பிள்ளைப் பெருமாள் ஸ்ரீவைகுண்டத்துப் பெருமாளைப் பற்றிப் பாடியுள்ளார்.
- ஆற்றுக்குத் தென்கரையில் நம்மாழ்வார் அவதார ஸ்தலமான ஆழ்வார் திருநகரி இருக்கிறது. பூர்வத்தில் இதற்குத் திருக்குருகூர் என்று பெயர்.
- நம்மாழ்வார் தமது ஈடுபாட்டை ஆயிரம் தமிழ்ப்பாட்டில் திருவாய்மொழியில் வெளியிட்டார். இது தமிழுக்குக் கிடைத்த யோகம்.
- மேற்கே ரோமாபுரி கிரேக்கதேசம் முதல் கிழக்கே சைனா வரையும் கொற்கையிலிருந்தே முத்து போய்க் கொண்டிருந்தது.
- காயல் பட்டணத்தில் இருநூற்றைம்பது வருஷத்துக்கு முன் சீதக்காதி என்ற பெரிய வாணிகர் இருந்தார். அவருடைய கப்பல்கள் பல தேசங்களுக்கும் சென்று வர்த்தகத்தின் மூலமாக மிகுந்த திரவியத்தைச் சம்பாதித்து வந்தன.
- நமசிவாயப் புலவர் சீதக்காதி இறந்த போது பாடிய பாடல்

**பூமாது இருந்தென் புவிமாது இருந்தென் இப்பூதலத்தில்**
**நாமாது இருந்தென்ன நாமும் இருந்தென்ன நாவலர்க்கு**

- திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் வந்து, நந்தவனங்களைப் பார்த்து அனுபவித்தார்.

- இக்காலத்தில் பாடுகிற காவடிப்பாட்டெல்லாம் கழுகுமலை முருகன் மேல்தான். இக்காவடிச் சிந்தைப் பாடியவர் அண்ணாமலையார்.
- சங்கரன் கோயில் - கோமதித் தாய், கோமதித் தாயைப் பற்றி உண்மையான பக்தியுடன் பாடியவர் திருநெல்வேலி அழகிய சொக்கநாதர்.
- சுமார் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் திருஞான சம்பந்தர் குற்றாலம் வந்தார். **‘நுண்துளிதாங்கும் குற்றாலம்’** என்று பாடினார்.
- மாணிக்கவாசகரும் குற்றாலம் பற்றி பாடல் பாடியுள்ளார்.

  **‘குற்றாலத் துறைகின்ற கூத்தர் உன் குரைகழற்கே’.** பிற்காலத்திலே எழுந்த தமிழ் இலக்கியங்களில் முக்கியமானது குற்றாலக் குறவஞ்சி.
- திருநெல்வேலிச் சீமை என்று குறிப்பிடப்படுவது இன்றைய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் இணைந்த பகுதியாகும்.

## இயல் - 7
## கப்பலோட்டிய தமிழர்

- தென்னாட்டில் உள்ள தூத்துக்குடி அந்நாளில் எந்நாட்டவரும் அறிந்த துறைமுக நகரம்.
- இந்தியக் கடலாட்சி எமதே எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயர் பொறி கலங்கி, நெறிமயங்க செய்தவர் கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார். நாட்டிலே சுதந்திர உணர்ச்சியை ஊட்டியதற்காக அவரைச் சிறைக்கோட்டத்தில் மாட்டி மகிழ்ந்தது ஆங்கில அரசாங்கம். சிறைவாசம் தீர்ந்த பின்னர்த் தூத்துக்குடிக்குத் திரும்பினார்.
- பார் அறிந்த கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீன்கொடி உயர்ந்து பறந்தது. கொற்கைகடல் முத்துவளம் கொழித்தது. பழங்குடிகளாகிய பரதவர் மரக்கல வணிகத்தால் வளம் பெற்று மாடமாளிகையில் வாழ்ந்தார்கள்.
- சொந்த நாட்டிலே வந்தவருக்கு அடிமைசெய்து வயிறு வளர்ப்பது ஒரு வாழ்வாகுமா? வசையொழிய வாழ்வாரே வாழ்வார் என்ற வள்ளுவர் வாய்மொழியை மறக்கலாமா? வ.உ.சி
- சுதேசக் கப்பல் பாரதநாட்டுச் செல்வரும் அறிஞரும் அந்தக் கம்பெனியில் பங்கு கொண்டார்கள். மதுரை மாநகரிலே தமிழ்ச் சங்கம் அமைத்துப் புலவர் பாடும் புகழ் உடையவராய் விளங்கிய பாண்டித்துரை அக்கம்பெனியின் தலைவர்.
- செயலாளனாக அமைந்து பணி செய்யும் பேறு சிதம்பரனாருக்குக் கிடைத்தது.
- வெள்ளோட்டம் பார்ப்பதற்காக அக்கப்பல் துத்துக்குடியில் கொழும்புத் துறையை நோக்கிப் புறப்பட்டது.
- வந்தே மாதரம் என்ற சுதேச மந்திரம் வங்க நாட்டிலே பிறந்தது. சுதந்தரம் எனது பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவேன் என்று வடநாட்டிலே மார்தட்டி நின்றார் மராட்டிய வீரர் பால கங்காதர திலகர்.
- இரட்டைத் தீவாந்தர தண்டனை சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்டது. ஆறாண்டு கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலும் கொடும்பணி செய்தார்.
- வள்ளல் பாண்டித்துரையோடு உறவு கொண்டு தமிழ் நூல்களைக் கற்றார் சிதம்பரனார். சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத்தோல் உரியக் கடும்பணி புரிந்த போது வ.உ. சிதம்பரனரின் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ?

Padasalai.Net

**தெரியுமா?**

- சிதம்பரனாரின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்பெற்று எழும். புரட்சி ஓங்கும் அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்.
- சிதம்பரனாருக்கு இரட்டை வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கிய நீதிபதி பின்ஹேவின் கூற்று.

- தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன்.
- இன்னிலையைக் கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன். ஆங்கில மொழியில் ஆலன் என்பவர் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை மனம் போல் வாழ்வு என்று தமிழில் மொழிபெயர்த்தேன்'—வ.உ.சி.
- உயர்ந்த நூல்களில் கண்ட உண்மைகளை இளைஞரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு மெய்யறிவு, மெய்யறம் என்ற சிறு நூல்களை இயற்றினார்- சிதம்பரனார்.
- **"பாயக் காண்பது சுதந்திரவெள்ளம் பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்"— சிதம்பரனார்.** நாம்பாடும் நாள் எந்நாளோ என்றார்.

**நூல்வெளி**

- இரா.பி.சேது சொல்லின் செல்வர் எனப் போற்றுவர். செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர். தமிழின்பம் என்னும் நூல் இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் நூல் ஆகும்.
- ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ் விருந்து, தமிழகம்- ஊரும் பேரும், மேடைப்பேச்சு உள்ளிட்ட பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

## இயல் -8
## உண்மை ஒளி

- ஜென் என்னும் ஜப்பானிய மொழிச் சொல்லுக்கு தியானம் செய் என்பது பொருள். புத்த மதத்தைச் சார்ந்த துறவியரில் ஒரு பிரிவினரே ஜென் சிந்தனையாளர்கள்.
- இவர்கள் பெரும்பாலும் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் வாழ்ந்து வந்தனர்.
- ஜென் கதைகளுள் ஒன்று இங்குப் படக்கதையாகத் தரப்பட்டுள்ளது.

**தெரிந்துகொள்வோம்**

- சிதம்பரனாரின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்பெற்று எழும். புரட்சி ஓங்கும் அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்.
- சிதம்பரனாருக்கு இரட்டை வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கிய நீதிபதி பின்ஹேவின் கூற்று.

## இயல் - 9
## பயணம்

**நூல்வெளி**

- பாவண்ணன் கன்னட மொழியிலிருந்து பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். வேர்கள் தொலைவில் இருக்கின்றன, நேற்று வாழ்ந்தவர்கள், கடலோர வீடு, பாய்மரக்கப்பல், மீசைக்கார பூனை, பிரயாணம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். இச்சிறுகதை 'பிரயாணம்' நூலில் இடம் பெற்றுள்ளது.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

# இலக்கணம்

## இயல் - 1

## குற்றியலுகரம், குற்றியலிகரம்

### குற்றியலுகரம்

- கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கும் இவ்வாறு தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.
- குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்
  (எ.கா) காசு, எ஡்கு, பயறு, பாட்டு, பந்து, சால்பு
- தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும்.
- வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும்.
- இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.
- (எ.கா) புகு, பசு, விடு, அது, வறு, மாவு, ஏழு

### தெரிந்து தெளிவோம்

- தமிழில் எழுத்துகளைக் குறிப்பிடுவதற்கு கரம், கான், காரம், கேனம் ஆகிய அசைச் சொற்களைப் பயன்படுத்துகிறோம்.
- குறில் எழுத்துகளைக் குறிக்க 'கரம்'**(எ.கா) அகரம், இகரம், உகரம், ககரம், மகரம்.**
- நெடில் எழுத்துக்களைக் குறிக்க 'கான்'
  **எ.கா ஐகான், ஔகான்**
- குறில், நெடில் எழுத்துக்களை குறிக்க 'காரம்'**(எ.கா) மகாரம்,ஏகாரம்,ஐகாரம், ஔகாரம்.**
- ஆய்த எழுத்தைக் குறிக்க 'கேனம்' **(எ.கா) அ஡்கேனம்**

### குற்றியலுகரத்தின் வகைகள்

- குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ஆறு வகைகளாகப் பிரிக்கப்படும்.
- 1. நெடில்தொடர்க் குற்றியலுகரம்
  இவை ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும்.
  (எ.கா) பாகு, மாசு, பாடு, காது, ஆறு.
- 2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
  (எ.கா) எ஡்கு, அ஡்து.
- 3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
  (எ.கா) அரசு (ர = ர் +அ)
  ஒன்பது (ப = ப் +அ)
- 4. வன்தொடர் குற்றியலுகரம்
  (எ.கா) பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று.
- 5. மென்தொடர்க் குற்றியலுகரம்
  (எ.கா) பங்கு, மஞ்சு, பண்பு, பந்து, அம்பு, கன்று.
- 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம்
  (எ.கா) எய்து, மார்பு, சால்பு, மூழ்கு.
- 'வ்' என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை. மேலும் சு, டு, று ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றிலுகரச் சொற்களும் இல்லை

### குற்றியலிகரம்

- குறுமை+இயல்+இகரம் = குற்றியலிகரம்
- குற்றியலிகரம் இரண்டு இடங்களில் மட்டும் வரும்.

**இடம் - 1**

- குற்றியலுகரச் சொற்களைத் தொடர்ந்து யகரத்தை முதல் எழுத்தாகக் கொண்ட சொற்கள் வரும்போது குற்றியலுகரத்தில் உள்ள உகரம் இகரமாக மாறும்.

Padasalai.Net

❖ அந்த இகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.

(எ.கா) கொக்கு+ யாது = கொக்கியாது

(க் + உ) (க் + இ)

நாடு+ யாது = நாடியாது

(ட் + உ) (ட் + இ)

**இடம் - 2**

❖ 'மியா' என்பது ஓர் அசைச்சொல் (ஓசை நயத்திற்காக வருவது) இதில் 'மி' யில் (மி = ம் + இ) உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும். இது சொற்களில் இடம்பெறும் போது தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.

(எ.கா) கேள் + மியா = கேண்மியா

சென்+ மியா = சென்மியா

❖ குற்றியலிகரம் தற்போது உரைநடை வழக்கில் இல்லை. இலக்கியங்களில் மட்டுமே உள்ளது.

## இயல் - 2
## நால்வகைக் குறுக்கங்கள்

**ஐகாரக்குறுக்கம்**

❖ சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கிறது.

❖ இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

❖ ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.

❖ ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்பொது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.

❖ எ.கா ஐந்து, இடையன். அலை

**ஔகாரக்குறுக்கம்**

❖ ஔகாரம் சொற்களின் முதலில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கிறது.

❖ இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஔகாரம் ஔகாரக்குறுக்கம் எனப்படும்

❖ ஔகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வராது.

எ.கா வௌவால், ஔவையார்.

**மகரக்குறுக்கம்**

❖ வலம் வந்தான் என்பதில் மகர மெய்யெழுத்தை அடுத்து வகர எழுத்து வருவதால் மகரமெய்யானது தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.

❖ 'போலும்' என்னும் சொல்லைப் 'போன்ம்' என்றும். மருளும் என்னும் சொல்லை 'மருண்ம்' என்றும் செய்யுளில் ஓசைச் சீர்மைக்காகப் பயன்படுத்தினர்.

❖ இச்சொற்களில் மகரமெய்யானது ன், ண் ஆகிய எழுத்துகளை அடுத்து வருவதால் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.

❖ இவ்வாறு குறைந்து ஒலிக்கும் மகரம் மகரக்குறுக்கம் எனப்படும்.

**ஆய்தக் குறுக்கம்**

❖ முள் + தீது என்பது முஃடீது எனவும், கல் தீது என்பது கஃறீது எனவும் சேரும்.

❖ இச்சொற்களில் உள்ள ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஆய்தம் ஆய்தக்குறுக்கம் எனப்படும்.

## இயல் - 3
## இலக்கியவகைச் சொற்கள்

❖ இலக்கண முறைப்படி பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனச் சொற்கள் நான்கு வகைப்படும்.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com, Whatsapp No: 7358965593

❖ இலக்கிய வகையில் சொற்களை இயற்சொல், திரிச்சொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

## இயற்சொல்

❖ எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.

❖ இயற்சொல் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகையிலும் வரும்.

(எ.கா)

| | |
|---|---|
| மண், பொன் | பெயர் இயற்சொல் |
| நடந்தான், வந்தான் | வினை இயற்சொல் |
| அவனை, அவனால் | இடை இயற்சொல் |
| மாநகர் | உரி இயற்சொல் |

## திரிசொல்

❖ கற்றோர்க்கு மட்டுமே விளங்குவதாகவும் இலக்கியங்களில் மட்டுமே பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் திரிசொற்கள் எனப்படும்.

❖ திரிச்சொல் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகையிலும் வரும்.

(எ.கா)

| | |
|---|---|
| அழுவம், வங்கம் | பெயர்த் திரிச்சொல் |
| இயம்பினான், பயின்றாள் | வினைத் திரிச்சொல் |
| அன்ன, மான | இடைத் திரிச்சொல் |
| கூர், கழி | உரித் திரிச்சொல் |

❖ திரிச்சொற்களை ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் எனவும், பல பொருள் குறித்த ஒரு திரிசொல் எனவும் இருவகைப்படுத்தலாம்.

❖ வங்கம், அம்பி,நாவாய் - என்பன கப்பல் என்னும் ஒரே பொருளைத் தருவதால் ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் என்பர்.

❖ இதழ் என்னும் சொல் பூவின் இதழ், உதடு, கண்ணிமை, பனையேடு,நாளிதழ் ஆகிய பல பொருள்களைத் தருவதால் பல பொருள் குறித்த ஒரு திரிசொல் என்பர்.

## திசைச்சொல்

❖ வடமொழி தவிர, பிற மொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் திசைச்சொற்கள் எனப்படும்.

❖ முற்காலத்தில் பாண்டிநாட்டைத் தவிர, தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் வழங்கிய கேணி (கிணறு), பெற்றம் (பசு) போன்ற சொற்களையும் திசைச்சொற்கள் என்றே வழங்கினர்.

## வடசொல்

❖ வடமொழியிலிருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் வட சொற்கள் எனப்படும்.

❖ கமலம், அலங்காரம் என வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவதைத் தற்சமம் என்பர்.

❖ லக்ஷ்மி என்பதை இலக்குமி என்றும், விஷம் என்பதை விடம் என்றும் தமிழ் எழுத்துகளால் மாற்றி எழுதுவதைச் தற்பவம் என்பர்.

## இயல் - 4
## ஓரெழுத்து, ஒருமொழி, பகுபதம், பகாப்பதம்

❖ ஓரெழுத்து ஒருமொழி

❖ ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.

❖ நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிடுகிறார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

❖ இவற்றில் நொ, து ஆகிய இரண்டு சொற்களைத்தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆ - பசு | 22 | நே - அன்பு |
| 2 | ஈ - கொடு | 23 | நை - இழிவு |
| 3 | ஊ - இறைச்சி | 24 | நோ - வறுமை |
| 4 | ஏ - அம்பு | 25 | பா - பால் |
| 5 | ஐ - தலைவன் | 26 | பூ - மலர் |
| 6 | ஓ - மதகுநீர் தாங்கும் பலகை | 27 | பே - மேகம் |
| 7 | கா- சோலை | 28 | பை - இளமை |
| 8 | கூ - பூமி | 29 | போ - செல் |
| 9 | கை - ஒழுக்கம் | 30 | மா - மாமரம் |
| 10 | கோ - அரசன் | 31 | மீ - வான் |
| 11 | சா - இறந்துபோ | 32 | மூ - மூப்பு |
| 12 | சீ - இகழ்ச்சி | 33 | மே - அன்பு |
| 13 | சே - உயர்வு | 34 | மை - அஞ்சனம் |
| 14 | சோ - அரசன் | 35 | மோ - முகத்தல் |
| 15 | தா - கொடு | 36 | யா - அகலம் |
| 16 | தீ - நெருப்பு | 37 | வா - அழைத்தல் |
| 17 | தூ - தாய்மை | 38 | வீ - மலர் |
| 18 | தே - கடவுள் | 39 | வை- புல் |
| 19 | தை - தைத்தல் | 40 | வௌ - கவர் |
| 20 | நா - நாவு | 41 | நொ- நோய் |
| 21 | நீ - முன்னிலை ஒருமை | 42 | து - உண் |

## பகுபதம்

❖ வேலன் என்னும் சொல்லை வேல் + அன் எனப் பிரிக்கலாம்.

❖ படித்தான் என்னும் சொல்லை படி + த் + த் ஆன் எனப்பிரிக்கலாம்.

❖ இவ்வாறு சிறுசிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமையும் சொற்களைப் பகுபதங்கள் என்பர். பிரிக்கப்படும் உறுப்புகளைப் பகுபத உறுப்புகள் எனக் குறிப்பிடுவர்

## பெயர்ப்பகுபதம்

❖ பகுபதமாக அமையும் பெயர்ச்சொல் பெயர்ப்பகுபதம் ஆகும். இதனை, பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என ஆறு வகைப்படுத்துவர்.

(எ.கா)

1. பொருள் - பொன்னன் (பொன் + அன்)
2. இடம் - நாடன் (நாடு + அன்)
3. காலம் - சித்திரையான் (சித்திரை+ ஆன்)
4. சினை - கண்ணன் (கண் + அன்)
5. பண்பு - இனியன் (இனிமை + அன்)
6. தொழில் - உழவன் (உழவு +அன்)

## வினைப்பகுபதம்

❖ பகுபதமாக அமையும் வினைச்சொல் வினைப்பகுபதம் ஆகும்.

❖ (எ.கா) உண்கின்றான் - உண் +கின்று +ஆன்.

## பகுபத உறுப்புகள்

❖ பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை. விகாரம் ஆகியவையாகும்.

www.Padasalai.Net www.CBSEtips.in



- ❖ பகுபதத்தின் முதலில் அமைந்து முதன்மையான பொருளைத் தருவது பகுதி ஆகும். இது கட்டளையாகவே அமையும்.
- ❖ பகுபதத்தின் இறுதியில் அமைந்து திணை, பால் ஆகியவற்றையோ, முற்று, எச்சம் ஆகியவற்றையோ காட்டுவது விகுதி ஆகும்.
- ❖ பகுபதத்தின் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவது இடைநிலை ஆகும்.
- ❖ பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து சந்தி எனப்படும்.
- ❖ பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல் சாரியை எனப்படும்.
- ❖ பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.
  - ❖ (எ.கா) வந்தனன் - வா(வ) +த்(ந்) +த் +அன் +அன்

வா– பகுதி, இது வ எனக் குறுகி இருப்பது விகாரம்
த் - சந்தி. இது ந் எனத் திரிந்து இருப்பது விகாரம்
அன் - சாரியை
அன்- ஆண்பால் வினைமுற்று விகுதி.

### பகாப்பதம்

- ❖ பகுபத உறுப்புகளாகப் பிரிக்கமுடியாத சொல் பகாப்பதம் எனப்படும். இவை அடிச்சொல் அல்லது வேர்ச்சொல்லாக இருக்கும்.
- ❖ பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகைச் சொற்களிலும் பகாப்பதங்கள் உண்டு.

(எ.கா) பெயர்ப் பகாப்பதம் - நிலம், நீர், நெருப்பு, காற்று.
வினைப்பகாப்பதம் - நட, வா, படி, வாழ்
இடைப்பகாப்பதம் - மன், கொல், தில், போல்
உரிப்பகாப்பதம் -உறு, தவ, நனி, கழி.

## இயல் - 5
## தொழிற்பெயர்

- ❖ ஒரு செயலின் அல்லது வினையின் பெயராக அமைவது தொழிற்பெயர் எனப்படும். தொழிற்பெயர் எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது. படர்க்கை இடத்தில் மட்டும் வரும்.
- ❖ (எ.கா) படித்தல், நடிப்பு, பொறுத்தல் தொழிற்பெயரை விகுதி பெற்ற தொழிற்பெயர், முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர் என வகைப்படுத்துவர்.

### விகுதி பெற்ற தொழிற்பெயர்

- ❖ வினைப்பகுதியுடன் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து வருவது விகுதி பெற்ற தொழிற்பெயராகும்.

(எ.கா)

| | | |
|---|---|---|
| தருதல் | - | தல் |
| நட்பு | - | பு |
| கூறல் | - | அல் |
| மறைவு | - | வு |
| ஆட்டம் | - | அம் |
| மறதி | - | தி |
| விலை | - | ஐ |
| உணர்ச்சி | - | சி |
| வருகை | - | கை |
| கல்வி | - | வி |
| பார்வை | - | வை |
| செய்யாமை | - | மை |
| போக்கு | - | கு |

### முதனிலைத் தொழிற்பெயர்

- ❖ ஏவல் ஒருமை வினையாக அமையும் வினைச்சொற்களின் பகுதியை முதனிலை என்பர். முதனிலை எவ்வகை மாற்றமும் பெறுமால் தொழிற்பெயராக அமைவது முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.
- ❖ (எ.கா) செல்லமாக ஓர் அடிஅடித்தான்.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

அறிஞர் அண்ணா தம் பேச்சால் புகழ் பெற்றார்.

❖ இவற்றில் அடிக்கோடிட்ட சொற்கள் விகுதி பெறாமல் தம்பொருளை உணர்த்துகின்றன.

**முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

❖ முதனிலை திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

❖ (எ.கா) விடு – வீடு, மின் - மீன், கொள் - கோள், உடன்படு – உடன்பாடு

## இயல் - 6
## அணி இலக்கணம்

**அணி**

❖ அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். ஒரு செய்யுளைச் சொல்லாலும், பொருளாலும் அழகு பெறச் செய்தலை அணி என்பர்.

**உவமை அணி**

❖ ஒப்பிட்டுக் கூறப்படும் பொருளை (மயில், கண்) உவமை அல்லது உவமானம் என்பர். உவமையால் விளக்கப்படும் பொருளை உவமேயம் என்பர். போல, போன்ற என்பவை உவம உருபுகளாகும்.

❖ "அகழ்வாரைத்தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை". (பொறையுடைமை)

❖ ஒரு பாடலில் உவமையும், உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணி எனப்படும். போல, புரைய, அன்ன, இன்ன, அற்று, இற்று, மான, கடுப்பு, ஒப்ப, உறழ போன்றவை உவம உருபுகளாக வரும்.

**எடுத்துக்காட்டு உவமை அணி**

❖ **தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு**

❖ இதில் தொட்டனைத்து ஊறும் மணற்கேணி என்பது உவமை. மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு என்பது உவமேயம் இடையில் "போல" என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

❖ இவ்வாறு உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் வந்து உவம உருபு மறைந்து வந்தால் அஃது எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும்.

**இல்பொருள் உவமையணி**

❖ மாலை வெயிலில் மழைத்தூரல் பொன்மழை பொழிந்தது போல் தோன்றியது.

❖ காளை கொம்பு முளைத்த குதிரை போலப் பமாய்ந்து வந்தது.

❖ இத்தொடர்களில் "பொன்மழை பொழிந்தது போல்","கொம்பு முளைத்த குதிரை போல" என்னும் உவமைகள் வந்துள்ளன.

❖ உலகில் பொன் மழையாகப் பொழிவதும் இல்லை. கொம்பு முளைத்த குதிரையும் இல்லை. இவ்வாறு உலகில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவதை இல்பொருள் உவமை அணி என்பர்.

## இயல் - 7
## வழக்கு

❖ எழுத்திலும் பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை வழக்கு எனப்படும்.

❖ நம் முன்னோர் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ, அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதை வழக்கு என்பர்.

❖ இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


## இயல்பு வழக்கு

- ❖ ஒரு பொருளை அதற்கே உரிய இயல்பான சொற்களால் குறிப்பிடுவது இயல்பு வழக்கு ஆகும். இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்.
- ❖ 1. இலக்கணமுடையது.
- ❖ 2. இலக்கணப்போலி
- ❖ 3. மரூஉ

### 1. இலக்கணமுடையது

- ❖ நிலம், மரம், வான், எழுது – ஆகிய சொற்களை நோக்குங்கள். இவை தமக்குரிய பொருளை எவ்வகை மாறுபடும் இல்லாமல் இயல்பாகத் தருகின்றன. இவ்வாறு இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல் இலக்கணமுடையது ஆகும்.

### 2. இலக்கணப்போலி

- ❖ இலக்கண முறைப்படி அமையாவிடினும், இலக்கணமுடையவை போலவே ஏற்றுக் கொள்ளப்படும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும்.
- ❖ இலக்கணப்போலி என்பது பெரும்பாலும் சொற்களின் முன்பின் பகுதிகள் இடம்மாறி வருவதையே குறிக்கும். எனவே, இலக்கணப் போலியை முன்பின்னாகத் தொக்கப் போலி எனவும் குறிப்பிடுவர்.
- ❖ (எ.கா) புறநகர், கால்வாய், தசை, கடைக்கண்.

### 3. மரூஉ

- ❖ இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்.
- ❖ (எ.கா) கோவை, குடந்தை, எந்தை, போது, சோணாடு.

## தகுதி வழக்கு

- ❖ ஏதேனும் ஒரு காரணத்தினால் பிறரிடம் சொல்லத் தகுதியற்ற சொற்களைத் தகுதியான வேறு சொற்களால் குறிப்பிடுவது தகுதி வழக்கு ஆகும். தகுதி வழக்கு மூன்று வகைப்படும்.

1. இடக்கரடக்கல்
2. மங்கலம்
3. குழூஉக்குறி

### 1. இடக்கரடக்கல்

- ❖ பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத் தகாத சொற்களைத் தகுதியுடைய வேறு சொற்களால் கூறுவது இடக்கரடக்கல் ஆகும்.

(எ.கா) கால் கழுவி வந்தான்.
குழந்தை வெளியே போய்விட்டது.
ஒன்றுக்குப் போய் வந்தேன்

### 2. மங்கலம்

- ❖ மங்கலமில்லாத சொற்களை மங்கலமான வேறு சொற்களால் குறிப்பதை மங்கலம் என்பர்.

| | | |
|---|---|---|
| (எ.கா) ஓலை | – | திருமுகம் |
| கறுப்பு ஆடு | – | வெள்ளாடு |
| விளக்கை அணை | – | விளக்கைக் குளிரவை |
| சுடுகாடு | – | நன்காடு |

### 3. குழூஉக்குறி

- ❖ ஒரு குழுவினர் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக்கொள்ளும் சொற்கள் குழூஉக்குறி எனப்படும்.
- ❖ (எ.கா) பொன்னைப் பறி எனல் (பொற்கொல்லர் பயன்படுத்துவது)
- ❖ ஆடையைக் காரை எனல் (யானைப்பாகர் பயன்படுத்துவது).


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593
Padasalai.Net

## போலி

- ❖ சொல்லின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ, இயல்பாக இருக்க வேண்டிய ஓர் எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து இடம்பெற்று அதே பொருள் தருவது போலி எனப்படும்.
- ❖ போலி என்னும் சொல் போல இருத்தல் என்பதிலிருந்து தோன்றியது, போலி மூன்று வகைப்படும்.

1. முதற்போலி
2. இடைப்போலி
3. கடைப்போலி

### 1. முதற்போலி

- ❖ பசல் - பைசல், மஞ்சு – மைஞ்சு, மயல் - மையல் ஆகிய சொற்களில் முதல் எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.
- ❖ இவ்வாறு சொல்லின் முதலில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது முதற்போலியாகும்.

### 2. இடைப்போலி

- ❖ அமச்சு – அமைச்சு, இலஞ்சி - இலைஞ்சி, அரயர் – அரையர் ஆகிய சொற்களில் இடையில் உள்ள எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.
- ❖ இவ்வாறு சொல்லின் இடையில் இருக்க வேண்டிய எழுத்திற்கு பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது இடைப்போலியாகும்.

### 3. கடைப்போலி

- ❖ அகம் - அகன், நிலம் - நிலன், முகம் - முகன், பந்தல் - பந்தர், சாம்பல் - சாம்பர் ஆகிய சொற்களில் இறுதியில் உள்ள எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.
- ❖ இவ்வாறு சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது கடைப்போலியாகும்.

### முற்றுப்போலி

- ❖ மூவகைப் போலிகள் மட்டுமின்றி வேறு ஒரு வகைப் போலியும் உண்டு. ஐந்து – அஞ்சு - இச்சொற்களை நோக்குங்கள். இதில் அஞ்சு என்னும் சொல் ஐந்து என்னும் சொல்லின் போலி வடிவமாகும்.
- ❖ இவ்வாறு ஒரு சொல்லில் இயல்பாக அமைந்த எழுத்துகளுக்குப் பதிலாக எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டாலும் பொருள் மாறாமல் இருப்பது முற்றுப்போலி எனப்படும்.

## இயல் - 8
## அணி இலக்கணம்

### உருவக அணி

- ❖ உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.
- ❖ இதில் உவமிக்கப்படும் பொருள் முன்னும் உவமை பின்னுமாக அமையும்.
- ❖ "தேன்" போன்ற தமிழ் என்று கூறுவது உவமை ஆகும். தமிழாகிய தேன் என்னும் பொருளில் தமிழ்த்தேன் என்று கூறுவது உருவகம் ஆகும்.

❖ **"வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடர் ஆழி நீக்குகவே என்று"**

- ❖ இப்பாடலில் பூமி அகல்விளக்காகவும், கடல் நெய்யாகவும், கதிரவன் சுடராகவும்

உருவகப்படுத்தப்பட்டு உள்ளன. எனவே, இப்பாடல் உருவக அணி அமைந்ததாகும்.

## ஏகதேச உருவக அணி

- ❖ அறிவு என்னும் விளக்கைக்கொண்டு அறியாமையை நீக்க வேண்டும்.
- ❖ இத்தொடரில் அறிவு விளக்காக உருவக்கப்படுத்தப்பட்டு உள்ளது. அறியாமை இருளாக உருவகப்படுத்தப்படவில்லை.
- ❖ இவ்வாறு கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தமால் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.
- ❖ பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்

## விளக்கம்

- ❖ வள்ளுவர் மக்களின் செயல்களைப் பொன்னின் தரத்தை அறிய உதவும் உரைகல்லாக உருவகம் செய்துவிட்டு, மக்களது உயர்வையும் தாழ்வையும் பொன்னாக உருவகம் செய்யவில்லை. எனவே இக்குறளில் இடம்பெற்றிருப்பது ஏகதேச உருவக அணியாகும்.

# இயல் - 9
# ஆகு பெயர்

- ❖ ஒன்றன் பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றிற்கு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.
- ❖ பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகிய ஆறு வகையான பெயர்ச்சொற்களிலும் ஆகுபெயர்கள் உண்டு.

## பொருளாகுபெயர்

- ❖ மல்லிகை சூடினாள்
- ❖ மல்லிகை என்னும் ஒரு முழுப்பொருளின் பெயர் அதன் ஓர் உறுப்பாகிய மலரைக் குறிக்கிறது. இவ்வாறு பொருளின் பெயர் அதன் சினையாகிய உறுப்புக்கு ஆகிவருவது பொருளாகுபெயர் எனப்படும். இதனை முதலாகு பெயர் எனவும் கூறுவர்.

## இடவாகு பெயர்

- ❖ சடுகுடு போட்டியில் தமிழ்நாடு வெற்றி பெற்றது.
- ❖ தமிழ்நாடு என்னும் பெயர் அவ்விடத்தைச் சேர்ந்த விளையாட்டு அணியைக் குறிப்பதால் இ∴து இடவாகு பெயர் ஆகும்.

## காலவாகு பெயர்

- ❖ திசம்பர் சூடினாள்
- ❖ இத்தொடரில் திசம்பர் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் மலரும் பூவைக் குறிப்பதால் இது காலவாகு பெயர் ஆயிற்று.

## சினையாகு பெயர்

- ❖ தலைக்கு ஒரு பழம் கொடு
- ❖ இத்தொடருக்கு ஆளுக்கு ஒரு பழம் கொடு என்பது பொருளாகும். இவ்வாறு சினையின் (உறுப்பின்) பெயர் முதலாகிய பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயர் எனப்படும்.

## பண்பாகுபெயர்

- ❖ இனிப்பு தின்றான்.
- ❖ இத்தொடரில் இனிப்பு என்னும் பண்புப் பெயர் தின்பண்டத்தைக் குறிப்பதால் இது பண்பாகுபெயர் ஆயிற்று.

## தொழிலாகு பெயர்

- ❖ பொங்கல் உண்டான்
- ❖ இத்தொடரில் பொங்கல் (பொங்குதல்) என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால்

www.Padasalai.Net www.CBSEtips.in


உருவான உணவினைக் குறிப்பதால் இது தொழிலாகு பெயர் ஆகும்.

## இரட்டைக்கிளவி

- விறுவிறு, கலகல, மளமள
- இவை ஒவ்வொன்றிலும் அசைச்சொற்கள் இரண்டிரண்டாக இணைந்து வந்துள்ளன. அவற்றைப் பிரித்துப் பார்த்தால் பொருள் தரவில்லை. இவ்வாறு இரட்டையாக இணைந்து வந்து, பிரித்தால் தனிப்பொருள் தராத சொற்களை இரட்டைக்கிளவி என்பர்.

## அடுக்குத்தொடர்

- அச்சம், விரைவு, சினம் போன்ற காரணங்களால் ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட முறை தொடர்ந்து வருவதை அடுக்குத்தொடர் என்பர். அடுக்குத் தொடரில் பலமுறை இடம்பெறும் ஒவ்வொரு சொல்லும் பொருளுடையது.
- எ.கா- பாம்பு பாம்பு பாம்பு, பிடி பிடி பிடி

## அடுக்குத்தொடர் இரட்டைக்கிளவி – ஒப்பீடு

- அடுக்குத்தொடரில் உள்ள சொற்களைத் தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்குப் பொருள் உண்டு. இரட்டைக் கிளவியைப் பிரித்தால் அது பொருள் தருவதில்லை
- அடுக்குத்தொடரில் ஒரே சொல் இரண்டு முதல் நான்கு முறை வரை வரும். இரட்டைக்கிளவியில் ஒரு சொல் இரண்டு முறை மட்டுமே வரும்.
- அடுக்குத் தொடரில் சொற்கள் தனித்தனியே நிற்கும். இரட்டைக்கிளவியின் சொற்கள் இணைந்தே நிற்கும்.
- அடுக்குத் தொடர் விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள்கள் காரணமாக வரும். இரட்டைக்கிளவி வினைக்கு அடைமொழியாக குறிப்புப் பொருளில் வரும்.

## 7th Book Back Question
### இயல் - 1

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. ‘நெறி‘ என்னும் சொல்லின் பொருள் -------------
   அ) வழி ஆ) குறிக்கோள்
   இ) கொள்கை ஈ) அறம்

2. ‘குரலாகும்‘ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும்
   இ)குர+ லாகும் ஈ) குர + ஆகும்

3. வான் + ஒலி என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் -----
   அ) வான்ஒலி ஆ) வானொலி
   இ) வாவொலி ஈ) வானெலி

4. பறவைகள் --------------- பறந்து செல்கின்றன
   அ) நிலத்தில் ஆ) விசும்பில்
   இ) மரத்தில் ஈ) நீரில்

5. இயற்கையைப் போற்றுதல் தமிழர்---------
   அ) மரபு ஆ) பொழுது
   இ) வரவு ஈ) தகவு

6. ‘இருதிணை‘ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) இரண்டு + திணைஆ) இரு+ திணை
   இ) இருவர் + திணை ஈ) இருந்து+ திணை

7. ஐம்பால் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) ஐம் + பால் ஆ) ஐந்து+ பால்
   இ) ஐம்பது+ பால் ஈ) ஐ + பால்

8. மொழியின் முதல் நிலை பேசுதல் -------------- ஆகியனவாகும்
   அ) படித்தல் ஆ) கேட்டல்
   இ) எழுதுதல் ஈ) வரைதல்

9. ஒலியின் வரிவடிவம் ----------------- ஆகும்
   அ) பேச்சு ஆ) எழுத்து
   இ) குரல் ஈ) பாட்டு

10. தமிழின் கிளை மொழிகளில் ஒன்று
    அ) உருது ஆ) இந்தி
    இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

11. பேச்சு மொழியை -------------- வழக்கு என்றும் கூறுவர்
அ) இலக்கிய ஆ) உலக
இ) நூல் ஈ) மொழி

## இயல் - 2

12. பள்ளிக்குச் சென்று கல்வி -------------- சிறப்பு
அ) பயிலுதல் ஆ) பார்த்தல்
இ) கேட்டல் ஈ) பாடுதல்

13. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது--------
அ) கடல் ஆ) ஓடை
இ) குளம் ஈ) கிணறு

14. 'நன்செய்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது---------
அ) நன் + செய் ஆ) நன்று + செய்
இ) நன்மை+ செய் ஈ) நல் + செய்

15. நீளுழைப்பு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது--------------
அ) நீளு+ உழைப்பு ஆ) நீண் + உழைப்பு
இ) நீள் + அழைப்பு ஈ) நீள் + உழைப்பு

16. சீருக்கு + ஏற்ப என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் -----------------
அ) சீருக்குஏற்ப ஆ) சீருக்கேற்ப
இ) சீர்க்கேற்ப ஈ) சீருகேற்ப

17. ஓடை + ஆட என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் -----------------------
அ) ஓடைஆட ஆ) ஓடையாட
இ) ஓடையோட ஈ) ஓடைவாட

18. ஆசிய யானைகளில் ஆண் - பெண் யானைகளை வேறுபடுத்துவது--------------
அ) காது ஆ) தந்தம்
இ) கண் ஈ) கால் நகம்

19. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ------------
அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை
இ) முண்டந்துறை ஈ) கூந்தன்குளம்

20. 'காட்டாறு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் ------------
அ) காடு+ ஆறு ஆ) காட்டு+ ஆறு
இ) காட் + ஆறு ஈ) காட் + டாறு

21. 'அனைத்துண்ணி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் ------
அ) அனைத்து + துண்ணி
ஆ) அனை+ உண்ணி
இ) அனைத் + துண்ணி
ஈ) அனைத்து+ உண்ணி

22. 'நேரம் ஆகி' என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்-------------------
அ) நேரமாகி ஆ) நேராகி
இ) நேரம்ஆகி ஈ) நேர்ஆகி

23. 'வேட்டை + ஆடிய' என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் -----
அ)வேட்டைஆடிய ஆ) வேட்டையாடிய
இ) வேட்டாடிய ஈ) வேட்டாடிய

24. 'வேட்கை' என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு---------
அ) அரை ஆ) ஒன்று
இ) ஒன்றரை ஈ) இரண்டு

25. மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல்---------
அ) போன்ம் ஆ) மருண்ம்
இ) பழம் விழுந்து ஈ) பணம்கிடைத்தது

26. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது-
அ) ஐகாரக்குறுக்கம்
ஆ) ஔகாரக் குறுக்கம்
இ) மகரக்குறுக்கம்
ஈ) ஆய்தக்குறுக்கம்

## இயல் - 3

27. வேயாமாடம் எனப்படுவது----------------
அ) வைக்கோலால் வேயப்படுவது
ஆ) சாந்தினால் பூசப்படுவது
இ) ஓலையால் வேயப்படுவது
ஈ) துணியால் மூடப்படுவது

28. உரவுநீர் <u>அழுவம்</u> - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்----------
அ) காற்று ஆ) வானம்
இ) கடல் ஈ) மலை

Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


29. கடலில் துறை அறியாமல் கலங்குவன-------
அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள்
இ) தூண்கள் ஈ) மாடங்கள்

30. தூண் என்னும் பொருள் தரும் சொல் ----------
அ)ஞெகிழி ஆ) சென்னி
இ)ஏணி ஈ) மதலை

## இயல் - 3

31. இயற்கை வங்கூழ் ஆட்ட – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ----
அ)நிலம் ஆ)நீர்
இ)காற்று ஈ)நெருப்பு

32. மக்கள் ---------- ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்
அ) கடலில் ஆ) காற்றில்
இ) கழனியில் ஈ) வங்கத்தில்

33. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது---------------
அ) காற்று ஆ) நாவாய்
இ) கடல் ஈ) மணல்

34. 'பெருங்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----------------
அ) பெரு+ கடல் ஆ) பெருமை + கடல்
இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல்

35. இன்று + ஆகி என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------------
அ) இன்றுஆகி ஆ) இன்றிஆகி
இ) இன்றாகி ஈ) இன்றாஆகி

36. எதுகை இடம் பெறாத இணை-------------
அ) இரவு - இயற்கை
ஆ) வங்கம் – சங்கம்
இ) உலகு - புலவு
ஈ) அசைவு - இசைவு

37. **பொருத்துக**
அ) வங்கம் - 1) பகல்
ஆ) நிகான் - 2) கப்பல்
இ) எல் - 3) கலங்கரை விளக்கம்
ஈ) மாட ஒள்ளெரி- 4) நாவாய் ஓட்டுபவன்

அ) 1 2 3 4 ஆ) 2 4 1 3
இ) 4 3 2 1 ஈ) 1 4 3 2

38. தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது-----------
அ) கலம் ஆ) வங்கம்
இ) நாவாய் ஈ) ஓடம்

39. தொல்காப்பியம் கடற்பயணத்தை ------------- வழக்கம் என்று கூறுகிறது
அ)நன்னீர் ஆ)தண்ணீர்
இ)முந்நீர் ஈ)கண்ணீர்

40. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி-----------
அ) சுக்கான் ஆ) நங்கூரம்
இ) கண்ணடை ஈ) சமுக்கு

41. **பொருத்துக**
அ) எரா - 1) திசைகாட்டும் கருவி
ஆ) பருமல் - 2) அடிமரம்
இ) மீகாமன் - 3) குறுக்கு மரம்
ஈ) காந்த ஊசி - 4) கப்பலைச் செலுத்துபவர்

அ) 1 2 3 4 ஆ) 2 3 4 1
இ) 2 3 4 1 ஈ) 3 4 1 2

42. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் -------------
அ) இயற்சொல் ஆ) திரிசொல்
இ) திசைச்சொல் ஈ) வடசொல்

43. பலபொருள் தரும் ஒரு சொல் என்பது--------------
அ இயற்சொல் ஆ) திரிசொல்
இ) திசைச்சொல் ஈ) வடசொல்

44. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி----------
அ) மலையாளம் ஆ) கன்னடம்
இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு

45. பொருத்துக
அ) இயற்சொல் - 1) பெற்றம்
ஆ) திரிசொல் - 2) இரத்தம்
இ) திசைச்சொல் - 3) அழுவம்
ஈ) வடசொல் - 4) சோறு

அ) 2 3 1 4 ஆ) 1 2 3 4
இ) 4 3 2 1 ஈ) 3 4 1 2


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

## இயல் - 4

46. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது------------
அ)மயில் ஆ)குயில்
இ)கிளி ஈ)அன்னம்

47. பின்வருவனவற்றுள் மலை யைக் குறிக்கும் சொல்
அ)வெற்பு ஆ)காடு
இ)கழனி ஈ)புளி

48. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது----------
அ) ஏடெடு+ தேன் ஆ) ஏட்டு+எடுத்தேன்
இ) ஏடு +எடுத்தேன் ஈ) ஏ +டெடுத்தேன்

49. 'துயின்றிருந்தார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-------------
அ) துயின்று+இருந்தார் ஆ) துயில்+இருந்தார்
இ) துயின்றி+இருந்தார் ஈ) துயின் +இருந்தார்

50. என்று + உரைக்கும் என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
அ) என்றுஉரைக்கும் ஆ) என்றிரைக்கும்
இ) என்றரைக்கும் ஈ) என்றுரைக்கும்

51. **பொருத்துக**
அ) கழனி - 1) கதிரவன்
ஆ) நிகர் - 2) மேகம்
இ) பரிதி - 3) சமம்
ஈ) முகில் -4) வயல்
அ) 1 2 3 4 ஆ) 4 3 2 1
இ) 2 4 3 1 ஈ) 4 3 1 2

52. கற்றவர்க்கு அழகு தருவது-----------
அ) தங்கம் ஆ) வெள்ளி
இ) வைரம் ஈ) கல்வி

53. 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) கலன் +லல்லால் ஆ) கலம் +அல்லால்
இ) கலன் +அல்லால் ஈ) கலன் + னல்லால்

54. காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம்--
அ)கல்வி ஆ) காலம் அறிதல்
இ) வினையறிதல் ஈ) மடியின்மை

55. கல்வியில்லாத நாடு ------------ வீடு
அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத
இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத

56. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர்------------
அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர்
இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

57. 'உயர்வடைவோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) உயர்+வடைவோம்
ஆ)உயர்+அடைவோம்
இ) உயர்வு+வடைவோம்
ஈ) உயர்வு+அடைவோம்

58. இவை +எல்லாம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
அ) இவையெல்லாம் ஆ) இவையெல்லாம்
இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம்

59. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை –
அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46

60. 'எழுதினான் ' என்பது--------
அ) பெயர்ப்பகுபதம் ஆ) வினைப்பகுபதம்
இ) பெயர்ப்பகாப்பதம் ஈ) வினைப்பகாப்பதம்

61. பெயர்ப்பகுபதம் ----------------- வகைப்படும்
அ) நான்குஆ) ஐந்து இ) ஆறுஈ) ஏழு

62. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு------------
அ)பகுதி ஆ)விகுதி இ) இடைநிலை ஈ)சந்தி

63. **பொருத்துக**
அ) பெயர்ப்பகுபதம் - 1) தாழ்ந்தான்
ஆ) வினைப் பகுபதம் - 2) முன்
இ) இடைப் பகாப்பதம் - 3) நனி
ஈ) உரிப் பகாப்பதம் - 4) பெரியர்
அ) 1 2 3 4 ஆ) 2 4 1 3
இ) 4 1 2 3 ஈ) 4 3 2 1

## இயல் - 5

64. மயிலும் மானும் வனத்திற்கு---------------- தருகின்றன
அ) களைப்பு ஆ) வனப்பு
இ) மலைப்பு ஈ) உழைப்பு


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

65. மிளகாய் வற்றலின் --------------- தும்மலை வரவழைக்கும்
அ) நெடி ஆ) காட்சி இ) மணம் ஈ) ஓசை

66. அன்னை தான் பெற்ற ---------- சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறார்
அ) தங்கையின் ஆ) தம்பியின்
இ) மழலையின் ஈ) கணவனின்

67. 'வனப்பில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------------
அ) வனம் +இல்லை ஆ) வனப்பு +இல்லை
இ) வனப்பு+ யில்லை ஈ) வனப் +பில்லை

68. 'வளர்ப்பு +எனில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------------------
அ) வார்ப்எனில் ஆ) வளர்ப்பெனில்
இ) வார்ப்பெனில் ஈ) வார்ப்புஎனில்

69. 'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் 'பரி' என்பதன் பொருள்----------
அ) யானை ஆ) குதிரை இ) மான் ஈ) மாடு

70. பொருந்தாத ஓசை உடைய சொல் ------------
அ) பாய்கையால் ஆ) மேன்மையால்
இ) திரும்புகையில் ஈ) அடிக்கையால்

71. 'வண்கீரை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) வண் +கீரை ஆ) வண்ணம் +கீரை
இ) வளம்+ கீரை ஈ) வண்மை +கீரை

72. கட்டி +அடித்தல் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்-----------
அ) கட்டியிடித்தல் ஆ) கட்டியடித்தல்
இ) கட்டிஅடித்தல் ஈ) கட்டுஅடித்தல்

73. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று ------------
அ) மண்துகள் ஆ) நீர் வண்ணம்
இ) எண்ணெய் வண்ணம் ஈ) கரிக்கோல்

74. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம்----------
அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம்
இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச் சித்திரம்

75. கோட்டோவியம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------------
அ) கோடு +ஓவியம் ஆ) கோட்டு + ஓவியம்
இ) கோட்+ டோவியம் ஈ) கோடி + ஓவியம்

76. 'செப்பேடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) செப்பு+ஈடு ஆ) செப்பு + ஓடு
இ) செப்பு+ ஏடு ஈ) செப்பு + யேடு

77. எழுத்து+ ஆணி என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ------
அ) எழுத்து ஆணி ஆ) எழுத்தாணி
இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி

78. பின்வருவனற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர் எது
அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி

79. பின்வருவனற்றுள் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எது
அ) ஊறு ஆ) நடு இ) விழு ஈ) எழுதல்

80. **பொருத்துக**
அ) ஓட்டம் - 1)முதனிலைத் தொழிற்பெயர்
ஆ) பிடி - 2)முதனிலைதிரிந்த தொழிற்பெயர்
இ) சூடு -3) விகுதி பெற்ற தொழிற்பெயர்
அ) 3 1 2 ஆ) 1 2 3 இ) 3 2 1 ஈ) 1 3 2

81. ------------------ தீமை உண்டாகும்
அ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்வதால்
ஆ) செய்யத்தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
இ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
ஈ) எதுவும் செய்யாமல் இருப்பதால்

82. தன் குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புவரிடம் --------- இருக்கக் கூடாது
அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு
இ) ஏழ்மை ஈ) செல்வம்

83. 'எழுத்தென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -----------
அ) எழுத்து +தென்ப ஆ) எழுத்து +என்ப
இ) எழுத்து + இன்ப ஈ) எழுத் +தென்ப


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

84. 'கரைந்துண்ணும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----------
அ)கரைந்து +இன்னும் ஆ)கரை +துண்ணும்
இ)கரைந்து +உண்ணும் ஈ)கரை +உண்ணும்

85. கற்றனைத்து +ஊறும் என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ---------
அ) கற்றனைத்தூறும் ஆ) கற்றனைதூறும்
இ) கற்றனைத்தீறும் ஈ) கற்றனைத்தோறும்

86. **பொருத்துக**
அ)கற்கும் முறை - 1) செயல்
ஆ)உயர்க்குக் கண்கள் - 2) காகம்
இ)விழுச்செல்வம் - 3) பிழையில்லாமல் கற்றல்
ஈ)எண்ணித் துணிக - 4) எண்ணும் எழுத்தும்
உ)கரவா கரைந்துண்ணும் - 5) கல்வி
அ) 1 2 3 4 5 ஆ) 5 4 3 2 1
இ) 4 3 5 1 2 ஈ) 3 4 5 1 2

## இயல் - 6

87. மரம் வளர்த்தால் ------------- பெறலாம்
அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

88. 'நீருலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது--------------
அ)நீரு+ உலையில் ஆ) நீர் + இலையில்
இ) நீர் + உலையில் ஈ) நீரு+ இலையில்

89. மாரி +ஒன்று என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ------
அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று
இ) மாரியின்று ஈ) மாரியன்று

90. உழவர் சேற்று வயலில் ---------------- நடுவர்
அ) செடி ஆ) பயிர் இ) மரம் ஈ) நாற்று

91. வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை ------------ செய்வர்
அ) அறுவடை ஆ) உழவு
இ) நடவு ஈ) விற்பனை

92. 'தேர்ந்தெடுத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது--------
அ) தேர் + எடுத்து ஆ) தேர்ந்து+ தெடுத்து
இ) தேர்ந்து +அடுத்து ஈ) தேர்ந்து + எடுத்து

93. 'ஓடை + எல்லாம்' என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்-----------
அ) ஓடைஎல்லாம் ஆ) ஓடையெல்லாம்
இ) ஓட்டையெல்லாம் ஈ) ஓடெல்லாம்

94. **பொருத்துக**
அ) நாற்று- 1) பறித்தல்
ஆ) நீர் - 2) அறுத்தல்
இ) கதிர் - 3) நடுதல்
ஈ) களை - 4) பாய்ச்சுதல்
அ) 1 2 3 4 ஆ) 3 4 2 1
இ) 4 3 1 2 ஈ) 4 3 2 1

95. திருநெல்வேலி ---------- மன்னர்களோடு தொடர்பு உடைய
அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ

96. இளங்கோவடிகள் -------------- மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்
அ) இமய ஆ) கொல்லி
இ) பொதிகை ஈ) விந்திய

97. திருநெல்வேலி ---------- ஆற்றின் கரையில் அமைந்துள்ளது
அ) காவிரி ஆ) வைகை
இ) தென்பண்ணை ஈ) தாமிரபரணி

98. பொருத்துக
அ) தண்பொருநை - 1) பொன்நாணயங்கள் உருவாக்கும் இடம்
ஆ) அக்கசாலை - 2) குற்றலாம்
இ) கொற்கை - 3) தாமிரபரணி
ஈ) திரிகூடமலை - 4) முத்துக் குளித்தல்
அ) 3 1 4 2 ஆ) 1 2 3 4
இ) 4 3 2 1 ஈ) 2 4 1 3

## இயல் - 7

99. 'யாண்டு' என்னும் சொல்லின் பொருள்-----------
அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது

100. யாண்டுளனோ? என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----------
அ) யாண்டு+உளனோ?
ஆ) யாண்+உளனோ?
இ) யா+உளனோ?
ஈ) யாண்டு+உனோ?

Padasalai.Net

101. கல் +அளை என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
அ) கல்லளை ஆ) கல்அளை
இ) கலலளை ஈ) கல்லுளை

102. சலாம் என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்-------------
அ)நன்றி ஆ)வணக்கம்
இ)வருக ஈ)மகிழ்ச்சி

103. 'சிப்பாய்' என்னும் சொல்லின் பொருள் ------
அ) சிறியபாய் ஆ) சிறந்த பாய்
இ) போர் வீரன் ஈ) மாலுமி

104. அதிர்ச்சி அளிக்கும் செய்தியைக் கேட்ட மங்கை ------------- அடைந்து விழுந்தாள்
அ) வருத்தம் ஆ) கவலை
இ) மூர்ச்சை ஈ) வியப்பு

105. கோபம் என்னும் வடசொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் ------------
அ) வருத்தம் ஆ) அச்சம்
இ) சினம் ஈ) மனம்

106. 'தலையசைத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ----------
அ) தலையை+அசைத்து
ஆ) தலை+அசைத்து
இ) தலை+யசைத்து
ஈ) தலையை+ யசைத்து

107. 'நான் + ஒரு' என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் -------
அ) நானோர் ஆ) நான்ஓர்
இ) நானோரு ஈ) நானொரு

108. **பொருத்துக**
அ) கண்ணை - 1) தட்டினான்
ஆ) பல்லை - 2) உருட்டினான்
இ) கையை - 3) எடுத்தான்
ஈ) கத்தியை - 4) கடித்தான்
அ) 1 2 3 4 ஆ) 2 4 1 3
இ) 4 3 2 1 ஈ) 3 4 1 2

109. முத்துராமலிங்கரின் கல்வி தடைபடக் காரணம் ------------- நோய்
அ) காய்ச்சல் ஆ) பிளேக்
இ) காலரா ஈ) பெரியம்மை

110. முத்துராமலிங்கர் முதன்முதலில் உரையாற்றிய இடம் -----------
அ) தூத்துக்குடி ஆ) காரைக்குடி
இ) சாயல்குடி ஈ) மன்னார்குடி

111. முத்துராமலிங்கர் நடத்திய இதழின் பெயர் --
அ) இராஜாஜி ஆ) நேதாஜி
இ) காந்திஜி ஈ) நேருஜி

112. வாய்ப்பூட்டுச் சட்டத்தால் பேசத் தடை விதிக்கப்பட்ட வட நாட்டுத் தலைவர்------
அ) காந்தியடிகள் ஆ) பட்டேல்
இ) திலகர் ஈ)நேதாஜி

113. பொருத்துக
அ) பந்தர் - 1) முதற்போலி
ஆ) மைஞ்சு - 2) முற்றுப்போலி
இ) அஞ்சு - 3) இடைப்போலி
ஈ) அரையர் - 4)) கடைப்போலி
அ) 4 3 2 1 ஆ) 2 4 1 3
இ) 4 1 2 3 ஈ) 3 1 4 2

## இயல் - 8

114. "இடர் ஆழி நீங்குவே" - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ------
அ)துன்பம் ஆ)மகிழ்ச்சி
இ)ஆர்வம் ஈ)இன்பம்

115. 'ஞானச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----
அ) ஞான +சுடர் ஆ) ஞானச் + சுடர்
இ) ஞானம் +சுடர் ஈ) ஞானி +சுடர்

116. இன்பு + உருகு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ------
அ) இன்புஉருகு ஆ) இன்பும் உருகு
இ) இன்புருகு ஈ) இன்பருகு

117. பொருத்துக
அ) அன்பு - 1) நெய்
ஆ) ஆர்வம் - 2) தகளி
இ) சிந்தை - 3) விளக்கு
ஈ) ஞானம் - 4) இடுதிரி
அ) 4 3 2 1 ஆ) 1 2 3 4
இ) 2 4 1 3 ஈ) 3 1 4 2


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

118. காந்தியடிகள் எப்போதும் -----------ப் பேசினார்
அ) வன்சொற்களை ஆ) அரசியலை
இ) கதைகளை ஈ) வாய்மையை

119. 'இன்சொல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது---------
அ) இனிய+ சொல் ஆ) இன்மை + சொல்
இ) இனிமை+ சொல் ஈ) இன் + சொல்

120. அறம் + கதிர் என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் -------
அ) அறகதிர் ஆ) அறுகதிர்
இ) அறக்கதிர் ஈ) அறம்கதிர்

121. 'இளமை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல்
அ) முதுமை ஆ) புதுமை
இ) தனிமை ஈ) இனிமை

122. பொருத்துக
அ) விளைநிலம் - 1) உண்மை
ஆ) விதை - 2) இன்சொல்
இ) களை - 3) ஈகை
ஈ) உரம் - 4) வன்சொல்
அ) 4 3 2 1 ஆ) 2 3 4 1
இ) 1 2 3 4 ஈ) 3 1 2 4

123. ஒருவர் எல்லாருக்காவும் எல்லாரும் ஒருவருக்காக என்பது -------------- நெறி
அ) தனியுடைமை ஆ) பொதுவுடைமை
இ) பொருளுடைமை ஈ) ஒழுக்கமுடைமை

124. செல்வத்தின் பயன் -----------------
அ) ஆடம்பர ஆ) நீண்ட
இ) ஒப்புரவு ஈ) நேயம்

125. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை ------------ என்றும் கூறுவர்
அ) மருந்து ஆ) மருத்துவர்
இ) மருத்துவனை ஈ) மாத்திரை

126. உலகம் உண்ண உண்: உடுத்த உடுப்பாய் என்று கூறியவர்------------
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) முடியரசன் ஈ) கண்ணதாசன்

127. பொருத்துக
அ) எளிது - 1) பரவலர்
ஆ) ஈதல் - 2) அரிது
இ) அந்நியர் - 3) ஏற்றல்
ஈ) இரவலர் - 4) உறவினர்
அ) 2 3 4 1 ஆ) 1 2 3 4
இ) 4 3 2 1 ஈ) 3 1 2 4

128. ------------- ஒரு நாட்டின் அரணன்று
அ) காடு ஆ) வயல்
இ)மலை ஈ) தெளிந்த நீர்

129. மக்கள் அனைவரும் ------------ ஒத்த இயல்புடையவர்கள்
அ) பிறப்பால் ஆ) நிறத்தால்
இ) குணத்தால் ஈ) பணத்தால்

130. 'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----------
அ) நான்+ என்ப ஆ) நா+ டென்ப
இ) நாடு +என்ப ஈ) நாடு+ டென்ப

131. கண் + இல்லது என்பதனைச் சேர்தெழுதக் கிடைக்கும் சொல்---------------
அ) கணிஇல்லது ஆ) கணில்லது
இ) கண்ணில்லாது ஈ) கண்ணில்லது

## இயல் - 9

132. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது---------
அ) பணம் ஆ) பொறுமை
இ) புகழ் ஈ) வீடு

133. சாந்த குணம் உடையவர்கள் --------------- முழுவதையும் பெறுவர்
அ)புத்தகம் ஆ)செல்வம்
இ)உலகம் ஈ)துன்பம்

134. 'மலையளவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -----------
அ) மலை +யளவு ஆ) மலை +அளவு
இ) மலையின்+அளவு ஈ) மலையில்+அளவு

135. 'தன்னாடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) தன் +னாடு ஆ) தன்மை +னாடு
இ) தன் +நாடு ஈ) தன்மை+நாடு

www.Padasalai.Net www.CBSEtips.in


136. இவை +இல்லாது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------
அ) இவையில்லாது ஆ) இவைஇல்லாது
இ) இவயில்லாது ஈ) இவஇல்லாது

137. பொருத்துக
அ) சாந்தம் - 1) சிறப்பு
ஆ) மகத்துவம் - 2) உலகம்
இ) தாரணி - 3) கருணை
ஈ) இரக்கம் - 4) அமைதி
அ) 4 1 2 3 ஆ) 1 2 3 4
இ) 4 3 2 1 ஈ) 3 4 1 2

138. கூடு கட்டத் தெரியாத பறவை -----------
அ) காக்கை ஆ) குயில்
இ) சிட்டுக்குருவி ஈ) தூக்கணாங்குருவி

139. ‘தானொரு’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-------
அ) தா+ஒரு ஆ) தான் + னாரு
இ) தான் +ஒரு ஈ) தானே +ஒரு

140. காயிதேமில்லத் ------------- பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்
அ) தண்மை ஆ) எளிமை
இ) ஆடம்பரம் ஈ) பெருமை

141. ‘காயிதே மில்லத்’ என்னும் அரபுச் சொல்லுக்குச் ------------ என்பது பொருள்
அ)சுற்றுலா வழிகாட்டி
ஆ) சமுதாயவழிகாட்டி
இ) சிந்தனையாளர்
ஈ) சட்டவல்லுநர்

142. விடுதலைப் போராட்டத்தின் போது காயிதேமில்லத் -------------- இயக்கத்தில் கலந்துகொண்டர்
அ) வெள்ளையனே வெளியேறு
ஆ) உப்பக் காய்ச்சும்
இ) சுதேசி
ஈ) ஒத்துழையாமை

143. காயிதே மில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம் ----
அ) சட்டமன்றம் ஆ) நாடாளுமன்றம்
இ) ஊராட்சிமன்றம் ஈ) நகர்மன்றம்

144. ‘எதிரொலிரத்து’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது---------
அ) எதிர் +ரொலித்தது
ஆ) எதில்+ ஒலித்தது
இ) எதிர் +ஒலித்தது
ஈ) எதி +ரொலித்து

145. முதுமை +மொழி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்-------------
அ) முதுமொழி
ஆ) முதுமைமொழி
இ) முதியமொழி
ஈ) முதல்மொழி

146. பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகி வருவது----------
அ) பொருளாகுபெயர்
ஆ) சினையாகுபெயர்
இ) பண்பாகுபெயர்
ஈ) இடவாகுபெயர்

147. இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது------------
அ) முதலாகு பெயர்
ஆ) சினையாகு பெயர்
இ) தொழிலாகு பெயர்
ஈ) பண்பாகுபெயர்

148. மழை சடசடவெனப் பெய்தது இத்தொடரில் அமைந்தள்ளது ------------
அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி
இ) தொழிலாகுபெயர் ஈ) பண்பாகுபெயர்

149. அடுக்குத் தொடரில் ஒரே சொல் ------------- முறை வரை அடுக்கி வரும்
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

## விடை குறிப்பு

| NO | KEY | NO | KEY | NO | KEY | NO | KEY | NO | KEY |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | A | 31. | C | 61. | C | 91. | A | 121. | A |
| 2. | B | 32. | D | 62. | C | 92. | D | 122. | B |
| 3. | B | 33. | C | 63. | C | 93. | B | 123. | B |
| 4. | B | 34. | B | 64. | B | 94. | B | 124. | C |
| 5. | A | 35. | C | 65. | C | 95. | C | 125. | A |
| 6. | A | 36. | A | 66. | C | 96. | C | 126. | B |
| 7. | B | 37. | B | 67. | B | 97. | D | 127. | A |
| 8. | B | 38. | D | 68. | B | 98. | A | 128. | B |
| 9. | B | 39. | C | 69. | B | 99. | B | 129. | A |
| 10. | C | 40. | A | 70. | C | 100. | A | 130. | C |
| 11. | B | 41. | C | 71. | D | 101. | A | 131. | D |
| 12. | A | 42. | A | 72. | B | 102. | B | 132. | B |
| 13. | B | 43. | B | 73. | A | 103. | C | 133. | C |
| 14. | B | 44. | C | 74. | D | 104. | A | 134. | B |
| 15. | D | 45. | A | 75. | A | 105. | C | 135. | D |
| 16. | B | 46. | A | 76. | C | 106. | B | 136. | A |
| 17. | B | 47. | A | 77. | B | 107. | D | 137. | A |
| 18. | B | 48. | C | 78. | C | 108. | B | 138. | B |
| 19. | C | 49. | A | 79. | A | 109. | B | 139. | C |
| 20. | A | 50. | D | 80. | A | 110. | C | 140. | B |
| 21. | D | 51. | D | 81. | C | 111. | B | 141. | B |
| 22. | A | 52. | D | 82. | A | 112. | C | 142. | D |
| 23. | B | 53. | C | 83. | B | 113. | C | 143. | B |
| 24. | B | 54. | B | 84. | C | 114. | A | 144. | C |
| 25. | D | 55. | A | 85. | A | 115. | C | 145. | A |
| 26. | B | 56. | C | 86. | D | 116. | C | 146. | B |
| 27. | B | 57. | D | 87. | B | 117. | D | 147. | B |
| 28. | B | 58. | B | 88. | C | 118. | D | 148. | B |
| 29. | B | 59. | B | 89. | A | 119. | C | 149. | A |
| 30. | D | 60. | B | 90. | D | 120. | C | --- | --- |

Padasalai.Net

# எட்டாம் வகுப்பு

## கவிதைப் பேழை
## இயல் -1
## தமிழ்மொழி வாழ்த்து

- பாரதியார்

**வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி**
**வாழிய வாழியவே!**
**வான மளந்தது அனைத்தும் அளந்திடு**
**வண்மொழி வாழியவே!**
**ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி**
**இசைகொண்டு வாழியவே!**
**எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி**
**என்றென்றும் வாழியவே!**

**- பாரதியார்**

### சொல்லும் பொருளும்

- நிரந்தரம் - காலம் முழுமையும்
- வைப்பு - நிலப்பகுதி
- சூழ்கலி - சூழ்ந்துள்ள அறியாமை இருள்
- வண்மொழி - வளமிக்கமொழி
- இசை - புகழ்
- தொல்லை - பழமை, துன்பம்

### நூல்வெளி

- கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் சி. சுப்பிரமணிய பாரதியார்.
- நடத்திய இதழ்கள் - இந்தியா, விஜயா
- உரைநடை நூல்கள் - சந்திரிகையின் கதை, தராசு
- வசனகவிதைகளையும், சீட்டுக்கவிகளையும் எழுதியவர்
- பாரதிதாசன் பாரதியைப் புகழ்ந்த விதம் ‘சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன்’.

## தமிழ்மொழி மரபு

- வாழ்வுக்குரிய ஒழுங்குமுறை ஒழுக்கம் எனப்படும்.
- மொழிக்குரிய ஒழுங்குமுறை மரபு எனப்படும்.
- செய்யுளுக்கும் மரபுக்கும் உள்ள தொடர்பைப்பற்றித் தொல்காப்பியம் கூறுகின்றது.

**நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்**
**திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்**
**மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை**
**மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன**
**மரபு நிலை திரியின் பிறிது பிறதாகும்.**

**- தொல்காப்பியர்**

### சொல்லும் பொருளும்

- மயக்கம் - கலவை
- வழாஅமை - தவறாமை
- மரபு - வழக்கம்
- செய்யுள் - பாட்டு
- தழாஅல் - தழுவுதல்(பயன்படுத்துதல்)

### நூல்வெளி

- தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர்.
- தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம்.
- இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது.

தெரிந்து தெளிவோம்

| இளமைப் பெயர்கள் | ஒலிமரபு |
|---|---|
| புலி – பறழ் | புலி – உறுமும் |
| சிங்கம் - குருளை | சிங்கம் - முழங்கும் |
| யானை – கன்று | யானை –பிளிறும் |
| பசு – கன்று | பசு – கதறும் |
| கரடி – குட்டி | கரடி – கத்தும் |

## இயல் -2
## ஓடை – வாணிதாசன்

**ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! – கல்லில்**
**உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்**
**நெஞ்சில் ஈரம் இல்லார் நாண**
**நீளுழைப்பைக் கொடையைக் காட்டிச்**
**செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்**
**சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்**

**- வாணிதாசன்**

### சொல்லும் பொருளும்

- முழவு - இசைக் கருவி
- வள்ளைப்பாட்டு - நெல்குத்தும்போது பாடப்படும் பாடல்
- நாணம் - வெட்கம்
- செஞ்சொல் - திருந்திய சொல்

நன்செய் - நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்.

புன்செய் - குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்

### நூல்வெளி

- தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் கவிஞர் வாணிதாசன்.
- இயற்பெயர் - அரங்கசாமி என்ற எத்திராசலு
- இவர் பாரதிதாசனின் மாணவர்
- தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வல்லவர்.
- கவிஞரேறு, பாவலர்மணி முதலிய சிறப்புப்பெயர்களைப் பெற்றவர்.
- இவருக்குப் பிரெஞ்சு அரசு செவாலியர் விருது வழங்கியுள்ளது.
- தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் என்பன இவரது நூல்களுள் சிலவாகும்.

## கோணக்காத்துப் பாட்டு

**“உருமங்கட் டியமுகிலால் - கோணக்காத்து**
**உளன்று உளன்றுமெத்த அடித்ததினால்**
**பெரிதான வீடுகளெல்லாம் - கோப்புடனே**
**பிரிந்தும் கூரைத்தட்டுச் சரிந்ததங்கே”**

**– வெங்கம்பூர் சாமிநாதன்**

### சொல்லும் பொருளும்

- முகில் - மேகம்
- கெடிகலங்கி - மிகவருந்தி
- சம்பிரமுடன் - முறையாக
- காங்கேய நாடு - கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று
- காலன் - எமன்
- சேகரம் - கூட்டம்

### நூல் வெளி

- நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை, அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கும்மிப் பாடல்களாகப் பாடினர்.
- பேச்சுத் தமிழில் அமைந்த இவை பஞ்சக்கும்மிகள் என்று அழைக்கப்பட்டன.
- புலவர் செ.இராசு தொகுத்த பஞ்சக் கும்மிகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள வெங்கம்பூர் சாமிநாதன் இயற்றிய ‘காத்து நொண்டிச் சிந்து’ – பகுதியிலிருந்து சில பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

**திருக்குறள்**

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி.**

- உவமைஅணி

**வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.**

- இல்பொருள் உவமை அணி

**வருமுன்னார்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்**

- உவமை அணி

**கடல்ஓடா கால்வல நெடுந்தேர் கடல்ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து**

- பிறிது மொழிதல் அணி

## இயல் - 3
## நோயும் மருந்தும்

**பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி**
**தீர்தற்குஉரிய திரியோக மருந்துஇவை**
**ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்**
**பேர்த்து பிணியுள் பிறவார் பெரிது இன்பமுற்றே**

### சொல்லும் பொருளும்

- தீர்வன - நீங்குபவை
- உவசமம் - அடங்கி இருத்தல்
- நிழல் இகழும் - ஒளிபொருந்திய
- பேர்தற்கு - அகற்றுவதற்கு
- திரியோகமருந்து - மூன்று யோகமருந்து
- தெளிவு - நற்காட்சி
- திறத்தன - தன்மையுடையன
- கூற்றவா - பிரிவுகளாக
- பூணாய் - அணிகலன்களை அணிந்தவளே
- பிணி - துன்பம்
- ஓர்தல் - நல்லறிவு
- பிறவார் - பிறக்கமாட்டார்
- நோய் மூன்று வகைப்படும்
  1. மருந்தினால் நீங்கும் நோய்கள் ஒருவகை.
  2. எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள் மற்றொரு வகை
  3. அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம்தருவன இன்னொரு வகை.
- நோய் தீர்க்கும் மருந்துகள் மூன்று : நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம்.

### நூல்வெளி

- நீலகேசி ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று.
- சமணசமயக் கருத்துகளை வாதங்களின் அடிப்படையில் விளக்குகிறது.
- கடவுள் வாழ்த்து நீங்கலாகப் பத்துச் சருக்கங்களைக் கொண்டது.
- சமயத் தத்துவங்களை விவாதிக்கும் தருக்க நூலான இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## வருமுன் காப்போம்

**உடலின் உறுதி உடையவரே**
**உலகின் இன்பம் உடையவராம்**
**இடமும் பொருளும் நோயாளிக்கு**
**இனிய வாழ்வு தந்திடுமோ?**
**காலை மாலை உலாவிநிதம்**
**காற்று வாங்கி வருவோரின்**
**காலைத் தொட்டுக் கும்பிட்டுக்**
**காலன் ஓடிப் போவானே!**

**– கவிமணி தேசிகவிநாயகனார்**

### சொல்லும் பொருளும்

- நித்தம் நித்தம் - நாள்தோறும்
- மட்டு - அளவு
- சுண்ட - நன்கு

### நூல்வெளி

- கவிமணி எனப்போற்றப்படுபவர் தேசிக விநாயகனார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர். முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியாகராகப் பணியாற்றியவர். இவரின் கவிதை நூல்கள் ஆசியஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை .
- மொழிபெயர்ப்பு நூல் - உமர்க்கய்யாம் பாடல்கள்

## இயல் - 4
## நீதிநெறி விளக்கம்
## கல்வி அழகே அழகு

- மனிதனுக்கு அழகையும் உயர்வையும் தரக்கூடிய உண்மையான அணிகலன் எது என்பதைக் கூறும் நீதிநெறி விளக்கப்பாடல்

**கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்**
**மற்றோர் அணிகலன் வேண்டாவாம் - முற்ற**
**முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே**
**அழகுக்கு அழகுசெய் வார்.**

**- குமரகுருபரர்.**

- முற்ற – ஒளிர

### நூல்வெளி

- குமரகுருபரர் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
- கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ஆகியன அவற்றுள் சிலவாகும்.
- கடவுள் வாழ்த்து உட்பட 102 வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன.

## புத்தியைத் தீட்டு

- வன்முறையால் பிறரை வெல்வது சரியான செயலன்று. அறிவினாலும் அன்பினாலும் பிறரை வெல்லும் வெற்றியே நமக்குப் பெருமை தரும் என கூறியவர் ஆலங்குடி சோமு.

**கத்தியைத் தீட்டாதே – உந்தன்**
**புத்தியைத் தீட்டு**
**கண்ணியம் தவறாதே – அதிலே**
**திறமையைக் காட்டு!**
**இங்கே இருப்பது சில காலம்**
**இதற்குள் ஏனோ அகம்பாவம்**
**இதனால் உண்டோ ஒரு லாபம் - இதை**
**எண்ணிப்பாரு தெளிவாகும்!**

**– ஆலங்குடி சோமு**

### சொல்லும் பொருளும்

- தடம் - அடையாளம்
- அகம்பாவம் - செருக்கு

### நூல்வெளி

- சிவகங்கை ஆலங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

## இயல் - 5
## திருக்கேதாரம்

- ❖ தமிழ் இசை பாடப்படும் இனிய சூழலை விளக்கும் தேவாரம்.

**பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவெய்முழவு அதிரக்**
**கண்ணின்ஒளி கனகச்சுனை வயிரம்அவை சொரிய**
**மண்நின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண்டு எறியக்**
**கிண் என்றுஇசை முரலும்திருக் கேதாரம்என் னீரே**

**- சுந்தரர்**

### சொல்லும் பொருளும்

- பண் - இசை
- கனகச்சுனை - பொன் வண்ண நீர்நிலை
- மதவேழங்கள் - மதயானைகள்
- முரலும் - முழங்கும்
- பழவெய் - முதிர்ந்த மூங்கில்

- ❖ சுந்தரர், தேவாரம் பாடிய மூவருள் ஒருவர்.
- ❖ இவர் அருளிய பாடல்கள் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.
- ❖ நம்பியாரூரர், தம்பிரான் தோழர் சிறப்பு பெயர்
- ❖ இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டே சேக்கிழார் பெரியபுராணத்தைப் படைத்தளித்தார்.

- ❖ திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம்.
- ❖ தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.
- ❖ தே+ஆரம் -இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை.
- ❖ தே+வாரம் -இனிய இசை பொருந்திய பாடல்கள்.
- ❖ பதிகம் பத்துப் பாடல்களைக் கொண்டது.
- ❖ காட்டிலிருந்து வந்த வேழங்கள் கரும்பைத்தின்றன.
- ❖ 'கனகச்சுனை' பிரித்து எழுதக் கிடைப்பது கனகம்+சுனை.

## பாடறிந்து ஒழுகுதல்

**ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்**
**அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை**
**அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்**
**செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை**
**பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்**

### சொல்லும் பொருளும்

- ➢ அலந்தவர் - வறியவர்
- ➢ செறாஅமை - வெறுக்காமை
- ➢ நோன்றல் - பொறுத்தல்
- ➢ போற்றார் - பகைவர்
- ➢ கிளை - உறவினர்
- ➢ பேதையார் - அறிவற்றவர்
- ➢ மறாஅமை - மறவாமை
- ➢ பொறை - பொறுமை

- ❖ கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- ❖ கலிப்பா என்னும் பாவகையால் ஆன நூல்.
- ❖ நூற்று ஐம்பது பாடல்கள்.
- ❖ குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி, பாலைக்கலி என்னும் ஐந்து பிரிவுகள்.
- ❖ தொகுத்தவர் நல்லந்துவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்.
- ❖ நல்லந்துவனார் நெய்தல் கலியில் 33 பாடல்கள் பாடியுள்ளார்.
- ❖ நெய்தற்கலிப் பாடல்களை இயற்றியவரும் இவரே.
- ❖ பசியால் வாடும் அலந்தவர்க்கு உணவளித்தல் நமது கடமை
- ❖ நம்மை இகழ்வாரைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
- ❖ மறைபொருளைக் காத்தல் நிறை எனப்படும்.
- ❖ 'பாடறிந்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது பாடு+அறிந்து.

## இயல் 6
## வளம் பெருகுக

**பெருநீரால் வாரி சிறக்க! இருநிலத்து**
**இட்ட வித்து எஞ்சாமை நாறுக! நாறார**
**முட்டாது வந்து மழை பெய்க! பெய்தபின்**
**ஒட்டாது வந்து கிளைபயில்க!**
**நாரை பிரியும் விளைவயல்**
**யாணர்த் தாகஅவன் அகன்றலை நாடே!**

- ➢ வளமான வான்மழையால் பயிர்கள் செழித்து உழவர் பெருமக்கள் உவக்கும் காட்சியை கூறும் பாடல் தகடூர்யாத்திரை
- ➢ வாரி - வருவாய்
- ➢ எஞ்சை - குறைவின்றி
- ➢ ஓதை - ஓசை
- ➢ யாணர் - புதுவருவாய்
- ➢ வெரீஇ - அஞ்சி
- ➢ ஆசிரியர் பெயர் அறிய முடியாத நூல்களுள் ஒன்று தகடூர் யாத்திரை. தகடூர் இன்று தர்மபுரி என்று அழைக்கப்படுகிறது. இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை.
- ➢ இந்நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலில் கிடைக்கின்றன.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com Whatsapp No: 7358965593

### மழைச்சோறு

**வாளியிலே மாக்க ரைச்சு**
**வாசலெல்லாம் கோலம் போட்டு**
**கோலம் கரைய வில்லை**
**கொள்ளை மழை பேயவில்லை**
**முள்ளு இல்லாக் காட்டுலதான்**
**முருங்கைச்செடி நட்டு வச்சோம்**
**முருங்கைச்செடி வாட வாட ஒரு**
**முத்துமழை பேயவில்லை**

- மழைச்சோறு நோன்பு பற்றி கூறும் நூல் மழைச்சோறு.
- கொங்குநாட்டு மழைச்சோற்று வழிபாடு நூலின் பதிப்பாசிரியர் அ.கௌரன்.

### இயல் 7
### படை வேழம்

**வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி**
**மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்.**
**இழிவர் சிலர்சிலர் தாறு மண்டுவர்**
**இருவர் ஒருவழி போகல் இன்றியே**
**ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்**
**உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்**
**அருவர் வருவர் எனா இறைஞ்சினர்**
**அபயம் அபயம் எனநடுங்கியே**

- செயங்கொண்டார்

#### சொற்பொருள்

- ❖ மறலி - காலன்
- ❖ அருவர் - தமிழர்
- ❖ உடன்றன - சினந்து எழுந்தன
- ❖ பிலம் - மலைக்குகை
- ❖ வழிவர் - நழுவி ஓடுவர்
- ❖ இறைஞ்சினர் - வணங்கினர்
- ❖ முழை - மலைக்குகை

- ❖ முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர் பரணிக்கோர் செயங்கொண்டார். அவர் தீபங்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்.
- ❖ தமிழில் முதல்முதலில் எழுந்த பரணி இந்நூலே ஆகும்.
- ❖ கருணாகரத் தொண்டைமான் - படைத்தலைவர்
- ❖ தென்தமிழ்த் தெய்வப்பரணி என்று போற்றியவர் ஒட்டக்கூத்தர்.
- ❖ கலிங்கத்துப் பரணி கலித்தாழிசையால் பாடப்பெற்றது: 599 தாழிசைகள் கொண்டது.
- ❖ போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் பரணி ஆகும்.

### விடுதலைத் திருநாள் - மீரா

**முன்னூறு வருடமாய்**
**முற்றுகை யிட்ட**
**அந்நிய இருட்டின்**
**அரக்கக் கூத்து**
**முடிந்தது என்று**
**முழங்கி நின்றது**
**எந்த நாளோ**
**அந்த நாள் இது**
**சபதம் முடித்து**
**கூந்தல் முடித்துக்**
**குங்குமப் பொட்டு வைத்து**
**ஆனந்த தரிசனம்**
**அளித்து நின்றது**
**எந்த நாளோ**
**அந்த நாள் இது** – **மீரா**

#### சொல்லும் பொருளும்

- ❖ சீவன் - உயிர்
- ❖ சபதம் - சூளுரை
- ❖ மோகித்து - விரும்பி
- ❖ சதி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர் - பகத்சிங்

**நூல்வெளி**

- மீ. இராசேந்திரன் என்னும் இயற்பெயரை உடைய மீரா கல்லூரிப்பேராசிரியராகப் பணியாற்றியவர்.
- அன்னம், குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- இவர் எழுதிய கோடையும் வசந்தமும் என்னும் நூலிலிருந்து ஒரு கவிதை விடுதலைத் திருநாளில் தரப்பட்டுள்ளது.

## இயல் - 8
## ஒன்றே குலம்

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர்நினைத்து உய்ம்மினே**
**படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே**

**– திருமூலர்**

- பிறருக்கு ஏற்படும் பசி முதலிய துன்பங்களைத் தமக்கு ஏற்பட்டதாகக் கருதி அவற்றைப் போக்க முயல்வதே மனிதர்களின் சிறந்த கடமையாகும். அதுவே இறைத்தொண்டாகும். **– திருமூலரின் பாடல் அடிகள்**

**சொல்லும் பொருளும்.**

- நமன் - எமன்
- சித்தம் - உள்ளம்
- நம்பர் - அடியார்
- நாணாமே - கூசாமல்
- உய்ம்மின் - ஈடேறுங்கள்
- ஈயில் - வழங்கினால்

**நூல்வெளி**

- அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகவும் பதினெண் சித்தர்களுள் ஒருவராகவும் கருதப்படுபவர் திருமூலர்.
- இவர் இயற்றிய திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. எனவே, இந்நூலைத் தமிழ் மூவாயிரம் என்பர்.
- இது பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.

## மெய்ஞ்ஞான ஒளி
## (குணங்குடியார் பாடல்கோவை)

**கள்ளக் கருத்துகளைக் கட்டோடு அறுத்தவருக்கு**
**உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பராபரமே!**
**காசை விரும்பிக் கலங்கிநின்று உன்பாத**
**ஆசை விரும்பாது அலைந்தேன் பராபரமே!**
**அறிவை அறிவோருக்கு ஆனந்த வெள்ளம் தாய்க்**
**கரையறவே பொங்கும் கடலே பராபரமே!**
**அடக்கத் தாம்மாய ஐம்பொறியைக் கட்டிப்**
**படிக்கப் படிப்பு எனக்குப் பகராய் பராபரமே!**

**- குணங்குடி மஸ்தான் சாகிபு**

- ஐம்பொறிகளின் ஆசையை அடக்கி, அறிவின் வழியில்சென்றால் வாழ்வாங்கு வாழலாம்.
- வாழ வேண்டிய வழி முறைகளை விளக்கும் குணங்குடி மஸ்தான் சாகிபுவின் பாடல்கள் விளங்குகின்றன.

**சொல்லும் பொருளும்**

- பகராய் - தருவாய்
- ஆனந்த வெள்ளம் - இன்பப்பெருக்கு
- பராபரம் - மேலான பொருள்
- அறுத்தவருக்கு - நீக்கியவர்க்கு

**நூல்வெளி**

- குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் சுல்தான் அப்துல்காதர். இவர் இளம் வயதிலேயே முற்றும் துறந்தவராக வாழ்ந்தார்.
- சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி ஞானம் பெற்றார்.
- எக்காளக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலான நூல்களை இயற்றியுள்ளார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

- நம் பாடப்பகுதி குணங்குடியார் பாடற்கோவை என்னும் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது.

## திருக்குறள்

- "கான முயல்எய்த அம்பினில்யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது"

  **– பிறிதுமொழிதல் அணி**

- நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடை யாளர் தொடர்பு"

  **– உவமை அணி**

- "பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால் கலம்தீமை யால்திரிந்து அற்று"

  **- உவமையணி**

## இயல் - 9
## உயிர்க்குணங்கள்

அறிவுஅருள் ஆசைஅச்சம்
அன்பு இரக்கம் வெகுளிநாணம்
நிறைஅழுக்காறு எளிமை
நினைவுதுணிவு இன்பதுன்பம்......

**- இறையரசன்**

## சொல்லும் பொருளும்

- பொச்சாப்பு - சோர்வு
- மையல் - விருப்பம்
- ஓர்ப்பு - ஆராய்ந்து தெளிதல்
- மதம் - கொள்கை
- மன்னும் - நிலைபெற்ற

## பாவை நூல்கள்

- மார்கழித் திங்களில் பொழுது விடியும் முன்பே பெண்கள் துயிலெழுந்து. பிற பெண்களையும் எழுப்பிக்கொண்டு, ஆற்றுக்குச் சென்று நீராடி,இறைவனை வழிபடும் வழக்கம் உண்டு, இதனைப் பாவை நோன்பு என்பர்.
- அவ்வாறு திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாக ஆண்டாள் பாடிய நூலே திருப்பாவை.
- இதே போலச் சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல் திருவெம்பாவை, இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர்.

## நூல் வெளி

- இறையரசின் இயற்பெயர் சே. சேசுராசா என்பதாகும்.
- கல்லூரி ஒன்றில் தமிழ்ப்போராசிரியராகப் பணிபுரிந்தவர். ஆண்டாள் இயற்றிய திருப்பாவையைத் தழுவி, கன்னிப்பாவை என்னும் நூலை எழுதியுள்ளார்.

## இளைய தோழனுக்கு

**ஓடிவந்து கைகுலுக்க**
**ஒருவருமில்லையா?**
**உன்னுடன் நீயே**
**கைகுலுக்கிக் கொள்!**
**தாங்கி விழுந்தால்**
**பூமி உனக்குப்**
**படுக்கையாகிறது.**
**விழித்து நடந்தால்**
**அதுவே உனக்குப்**
**பாதையாகிறது!**
**நீ**
**விழித்தெழும் திசையே**
**பூமிக்குக் கிழக்கு!**
**உன்**
**விரல்களில் ஒளிரும்**
**சூரியவிளக்கு!**

**-மு. மேத்தா**

## நூல்வெளி

- வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் மு.மேத்தா.
- புதுக்கவிதையைப் பரவலாக்கிய முன்னோடிகளுள் ஒருவராக இவரைப் போற்றுவர்; கண்ணீர்ப்பூக்கள், ஊர்வலம், சோழநிலா, மகுடாநிலா உள்ளிட்ட பல

நூல்களையும் திரையிசைப் பாடல்களையும் எழுதியுள்ளார்.

❖ ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்னும் புதுக்கவிதை நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

## உரைநடை
## இயல் - 1
## தமிழ் வரிவடிவ வளர்ச்சி

- பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தல் எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை.
- எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.
- ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.
- தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது.
- கல்வெட்டுகள் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
- செப்பேடுகள் கி.பி ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
- கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.
- சேர மண்டலம், பாண்டி மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன.
- முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.
- கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன.
- சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் “கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி” என்னும் தொடர் உதாரணம்.
- எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைகின்றன.

**இதை படியுங்கள் முதலில்....**

தமிழ்மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என்பதற்குச் சான்று அரச்சலூர் கல்வெட்டு. இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

### புள்ளிகளும் எழுத்துகளும்

- எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது.
- எடுத்துக்காட்டாக **எ்து** என எழுதப்பட்டால் எது என்றும் **எது** என எழுதப்பட்டால் ஏது என்றும் ஒலித்தனர்.
- அகர வரிசை உயிர்மெய்க்குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் கருதப்பட்டன. **(க. – கா, த.- தா)**
- ஐகார எழுத்துகளைக் குறிப்பிட குறில் எழுத்துகளின் முன் இரட்டைப் புள்ளி இட்டனர் **(..க –கை).**
- எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துக்களை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட்டன.

**(கெ. -கௌ, தெ. –தௌ)**

- மகர எழுத்தைக் குறிப்பிட பகர எழுத்தின் உள்ளே புள்ளி (ப்) இட்டனர்.
- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.

**உருவ மாற்றம்.**

- நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகின்றது.
- ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுகின்றன.
- ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுகின்றது.

**எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை**

- ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.

**எழுத்துச் சீர்திருத்தம்**

- தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்.
- எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும் ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.
- அதே போல ஏகார ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக் கொம்பு(ே), இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து (ோ) புதிய வடிவத்தை அறிமுகப்படுத்தினார்.
- எழுத்துச் சீர்திருத்தம் தந்தை பெரியார்.

## இயல் - 2
## நிலம் பொது

- அமெரிக்காவில் பூஜேசவுண்ட் என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள் சுகுவாமிஷ் பழங்குடியினர்.
- அவர்களின் தலைவராக விளங்கியவர், சியாட்டல்
- இக்கட்டுரை பக்தவத்சல பாரதி எழுதிய தமிழகப் பழங்குடிகள் எனும் நூலில் இருந்து எடுத்துத்தரப்பட்டுள்ளது.

## இயல் - 3
## தமிழ் மருத்துவம்

- **“மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்”**
- தொடக்க காலத்தில் மனிதன் வேர், இலை, பூ, கனி முதலியவற்றை மருந்தாகப் பயன்படுத்தினர்.
- பழந்தமிழர்களின் மருத்துவ முறைகள் மூலிகை மருத்துவம், அறுவை மருத்துவம், மருந்தில்லா மருத்துவம்.
- தமிழர் மருத்துவம் பண்பாட்டுக்கூறாக ஆகும்போது நாட்டு வைத்தியமாகவும் பாட்டி வைத்தியமாகவும் மரபுசார்ந்த சித்த வைத்தியமாகவும் உணவு சார்ந்த மருத்துவமாகவும், பண்பாடு சார்ந்த மருத்துவமாகவும் விரிந்திருக்கிறது.
- சித்த மருத்துவம் என்பது மரபுவழி மருத்துவமாகவும், நாட்டு மருத்துவமாகவும் சுருங்கியது.
- காரணம்: நவீன மருத்துவத்தில், துரிதமாகச் சிலநோய்களுக்குக் கிடைத்த தீர்வுகள் பெரும் வரவேற்பைப் பெற்றன.
- ‘வேர்பாரு; தழைபாரு; மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே’ என்றனர் சித்தர்கள்.

Padasalai.Net

## தமிழர் மருத்துவத்தின் சிறப்பு

- தனித்துவமான பார்வை இதன் முதல் சிறப்பு
- இரண்டாவது சூழலுக்கு இசைந்த மருத்துவம்.
- இந்த மருத்துவத்தின் பயன்பாடோ, மூலக்கூறுகளோ, மருந்துகளோ சுற்றுச்சூழலைச் சிதைக்காது.
- மிக முக்கியமான சிறப்பு என்னவென்றால், நோய்க்கான சிகிச்சையை மட்டும் சொல்லாமல், நோய் மீண்டும் வராமலிருப்பதற்கான வாழ்வியலையும் சொல்கிறது.
- “நோய்நாடி நோய் முதல் நாடி” என்ற திருக்குறளின்படி நோயை மட்டுமின்றி அதன் காரணிகளையும் கண்டறிந்து ஒருவரை நோயில்லாத மனிதராக்குகிறது.
- நடைமுறையில் உள்ள மருத்துவ முறைகள் : சித்த மருத்துவம்,ஆயுர்வேத மருத்துவம் யுனானி மருத்துவம், அலோபதி மருத்துவம்.
- உடல் நலத்துக்காக உடலுக்கு, நாள்தோறும் நாம் செய்ய வேண்டியவை
- தினமும் நாற்பத்தைந்து நிமிடத்தில் மூன்று கி.மீ நடைப்பயணம்.
- பதினைந்து நிமிடம் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி, ஏழு மணிநேர தூக்கம், மூன்று லிட்டர் தண்ணீர் அருந்துதல் ஆகியன அவசியம். கொய்யா, இலந்தை, நாவல், பப்பாளி, நெல்லி, வாழைப்பழங்கள் ஆகியவற்றைக் காலை உணவுக்கு முன்பு சாப்பிடலாம்.

## இயல் - 4
## பல்துறைக் கல்வி – திரு. வி. க

- மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அதைச் சீர்திருத்தி இட்டுச் செல்வதிலும் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது.
- அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும்.
- இளமையில் கல் எனக் கூறியவர் ஔவையார்.
- ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
- ஏட்டுக்கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே.
- தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்த வண்ணமிருக்கிறாள்.

**இதைப் படியுங்கள் முதலில்...**

- கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அல்ல. அது மெய்ம்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்.
- விஜயலட்சுமி பண்டிட்
- ஐ.நா அவையின் முதல் பெண் தலைவர்.

## காப்பியக் கல்வி

- வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று.
- இயற்கை ஓவியம் - பத்துப்பாட்டு
- இயற்கை இன்பக்கலம் - கலித்தொகை,
- இயற்கை வாழ்வில்லம் - திருக்குறள்,
- இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் - சிலப்பதிகாரமும் மணிமேகலையும்,
- இயற்கைத் தவம் - சிந்தாமணி,
- இயற்கைப் பரிணாமம் - கம்பராமாயணம்,
- இயற்கை அன்பு - பெரியபுராணம்,
- இயற்கை இறையுறையுள் - தேவார திருவாசக திருவாய் மொழிகள்.

Padasalai.Net



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## இயற்கைக் கல்வி

- அருவி முழவும் குயில் குரலும் வண்டிசையும் மயில் அகவலும் மலர் மணமும் தேனினிமையும் தென்றல் வீசலும் புலன்களுக்கு விருந்தாகும் இயற்கை அன்னையைப் பாருங்கள்.
- இளங்கோ, திருத்தக்கத்தேவர், திருஞான சம்பந்தர். ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி முதலியோர் இயற்கைக் கோலத்தை எழுத்தோவியத்தில் இறக்கியிருக்கின்றனர்.

**முதலில் இதைப் படியுங்கள்**

ஏடன்று கல்வி; சிலர் எழுதும் பேசும் இயலன்று கல்வி; பலர்க் கெட்டா தென்னும் வீடன்று கல்வி; ஒரு தேர்வு தந்த விளைவன்று கல்வி; அது வளர்ச்சி வாயில். - **குலோத்துங்கன்.**

## அறிவியல் கல்வி

- உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது "அறிவியல்" என்னும் அறிவுக்கலை.
- புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுக்கொம்பு போன்றது.

## நூல்வெளி

- அரசியல், சமுதாயம், சமயம், தொழிலாளர் நலன் எனப் பல துறைகளில் ஈடுபாடு கொண்டவர், சிறந்த மேடைப் பேச்சாளர் தமிழ்த்தென்றல் திரு.வி. கல்யாண சுந்தரனார்.
- இவரது இளமை விருந்து என்னும் நூலிலிருந்து சில பகுதிகள் தொகுத்து தரப்பட்டுள்ளன.

## இயல் - 5

## நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

- அன்றாடப் பயன்பாட்டுக்காக அழகிய பொருள்களைத் தொழில்முறையில் உருவாக்கும் கலையைக் கைவினைக்கலை என்பர்.
- உலகின் பழமையான கலைகளுள் ஒன்று மண்பாண்டக்கலை.
- சிந்து சமவெளி அகழாய்வில் பானைஓடுகள் கிடைத்தன.
- தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கிடைத்தன.
- நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கலையழகு மிகுந்த மண்கலங்கள் கிடைத்தன.
- மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் ஏராளமான சுடுமண் பொருள்கள் கிடைத்தன.
- இவை எல்லாம் தமிழருக்கும் மண்பாண்டக்கலைக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் சான்றுகள்.

## சுத்தமான களிமண்ணால் செய்யப்பட்ட பொருட்கள்.

**குடம், தோண்டி, கலயம், கடம், மூடி, உழக்கு, அகல், உண்டியல், அடுப்பு, தொட்டி**

- பானை செய்யும் சக்கரம் - மற்றொரு பெயர் திருவை.
- பானை செய்தலைப் 'பானை வனைதல்' என்று சொல்வது மரபு.
- மண்பாண்டக் கலையில் இன்னொரு வளர்ச்சி நிலைதான் சுடுமண் சிற்பக்கலை. ஆங்கிலத்தில் டெரகோட்டா.
- மண்பாண்டங்களைப் போன்றே களிமண்ணால் செய்யப்பட்டுச் சூளையில் சுட்டு எடுக்கப்படுபவை சுடுமண் சிற்பங்கள் ஆகும். தமிழர்கள் பழங்காலத்தில் இருந்தே சுடுமண் சிற்பக்கலையிலும் சிறந்து விளங்கியுள்ளனர்.
- சுடுமண் சிற்பங்களுக்கு வண்ணங்கள் பூசுவதும் தொன்றுதொட்டு இருந்துவரும் வழக்கமாகும்.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## மூங்கில்களால் செய்யப்படும் பொருட்கள்

மட்டக்கூடை, தட்டுக்கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைத்தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில், புல்லாங்குழல், புட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய்.

- ❖ கல்மூங்கில், மலைமூங்கில், கூட்டுமூங்கில் என மூன்றுவகை மூங்கில்கள் உண்டு. அவற்றுள் கூட்டு மூங்கில்களே கைவினைப் பொருள்கள் செய்வதற்கு ஏற்றவை.

## பாய்களின் பலவகை

1. குழந்தைகளைப் படுக்கவைப்பது தடுக்குப்பாய்
2. உட்கார்ந்து உண்ண உதவுவது பந்திப்பாய்
3. உட்காரவும், படுக்கவும் உதவுவது திண்ணைப்பாய்
4. திருமணத்துக்குப் பயன்படுத்துவது பட்டுப்பாய்
5. இசுலாமியர் தொழுகைக்குப் பயன்படுத்தவது தொழுகைப்பாய்.

- ❖ முற்காலத்தில் பாய்மரக்கப்பல்களில் பயன்பட்டது கூடப் பாய்தான் என புறநானூறு “கூம்பொடு மீப்பாய் களையாது” என்னும் அடி குறிப்பிடுகிறது.
- ❖ தமிழ்நாட்டின் மாநில மரம் பனை.

## பனை ஓலையால் செய்யப்பட்ட பொருட்கள்

- ❖ கிலுகிலுப்பை, பொம்மைகள், பொருள்களை வைத்துக் கொள்ள உதவும் சிறிய கொட்டான், பெரிய கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய்.
- ❖ பனைமட்டையின் நாரிலிருந்து கயிறு, கட்டில், கூடை போன்றவை செய்யப்படுகின்றன.

## பிரம்புக்கலை

### பிரம்பினால் செய்யப்பட்ட பலவகையான பொருள்கள்

- ❖ குழந்தைகளுக்கான தொட்டில், பெரியவர்களுக்கான கட்டில் ஊஞ்சல், நாற்காலி, மேசை, பூக்கூடை, பழக்கூடை, இடியாப்பத்தட்டு, அருச்சனைத்தட்டு, வெற்றிலைப்பெட்டி.
- ❖ பிரம்பு மிகவும் குளிர்ச்சியானது.
- ❖ பிரம்பு என்பது கொடிவகையைச் சேர்ந்த தாவரம்.
- ❖ தாவரவியல் பெயர் கலாமஸ் ரொடாங் (Calamus Rotang).
- ❖ நீர்நிறைந்த வாய்க்கால் வரப்புகளிலும், மண்குகைகளிலும் செழித்து வளரும்.
- ❖ நமது தேவைக்காக அசாம், அந்தமான், மலேசியா ஆகிய இடங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது.
- ❖ பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை பனையோலைகள்.
- ❖ பானை வனைதல் ஒரு சிறந்த கலையாகும்.
- ❖ ‘மட்டுமல்ல’ பிரித்து எழுதக்கிடைப்பது மட்டும் + அல்ல
- ❖ கயிறு + கட்டில் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் கயிற்றுக்கட்டில்.

## இயல் - 6
## கொங்குநாட்டு வணிகம்

- ❖ **“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு”**

  - ஔவையார்
- ❖ **“வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு”** என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.
- ❖ மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளவை வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் கல்வெட்டு.

**சேரர்**

- ❖ முடியுடைய மூவேந்தர்களில் சேரர்களே பழமையானவர்கள்.
- ❖ தொல்காப்பியமும் **“போந்தை வேம்பே ஆரென வருஉம் மாபெருந் தனையர் மலைந்த பூவும்”** எனச் சேரரை முன் வைக்கின்றது.
- ❖ சேரர்களின் நாடு குடநாடு தலைநகரம் வஞ்சி, வஞ்சியின் மற்றொரு பெயர் கருவூர்.
- ❖ தொண்டி, முசிறி, காந்தளூர் என்பன சேரநாட்டின் துறைமுகப் பட்டினங்களாக விளங்கின.
- ❖ சேரார்களின் கொடி விற்கொடி ஆகும்.
- ❖ பனம்பூ இவர்களுக்குரிய பூ ஆகும்.

**சேர நாட்டின் எல்லைகள்**

- ❖ சேலம், கோவைப் பகுதிகள் கொங்கு நாடு என்று பெயர் பெற்றன.

**கொங்கு மண்டலம்**

- ❖ கார்மேகக் கவிஞர் இயற்றிய நூல் கொங்கு மண்டலச் சதகம்.
- ❖ நூலில் வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலை, மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கரை என இந்நான்கு எல்லைகளுக்குட்பட்ட பகுதியாகக் கொங்குமண்டலம் விளங்கியதாகக் கூறப்படுகிறது.
- ❖ நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர் ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களையும் சேலம், கரூர் மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் கொங்குமண்டலம் விளங்கியது என்பர்.
- ❖ கொங்குநாட்டுப் பகுதியை காவிரி, பவானி, நொய்யல், தன்பொருநை என்று அழைக்கப்படும் அமராவதி ஆகிய ஆறுகள் வளம் செழிக்கச் செய்கின்றன.
- ❖ உழவு, கைத்தொழில், வணிகம் என்னும் மூன்றும் ஒரு நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு அடிப்படைகளாகும் என்பர்.
- ❖ சேரர்கள் வலிமை மிகுந்த கப்பல் படையை வைத்திருந்தனர்.
- ❖ செங்குட்டுவனின் கடற்போர் வெற்றியால் அவன் ‘கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்’ என்று அழைக்கப்பட்டான்.
- ❖ கடம்பர் என்னும் கடற்கொள்ளையர்களைச் சேரமன்னர்கள் அடக்கினர்.
- ❖ முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது.
- ❖ இங்கிருந்துதான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானைத் தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன.
- ❖ பொன் மென்மைமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன.
- ❖ **“மீனோடு நெற்குவைஇ**
  **மிசையம்பியின் மனைமறுக்குந்து.”** (புறம்)
- ❖ **“கலந்தந்த பொற்பரிசம்**
  **கழித்தோணியால் கரைச்சேர்க்குந்து.”** (புறம்)
- ❖ நெல்லே விலையைக் கணக்கிட அடிப்படையாக இருந்தது.
- ❖ உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையானவாக இருந்தன.
- ❖ **நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**
  **கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்’**
  **- அகநானூறு**

**நீலகிரி**

- ❖ கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சந்திக்கும் இடமே நீலகிரி ஆகும்.

- இம்மாவட்டம் முழுவதும் மலைப் பகுதியாலானது.
- காடுகள் நிறைந்த இம்மாவட்டத்தில் தோட்டப்பயிர்களான காப்பி, தேயிலை, உருளைகிழங்கு, கேரட், முட்டைகோசு ஆகியவை பெருமளவில் பயிரிடப்படுகின்றன.
- நீலகிரி மாவட்டம் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறைந்தது.
- புகைப்படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை, துப்பாக்கி வெடிமருந்துத் தொழிற்சாலை ஆகியனவும் உள்ளன.

## கோயம்புத்தூர்

- கோவன்புத்தூர் என்னும் பெயரே கோயம்புத்தூர் என்று மருவி வழங்கப்படுகிறது.
- நெல், வாழை, கரும்பு, காய்கறிகள், பூக்கள் போன்றவை பெருமளவில் பயிரிடப்படுகின்றன.
- பஞ்சாலைகள், நூற்பாலைகள், மின்சாரப் பொருள்கள், எந்திரங்கள், வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இம்மாவட்டத்தில் நிறைந்துள்ளன.

## திண்டுக்கல்

- வரலாற்றுச் சிறப்புமிக்க திண்டுக்கல்லில் நெல், சோளம், தினை வகைகள், வாழைப்பழம், காய்கறிகள் போன்றவை விளைவிக்கப்படுகின்றன.
- இப்பகுதி மலர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது.
- தமிழ்நாட்டின் ஹாலந்து என்றும் சிறப்பிக்கப்படுகிறது.
- அரிசி, தோல், பூட்டுத் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம் இது
- இங்குள்ள சின்னாளப்பட்டிச் சுங்குடிச் சேலைகள் புகழ்பெற்றவை.

## ஈரோடு

- பரப்பளவில் ஈரோடு தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகிறது.
- நெல், நிலக்கடலை, மஞ்சள், கரும்பு, பருத்தி எள் போன்றவை பயிரிடப்படுகின்றன.
- தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை ஈரோட்டில் தான் நடைபெறுகிறது.
- துணி நூற்பாலைகள், எண்ணெய் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் பெருமளவில் உள்ளன.
- நூல் நூற்பு, துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல், அச்சிடுதல், தோல் பதனிடுதல் முதலான தொழில்களும் இம்மாவட்டத்தில் நடைபெறுகிறது.

## திருப்பூர்

- திருப்பூர் மிகச்சிறந்த பின்னலாடை நகரமாக விளங்குகிறது.
- நெல், கரும்பு, பருத்தி, வாழை போன்றவை இங்கு விளைவிக்கப்படும் முதன்மையான பயிர்களாகும்.
- இம்மாவட்டம் பின்னலாடைகள், ஆயத்த ஆடைகள் மூலம் தமிழ்நாட்டிற்குப் பெரும் வருவாயை ஈட்டித்தருகிறது.
- இந்தியாவின் முதல் ஆயத்த ஆடைப்பூங்காவான நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் இம்மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கின்றன.

## நாமக்கல்

- பச்சைமலை, கொல்லிமலை, சேர்வராயன் மலையின் ஒரு பகுதி ஆகியவை இம்மாவட்டத்தில் உள்ளன.
- நெல், கரும்பு, சோளம், நிலக்கடலை, பருத்தி ஆகியவற்றுடன் மலைப்பகுதிகளில்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

விளையும் திராட்சை, ஆரஞ்சு, காப்பி, பாக்கு ஏலம் போன்றவையும் பயிரிடப்படுகின்றன.

- ❖ முட்டைக்கோழி வளர்ப்பிலும் முட்டை உற்பத்தியிலும் தென்னிந்தியாவிலேயே நாமக்கல் முதன்மையான இடம் வகிக்கின்றது.
- ❖ இங்கே சிமெண்ட், காகிதத் தொழிற்சாலைகள் உள்ளன.
- ❖ கைத்தறி நெசவு, வெண்கலப் பொருள்கள் செய்தல் முதலான தொழில்களும் நடைபெறுகின்றன.
- ❖ சிற்றுந்து, சரக்குந்து ஆகியவை அதிக அளவில் இயங்கும் மாவட்டமாக நாமக்கல் விளங்குகிறது.

## சேலம்

- ❖ மாங்கனி நகரம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது சேலம்.
- ❖ நெல், பருப்பு வகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி, பாக்கு ஆகியன பயிரிடப்படுகின்றன.
- ❖ இந்தியாவிலேயே இந்த மாவட்டத்தில் தான் ஜவ்வரிசி அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகின்றது.
- ❖ தமிழ்நாட்டில் கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம் இதுவே.
- ❖ இங்குப் பால்பண்ணைத் தொழிலும் சிறப்பாக நடைபெறுகின்றது.
- ❖ இரசாயனப்பொருள், அலுமினியம், சந்தன எண்ணெய், வனஸ்பதி ஆகியவை தயாரிக்கும் ஆலைகள் நிறைந்த மாவட்டமாகவும் சேலம் விளங்குகிறது.
- ❖ மூலாம் பூசும் தொழிலும் பெருமளவில் நடைபெறுகிறது.
- ❖ ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏற்காடு இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.

## கரூர்

- ❖ கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய இப்பகுதிக்கு ‘வஞ்சிமாநகரம்’ என்னும் பெயரும் உண்டு.
- ❖ கிரேக்க அறிஞர் தாலமி, கரூரைத் தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.
- ❖ கல்குவாரித் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.
- ❖ கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர் பெற்ற மாவட்டமாகக் கரூர் விளங்குகிறது.
- ❖ தோல் பதனிடுதல், சாயமேற்றுதல், கற்சிற்ப வேலைகள் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன.
- ❖ பேருந்துக் கட்டுமானத் தொழிலின் சிகரமாகக் கரூர் விளங்குகிறது.

## ஊர்களும் சிறப்பு பெயர்களும்

- ✓ தூத்துக்குடி - முத்து நகரம்
- ✓ சிவகாசி - குட்டி ஜப்பான்
- ✓ மதுரை - தூங்கா நகரம்
- ✓ திருவண்ணாமலை - தீப நகரம்
- ✓ போடி - ஏலக்காய் நகரம்

## இயல் - 7
## பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்

- ❖ கும்பகோணத்தில் உள்ள ஆனையடிப் பள்ளியில் எம்.ஜி. ஆர் படித்தார்.
- ❖ காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட மதிய உணவுத்திட்டத்தை விரிவுபடுத்தியவர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், இந்தத் திட்டம் சத்துணவுத் திட்டம் என அழைக்கப்பட்டது.
- ❖ கேரளாவைச் சேர்ந்தவர்களாகிய எம்.ஜி. ஆரின் பெற்றோர் குடும்பத்துடன் இலங்கைக்குக் குடிபெயர்ந்தனர்.
- ❖ இலங்கையில் உள்ள கண்டியில் கி.பி. (பொ.ஆ) 1917 சனவரித் திங்கள் பதினேழாம்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

நாள் கோபாலன் சத்தியபாமா இணையருக்கு ஐந்தாம் மகனாக எம்.ஜி.ஆர் பிறந்தார்.

- தந்தையின் இழப்பிற்கு பின் தமிழ்நாட்டில் உள்ள கும்பகோணத்தில் குடியேறினார்.
- மக்கள் அவரைப் புரட்சிநடிகர், மக்கள் திலகம் என்றெல்லாம் போற்றினர்.
- மேலும் இந்திய அரசு மிகச் சிறந்த நடிகருக்கு வழங்கும் பாரதப் பட்டத்தை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தது.
- திரைத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமை கொண்டு விளங்கினார்.
- "பதவி வரும் போது பணிவு வரவேண்டும்! துணிவு வர வேண்டும் தோழா! – அப்பாடல் வரிகளுக்குத் தாமே இலக்கணமாகவும் திகழ்ந்தார்.

## பொன்மனச் செம்மல்

- பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.
- சென்னைப் பல்கலைக் கழகம் எம்.ஜி. ஆரின் பணிகளைப் பாராட்டி டாக்டர் பட்டம் வழங்கியது.
- தமிழக அரசு அவர் நினைவைப் போற்றும் வகையில் எம்.ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தை நிறுவியுள்ளது. சென்னைக் கடற்கரையில் இவருக்கு எழிலார்ந்த நினைவிடம் ஒன்றையும் அமைத்துள்ளது.
- அவரது இறப்புக்குப்பின் இந்திய அரசு, மிக உயரிய பாரத ரத்னா (இந்திய மாமணி) விருதினை 1988ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.
- பிறர் வியக்கத்தக்க வகையில் தம் செல்வத்தை வாரி வழங்கியமையால்தான் அவரைப் பொன்மனச் செம்மல் என்று மக்கள் அன்புடன் அழைக்கின்றனர்.

## சமூக நலத்திட்டங்கள்

- உழவர்களின் கடன் தள்ளுபடி, ஏழைகளுக்கான வீட்டு வசதித்திட்டம், ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்டம், தாய் சேய் நல இல்லங்கள், பற்பொடி வழங்கும் திட்டம், வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திப் புகழ் பெற்றார்.

## தமிழ் வளர்ச்சிப் பணிகள்

- தந்தை பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தங்களுள் சிலவற்றை நடைமுறைப்படுத்தித் தமிழ் எழுத்துமுறையை எளிமைப்படுத்தினார்.
- மதுரை மாநகரில் 1981ல் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்.
- தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் 1981ல் தோற்றுவித்தார்.
- எம்.ஜி. ஆர். புரட்சி நடிகராகப் பெயர்பெற்று, பொன்மனச் செம்மலாக வளர்ந்து, மக்கள் திலகமாக உயர்ந்து புரட்சித்தலைவராக மக்கள் மனத்தில் நீங்கா இடம்பெற்று நிலைத்து வாழ்கிறார்.
- எம்.ஜி. ஆர். நூற்றாண்டு விழாவை ஒட்டி (2017 – 2018) தமிழக அரசால் சென்னையிலும் மதுரையிலும் பேருந்து நிலையங்களுக்கு எம்.ஜி. ஆர். பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## இயல் - 8
## அயோத்திதாசர் சிந்தனைகள்

- கால வெள்ளத்தில் மக்களால் மறக்கப்பட்டு, பின்னர் நினைவுக்கு வந்த சிந்தனையாளர் அயோத்திதாசர்.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இவர் பண்டைய இலக்கிய, சமூக, வரலாற்று ஆய்வுகளில் ஈடுபட்டவர்.

- ❖ சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ஆவர். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அயோத்திதாசர்.
- ❖ நல்ல சிந்தனை, சிறப்பான செயல், உயர்வான பேச்சு, உவப்பான எழுத்து, பாராட்டத்தக்க உழைப்பு ஆகிய ஐந்து பண்புகளையும் ஒருசேரப்பெற்ற சிந்தனையாளர்தான் அயோத்திதாசர்.
- ❖ தென்னிந்தியச் சமூகச் சீர்த்திருத்தத்தின் தந்தை அயோத்திதாசர்.

## வாழ்க்கை

- ❖ அயோத்திதாசர் 1845ஆம் ஆண்டு மே திங்கள் இருபதாம் நாள் (20.05.1845) சென்னையில் பிறந்தார். இவரது இயற்பெயர் காத்தவராயன் என்பதாகும்.
- ❖ ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர் என்பதால் பள்ளிப்பருவத்தில் பல இன்னல்களுக்கு உள்ளானார்.
- ❖ அயோத்திதாசப் பண்டிதர் என்பவரிடம் இவர் கல்வியும் சித்தமருத்துவமும் பயின்றார்.
- ❖ தனது ஆசிரியரின் பெயரையே தனதாக்கிக் கொண்டார்.
- ❖ நீலகிரிக்குச் சென்று அங்கு வாழ்ந்த அயோத்திதாசர், திருமணத்திற்குப் பிறகு பர்மாவுக்குச் சென்றார். அங்குக் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்தார்.
- ❖ தமிழ்நாட்டுக்குத் திரும்பி ஒடுக்கப்பட்டோர் உரிமைக்காகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டார்.

## சிந்தனைகளின் அடித்தளம்

- ❖ அயோத்திதாசர் தமிழ் மட்டுமன்றி, பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.
- ❖ இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத்தத்துவம் உள்ளிட்ட பல்துறை நூல்களையும் ஆழ்ந்து கற்றார்

## இதழ்ப்பணி

- ❖ 1907 ஆம் ஆண்டு சென்னையில் ஒருபைசாத் தமிழன் என்னும் வாரஇதழை காலணா விலையில் தொடங்கினார்.
- ❖ ஓர் ஆண்டிற்குப்பின் அவ்விதழின் பெயரைத் தமிழன் என மாற்றினார்.
- ❖ உயர்நிலையையும் இடைநிலையையும் கடைநிலையையும் தெளிவுபடுத்தி அறிய முடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதே இவ்விதழின் நோக்கம் என்று அயோத்திதாசர் குறிப்பிட்டார்.
- ❖ "தமிழன்" இதழ் மூலம் தமிழ்நாடு மட்டுமன்றி மைசூர், கொலார், ஐதராபாத், இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச் சிந்தனை, இன உணர்வு, சமூகச் சிந்தனை ஆகியவற்றை ஊட்டினார்.
- ❖ இவர் தமது நூல்கள் மூலமாகவும் தமது சீர்திருத்தச் சிந்தனைகளை வெளியிட்டார்.

## கல்விச் சிந்தனைகள்

- ❖ ஒரு மனிதனின் அறிவு வளர்ச்சிபெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று அயோத்திதாசர் கருதினார்.
- ❖ கல்வியோடு கைத்தொழில், வேளாண்மை, தையல், மரம் வளர்த்தல் போன்றவற்றை வலியுறுத்தினார்.

- ❖ சங்ககாலப் பெண்களைப் போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்றும் இவர் எடுத்துரைத்தார்.
- ❖ போகர் எழுநூறு, அகத்தியர் இருநூறு, சிமிட்டு இரத்திரனச் சுருக்கம், பாலாவாகடம். – அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள்.

## வாழும் முறை

- ❖ மதியை அழிக்கும் போதைப்பொருள்களைக் கையாலும் தொடுதல் கூடாது. ஒரு குடும்பத்தில் அன்பும் ஆறுதலும் நிறைந்தால், அக்குடும்பம் வாழும் ஊர் முழுவதும் ஆறுதலும் பெறும்; ஊர்கள் அன்பும் ஆறுதலும் பெறுமானால் நாடு முழுவதும் அன்பும் ஆறுதலும் பெற்றுத் திகழும்; இத்தகைய நாட்டில் புலியும் பசுவும் ஒரே நீர்த்துறையில் நீர் அருந்தும் என்பவை அயோத்திதாசர் கருத்துகள்.
- ❖ என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள். – தந்தை பெரியார்.

## தலைமைத் தகுதி

- ❖ மக்களும் அவர்தம் நோக்கங்களும் பெருமைப்படத்தக்கனவாக இருக்கவேண்டுமானால், அவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி அமையவேண்டும்.
- ❖ அவர் மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல் பெற்றவராக, நன்னெறியைக் கடைப்பிடிப்பவராக இருக்கவேண்டும்.
- ❖ அப்படிப்பட்ட தலைவரை வணக்கத்திற்கு உரியவராக மக்கள் ஏற்பார்கள்; கடவுளெனத் துதிப்பார்கள் என்பது அயோத்திதாசர் கருத்து.

## மக்களும் மழையும்

- ❖ வானம் பொய்ப்பதற்குக் காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே. ஞானிகள் இல்லாமைக்குக் காரணம் நீதியும் நெறியும் வாய்மையும் நிறைந்த அறிவாளிகள் இல்லாமையாகும்.
- ❖ அறிவாளிகள் இல்லாமைக்குக் காரணம் ஆட்சித்திறனும் அன்பும் உடைய அரசர்கள் இல்லாமையே.
- ❖ அத்தகைய அரசர்கள் இல்லாமைக்குக் காரணம் கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிகள் இல்லாமையே என்று கூறுவதன் மூலம் நல்ல குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கைகூட உதவாது என்கிறார் அயோத்திதாசர்.

## அயோத்திதாசர் எழுதிய நூல்கள்

- ❖ புத்தரது ஆதிவேதம், இந்திரர் தேச சரித்திரம், விவாக விளக்கம், புத்தர் சரித்திரப்பா முதலியன.
- ❖ திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதியுள்ளார்.
- ❖ ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் போன்றவற்றிலும் எல்லா வகுப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.
- ❖ இந்து, பௌத்தர், கிறித்துவர், இசுலாமியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் போன்ற அனைவருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார் அயோத்திதாசர்.

### திராவிட மகாஜன சங்கம்

- அயோத்திதாசர் தமது கொள்கைகளை வலியுறுத்தவும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்.

### அரசியல் விடுதலையும் மக்கள் உரிமையும்

- "சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக்கூடாது; மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அஃது அமையவேண்டும். மக்கள் வாழ்க்கையில் மாற்றம் உண்டானால் ஒழிய, நாடு முன்னேற முடியாது" என்று ஆணித்தரமாகக் கூறினார் அயோத்திதாசர்.

### தனித்தன்மை

- அயோத்திதாசரின் சிந்தனைகள் ஒரு தனிமனிதரின் சிந்தனைகளாக மட்டும் அமையாமல், அகன்ற சமுதாயத்தில் விழிப்புணர்வையும் எழுச்சியையும் ஏற்படுத்தும் சித்தாந்தங்களாக விளங்கின என உறுதியாகக் கூறலாம்.

## இயல் - 9
## சட்டமேதை அம்பேத்கர்

- இந்திய மக்களுக்கு அரசியல் விடுதலையோடு, சமூக விடுதலையும் கிடைக்கும் போதுதான் இந்தியா முழுமையான விடுதலைபெற்ற நாடாக இருக்க முடியும் என்று கருதி உழைத்த தலைவர் அம்பேத்கர்.

### இவரின் சிறப்புகள்

- விடுதலைப்பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர்.
- இவர் சமூகச் சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், மிகச் சிறந்த பொருளியல் அறிஞராகவும் அரசியல் தத்துவமேதையாகவும் பகுத்தறிவுச் சிந்தனையாளராகவும் விளங்கினார்.

### பிறப்பு

- அம்பேத்கர் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் பிறந்தார்.
- பெற்றோர் - ராம்ஜி சக்பால் - பீமாபாய்
- இவர்களுக்கு 14வது குழந்தையாகப் பிறந்தார்.
- ஊர் – மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தை சேர்ந்த அம்பவாதே.
- இவருடைய தந்தை இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.

### கல்வி

- அம்பேத்கர் சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார்.
- மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர், இவர்மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். இதனால், பீமாராவ் சக்பால் என்னும் தம் பெயரைப் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.
- 1904 ஆம் ஆண்டு, இவருடைய குடும்பம் மும்பைக்குக் குடிபெயர்ந்தது. அங்கு எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார்.
- 1907 ஆம் ஆண்டு தமது பள்ளிப்படிப்பை முடித்தார்.
- பரோடா மன்னரின் உதவியுடன் மும்பைப்பல்கலைக்கழகத்தில் படித்து 1912 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com, Whatsapp No: 7358965593

சிறிதுகாலம் பரோடா மன்னரின் அரண்மனையில் உயர் அலுவலராகவும் பணியாற்றினார்.

- ❖ பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார்.
- ❖ கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்.
- ❖ 1915 இல் பண்டைக்கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப்பட்டம் பெற்றார்.
- ❖ இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றைப் படைத்தளித்தார். அதைச் சிறுபுத்தகமாகவும் வெளியிட்டார். அச்சில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் இதுவே.
- ❖ பின்னர் இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் என்ற ஆய்வுக்காக, கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது.
- ❖ 1920 ஆம் ஆண்டு பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார். அங்கிருந்த பல நூலகங்களில் தமது பெயரைப் பதிவு செய்துகொண்டார்; நூலகம் திறக்கும் போது முதல் ஆளாக நுழைந்து மூடும்போது கடைசி ஆளாக வெளியேறுவார்.
- ❖ அயராத உழைப்பின் பயனாக 1921 ஆம் ஆண்டு முதுநிலை அறிவியல் பட்டமும் 1923 ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சனை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டமும் பெற்றார். அதே ஆண்டில் சட்டப் படிப்பில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

### சமூகப்பணிகள்

- ❖ இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.
- ❖ 1924 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார். இவ்வமைப்பின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மற்றும் சமுதாய உரிமைக்காகப் போராடினார்.
- ❖ 1930 ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் புறப்படும் முன் "என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன்; அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனத்துடன் ஆதரிப்பேன்" என்று கூறினார்.

> **அம்பேத்காரின் பொன்மொழி**
>
> "நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று, முதல் தெய்வம் அறிவு; இரண்டாவது தெய்வம் சுயமரியாதை; மூன்றாவது தெய்வம் நன்னடத்தை"

### பூனா ஒப்பந்தம் (செப் 24 – 1931)

- ❖ ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதாச்சாரப் பிரதிநித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார்.
- ❖ இதன் விளைவாக, ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் அளிக்கும் இரட்டை வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ❖ இதை ஏற்க மறுத்த காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். இதன் விளைவாக 1931 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

Padasalai.Net

- அதன்படி ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாகப் பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.

## சுதந்திரத் தொழிலாளர் கட்சி

- 1935 ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
- ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்கத் தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார்; சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார்.
- அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றி பெற்றனர்.

## தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர்

- ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழை 1927 ஆம் ஆண்டு துவங்கினார்.
- சமத்துவச் சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் இவர் சமாஜ் சமாத சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்.
- 1930 ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார்.

## அரசியல் அமைப்பில் அம்பேத்கரின் பங்கு

- 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ம் நாள் இந்தியா விடுதலை பெற்றது.
- ஜவகர்லால் நேரு தலைமையில் அமைந்த அரசில் அம்பேத்கர் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

> **இரட்டமலை சீனிவாசன்**
>
> - இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதைப் பற்றி முடிவு செய்ய 1930 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது.
> - ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த இராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசனும் கலந்துகொண்டார்.

- 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் நாள் அரசியல் நிர்ணய மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.
- அதன்படி இந்திய அரசியலமைப்புச்சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச்சட்ட வரைவுக்குழு (Drafting Committee) உருவாக்கப்பட்டது.
- இக்குழுவில் கோபால்சாமி, அல்லாடி கிருஷ்ணமூர்த்தி, கே.எம். முன்ஷி, சையது முகமது சாதுல்லா, மாதவராவ், டி.பி. கைதான் ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றனர்.
- இக்குழு தனது அறிக்கையை 1948, பிப்ரவரி 21இல் ஒப்படைத்தது. அம்பேத்கர் தலைமையிலான சட்டவரைவுக்குழு, அப்போது மக்களாட்சி நடைபெற்ற நாடுகள் பலவற்றிலிருந்து இந்திய நடைமுறைக்குப் பொருந்தும் சட்டக்கூறுகளை, இந்திய அரசியலமைப்பு விரைவில் சேர்த்தது.
- இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, அயர்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா, சோவியத்யூனியன், ஜெர்மனி, தென்ஆப்பிரிக்கா முதலிய நாடுகளின்

சட்டங்களையும் ஆராய்ந்து இந்திய நாட்டிற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

- ❖ இந்த அரசியல் அமைப்புச் சட்டம் மிகச் சிறந்த சமூக ஆவணம் என வரலாற்று ஆசிரியர்களால் போற்றப்படுகிறது.

### புத்த சமயம் மீது பற்று

- ❖ அம்பேத்கர் புத்த சமயக் கொள்கைகளின் மீது ஈடுபாடு கொண்டார். இலங்கையில் நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர், உலகப் பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார்.
- ❖ 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் நாள் நாக்பூரில் இலட்சக்கணக்கான மக்களோடு புத்த சமயத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.
- ❖ அவர் எழுதிய புத்தரும் அவரின் தம்மமும் என்னும் புத்தகம் அவரது மறைவுக்குப் பின் 1957 ஆம் ஆண்டு வெளியானது.
- ❖ அம்பேத்கர், 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் நாள் காலமானார். அவருடைய மறைவிற்குப் பின், இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது 1990 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

*********

## விரிவானம்

## இயல் - 1

## சொற்பூங்கா

- ➢ தமிழில் சொல் என்பதற்கு நெல் என்பது ஒரு பொருள்.
- ➢ எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பியர் மொழி.
- ➢ மொழி என்பதற்குச் சொல் என்பதும் ஒரு பொருள்.
- ➢ மொழியை (சொல்லை) ஓர் எழுத்து மொழி,ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக்குவர்.
- ➢ நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பர் தொல்காப்பியர்.

### ஓரெழுத்து ஒருமொழிகள்

உயிர் எழுத்து – ஆ. ஈ, ஊ, ஏ, ஐ, ஓ

மகர வரிசை – மா, மீ, மூ, மே, மை, மோ

தகர வரிசை – தா, தீ, தூ, தே, தை

பகர வரிசை – பா, பூ, பே, பை, போ

நகர வரிசை – நா, நீ, நே, நை, நோ

ககர வரிசை – கா, கூ, கை, கோ

சகர வரிசை – சா, சீ, சே, சோ

வகர வரிசை – வா, வீ, வை, வௌ

யகர வரிசை – யா

குறில் எழுத்து – நொ, து

- ➢ காட்டுப் பசுவுக்கு “ஆமா” என்று பெயர்.
- ➢ ஏவுகின்ற அம்பைப் போல் கூர்முள்ளை உடைய முள்ளம் பன்றியின் பழம்பெயர் எய்ப்பன்றி
- ➢ அம்பை எய்பவர் எயினர். அவர்தம் மகளிர் எயினியர்.

### நூல்வெளி

- ➢ செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும் இரா. இளங்குமரனார் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- ➢ இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- வேதநேயம் என்னும் நூலைத் தொகுத்துள்ளார்.
- திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார்.

**பறவைகளின் ஒலி மரபு**

ஆந்தை அலறும்
குயில் கூவும்
மயில் அகவும்
காகம் கரையும்
கோழி கொக்கரிக்கும்
கிளி பேசும்
சேவல் கூவும்
புறா குனுகும்
கூகை குழறும்

**தொகை மரபு**

மக்கள் கூட்டம்
ஆநிரை
ஆட்டு மந்தை

**வினை மரபு**

சோறு உண்
தண்ணீர் குடி
பூக்கொய்
முறுக்குத்தின்
பால் பருகு
இலை பறி
சுவர் எழுப்பு

## இயல் - 2
## வெட்டுக்கிளியும் சருகுமானும்

- தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் எல்லைக்கு அருகேயுள்ள பரம்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் காடர்கள் என்னும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர்.
- கூரன் என்பது சருகுமான்.
- பித்தக் கண்ணு - பெரிய மஞ்சள் கண்களையுடைய சிறுத்தை.
- காடர்கள் மிகச்சிறிய பழங்குடிச் சமுதாயத்தினர். தாங்கள் பேசும் மொழியை "ஆல்லப்பு" என்று அழைக்கின்றனர்.

### நூல் வெளி

- மனிஷ் சாண்டி, மாதுரி ரமேஷ் ஆகியோர் காடர்களின் கதைகள் சிலவற்றைத் தொகுத்துள்ளனர்..
- அவற்றை யானையோடு பேசுதல் என்னும் தலைப்பில் வ.கீதா தமிழாக்கம் செய்துள்ளார்.
- ஒவ்வோர் ஆண்டும் ஜீலை 28 ஆம் நாள் உலக இயற்கைவளப் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

## இயல் - 3
## தலைக்குள் ஓர் உலகம்

- உலகத்திலேயே மிக மிக வியப்பானது மனித மூளை.
- இந்தப் பிரபஞ்சத்திலேயே மிகவும் அடர்த்தியான சிக்கலான ஒரு பொருள் மனித மூளைதான்.
- அதனுள் இருக்கும் செல்களின் எண்ணிக்கை ட்ரில்லியன். அவற்றில் நூறு பில்லியன் அதாவது பத்தாயிரம் கோடி நியூரான்கள் உள்ளன.
- நியூரான்களின் வலைப்பின்னல் தான் புத்திசாலித்தனம். படைப்பு உணர்ச்சி, ஞாபகம், தன்னுணர்வு ஆகியன எல்லாம்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

- மூளை முதுகுத் தண்டில் இருந்து முளைக்கிறது.
- இதை மூன்று பாகங்களாகப் பிரிக்கின்றனர்.
- உள்மூளை, நடுமூளை, பின்மூளை,
- முன்மூளையில் மூக்கு, கண் இவற்றின் முடிவுகள் உள்ளன. உடம்பிலுள்ள சிறுமூளைதான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.

## மூளையின் உணவு

- மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு 800 மில்லி குருதி தேவைப்படுகிறது. மூளை உடம்பின் எடையில் ஐம்பதில் ஒரு பங்கு.
- அது குருதி, உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை அபகரித்துக் கொள்கிறது.

> ❖ தலையின் பகுதியில் நடைபெறும் சில தன்னிச்சையான செயல்களான வெளிச்சத்திற்கு ஏற்றபடி கண்களைத் திறப்பது.
>
> ❖ தலையைத் திருப்பும் போது கண்களை நிலைநிறுத்துவது ஆகியவற்றை எல்லாம் மூளையே பார்த்துக் கொள்கிறது.
>
> ❖ ஏப்பம்விடுவது, இருமல், தும்மல், கொட்டாவி, வாந்தி ஆகியவற்றுக்கெல்லாம் மூளைக்குப் பதிலாக முதுகெலும்பு இருந்தாலே போதும்.

## மூளையின் வலதும் இடதும்

- மூளைக்குச் செல்லும் நரம்புகளில் இட-வல மாற்றம் ஒன்று நிகழ்கிறது.
- அதாவது வலப்பக்கச் செய்திகள் மூளையின் இடப்பக்கப் பகுதிக்கும்.
- இடப்பக்கச் செய்திகள் வலப்பக்கப் பகுதிக்கும் செல்கின்றன.
- நம்மில் பெரும்பாலானவர்கள் வலதுகைக்காரர்களாக இருப்பதற்குக் காரணம் நம் மூளையின் இடது பகுதியின் அதிகப்படியான பாதிப்பினால்தான்.
- இடது பாதிதான் பேச, எழுத, கணக்கிட, தர்க்க ரீதியில் சிந்திக்க உதவுகிறது.
- அறிவாற்றல்,, பிரச்சனைகளை அலசுதல், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறப்பது இவற்றையெல்லாம் இடது பகுதி பார்த்துக்கொள்கிறது.
- நம் மொழி அறிவு கூட இடது பகுதியே.
- இடது பாதி அண்ணன் என்றால் வலது பாதி தம்பி. இந்தப் பாதியால்தான் நாம் வடிவங்களை உணர்கிறோம்.
- கவிதை எழுதுவது, படம் போடுவது, நடனம் ஆடுவது, நடிப்பது போன்ற கலை தொடர்பானவை எல்லாம் வலது பாதியில் தான்.
- வலது பாதி சரியில்லையெனில் வீட்டுக்குப் போக வழி தெரியாமல் திண்டாடுவோம்.
- வலது பகுதி ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பவர்கள், நடிகர்கள். பாடகர்கள், நடனக் கலைஞர்கள், இசைக்கருவிகளைக் கையாளுபவர்கள் இன்ன பிறர்.
- இடது பகுதி ஆக்கிரமிப்பு அதிகம் இருப்பவர்கள் பட்டயக் கணக்கர்கள், கணக்கு ஆசிரியர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்கள் போன்றோர்.
- உணர்ச்சிகளின் பிறப்பிடம் மூளைதான்.
- மூளை - உடல் இரண்டும் இணைந்து செயல்படுவதால் வெளிப்படுபவைதான் உணர்ச்சிகள்.
- சுமார் தொண்ணூறு நிமிடங்களுக்கு ஒருமுறை நாம் எல்லோரும் மனநிலை மாறுகிறோம் என்று ஆராய்ச்சியாளர்கள்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

சொல்கிறார்கள். சராசரி மனிதன் வாழ்நாளில் இருபது வருடம் தூங்குகிறான்.

- மூன்று லட்சம் கனவுகள் காண்கிறான்.
- மொழி அதாவது இலக்கண விதியின்படி பேசுவது மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமை.

**நூல்வெளி**

- சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன் என்பதாகும்.
- மின்னணு வாக்கு எந்திரம் உருவாக்கும் பணியில் இவர் முக்கியப் பங்கு ஆற்றியுள்ளார்.
- என் இனிய எந்திரா, மீண்டும் ஜீனோ, ஸ்ரீரங்கத்துத் தேவதைகள், தூண்டில் கதைகள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். தலைமைச்செயலகம் என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

## ஆன்ற குடிப்பிறத்தல்

**நூல்வெளி**

- ஆசிரியர் - பி.ச. குப்புசாமி
- ஜெயகாந்தனோடு நெருங்கிப்பழகி ஜெயகாந்தனோடு பல்லாண்டு என்னும் நூலை எழுதியுள்ளார்.
- இவர் எழுதிய ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியனின் குறிப்புகள் என்னும் நூலிலிருந்து ஒரு பகுதி 'ஆன்ற குடிப்பிறத்தலில்' தரப்பட்டுள்ளது.

## இயல் - 5
## தமிழர் இசைக்கருவிகள்

- ஒரு சொல்லின் பொருளை அறியப் பயன்படுவது அகராதி.
- ஒரு பொருள் குறித்த அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ளப் பயன்படுவது கலைக்களஞ்சியம்.

**இசை**

- மக்களின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி, குரல் வழியாக அல்லது செயற்கைக் கருவி ஒன்றின் வழியாக வெளிப்பட்டது.
- இது நகை, அழுகை, வீரம் உள்ளிட்ட ஒன்பது சுவைகளை வெளிப்படுத்தக்கூடிய கலையாகப் பிறந்தது. இக்கலையே இசை எனப்பட்டது.
- குரல்வழி இசை, கருவிவழி இசை என இசையை இரண்டாகப் பிரிப்பர்.

**இசைக்கருவிகள்**

- இசையின் இனிமைக்குத் துணை செய்பவை இசைக்கருவிகள்.
- இசைக்கருவிகள் குரல் இசைக்கு மட்டும் பயன்படுபவை, நாடகத்திற்கு மட்டும் பயன்படுபவை, இரண்டிற்கும் பயன்படுபவை எனப் பலவாகத் தோன்றக் கிளைத்தன.
- இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர் பாணர் எனப்பட்டனர்.

**"நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் கூடான் பாடினி அணியாள்"- புறநானூறு**

- தோல்கருவி, நரம்புக்கருவி, காற்றுக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகைப்படும்.
- விலங்குகளின் தோலால் மூடப்பட்டுச் செய்யப்படும் கருவிகள் தோல் கருவிகள்
  (எ.கா) முழவு, முரசு
- நரம்பு மற்றும் தந்திகளை உடையவை நரம்புக்கருவிகள் எனப்படும்.
  (எ.கா) யாழ், வீணை
- காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை காற்றுக்கருவிகள் எனப்படும்.
  (எ.கா) குழல், சங்கு
- ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை கஞ்சக்கருவிகள் எனப்படும்.
  (எ.கா) சாலரா, சேகண்டி

## உடுக்கை

- உடுக்கை என்பது இடை சுருங்கிய ஒரு கைப்பறை ஆகும்.
- வகை - தோல்கருவி
- உடல் பித்தளையால் ஆனது.
- வாய்ப்பகுதி ஆட்டுத்தோலால் பொருத்தப்பட்டிருக்கும்.
- இரு வாய்களையும் இணைக்கும் கயிறுகள் இடையில் கோக்கப்பட்டிருக்கும்.
- இவற்றின் மீது ஒரு நாடா சுற்றப்பட்டுத் தொங்கும்.
- வலது வாயின் மீதுதான் அடிப்பர். அவ்வப்போது இடையில் மீதுள்ள நாடாவை அமுக்குவர்.
- பெரிய உடுக்கையைத் தவண்டை என்பர். சிறு உடுக்கையைக் குடுகுடுப்பை என்பர்.
- இறை வழிபாட்டின் போதும் குறிசொல்லும் போதும் இக்கருவி இசைக்கப்படுகிறது.
- **“தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார்”- சம்பந்தர் தேவாரம்**

## குடமுழா

- வகை – தோல்கருவி
- ஐந்து முகங்களை உடைய முரசு வகையைச் சேர்ந்தது குடமுழா.
- ஒரு பெரிய குடத்தின் வடிவில் ஐந்து வட்டவடிவ வாய்களுடன் அமைந்திருக்கும். நடுவில் இருக்கும் வாய் மற்றவற்றைவிடப் பெரியதாக இருக்கும்.
- ஒவ்வொரு வாயும் தோலால் மூடப்பட்டிருக்கும். ஒவ்வொரு வாயிலிருந்தும் ஒரு தனி வகையான இசை பிறக்கும்.
- இதனை பஞ்சமகா சப்தம் என்றும் அழைப்பர்.
- கோயில்களில் ஒலிக்கப்படும் இசைக்கருவியாகும். சென்னை அருங்காட்சியகத்தில் இவ்வகை முழவு ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## குழல்

- வகை – காற்றுக்கருவி
- காடுகளில் வளரும் மூங்கிலில் வண்டுகள் துளையிடும். அவற்றின் வழியாகக் காற்று வீசும்போது இன்னிசை எழும்பும். இதனை கேட்டு மகிழ்ந்த நம் முன்னோர் அமைத்துக் கொண்டவையே குழல்கள்.
- இதனை வேய்ங்குழல், புல்லாங்குழல் என்றும் அழைப்பர்.
- குழல் ஏழு சுரங்களை உண்டாக்குவதற்கு உரிய ஏழு துளைகளை உடையதாக இருக்கும்.
- இது சுமார் இருபது விரல் நீளம் உடையதாக இருக்கும்.
- மூங்கில் மட்டுமின்றிச் சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும் குழல்கள் செய்யப்படுகின்றன.
- கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல்குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

**“குழல்இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள்**
**மழலைச் சொல் கேளா தவர்”.**

**- திருக்குறள்.**

## கொம்பு

- வகை – காற்றுக்கருவி
- மனிதர்கள் தொடக்க காலத்தில் இறந்த மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர்.
- அதுவே பிற்காலத்தில் கொம்பு என்னும் இசைக்கருவிகள் அடிப்படையாயிற்று.
- இக்காலத்தில் பித்தளை அல்லது வெண்கலத்தால் கொம்புகள் செய்யப்படுகின்றன.
- இதனை வேடர் வேட்டையின் போது ஊதுவர். கழனி மேடுகளில் காவல் புரிபவர்கள்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

விலங்குகள், கள்வரை விரட்டவும் மற்ற காவல்காரர்களை விழித்திருக்கச் செய்யவும் கொம்பினை ஊதுவர்.

❖ ஊதுகொம்பு எக்காளம், சிங்கநாதம், துத்தரி போன்ற பலவகையான கொம்புகள் இக்காலத்தில் திருவிழா ஊர்வலங்களின் போது இசைக்கப்படுகின்றன.

## சங்கு

❖ வகை – காற்றுக்கருவி

❖ இஃது ஓர் இயற்கைக் கருவி, கடலில் இருந்து எடுக்கப்படுவது. வலமாகச் சுழிந்து இருக்கும். சங்கை வலம்புரிச்சங்கு என்பர்.

❖ இலக்கியங்களில் இதனைப் பணிலம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். கோயில் திருவிழாக்களின் போதும் சமயச் சடங்குகளிக் போதும் சங்கு முழங்கும் வழக்கம் உண்டு.

**"சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்**
**பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாலாய்"**

**- திருப்பாவை**

## சாலரா

❖ வகை – கஞ்சக்கருவி

❖ இது பித்தளை அல்லது வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கும்.

❖ அதன் உட்புறம் குவிந்து இருக்கும்.

❖ இதனை ஒன்றோடு ஒன்று பொருந்தியும் விளிம்பின் மீது தட்டியும் தாளத்தின் தேவைக்கு ஏற்ப இசைப்பர்.

❖ இதனை பாண்டில் எனவும் அழைப்பர்.

❖ இது கோயில் கூட்டு வழிபாட்டின் போதும் இன்னிசை அரங்குகளிலும் இசைக்கப்படும் இன்றியமையாத இசைக்கருவி ஆகும். இதனை இக்காலத்தில் 'ஜால்ரா' என்பர்.

## சேகண்டி

❖ வகை – கஞ்சக்கருவி

❖ வட்ட வடிவமான மணி வகையைச் சேர்ந்தது சேகண்டி. இதனை குச்சியாலோ அல்லது இரும்புத் துண்டாலோ அடித்த ஒலி எழுப்புவர்.

❖ இது தேவைக்கு ஏற்பப் பல அளவுகளில் உருவாக்கப்படும். இதனை சேமங்கலம் என்றும் அழைப்பர்.

❖ இதனை கோவில் வழிபாட்டின் போதும் இறுதி ஊர்வலத்தின் போதும் இசைப்பர்.

## திமிலை

❖ வகை – தோல்கருவி

❖ பலா மரத்தினால் செய்யப்பட்டு விலங்குத் தோலினால் கட்டப்படும் கருவி திமிலை ஆகும். மணற்கடிகார வடிவத்தில் இக்கருவி அமைந்திருக்கும். இதனைப் பாணி என்னும் பெயரால் அழைப்பர்.

**சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி**

**வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி**

**- பெரியபுராணம்.**

## பறை

❖ வகை – தோல்கருவி.

❖ விலங்குத் தோலால் இழுத்துக் கட்டப்பட்ட கருவி பறையாகும். பழங்காலத்தில் செய்திகளைத் தெரிவிக்கக் கோட்பறையை முழக்கினர்.

❖ பகைவர்களின் ஆநிரையைக் கவரச் செல்லும்போது ஆகோட்பறையை முழங்குவர்.

❖ இக்காலத்தில் இது தப்பு என்னும் பெயரில் வழங்கப்படுகிறது. இதனை முழக்கிக்கொண்டு ஆடும் ஆட்டம் தப்பாட்டம் என்று அழைக்கப்படுகிறது.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

## மத்தளம்

- ❖ வகை – தோல்கருவி
- ❖ மத்து என்பது ஓசையின் பெயர். இசைக்கருவிகளுக்கு எல்லாம் தளம் அடிப்படை ஆகும்.
- ❖ மத்து + தளம் = மத்தளம் என்று ஆகியது என்கிறார் அடியார்க்கு நல்லார்.
- ❖ மத்தளத்தின் நடுப்பகுதி பெருத்தும் கடைப்பகுதி சிறுத்தும் காணப்படும். மரத்தால் செய்யப்பட்டிருக்கும் இதன் வாய்ப்பகுதி வளையங்களில் தோல் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும்.
- ❖ இக்கருவி இரண்டு கைகளாலும் இசைக்கப்படுகிறது. ஆகவே இதனை முதற்கருவி என்பர்.
- ❖ தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டில் கோயிலுக்கு நியமிக்கப்பட்ட இசைக்கலைஞர்களுள் கொட்டி மத்தளம் வாசிப்பவர் ஒருவரும் இருந்தார் என்பர்.

**“மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தர்க்கீழ்”**
**. நாச்சியார்திருமொழி**

## முரசு

- ❖ வகை – தோல்கருவி
- ❖ தமிழர்கள் போர்த் துணையாகக் கொண்ட கருவிகளுள் முதன்மையானது முரசு ஆகும்.
- ❖ படைமுரசு, கொடைமுரசு, மணமுரசு என்று மூன்று வகையான முரசுகள் பழந்தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருந்தன. தமிழ் மக்களிடம் முப்பத்தாறு வகையான முரசுகள் வழக்கத்தில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.
- ❖ மாக்கண் முரசம் என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

## முழவு

- ❖ வகை – தோல்கருவி
- ❖ ஒரே முகத்தையுடைய வகையைச் சேர்ந்தது முழவு. ஒரு பெரிய குடத்தின் வாயில் தோலை இழுத்துக் கட்டப்பட்ட கருவியாகும். இத்தோலில் ஒருவகை பசை மண்ணைத் தடவி முழக்குவர். மண்ணமை முழவு எனப் பொருநராற்றுப்படையில் இடம் பெற்றுள்ளது.

**“கலைஉணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்”**
**- புறநானூறு.**

## யாழ்

- ❖ வகை – நரம்புக்கருவி
- ❖ வேட்டுவர் இறுகக் கட்டிய தங்கள் வில் நாணில் இருந்து எழும் ஓசையை உணர்ந்தனர்.
- ❖ வில்லைப் போன்ற வளைவு உடையதும் நரம்புகளால் ஆனதும் விரலால் வருடக் கூடியதுமான கருவி ஒன்றை உருவாக்கினார். இதன் அடிப்படையில் உருவான கருவியே யாழ் ஆகும்.
- ❖ பேரியாழ், செங்கோட்டியாழ் போன்றவை மிகப் பழமையானவை.
- ❖ யாழின் வகைக்கு ஏற்ப அதில் இருக்கும் நரம்புகளின் எண்ணிக்கை வேறுபடுகிறது. இருபத்தொரு நரம்புகளைக் கொண்டது பேரியாழ். பத்தொன்பது நரம்புகளைக் கொண்டதாக மீன் வடிவில் அமைந்தது மகரயாழ், பதினான்கு நரம்புகளைக் கொண்டது சகோடயாழ். யாழின் வடிவமே மெல்லமெல்ல மாற்றமடைந்து பிற்காலத்தில் வீணையாக உருவாகியது என்பர்.

## வீணை

- வகை – நரம்புக்கருவி
- யாழ் போன்ற அமைப்பையுடைய நரம்புக்கருவி வீணையாகும். இ∴து ஏழு நரம்புகளைக் கொண்டது.
- இடக்கை விரல்களால் நரம்புகளை அழுக்கியும் தேய்த்தும் வலக்கை சுண்டுவிரலால் கம்பிகளை மீட்டியும் இசை எழுப்புவர்.
- இவ்வாறு நரம்புகள் மூலம் எழுப்பப்படும் இசையை அதன் குடம், தண்டு முதலிய பாகங்கள் பெருக்கி அனுப்புகின்றன.
- பரிவாதினி என்னும் வீணை பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் வழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

## குழல்

- முல்லை நில மக்களாகிய ஆயர்கள் குழல் ஊதுவதில் வல்லவர்கள்.
- இதனைச் சம்பந்தர் திருப்பதிகத்தில் அமைந்த நிகழ்ச்சி ஒன்று விளக்குகிறது.
- ஆயர்களின் இசைத் திறத்தைத் திருப்பதிகம் விளக்குகிறது.

## இயல் - 6
## காலம் உடன் வரும்

- கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கன்னிவாடியில் பிறந்தவர்.
- சிறந்த சிறுகதை, புதின எழுத்தாளர். நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.
- சிறந்த சிறுகதைக்கான இலக்கியச் சிந்தனை விருது பெற்றவர்.
- கன்னிவாடி, குணச்சித்திரங்கள், உப்புக்கடலைக் குடிக்கும் பூனை முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

## இயல் - 7
## அறிவுசால் ஔவையார்

- அதியமானுக்கும், தொண்டைமானுக்கும் இடையே நடைபெற இருந்த போரை ஔவையார் தடுத்த நிகழ்வை நாடகமாக உள்ளது.
- தமிழ்நாட்டிற்குக் கரும்பைக் கொண்டு வந்தவர்கள் அதியமான் முன்னோர்கள்.

**“சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கீந் தனையே”**
**– ஔவையார்**

**“இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து**
**கடியுடை வியன் நகரவ்வே அவ்வே”**
**– ஔவையார்.**

## இயல் - 8
## மனித யந்திரம்

- ஒரே மனிதனுக்குள் இரண்டு வகையான பண்புகள் புதைந்துகிடக்கும் என்கின்றனர் உளவியல் அறிஞர்கள்.

## தெரிந்து தெளிவோம்

- மாகாணி, வீசம் போன்றவை அக்காலத்தில் வழக்கிலிருந்த அளவைப் பெயர்களாகும்.
- அணா, சல்லி, துட்டு என்பது அக்காலத்தில் வழக்கத்தில் இருந்த நாணயப் பெயர்கள் ஆகும்.
- பதினாறு அணாக்கள் கொண்டது ஒரு ரூபாய்.
- அரைரூபாயை எட்டணா என்றும் கால் ரூபாயை நாலணா என்றும் கூறுகின்றனர்.

Padasalai.Net
Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

### நூல்வெளி

❖ சிறுகதை மன்னன் என்று போற்றப்படும் புதுமைப்பித்தனின் இயற்பெயர் சொ. விருத்தாசலம்.

❖ சிறுகதைகளில் புதுப்புது உத்திகளைக் கையாண்டவர்

❖ திரைப்படங்களுக்குக் கதை, உரையாடலும் எழுதியுள்ளார். கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், சாபவிமோசனம், பொன்னகரம், ஒரு நாள் கழிந்தது போன்றன.

❖ மணிக்கொடி இதழில் வெளியான புதுமைப்பித்தனின் சிறுகதை ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

## இயல் - 9
## பால் மனம்

### நூல் வெளி

❖ கோமகளின் இயற்பெயர் இராஜலட்சுமி; சிறுகதைகள், புதினங்கள், குறும்புதினங்கள், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் முதலியவற்றை எழுதியுள்ளார்.

❖ இவரது அன்னைபூமி என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருதினையும் பெற்றுள்ளார்.

❖ உயிர் அமுதாய், நிலாக்கால நட்சத்திரங்கள், அன்பின் சிதறல் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

❖ பால் மனம் இக்கதை அ. வெண்ணிலா தொகுத்த மீதமிருக்கும் சொற்கள் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

*******

# இலக்கணம்

## இயல் - 1
## எழுத்துகளின் பிறப்பு

### பிறப்பு

➢ உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய், ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.

➢ இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர். எழுத்துகளின் பிறப்பினை இடப்பிறப்பு, முயற்சிப்பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

### எழுத்துகளின் இடப்பிறப்பு

➢ உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

➢ வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

➢ மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

➢ இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

➢ ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.

### எழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

**உயிர் எழுத்துகள்**

➢ அ, ஆ, ஆகிய இரண்டும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன.

➢ இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.

- உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.

### மெய் எழுத்துகள்

- க், ங் - ஆகிய இருமெய்களும் நாவின் முதற்பகுதி அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ச், ஞ் - ஆகிய இருமெய்களும் நாவின் இடைப்பகுதி, நடு அண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ட், ண் - ஆகிய இருமெய்களும் நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ப், ம் - ஆகிய இருமெய்களும் மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ய் - இது நாக்கின் அடிப்பகுதி, மேல் வாய் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கிறது.
- ர், ழ் - ஆகிய இரு மெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றது.
- ல் - இது மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ள் - இது மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.
- வ் - இது மேல் வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கிறது.
- ந், ன் - ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.

### சார்பெழுத்துகள்

- ஆய்த எழுத்து வாயைத்திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கிறது. பிற சார்பெழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றும் இடங்களிலேயே அவை பிறப்பதற்கு உரிய முயற்சிகளைக் கொண்டு தாமும் பிறக்கின்றன.

## இயல் - 2
## வினைமுற்று

### வினைமுற்று

- மலர்விழி எழுதினாள், கண்ணன் பாடுகிறான், மாடு மேயும்.
- இச்சொற்களில் பொருள் முழுமை பெற்று விளங்குகிறது. இவ்வாறு பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்களை முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர்.
- வினைமுற்று ஐந்துபால், மூன்று காலம், மூன்று இடம் ஆகிய அனைத்திலும் வரும்.
- வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

### தெரிநிலை வினைமுற்று

- ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்

  (எ.கா) எழுதினாள்
- செய்பவர் - மாணவி
- காலம் - இறந்த காலம்
- கருவி - தாளும் எழுதுகோலும்
- செய்பொருள் - கட்டுரை
- நிலம் - பள்ளி
- செயல் - எழுதுதல்

## குறிப்பு வினைமுற்று

- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக்காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.
  - பொருள் - பொன்னன்
  - சினை - கண்ணன்
  - இடம் - தென்னாட்டார்
  - பண்பு (குணம்) - கரியன்
  - காலம் - ஆதிரையான்
  - தொழில் - எழுத்தன்
- ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று எனப் பிறவகை வினைமுற்றுகளும் தமிழில் உண்டு.

## ஏவல் வினைமுற்று

- பாடம் படி, கடைக்குப் போ.
- தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று எனப்படும். ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மை ஆகிய இருவகைகளில் வரும்

  (எ.கா) எழுது - ஒருமை

  எழுதுமின் - பன்மை
- பன்மை ஏவல் வினைமுற்று எழுதுங்கள் என வருவது இக்கால வழக்கு.

## வியங்கோள் வினைமுற்று

- வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும்.
- இவ்வினைமுற்று இரு திணைகளையும் (உயர்திணை, அ∴றிணை) ஐந்து பால்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்) மூன்று இடங்களையும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) காட்டும் இதன் விகுதிகள் க, இய, இயர், அல் என வரும்.

(எ.கா) வாழ்க, ஒழிக, வாழியர்

## ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள்

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| முன்னிலையில் வரும் | இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும் |
| ஒருமை, பன்மை, வேறுபாடு உண்டு | ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. |
| கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும் | வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும் |
| விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | விகுதி பெற்றே வரும் |

# இயல் - 3
# எச்சம்

- படித்தான் என்னும் சொல்லில் பொருள் முற்றுப் பெறுகிறது. எனவே. இது வினைமுற்று ஆகும்.
- படித்த, படித்து ஆகிய சொற்களில் பொருள் முற்றுப்பெறவில்லை. இவ்வாறு பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும்.
- இது பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்

## பெயரெச்சம்

- படித்த மாணவன்

  படித்த பள்ளி
- இவ்வாறு பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆகும். பெயரெச்சம் மூன்று காலத்திலும் வரும்.
- பாடிய பாடல் - இறந்தகாலப் பெயரெச்சம்
- பாடுகின்ற பாடல் - நிகழ்காலப் பெயரெச்சம்
- பாடும் பாடல் - எதிர்காலப் பெயரெச்சம்

## தெரிநிலை, குறிப்புப் பெயரெச்சம்

- எழுதிய கடிதம் - இத்தொடரில் உள்ள எழுதிய என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்தகாலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது.
- இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.
- சிறிய கடிதம் - இத்தொடரில் உள்ள சிறிய என்னும் சொல்லின் செயலையோ காலத்தையோ அறிய முடியவில்லை.
- பண்பினை மட்டும் குறிப்பாக அறிய முடிகிறது. இவ்வாறு செயலையோ காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

## வினையெச்சம்

- படித்து என்னும் சொல் முடித்தான். வியந்தாள், மகிழ்ந்தார் போன்ற வினைச் சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.
- (எ.கா) படித்து முடித்தான், படித்து வியந்தான்
- இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும்.

## தெரிநிலை, குறிப்பு வினையெச்சங்கள்

- எழுதி வந்தான் - இத்தொடரில் உள்ள எழுதி என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது.
- இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.
- மெல்ல வந்தான் - இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை.
- மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்திவரும் வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

## முற்றெச்சம்

- வள்ளி படித்தனள்.
- இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்தாள் என்னும் வினைமுற்றுப் பொருளைத் தருகிறது.
- வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.
- இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்து என்னும் வினையெச்சப் பொருளைத் தருகிறது.
- இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப் பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

## இயல் - 4
## வேற்றுமை

- பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறையே வேற்றுமை என்பர்.
- சில இடங்களில் உருபுகளுக்குப் பதிலாக முழுச்சொற்களே வேற்றுமை உருபாக வருவதும் உண்டு. அவற்றைச் சொல்லுருபுகள் என்பர்
- ஓவியர் தூரிகையால் ஓவியம் தீட்டினார். இதில் ஆல் என்பது வேற்றுமை உருபாக வந்தள்ளது.
- ஓவியர் தூரிகை கொண்டு ஓவியம் தீட்டினார். இதில் கொண்டு என்பது சொல்லுருபாக வந்துள்ளது.

## வேற்றுமையின் வகைகள்

- வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை ஆகியனவாகும்
- முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய உள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் உருபுகள் உண்டு.

**இதைப் படியுங்கள் முதலில்**

வேற்றுமை உருபுகள் இடம் பெற்றுள்ள தொடர்களை வேற்றுமைத் தொடர்கள் என்பர். வேற்றுமை உருபுகள் இடம் பெற வேண்டிய இடத்தில் அது இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத்தொகை என்பர்.

## முதல் வேற்றுமை

- எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவது முதல் வேற்றுமை ஆகும்.
- முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் குறிப்பிடுவர்
  (எ.கா) பாவை வந்தாள்

## இரண்டாம் வேற்றுமை

- இரண்டாம் வேற்றுமை உருபு **'ஐ'** என்பதாகும்.
- கபிலர் பரணரைப் புகழ்ந்தார். கபிலரைப் பரணர் புகழ்ந்தார்.
- ஒரு பெயரைச் 'செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுவதால் இரண்டாம் வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை' என்றும் கூறுவர்.
- இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையான பொருள்களில் வரும்.
- **ஆக்கல்** - கரிகாலன் கல்லணையைக் கட்டினான்
- **அழித்தல்** - பெரியார் மூடநம்பிக்கைகளை ஒழித்தார்
- **அடைதல்** - கோவலன் மதுரையை அடைந்தான்
- **நீத்தல்** - காமராசர் பதவியைத் துறந்தார்
- **ஒத்தல்** - தமிழ் நமக்கு உயிரைப் போன்றது.
- **உடைமை** – வள்ளுவர் பெரும் புகழை உடையவர்

## மூன்றாம் வேற்றுமை

- **ஆல்,ஆன், ஒடு, ஓடு** ஆகிய நான்கும் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் ஆகும். இவற்றுள் ஆல், ஆன் ஆகியவை கருப்பொருள், கருத்தாப் பொருள் ஆகிய இரண்டு வகையான பொருள்களில் வரும்.
- கருவிப் பொருள் முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.
- கருவியே செய்யப்படும் பொருளாக மாறுவது முதற்கருவி – மரத்தால் சிலை செய்தான்.
- ஒன்றைச் செய்யவதற்குத் துணையாக இருப்பது துணைக்கருவி – உளியால் சிலை செய்தான்
- கருத்தாப் பொருள் ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா என இருவகைப்படும். பிறரைச் செய்யவைப்பது ஏவுதல் கருத்தா-

கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது. தானே செய்வது இயற்றுதல் கருத்தா- சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது.

- ஆன்- என்னும் உருபு பெரும்பாலும் செய்யுள் வழக்கில் இடம்பெறும். (எ.கா)புறந்தூய்மை நீரான் அமையும்.
- ஒடு, ஓடு, ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் (எ.கா) தாயொடு குழந்தை சென்றது. அமைச்சரோடு அலுவலர்கள் சென்றனர்.

## நான்காம் வேற்றுமை

- நான்காம் வேற்றுமைக்கு உரிய உருபு 'கு' என்பதாகும். இது கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை எல்லை எனப் பல பொருள்களில் வரும்.
- **கொடை** - முல்லைக்குத் தேர் கொடுத்தான்
- **பகை** - புகை மனிதனுக்குப் பகை
- **நட்பு** - கபிலருக்கு நண்பர் பரணர்
- **தகுதி** - கவிதைக்கு அழகு கற்பனை
- **அதுவாதல்** - தயிருக்குப் பால் வாங்கினான்.
- **பொருட்டு** - தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.
- **முறை** - செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ
- **எல்லை** - தமிழ்நாட்டுக்குக் கிழக்கு வங்கக்கடல்.

## ஐந்தாம் வேற்றுமை

- **இன், அல்** ஆகியவை ஐந்தாம் வேற்றுமை உருபுகள் ஆகும். இவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது போன்ற பொருள்களில் வரும்
- **நீங்கல்** - தலையின் இழிந்த மயிர்
- **ஒப்பு** - பாம்பின் நிறம் ஒரு குட்டி
- **எல்லை** - தமிழ்நாட்டின் கிழக்கு எல்லை வங்கக்கடல்
- **ஏது** - சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம்

## ஆறாம் வேற்றுமை

- **அது, ஆது, அ** ஆகியவை ஆறாம் வேற்றுமை உருபுகள் ஆகும்.
- இவ்வேற்றுமை, உரிமைப் பொருளில் வரும். உரிமைப் பொருளைக் கிழமைப் பொருள் என்றும் கூறுவர்.
- (எ.கா) இராமனது வில், நண்பனது கை.
- ஆது, அ ஆகிய உருபுகளை இக்காலத்தில் பயன்படுத்துவது இல்லை.

## ஏழாம் வேற்றுமை

- ஏழாம் வேற்றுமைக்கு உரிய உருபு **கண், மேல், கீழ், கால், இல், இடம்** போன்ற உருபுகளும் உண்டு.
- இடம், காலம் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களில் ஏழாம் வேற்றுமை உருபு இடம்பெறும் (எ.கா) எங்கள் ஊரின் கண் மழை பெய்தது. இரவின் கண் மழை பெய்தது.

## எட்டாம் வேற்றுமை

- இது விளிப்பொருளில் வரும். படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி வேற்றுமை என்கிறோம்.
- இவ்வேற்றுமைக்கு என்று தனியே உருபு கிடையாது. பெயர்கள் திரிந்து வழங்குவது உண்டு. அண்ணன் என்பதை அண்ணா என்றும் புலவர் என்பதைப் புலவரே என்றும் மாற்றி வழங்குவது எட்டாம் வேற்றுமை ஆகும்.

**வேற்றுமை உருபுகளும் அவற்றின் பொருள்களும்**

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் |
|---|---|---|---|
| முதல் (எழுவாய்) | இல்லை | ஆனவன், ஆவான், ஆகின்றவன் | பயனிலை ஏற்றல் |
| இரண்டாம் | ஐ | இல்லை | செயப்படு பொருள் |
| மூன்றாம் | ஆல், ஆன், ஓடு, ஒடு | கொண்டு, வைத்து, உடன், கூட | கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி |
| நான்காம் | கு | ஆக, பொருட்டு, நிமித்தம் | கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை எல்லை |
| ஐந்தாம் | இல், இன் | இலிருந்து, நின்று, காட்டிலும், பார்க்கிலும் | நீக்கல், ஒப்பு, எல்லை, ஏது |
| ஆறாம் | அது, ஆது, அ | உடைய | கிழமை |
| ஏழாம் | கண் | - | இடம், காலம் |
| எட்டாம் (விளி) | இல்லை | இல்லை | விளி (அழைத்தல்) |

**நிறுத்தல்குறிகள் காற்புள்ளி (,)**

- **1.** பொருள்களை எண்ணும் இடங்களில் காற்புள்ளி வரும்.
  (எ.கா) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன ஐந்திணைகள்
- **2.** கடிதத்தில் விளி முன் காற்புள்ளி வரும்..
  (எ.கா) அன்புள்ள நண்பா,
- **3.** வினையெச்சங்களுக்குப் பின் காற்புள்ளி வரும்.
  (எ.கா) பொழிலன் தோட்டத்திற்குச் சென்று, வாழை இலை பறித்து வந்தான்.
- **4.** மேற்கோள் குறிகளுக்கு (“) முன் காற்புள்ளி வரும்.
  (எ.கா) குழந்தை நிலவைப் பார்த்து,“நிலா நிலா ஓடி வா” என்று பாடியது.
- முகவரியில் இறுதி வரி நீங்க ஏனைய வரிகளின் இறுதியில் காற்புள்ளி வரும்.
  (எ.கா) கு.ஆண்டாள், எண் 45, காமராசர் தெரு, திருவள்ளுவர்.

**அரைப்புள்ளி (;)**

- 1. ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் அரைப்புள்ளி வரும்.
  (எ.கா) கரிகாலன் கங்கை வரை படையெடுத்துச் சென்றான்; கனக விசயருடன் போரிட்டான்.
- 2. உடன்பாடு, எதிர்மறைக் கருத்துகளை ஒன்றாகக் கூறும் இடத்தில் அரைப்புள்ளி வரும்.
  (எ.கா)நல்லவன் வாழ்வான்; தீயவன் தாழ்வான்.

**முக்காற்புள்ளி (:)**

- சிறு தலைப்பான தொகைச் சொல்லை விரித்துக் கூறும் இடத்தில் முக்காற்புள்ளி வரும்.
  (எ.கா) முத்தமிழ்: இயல், இசை, நாடகம்.

**முற்றுப்புள்ளி (.)**

- 1. சொற்றொடாரின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்.
  (எ.கா) கல்வியே மனிதனின் வாழ்வை உயர்த்தும்.
- 2. சொற்குறுக்கங்களை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.
  (எ.கா) திரு.வி.க., மா.கா. அ.ஊ.ஒ.ந.நி.பள்ளி
- 3. பெயரின் தலைப்பெழுத்தை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.
  (எ.கா) நெ.து. சுந்தரவடிவேலு

Padasalai.Net

### வினாக்குறி (?)

- வினாப்பொருளை உணர்த்தும் வாக்கியத்தின் இறுதியில் வினாக்குறி இட வேண்டும்.

(எ.கா) சேக்கிழார் எழுதிய நூல் எது?

### வியப்புக் குறி (!)

- மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல் முதலான உணர்ச்சியை வெளியிடும் இடங்களில் வியப்புக்குறி இட வேண்டும்.

  (எ.கா) தமிழின் இனிமைதான் என்னே!- வியப்பு.
- பாம்பு! பாம்பு! - அச்சம்
- அந்தோ! இயற்கை அழிகிறதே! - அவலம்

### ஒற்றைக் மேற்கோள் குறி (‘‘)

- தனிச்சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும்போதும், இரட்டை மேற்கோள் குறியில் இன்னொரு கூற்று உட்பட்டு வரும்போதும் ஒற்றை மேற்கோள் பயன்படும்.

(எ.கா) ‘நல்ல’ என்பது குறிப்புப் பெயரெச்சம் ஆகும்.

### இரட்டை மேற்கோள் குறி (“)

- நேர் கூற்றுகளிலும் செய்யுள் அடிகளையோ பொன்மொழிகளையோ குறிப்பிடும் இடங்களில் இரட்டை மேற்கோள் குறியைப் பயன்படுத்த வேண்டும்.

  (எ.கா) திரு. வி. க. மாணவர்களிடம் “தமிழ் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள்” என்று கூறினார்.

### கலைச்சொற்கள்

- நிறுத்தக்குறி - Punctuation
- அணிகலன் - Ornament
- திறமை - Talent
- மொழியெர்ப்பு - Translation
- விழிப்புணர்பு - Awareness
- சீர்திருத்தம் - Reform

## இயல் - 5
## தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்

- இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி (மறைந்து) வருமானால் அதனைத் தொகைநிலைத் தொடர் என்பர்.
- இத்தொகைநிலைத் தொடர்

1. வேற்றுமைத்தொகை
2. வினைத்தொகை
3. பண்புத்தொகை
4. உவமைத்தொகை
5. உம்மைத்தொகை
6. அன்மொழித்தொகை

- என ஆறுவகைப்படும்.

### வேற்றுமைத்தொகை

- இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத்தொகை என்பர்.
- திருவாசகம் படித்தான் - (ஐ) இரண்டாம் வேற்றுமைத்தொகை
- தலைவணங்கு - (ஆல்) மூன்றாம் வேற்றுமைத்தொகை
- சிதம்பரம் சென்றான் - (கு) நான்காம் வேற்றுமைத்தொகை
- மலைவீழ் அருவி - (இன்) ஐந்தாம் வேற்றுமைத்தொகை
- கம்பர் பாடல் - (அது) ஆறாம் வேற்றுமைத்தொகை
- மலைக்குகை - (கண்) ஏழாம் வேற்றுமைத்தொகை

## உருபும் பயனும் உடன்தொக்க தொகை

- ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் சொல்லும் (பயன்) மறைந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை எனப்படும்.
- இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை
  (எ.கா) பால் குடம் - (பாலைக் கொண்ட குடம்)
- மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை
  (எ.கா) பொற்சிலை - (பொன்னால் ஆகிய சிலை)

## வினைத்தொகை

- ஆடுகொடி, வளர்தமிழ்
- இத்தொடர்களில் ஆடு, வளர் என்பவை வினைப்பகுதிகள். இவை முறையே ஆடிய கொடி, ஆடுகின்ற கொடி, ஆடும் கொடி எனவும் வளர்ந்த தமிழ், வளர்கின்ற தமிழ், வளரும் தமிழ் எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி பொருள் தருகின்றன.
- காலம் காட்டும் இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சத்தை வினைத்தொகை என்பர்.
- **காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை**
  **– நன்னூல் 364**

## பண்புத்தொகை

- வெண்ணிலவு, கருங்குவளை
- இத்தொடர்களில் வெண்மை, கருமை என்னும் பண்புகள் நிலவு, குவளை என்னும் பெயர்ச்சொற்களைத் தழுவி நிற்கின்றன.
- ஆன, ஆகிய என்னும் பண்புருகள் மறைந்து வெண்மையான நிலவு, கருமையாகிய குவளை என்னும் பொருள்களைத் தருகின்றன.
- பண்புப் பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே ஆன, ஆகிய என்னும் பண்புருபுகள் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

## இருபெயரொட்டுப் பண்புத்தொகை

- பனை மரம்
- இத்தொடர் பனையாகிய மரம் என விரியும். மரம் என்பது பொதுப்பெயர். பனை என்பது மரங்களுள் ஒன்றனைக் குறிக்கும் சிறப்புப்பெயர்.
- இவ்வாறு சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நிற்க, இடையில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவதை இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர்.

## உவமைத்தொகை

- மலர்விழி - இத்தொடர் மலர்போன்ற விழி என்ற பொருள் தருகிறது.
- மலர்– உவமை, விழி – உவமேயம்.
- இடையில் போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.
- இவ்வாறு உவமைக்கும் உவமேயத்துக்கும் இடையில் போல, போன்ற, நிகர, அன்ன முதலிய உவம உருபுகளுள் ஒன்று மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.

## உம்மைத்தொகை

- இரவுபகல், தாய்தந்தை
- இத்தொடர்கள் இரவும் பகலும் தாயும் தந்தையும் என விரிந்து பொருள் தருகின்றன.
- சொற்களுக்கு இடையிலும், இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருவதை உம்மைத்தொகை என்பர்.

## அன்மொழித்தொகை

- பொற்றொடி வந்தாள் (தொடி – வளையல்)
- இத்தொடரில் பொற்றொடி என்பது பொன்னாலான வளையல் எனப் பொருள் தரும்.
- இத்தொடர் வந்தாள் என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால் பொன்னாலாகிய வளையலை அணிந்த பெண் வந்தாள் என்னும் பொருள் தருகிறது.
- வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுள், அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித்தொகை (அல் + மொழி + தொகை) எனப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களில் உம் என்னும் உருபு வெளிப்பட வருவது எண்ணும்மை எனப்படும்.
- (எ.கா) இரவும் பகலும், பசுவும் கன்றும்.

## தொகாநிலைத் தொடர்

- ஒரு தொடரில் இரு சொற்கள் வந்து அவற்றின் இடையில் எச்சொல்லும் எவ்வுருபும் மறையாமல் நின்று பொருள் உணர்த்தினால் அதனைத் தொகாநிலைத் தொடர் என்பர்.

## எழுவாய்த் தொடர்

- (எ.கா) மல்லிகை மலர்ந்தது. - இதில் “மல்லிகை’ என்னும் எழுவாயைத் தொடர்ந்து “மலர்ந்தது’ என்னும் பயனிலை அமைத்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இஃது எழுவாய்த் தொடர் ஆகும்.

## விளித்தொடர்

- (எ.கா) நண்பா படி. - இதில் “நண்பா” என்னும் விளிப்பெயர் “படி” என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது விளித்தொடர் ஆகும்.

## வினைமுற்றுத் தொடர்

- (எ.கா) சென்றனர் வீரர் - இதில் “சென்றனர்” என்னும் வினைமுற்று “வீரர்” என்னும் பெயரைக் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது வினைமுற்றுத் தொடர் ஆகும்.

## பெயரெச்சத் தொடர்

- (எ.கா) வரைந்த ஓவியம் - இதில் “வரைந்த” என்னும் எச்சவினை “ஓவியம்” என்னும் பெயர்ச்சொல் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது பெயரெச்சத் தொடர் ஆகும்.

## வினையெச்சத் தொடர்

- (எ.கா) தேடிப் பார்த்தான் - இதில் “தேடி’ என்னும் வினையெச்சச் சொல் “பார்த்தான்” என்னும் வினைமுற்றுச்சொல் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது வினையெச்சத் தொடர் ஆகும்.

## வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

- (எ.கா) கவிதையை எழுதினார் - இதில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துவதால் இது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் ஆகும்.

## இடைச்சொல்

- (எ.கா) மற்றுப் பிற (மற்று + பிற) இதில் “மற்று” என்னும் இடைச்சொல் வெளிப்படையாக வந்துள்ளதால் இஃது இடைச்சொல் தொடர் ஆகும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

## உரிச்சொல் தொடர்

- (எ.கா) சாலவும் நன்று - இதில் “சால” என்னும் உரிச்சொல் வெளிப்படையாக வந்துள்ளதால் இஃது உரிச்சொல் தொடர் ஆகும்.

## அடுக்குத்தொடர்

- (எ.கா) நன்று நன்று நன்று - இதில் ஒரே சொல் பலமுறை அடுக்கி வந்துள்ளதால் இஃது அடுக்குத்தொடர் ஆகும்.

# இயல் - 6
# புணர்ச்சி

- நிலை மொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் இணைகின்றன. இவ்வாறு நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் இணைவதைப் புணர்ச்சி என்கிறோம்.
- நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அஃது உயிரீற்றுப் புணர்ச்சி எனப்படும்.

  **(எ.கா) சிலை + அழகு – சிலையழகு**

  **(லை – ல் +ஐ)**
- நிலைமொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அஃது மெய்யீற்றுப் புணர்ச்சி.

  **(எ.கா) மண் + அழகு – மண்ணழகு**
- வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அஃது உயிர் முதல் புணர்ச்சி எனப்படும்

  **(எ.கா) பொன் + உண்டு – பொன்னுண்டு**
- வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அஃது மெய் முதல் புணர்ச்சி எனப்படும்.

**(எ.கா) பொன் + சிலை – பொற்சிலை (சி- ச் + இ)**

## இயல்புப் புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

- நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி ஆகும். **(எ.கா) தாய் + மொழி – தாய்மொழி**
- உடல் + ஓம்பல் - உடலோம்பல் (இங்கு ல் + ஓ இணைந்து லோ என்னும் உயிர்மெய் எழுத்து ஆயிற்று.
  - புதிய எழுத்து எதுவும் தோன்றவோ வேறு எழுத்தாகத் திரியவோ மறையவோ இல்லை)
  - இரண்டு சொற்கள் இணையும் போது நிலைமொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்கள் நிகழுமாயின், அது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.
  - நிலைமொழியும் வருமொழியும் இணையும் போது புதிதாக ஓர் எழுத்துத் தோன்றுவது தோன்றல் விகாரம் ஆகம்.

    **(எ.கா) தமிழ் +தாய் - தமிழ்த்தாய்**
  - நிலைமொழியும் வருமொழியும் இணையும் போது எழுத்து வேறு எழுத்தாக மாறுவது திரிதல் விகாரம் ஆகும்.

    **(எ.கா) வில் + கொடி – விற்கொடி**
  - நிலை மொழியும் வருமொழியும் இணையும்போது ஓர் எழுத்து மறைவது கெடுதல் விகாரம் ஆகும்.

    **(எ.கா) மனம் + மகிழ்ச்சி – மனமகிழ்ச்சி**
  - இரண்டு சொற்கள் இணையும் போது ஒன்றுக்கு மேற்பட்ட விகாரங்கள் நிகழ்வதும் உண்டு

    **(எ.கா) நாடகம் + கலை – நாடகக்கலை**
  - இங்குக் கெடுதல் விகாரத்தின்படி நிலைமொழி ஈற்றில் உள்ள மகர மெய் மறைந்து. தோன்றல் விகாரத்தின்படி க் என்னும் மெய்யெழுத்து தோன்றியது.

## இயல் -7
## வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

- **அந்த இந்த** என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்.
  (எ.கா) அந்தப்பக்கம். இந்தக்கவிதை
- எந்த என்னும் வினாத்திரிபை அடுத்து வல்லினம் மிகும்.
  (எ.கா) எந்தத்திசை? எந்தச்சட்டை?
- இரண்டாம் வேற்றுமை உருபாகிய ‘ஐ’ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்
  (எ.கா) தலையைக் காட்டு . பாடத்தைப்படி
- நான்காம் வேற்றுமை உருபாகிய ‘கு’ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்
  (எ.கா) எனக்குத் தெரியும். அவனுக்குப் பிடிக்கும்.
- இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும். (எ.கா) எழுதிப் பார்த்தான். ஓடிக் களைத்தான் .
- உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா) பெற்றுக் கொண்டேன் . படித்துப் பார்த்தா்
- எதிர்மறைப் பெயரெச்சத்தின் இறுதி எழுத்து கெட்டு வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். இதில் வல்லினம் மிகும்.
  (எ.கா) செல்லாக்காசு, எழுதாப்பாடல்
- உவமைத்தொகையில் வல்லினம் மிகும் (எ.கா) மலர்ப்பாதம், தாய்த்தமிழ்
- உருவகத்தில் வல்லினம் மிகும் (எ.கா) தமிழ்த்தாய், வாய்ப்பவளம்.
- எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகிய இரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் மிகும்.
  (எ.கா) எட்டுப்புத்தகம் , பத்துக்காசு
- அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.
  (எ.கா) அப்படிச்செய், இப்படிக்காட்டு, எப்படித்தெரியும்?
- திசைப்பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்
  (எ.கா) கிழக்குக்கடல், மேற்குச் சுவர், வடக்குத்தெரு, தெற்குப்பக்கம்.
- மகர மெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும்.
  (எ.கா) மரம் + சட்டம்- மரச்சட்டம் வட்டம் + பாறை – வட்டப்பாறை

### வல்லினம் மிகா இடங்கள்

- எழுவாய் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா) தம்பி படித்தான், யானை பிளிறியது.
- அது, இது, எது. ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா) அது சென்றது. இது பெரியது, எது கிடைத்தது?
- பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது.
  (எ.கா) எழுதிய பாடல், எழுதாத பாடல்
- இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வரும் இடங்களில் (இரண்டாம் வேற்றுமைத்தொகை) வல்லினம் மிகாது. (எ.கா) இலை பறித்தான். காய் தின்றேன்.
- உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் மென்தொடர்க் குற்றியலுகரமாகவோ. இடைத்தொடக் குற்றியலுகரமாகவோ இருந்தால் வல்லினம் மிகாது (எ.கா) தின்று தீர்த்தான், செய்து பார்த்தாள்.
- வினைத்தொகையில் வல்லினம் மிகாது (எ.கா) எழுதுபொருள், சுடுசோறு
- அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களைத் தவிர, படி என முடியும் பிற சொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா) எழுதும்படி சொன்னேன் . பாடும்படி கேட்டுக்கொண்டார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது. (எ.கா) தாய்தந்தை, வெற்றிலைபாக்கு.

## இயல் - 8
## யாப்பு இலக்கணம்

- குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகளை மரபுக்கவிதைகள் என்பர்.
- மரபுக்கவிதைகள் எழுதுவற்கான இலக்கணம் யாப்பு இலக்கணம் எனப்படும்.
- யாப்பு இலக்கணத்தின்படி செய்யுளுக்கு உரிய உறுப்புகள் ஆறு, அவை எழுத்து, அசை, சீர், அடி, தொடை என்பனவாகும்.

### எழுத்து

- யாப்பிலக்கணத்தின்படி எழுத்துகளை மூன்றாகப் பிரிப்பர்.
- அவையாவன:

குறில் - உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்
நெடில் - உயிர்நெடில், உயிர்மெய்நெடில்
ஒற்று – மெய்யெழுத்து, ஆய்தஎழுத்து

### அசை

- எழுத்துகள் ஒன்றோ சிலவோ சேர்ந்து அமைவது அசை, அது, நேரசை, நிரையசை என இரு வகைப்படும்.
- குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும்.

(எ.கா) ந, நம், நா, நாம்
- இரண்டு குறில் எழுத்துகள் அல்லது குறில்,நெடில் எழுத்துகள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும்.
- (எ.கா) க, கடல், கடா, கடாம்

### சீர்

- ஓர் அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது சீர்.
- சீர்களை ஓரசைச்சீர்,ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என வகைப்படுத்துவர்.

### தளை

- சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர். முதல் சீரின் இறுதியிலும் வரும் சீரின் முதலிலும் உள்ள அசைகள் எவ்வகை அசைகள் என்பதன் அடிப்படையில் தளைகள் ஏழு வகைப்படும்.

### அடி

- இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்களைக்கொண்டு அமைவது அடி ஆகும். அடி ஐந்து வகைப்படும்.

### தொடை

- செய்யுளில் ஓசை இன்பம் பொருள் இன்பமும் தோன்றும் வகையில் சீர்களுக்கு இடையிலோ, அடிகளுக்கு இடையிலோ அமையும் ஒற்றுமையே தொடை ஆகும்.
- தொடை எட்டு வகைப்படும்.

**முதன்மையான தொடைகள் வருமாறு:**

1. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை
2. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை.
3. இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றிவரத் தொடுப்பது இயைபு.
4. ஒருபாடலின் இறுதிச்சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல் சீர் அல்லது முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதித் தொடை.

### பா வகைகள்

- பா நான்கு வகைப்படும். அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- வெண்பா செப்பல் ஓசை உடையது. அறநூல்கள் பலவும் வெண்பாவால் அமைந்தவை.
- ஆசிரியப்பா அகவல் ஓசை உடையது. சங்க இலக்கியங்கள் பலவும் ஆசிரியப்பாவால் அமைந்தவை.
- கலிப்பா துள்ளல் ஓசை உடையது. கலித்தொகை கலிப்பாவால் ஆனது.
- வஞ்சிப்பா தூங்கல் ஓசை உடையது.

## இயல் - 9
## அணி இலக்கணம்

### பிறிது மொழிதல் அணி

- உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூறவந்த கருத்தை உணரவைப்பது பிறிது மொழிதல் அணி எனப்படும்.

(எ.கா)

**கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**
**நாவாயம் ஓடா நிலத்து**

- இத்திருக்குறள் ,“ நிலத்தில் ஓடும் தேர் கடலில் ஓடாது. கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடாது.” என்று உவமையை மட்டும் கூறுகிறது. இதன் மூலம் ஒவ்வொருவரும் தமக்கு உரிய இடத்தில் வெற்றி பெறமுடியும்.
- தமக்குப் பொருத்தமில்லாத இடத்தில் வெற்றிபெறுதல் இயலாது என்னும் கருத்தை நாம் உணர்ந்துகொள்கிறோம்.
- எனவே இக்குறட்பாவில் பிறிது மொழிதல் அணி இடம்பெற்றுள்ளது.

### வேற்றுமை அணி

- இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையணி எனப்படும்.

(எ.கா)

**“தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு”**

- இக்குறளில் முதலில் நெருப்பு. கொடுஞ்சொல் ஆகிய இரண்டும் சுடும்தன்மை உடையவை என்று கூறப்படுகிறது.
- பின்னர் நெருப்பினால் சுட்ட காயம் ஆறிவிடும். உள்ளத்தில் ஏற்பட்ட வடு ஆறாது என்று இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு கூறப்படுகிறது.
- எனவே இது வேற்றுமை அணி ஆகும்.

### இரட்டுறமொழிதல் அணி

- ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுறமொழிதல் என்னும் அணியாகும். இதனைச் ‘சிலேடை’ என்றும் கூறுவர்.

**ஓடும் இருக்கும் அதனுள்வாய் வெளுத்திருக்கும்**
**நாடுங் குலைதனக்கு நாணாது – சேடியே**
**தீங்காயது இல்லா திருமலைராயன் வரையில்**
**தேங்காயும் நாயும் நேர் செப்பு**

- இப்பாடலில் பொருள் தேங்காய், நாய் ஆகிய இரண்டுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது.
- தேங்காயில் ஓடு இருக்கும். தேங்காயின் உட்பகுதி வெண்மை நிறத்தில் இருக்கும் தேங்காய் கோணல் இல்லாமல் குலையாகத் தொங்கும்.
- நாய் சில சமயம் ஓடிக்கொண்டிருக்கும், சில சமயம் ஓரிடத்தில் படுத்து இருக்கும், அதன் வாயின் உட்பகுதி வெண்மையாக இருக்கும். குரைப்பதற்கு வெட்கப்படாது.
- இவ்வாறு இப்பாடல் இரண்டு பொருள் தரும்படி பாடப்பட்டுள்ளதால் இஃது இரட்டுறமொழிதல் அணி ஆகும்.

***************

# இயல் -1

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________

அ) வைப்பு ஆ) கடல்
இ) பரவை ஈ) ஆழி

2. "என்றென்றும்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) என் + றென்றும் ஆ) என்று +என்றும்
இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும்

3. "வானமளந்து" என்னும சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ)வான +மளந்து ஆ)வான் +அளந்து
இ)வானம் +அளந்து ஈ)வான் +மளந்து

4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுகக் கிடைக்கம் சொல் ________

அ)அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்
இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்

5. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________

அ) வானம்அறிந்து ஆ) வான் அறிந்த
இ) வானமறிந்த ஈ) வானமறிந்த

6. பறவைகள் ________ பறந்து செல்கின்றன

அ) நிலத்தில் ஆ) விசும்பில்
இ) மரத்தில் ஈ) நீரில்

7. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________

அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

8. "இருதிணை" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ)இரண்டு + திணை ஆ) இரு + திணை
இ)இருவர் + திணை ஈ)இருந்து + திணை

9. "ஐம்பால்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) ஐம் +பால் ஆ) ஐந்து+ பால்
இ) ஐம்பது+ பால் ஈ) ஐ +பால்

10. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ________ காரணமாக அமைந்தது.

அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை
இ) அச்சுக்கலை ஈ)நுண்கலை

11. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ________ என அழைக்கப்படுகிறது.

அ)கோட்டெழுத்து ஆ)வட்டெழுத்து
இ)சித்திர எழுத்து ஈ)ஓவிய எழுத்து

12. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்- ________

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
இ) வ.உ. சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

13. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள்

அ) இ, ஈ ஆ) உ, ஊ
இ) எ, ஏ ஈ) அ,ஆ

14. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ---------------

அ) மார்பு ஆ) கழுத்து
இ) மூக்கு ஈ) தலை

15. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள்

அ) க், ங் ஆ) ச், ஞ்
இ) ட், ண் ஈ) ப், ம்

16. கீழ் இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து -------------

அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) வ்

17. பொருத்துக

அ) க், ங் - 1) நாவின் இடை,அண்ணத்தின் இடை
ஆ) ச், ஞ் -2)நாவின் நுனி,மேல்வாய்ப்பல்லின் அடி
இ) ட், ண் -3) நாவின் முதல், அண்ணத்தின் அடி
ஈ) த், ந் -4) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

அ) 1 3 4 ஆ) 2 4 1 3
இ) 2 4 3 1 ஈ) 3 1 2 4

## இயல் -2

18.பள்ளிக்குச் சென்று கல்வி ------------------ சிறப்பு

அ) பயிலுதல் ஆ) பார்த்தல்

இ) கெட்டல் ஈ) பாடுதல்

19.செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது

அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

20.“நன்செய்” – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) நன் +செய் ஆ) நன்று + செய்

இ) நன்மை +செய் ஈ) நல் +செய்

21.“நீளுழைப்பு” – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) நீளு +உழைப்பு ஆ)நீண் +உழைப்பு

இ) நீள் +அழைப்பு ஈ)நீள் +உழைப்பு

22.சீருக்கு + ஏற்ப- என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) சீருக்குஏற்ப ஆ) சீருக்கேற்ப

இ) சீர்க்கேற்ப ஈ) சீருகேற்ப

23.ஓடை + ஆட – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) ஓடைஆட ஆ) ஓடையாட

இ) ஓடையோட ஈ) ஓடைவாட

24.வானில் கரு __________ தோன்றினால் மழை பொழியும் என்பர்

அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்

25.முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் __________யும் ஓட்டிவிடும்

அ) பாலனை ஆ) காலனை

இ) அற்றலை ஈ) நலத்தை

26.“விழுந்ததங்கே” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ) விழுந்த +அங்கே ஆ) விழுந்த +ஆங்கே

இ) விழுந்தது+அங்கே ஈ) விழுந்தது +ஆங்கே

27.“செத்திறந்த” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

அ) செ+ திறந்த ஆ) செத்து+ திறந்த

இ) செ + இறந்த ஈ) செத்து + இறந்த

28.பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________

அ) பருத்திஎல்லாம் ஆ)பருத்தியெல்லாம்

இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம்

29.செவ்விந்தியர்கள் நிலத்தைத் __________ மதிக்கின்றனர்

அ) தாயாக ஆ) தந்தையாக

இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

30.“இன்னோசை” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ) இன் +ஓசை ஆ) இனி +ஓசை

இ) இனிமை +ஓசை ஈ) இன் + ஒசை

31.பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________

அ) பால்ஊறும் ஆ) பாலூறும்

இ) பால்லூறும் ஈ) பாஊறும்

32.மாடு வயலில் புல்லை மேய்ந்தது - இத்தொடரிலுள்ள வினைமுற்று

அ) மாடு ஆ) வயல்

இ) புல் ஈ) மேய்ந்தது

33.பின்வருவற்றுள் இறந்தகால வினைமுற்று _____

அ)படித்தான் ஆ)நடக்கிறான்

இ)உண்பான் ஈ)ஓடாது

34.பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல்

அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

35.புகழாலும் பழியாலும் அறியப்படுவது --------

அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை

இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை

36.பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள்

அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்

இ) ஒழுக்கமற்றவர் ஈ)அன்பில்லாதவர்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

37.“வல்லுருவம்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ)வல் + உருவம் ஆ)வன்மை+ உருவம்

இ)வல்ல+ உருவம் ஈ)வல்லு +உருவம்

38.நெடுமை + தேர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர்

இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்

39.**“வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.”**

எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி

அ) எடுத்துக்காட்டு உவமை அணி

ஆ) தற்குறிப்பேற்ற அணி

இ) உவமை அணி

ஈ) உருவக அணி

40. உடல் நலம் என்பது ________ இல்லாமல் வாழ்தல் ஆகும்

அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி

41.நீலகேசி கூறும் நோயின் வகைகள் ________

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

42.“இவையுண்டார்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) இ +யுண்டார் ஆ) இவ் +உண்டார்

இ)இவை +உண்டார் ஈ) இவை +யுண்டார்

43.தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________

அ) தாம்இனி ஆ) தாம்மினி

இ) தாமினி ஈ) தாமனி

44.காந்தியடிகள் ________ போற்ற வாழ்ந்தார்

அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்

45.“நலமெல்லாம்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) நலம் +எல்லாம் ஆ) நலன் +எல்லாம்

இ) நலம் +எலாம் ஈ) நலன் +எலாம்

46.இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________

அ) இடவெங்கும் ஆ) இடம்எங்கும்

இ) இடமெங்கும் ஈ) இடம்மெங்கும்

47.தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு எதை பயன்படுத்தினர்?

அ) தாவரங்களை ஆ) விலங்குகளை

இ) உலோகங்களை ஈ) மருந்துகளை

48.தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ________ நீட்சியாகவே உள்ளது.

அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின்

இ) உணவின் ஈ) வாழ்வின்

49.உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ________

அ) தலைவலி ஆ) காய்ச்சல்

இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு

50.சமையலறையில் செலவிடும் நேரம் ________ செலவிடும் நேரமாகும்.

அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக

இ) நல்வாழ்வுக்காக ஈ) உணவுக்காக

51.முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ________ எனப்படும்.

அ)முற்று ஆ)எச்சம்

இ)முற்றெச்சம் ஈ)வினையெச்சம்

52.கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம்

அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த

53.குறிப்பு வினையெச்சம் ________ வெளிப்படையாகக் காட்டாது

அ) காலத்தை ஆ) வினையை

இ) பண்பினை ஈ) பெயரை

54.**பொருத்துக**

| | | |
|---|---|---|
| அ) நடந்தது | -1) | முற்றெச்சம் |
| ஆ) பேசிய | -2) | குறிப்புபெயரெச்சம் |
| இ) எடுத்தனன் உண்டான் | -3) | பெயரெச்சம் |
| ஈ) பெரிய | -4) | வினையெச்சம் |

அ) 4 3 1 2 ஆ) 4 3 2 1

இ) 3 4 1 2 ஈ) 1 2 4 3

## இயல் - 4

55.கற்றவருக்கு அழகு தருவது

அ) தங்கம் ஆ) வெள்ளி

இ) வைரம் ஈ) கல்வி

56."கலனல்லால்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) கலன் + அல்லால் ஆ) கலம் + அல்லால்

இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்

57.என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் ________ இன்றி வாழ்ந்தார்

அ) சோம்பல் ஆ) அகம்பாவம்

இ) வருத்தம் ஈ) வெகுளி

58."கோயிலப்பா" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) கோ +அப்பா ஆ) கோயில் +லப்பா

இ) கோயில் +அப்பா ஈ) கோ +இல்லப்பா

59.பகைவன்+என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) பகைவென்றாலும் ஆ) பகைவனென்றாலும்

இ) பகைவன்வென்றாலும் ஈ) பகைவனின்றாலும்

60.அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது

அ) விளக்கு ஆ) கல்வி

இ) விளையாட்டு ஈ) பாட்டு

61.கல்விப் பயிற்சிக்குரிய பருவம்

அ) இளமை ஆ) முதுமை

இ) நேர்மை ஈ) வாய்மை

62.இன்றைய கல்வி ________ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

அ) வீட்டில் ஆ) நாட்டில்

இ) பள்ளியில் ஈ) தொழிலில்

63.**பொருத்துக**

அ) இயற்கை ஓவியம் -1) சிந்தாமணி

ஆ) இயற்கை தவம் - 2) பெரியபுராணம்

இ) இயற்கைப் பரிணாமம் -3) பத்துப்பாட்டு

ஈ) இயற்கை அன்பு -4) கம்பராமாயணம்

அ) 1 2 3 4 ஆ) 1 3 4 2

இ) 3 1 4 2 ஈ) 3 1 2 4

64.பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ________ ஆகும்.

அ) எழுவாய் ஆ) செய்ப்படுபொருள்

இ) பயனிலை ஈ) வேற்றுமை

65.எட்டாம் வேற்றுமை ________ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்

இ) விளி ஈ) பயனிலை

66.உடனிகழ்ச்சிப் பொருளில் ________ வேற்றுமை வரும்

அ) மூன்றாம் ஆ) நான்காம்

இ) ஐந்தாம் ஈ) ஆறாம்

67."அறத்தான் வருவதே இன்பம்" - இத்தொடரில் ________ வேற்றுமை பயின்று வந்தள்ளது

அ) இரண்டாம் ஆ) மூன்றாம்

இ) ஆறாம் ஈ) ஏழாம்

68."மலர் பானையை வனைந்தாள்" - இத்தொடர் ________ பொருளைக் குறிக்கிறது.

அ) ஆக்கல் ஆ) அழித்தல்

இ) கொடை ஈ) அடைதல்

69.**பொருத்துக**

அ) மூன்றாம் வேற்றுமை -1)இராமனுக்குத் தம்பி இலக்குவன்

ஆ) நான்காம் வேற்றுமை -2) பாரியினது தேர்

இ) ஐந்தாம் வேற்றுமை -3)மண்ணால் குதிரை செய்தான்

ஈ) ஆறாம் வேற்றுமை -4)ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்

அ) 1 2 3 4 ஆ) 1 3 4 2

இ) 3 1 4 2 ஈ) 3 1 2 4

## இயல் - 5

70.காட்டிலிருந்து வந்த ________ கரும்பைத் தின்றன.

அ) முகில்கள் ஆ) முழவுகள்

இ) வேழங்கள் ஈ) வேய்கள்

71.“கனகச் சுனை” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) கனகச் + சுனை ஆ) கனக + சுனை

இ) கனகம் + சுனை ஈ) கனகம் + சுனை

72.முழவு+அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________

அ) முழவுதிர ஆ) முழவுதிரை

இ) முழவதிர ஈ) முழவுதிர

73.பசியால் வாடும் _________ உணவளித்தல் நமது கடமை

அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு

இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவர்க்கு

74.நம்மை _________-ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்

அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை

இ) புகழ்வாரை ஈ) மகழ்வாரை

75.மறைபொருளைக் காத்தல் _________ எனப்படும்

அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) நிறை

76.“பாடறிந்து” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பாட் + அறிந்து ஆ) பா + அறிந்து

இ) பாடு + அறிந்து ஈ) பாட்டு +அறிந்து

77.முறை +எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) முறையப்படுவது ஆ) முறையெனப்படுவது

இ) முறைஎனப்படுவது ஈ) முறைப்படுவது

78.பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தன _________

அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்

இ) பனையோலைகள் ஈ)மண்பாண்டங்கள்

79.பானை _________ ஒரு சிறந்த கலையாகும்

அ) செய்தல் ஆ) வனைதல்

இ) முடைதல் ஈ) சுடுதல்

80.“மட்டுமல்ல” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ)மட்டு + மல்ல ஆ)மாட்டம் + அல்ல

இ)மட்டு + அல்ல ஈ)மட்டும் + அல்ல

81.கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில்

இ) கயிறுகட்டில் ஈ) கயிற்றின்கட்டில்

82.சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது

அ) வேற்றுமைத்தொகை

ஆ) உம்மைத்தொகை

இ) உவமைத்தொகை

ஈ) அன்மொழித்தொகை

83.“செம்மரம்” என்னும் சொல் _______த் தொகை

அ) வினை ஆ) பண்பு

இ) அன்மொழி ஈ) உம்மை

84.கண்ணா வா- என்பது _________ த் தொடர்

அ) எழுவாய் ஆ) விளி

இ) வினைமுற்று ஈ) வேற்றுமை

85.**பொருத்துக**

அ) பெயரெச்சத் தொடர் -1)கார்குழலி படித்தாள்

ஆ) வினையெச்சத் தொடர் -2)புலவரே வருக

இ) வினைமுற்றுத் தொடர் -3)பாடி முத்தான்

ஈ) எழுவாய்த் தொடர் -4)எழுதிய பாடல்

உ) விளித்தொடர் -5)வென்றான் சோழன்

அ) 4 3 5 1 2 ஆ) 1 2 3 4 5

இ) 4 3 5 2 1 ஈ) 5 4 3 2 1

86.அரசரை அவரது _________ காப்பாற்றும்

அ)செங்கோல் ஆ)வெண்கொற்றக்குடை

இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படைவலிமை

87.சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் _________ தகுதி அறிந்து பேச வேண்டும்

அ) சொல்லின் ஆ) அவையின்

இ) பொருளின் ஈ) பாடலின்

88.“கண்ணோடாது” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) கண் + ஓடாது ஆ) கண் + ணோடாது

இ) க + ஓடாது ஈ)கண்ணோ + ஆடாது

## இயல் -6

89.தோட்டத்தில் தம்பி ஊன்றிய -------------- எல்லாம் முளைத்தன

அ) சத்துகள் ஆ) பித்துகள்

இ)முத்துகள் ஈ) வித்துகள்

90.என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு ------- ------ பெருகிற்று

அ) காரி ஆ) ஓரி

இ) வாரி ஈ) பாரி

91.“அக்களத்து” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) அ + களத்து ஆ) அக் + களத்து

இ) அக்க +அளத்து ஈ) அம் + களத்து

92.கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது

அ) கதிரென ஆ) கதியீன

இ) கதிரீன ஈ) கதிரின்ன

93.கனத்த மழை என்னும் சொல்லின் பொருள்

அ) பெருமழை ஆ) சிறு மழை

இ) எடைமிகுந்த ஈ) எடைகுறைந்த மழை

94.“வாசலெல்லாம்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) வாசல் +எல்லாம் ஆ) வாசல் +எலாம்

இ) வாசம் +எல்லாம் ஈ) வாசு + எல்லாம்

95.“பெற்றெடுத்தோம்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பெறு + எடுத்தோம்

ஆ) பேறு + எடுத்தோம்

இ) பெற்ற + எடுத்தோம்

ஈ) பெற்று +எடுத்தோம்

96. கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) கால்லிறங்கி ஆ) காலிறங்கி

இ) கால்இறங்கி ஈ) கால்றங்கி

97. “வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு’ என்று குறிப்பிடும் நூல்

அ) தொல்காப்பியம் ஆ) அகநானூறு

இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்

98. சேரர்களின் தலைநகரம்

அ) காஞ்சி ஆ) வஞ்சி

இ) தொண்டி ஈ) முசிறி

99. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது

அ) புல் ஆ) நெல் இ) உப்பு ஈ) மிளகு

100. ஆன் பொருநை என்று அழைக்கப்படும் ஆறு

அ) காவிரி ஆ) பவானி

இ) நொய்யல் ஈ) அமராவதி

101. வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்

அ) நீலகிரி ஆ) கரூர்

இ) கோயம்பத்தூர் ஈ) திண்டுக்கல்

102. விகாரப் புணர்ச்சி ------------------ வகைப்படும்

அ) ஐந்து ஆ) நான்கு

இ) மூன்று ஈ) இரண்டு

103. “பாலாடை” இச்சொல்லுக்குரிய புணர்ச்சி

அ) இயல்பு ஆ) தோன்றல்

இ) திரிதல் ஈ) கெடுதல்

104. **பொருத்துக**

அ) மட்பாண்டம் - 1) தோன்றல் விகாரம்

ஆ) மரவேர் - 2) இயல்புப் புணர்ச்சி

இ) மணிமுடி - 3) கெடுதல் விகாரம்

ஈ) கடைத்தெரு - 4) திரிதல் விகாரம்

அ) 1 2 3 4 ஆ) 2 3 4 1

இ) 4 3 2 1 ஈ) 3 4 1 2

## இயல் - 7

105. சிங்கம் __________யில் வாழும்

அ) மாயை ஆ) ஊழி இ) முழை ஈ) அலை

106. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு

அ) வீரம் ஆ) அச்சம்

இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

107. “வெங்கரி” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) வெம் + கரி ஆ) வெம்மை +கரி

இ) வெண் +கரி ஈ) வெங் +கரி

108. “என்றிருள்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) என் +இருள் ஆ) எட்டு +இருள்

இ) என்ற +இருள் ஈ) என்று +இருள்

109. போல் + உடன்றன என்பதனைச் சோத்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) போன்றன ஆ) போலன்றன

இ) போலுடன்றன ஈ) போல்உடன்றன

110. வானில் முழுநிலவு அழகாகத் __________ அளித்தது

அ) தயவு ஆ) தரிசனம்

இ) துணிவு ஈ) தயக்கம்

111. இந்த __________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு

அ) வையம் ஆ) வானம்

இ) ஆழி ஈ) கானகம்

112. “சீவனில்லாமல்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) சீவ + நில்லாமல்

ஆ) சீவன் + நில்லாமல்

இ) சீவன் + இல்லாமல்

ஈ) விலங்கு + ஒடித்து

113. காட்டை +எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ----------

அ) காட்டைஎரித்து ஆ) காட்டையெரித்து

இ) காடுஎரித்து ஈ) காடுயெரித்து

114. இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) இதந்தரும் ஆ) இதம்தரும்

இ) இதத்தரும் ஈ) இதைத்தரும்

115. எம்.ஜி.ஆர் __________ என்னும் ஊரில் கல்வி பயின்றார்

அ) கண்டி ஆ)கும்பகோணம்

இ)சென்னை ஈ) மதுரை

116. எம்.ஜி.ஆர் படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம்

அ) நடிப்பு ஆர்வம் ஆ) பள்ளி இல்லாமை

இ)குடும்ப வறுமை ஈ) படிப்பில் ஆர்வமில்லாமை

117. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான __________ எனும் பட்டத்தை எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வழங்கியது

அ) புரட்சித்தலைவர் ஆ) பாரத்

இ) பாரத மாமணி ஈ) புரட்சி நடிகர்

118. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம்

அ) திருச்சி ஆ) சென்னை

இ) மதுரை ஈ) கோவை

119. எம்.ஜி.ஆர் அவர்களுக்கு அழியாத புகழைத் தேடித்தந்த திட்டம்

அ) மதிய உணவுத் திட்டம்

ஆ) வீட்டு வசதித் திட்டம்

இ) மகளிரி நலன் திட்டம்

ஈ) இலவசக் காலணித் திட்டம்

## இயல் -8

120. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் __________க் கண்டு அஞ்சமாட்டார்கள்.

அ) புலனை ஆ) அறனை

இ) நமனை ஈ) பலனை

121. ஒன்றே __________ என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.

அ) குலம் ஆ) குளம்



Padasalai.Net

இ) குணம் ஈ) குடம்

122. “நமனில்லை” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ)நம் +இல்லை ஆ) நமது +இல்லை

இ) நமன் + நில்லை ஈ) நமன் + இல்லை

123. நம்பர்க்கு+அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) நம்பரங்கு ஆ) நம்மார்க்கு

இ) நம்பர்க்கங்கு ஈ) நம்பங்கு

124. மனிதர்கள் தம் _________ தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்

அ) ஐந்திணைகளை ஆ) அறுசுவைகளை

இ) நாற்றிசைகளை ஈ) ஐம்பொறிகளை

125. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம்---

அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர்

இ) சிறந்தனர் ஈ) துறந்தனர்

126. “ஆனந்தவெள்ளம்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) ஆனந்த + வெள்ளம்

ஆ) ஆனந்தன் + வெள்ளம்

இ) ஆனந்தம் + வெள்ளம்

ஈ) ஆனந்தர் + வெள்ளம்

127. உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும்

இ) உளிருக்கும் ஈ) உளருக்கும்

128. அயோத்திதாசர் _____ சமூகச் சீர்த்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

அ) தமிழக ஆ) இந்திய

இ) தென்னிந்திய ஈ) ஆகிய

129. அயோத்திதாசர் நடத்திய இதழ்

அ) ஒருபைசாத் தமிழன்

ஆ) காலணாத் தமிழன்

இ)அரைப்பைசாத் தமிழன்

ஈ) அரையணாத் தமிழன்

130. கல்வியோடு _________ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.

அ) சிலம்பமும் ஆ) கைத்தொழிலும்

இ) கணிப்பொறியும் ஈ) போர்த்தொழிலும்

131. அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது அவரது

அ) ஆழ்ந்த படிப்பு

ஆ) வெளிநாட்டுப்பயணம்.

இ) இதழியல் பட்டறிவு

ஈ)மொழிப்புலமை

132. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது

அ) வானம் ஆ) கடல்

இ) மழை ஈ) கதிரவன்

133. அசை _________ வகைப்படும்

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து

134. விடும் என்பது _________ சீர்

அ) நேரசை ஆ) நிரையசை

இ) மூவசை ஈ) நாலசை

135. அடி _________ வகைப்படும்

அ) இரண்டு ஆ) நான்கு

இ) எட்டு ஈ) ஐந்து

136. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ______

அ) எதுகை ஆ) இயைபு

இ) அந்தாதி ஈ) மோனை

137. **பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| அ) வெண்பா | - | 1) | துள்ளல் ஓசை |
| ஆ) ஆசிரியப்பா | - | 2) | செப்பலோசை |
| இ) கலிப்பா | - | 3) | தூங்கலோசை |
| ஈ) வஞ்சிப்பா | - | 4) | அகவலோசை |

அ) 1 2 3 4 ஆ) 2 3 4 1

இ) 3 4 1 2 ஈ) 2 4 1 3

138. ஆண்மையின் கூர்மை _________

அ) வறியவருக்கு உதவுதல்

ஆ) பகைவருக்கு உதவுதல்

இ) நண்பனுக்கு உதவுதல்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com , Whatsapp No: 7358965593

ஈ) உறவினருக்கு உதவுதல்

139. வறுமை வந்த காலத்தில் ________ குறையாமல் வாழ வேண்டும்

அ) இன்பம் ஆ) தூக்கம்

இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

## இயல் -9

140. அடுத்தவர் வாழ்வைக் கண்டு ________ கொள்ளக்கூடாது

அ) உவகை ஆ) நிறை

இ) அழுக்காறு ஈ) இன்பம்

141. நாம் நீக்க வேண்டியவற்றுள் ஒன்று --------------

அ) பொச்சாப்பு ஆ) துணிவு

இ) மானம் ஈ) எளிமை

142. "இன்பதுன்பம்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) இன்பம் + துன்பம் ஆ) இன்பம் + துன்பம்

இ) இன்ப + அன்பம் ஈ) இன்ப +அன்பு

143. குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) குணங்கள் எல்லாம்

ஆ) குணமெல்லாம்

இ) குணங்களில்லாம்

ஈ) குணங்களெல்லாம்

144. **பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| அ) நிறை | - | 1) | பொறுமை |
| ஆ) பொறை | - | 2) | விருப்பம் |
| இ) மதம் | - | 3) | மேன்மை |
| ஈ) மையல் | - | 4) | கொள்கை |

அ) 3 1 4 2 ஆ) 1 2 3 4

இ) 4 3 2 1 ஈ) 2 4 1 3

145. உன்னுடன் நீயே ________ கொள்

அ) சேர்ந்து ஆ) பகை

இ) கைகுலுக்கிக் ஈ) நட்பு

146. கவலைகள் ________ அல்ல

அ) சுமைகள் ஆ) சுவைகள்

இ) துன்பங்கள் ஈ) கைக்குழந்தைகள்

147. "விழித்தெழும்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) விழி +எழும் ஆ) விழித்து + எழும்

இ) விழி + தெழும் ஈ) விழித் + தெழும்

148. "போவதில்லை" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) போவது+ இல்லை ஆ) போ +இல்லை

இ) போவது +தில்லை ஈ) போவது+ தில்லை

149. "படுக்கையாகிறது" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) படுக்கை + யாகிறது

ஆ) படுக்கையா +ஆகிறது

இ) படக்கையா +கிறது

ஈ) படுக்கை +ஆகிறது

150. தூக்கி+கொண்டு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) தூக்கிகொண்டு ஆ) தூக்குக்கொண்டு

இ) தூக்கிக்கொண்டு ஈ) தூக்குகொண்டு

151. விழித்து + எழும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) விழியெழும் ஆ) விழித்தெழும்

இ) விழித்தழும் ஈ) விழித்துஎழும்

152. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்

அ) இராதகிருட்டிணன் ஆ) அம்பேத்கர்

இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

153. பூனா ஒப்பந்தம் ______ மாற்ற ஏற்படுத்தபட்டது

அ) சொத்துரிமையை

ஆ) பேச்சுரிமையை

இ) எழுத்துரிமையை

ஈ) இரட்டை வாக்குரிமையை

154. சமத்துவச் சமுதாயம் அமைய அம்பேத்கர் ஏற்படுத்திய இயக்கம்

அ) சமாஜ் சமாத சங்கம்

ஆ) சமாத சமாஜ பேரவை

இ) தீண்டாமை ஒழிப்புப் பேரவை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

ஈ) மக்கள் நல இயக்கம்

155. அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு _________ விருது வழங்கியது.

அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா

இ) பத்மவிபூசண் ஈ) பத்மபூசன்

156. பிறிது மொழிதல் அணியில் _________ மட்டும் இடம்பெறும்

அ) உவமை ஆ) உவமேயம்

இ) தொடை ஈ)சந்தம்

157. இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் கூறுவது _________ அணி

அ) ஒற்றுமை ஆ) வேற்றுமை

இ) சிலேடை ஈ) இரட்டுற மொழிதல்

158. ஒரே செய்யுளை இருபொருள் படும்படி பாடுவது _________ அணி

அ) பிறிது மொழிதல் ஆ) இரட்டுறமொழிதல்

இ) உவமை ஈ) சிலேடை

## விடை குறிப்பு

| No | key | No | key | No | key | No. | key |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | A | 41. | B | 81. | A | 121. | A |
| 2. | B | 42. | C | 82. | A | 122. | D |
| 3. | C | 43. | A | 83. | B | 123. | C |
| 4. | C | 44. | B | 84. | B | 124. | D |
| 5. | B | 45. | A | 85. | A | 125. | A |
| 6. | B | 46. | C | 86. | C | 126. | A |
| 7. | A | 47. | A | 87. | B | 127. | B |
| 8. | A | 48. | C | 88. | A | 128. | C |
| 9. | B | 49. | D | 89. | D | 129. | A |
| 10. | C | 50. | C | 90. | C | 130. | B |
| 11. | D | 51. | B | 91. | A | 131. | A |
| 12. | B | 52. | D | 92. | C | 132. | C |
| 13. | B | 53. | A | 93. | A | 133. | A |
| 14. | D | 54. | A | 94. | A | 134. | B |
| 15. | C | 55. | D | 95. | D | 135. | D |
| 16. | D | 56. | C | 96. | B | 136. | D |
| 17. | B | 57. | D | 97. | A | 137. | D |
| 18. | A | 58. | C | 98. | B | 138. | B |
| 19. | B | 59. | B | 99. | B | 139. | C |
| 20. | C | 60. | B | 100. | D | 140. | C |
| 21. | D | 61. | A | 101. | C | 141. | A |
| 22. | B | 62. | D | 102. | C | 142. | B |
| 23. | B | 63. | C | 103. | D | 143. | D |
| 24. | A | 64. | D | 104. | C | 144. | A |
| 25. | B | 65. | C | 105. | C | 145. | C |
| 26. | C | 66. | A | 106. | B | 146. | D |
| 27. | D | 67. | B | 107. | B | 147. | B |
| 28. | B | 68. | A | 108. | D | 148. | A |
| 29. | A | 69. | C | 109. | C | 149. | D |
| 30. | C | 70. | C | 110. | B | 150. | C |
| 31. | B | 71. | C | 111. | A | 151. | B |
| 32. | D | 72. | C | 112. | C | 152. | B |
| 33. | A | 73. | B | 113. | B | 153. | D |
| 34. | B | 74. | A | 114. | A | 154. | A |
| 35. | C | 75. | D | 115. | B | 155. | B |
| 36. | B | 76. | C | 116. | C | 156. | A |
| 37. | B | 77. | B | 117. | B | 157. | B |
| 38. | B | 78. | C | 118. | C | 158. | B |
| 39. | C | 79. | B | 119. | A | -- | -- |
| 40. | C | 80. | D | 120. | C | -- | -- |

Padasalai.Net
Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com, Whatsapp No: 7358965593

# ஒன்பதாம் வகுப்பு

## கவிதைப்பேழை

இயல் - 1

### தமிழோவியம் - ஈரோடு தமிழன்பன்

**காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்தக்**
**காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!**

**அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை**
**அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்**
**நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் - உன்**
**நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்!**

**-ஈரோடு தமிழன்பன்**

- ஈரோடு தமிழன்பன் எழுதிய "தமிழோவியம்" என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கவிதை இது.
- "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை"- ஈரோடு தமிழன்பன்.
- புதுக்கவிதை, சிறுகதை, ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.
- 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.
- தமிழன்பன் கவிதைகள் தமிழக அரசின் பரிசுபெற்ற நூல்
- இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**தெரிந்து கொவோம்**

இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்
- பிங்கல நிகண்டு

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்
- பாரதியார்

உலகத்தாய்மொழி நாள் பிப்ரவரி 21

தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் இலங்கை, சிங்கப்பூர்.

### தமிழ்விடு தூது

**தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான**
**முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்**

**உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்**
**விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்**

**குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு**
**உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்**

**வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்**
**சிந்து என்று சொல்லிய நாச்சிந்துமே**

- மூன்றினம் - துறை, தாழிசை, விருத்தம் (வயலின் மடைகள்)

**முக்குணம்**

1. சத்துவம் - அமைதி, மேன்மை
2. இராசசம் - போர், தீவிரமான செயல்களைக் குறிக்கும் குணம்.
3. தாமசம் - சோம்பல், தாழ்மை.

- வண்ணங்கள் ஐந்து - வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை
- வண்ணம் நூறு - குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு.
- ஊனரசம் - குறையுடைய சுவை
- நவரசம் - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை சமநிலை ஆகிய ஒன்பது சுவை
- வனப்பு - அழகு அம்மை, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகியன.

**தெரிந்து கொள்வோம்.**

- **கண்ணி** -இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். அதே போல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

www.Padasalai.Net www.CBSEtips.in



- வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள்கூட சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள்.
- பத்துக்குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி ஆகிய பத்து குணங்களைத் தமிழ் பெற்றுள்ளது.
- நாவின்மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை. நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்.

முத்திக்கனி - உருவகம்

தெள்ளமுது - பண்புத்தொகை

சிந்தாமணி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## நூல்வெளி

- தமிழ் சிற்றிலக்கிய வகைகளில் ‘தூது’ இலக்கியம் ‘வாயில் இலக்கியம்’ ‘சந்து இலக்கியம்’ என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.
- அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் ‘கலிவெண்பா’ வால் இயற்றப்படுவதாகும்.
- தமிழ்விடு தூது மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல்கொண்ட பெண் ஒருத்தி. தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது.
- இந்நூலை 1930இல் உ.வே.சா முதன் முதலில்பதிப்பித்தார். இதன் ஆசிரியர் யார் என அறிந்துகொள்ள இயலவில்லை.

**“காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும்**

**மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும்”**

**- கவியோகி சுத்தானந்த பாரதியார்.**

# இயல் - 2
# பட்ட மரம்

**மொட்டைக் கிளையொடு**

**நின்று தினம் பெரு**

**மூச்சு விடும்மரமே!**

**வெட்டப் படும் ஒரு**

**நாள்வரு மென்று விசனம்**

**அடைந்தனையோ?**

**–கவிஞர் தமிழ்ஒளி**

## சொல்லும் பொருளும்

- கந்தம் - மணம்
- விசனம் - கவலை
- மிசை - மேடு

## நூல்வெளி

- கவிஞர் தமிழ்ஒளி புதுவையில் பிறந்தவர். (1924 – 1965)
- பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர். நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மேதினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவிகாவியம் ஆகியவவை இவரின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கதாகும்.

## இலக்கணக் குறிப்பு

- வெறுங்கனவு - பண்புத்தொகை
- ஆடுங்கிளை - பெயரெச்சத்தொடர்
- மூடுபனி - வினைத்தொகை



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## பெரியபுராணம்

- காவிரியின் பாதையெல்லாம் பூவிரியும் கோலத்தை அழகாக விவரித்துரைக்கிறது பெரியபுராணம்.

**காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு**
**மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை**
**கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன**
**நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்**

**- பெரியபுராணம்.**

### சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| வாவி | - | பொய்கை |
| வளர்முதல் | - | நெற்பயிர் |
| தரளம் | - | முத்து |
| பணிலம் | - | சங்கு |
| வரம்பு | - | வரப்பு |
| கழை | – | கரும்பு |
| கா | – | சோலை |
| குழை | – | சிறுகிளை |
| அரும்பு | – | மலர் மொட்டு |
| மாடு | – | பக்கம் |
| கோடு | - | குளக்கரை |
| மேதி | - | எருமை |
| வேரி | - | தேன் |
| பகடு | - | எருமைக்கிடா |
| நாளிகேரம் | - | தென்னை |
| கோளி | - | அரசமரம் |
| சாலம் | - | ஆச்சாமரம் |
| தமாலம் | - | பச்சிலைமரம் |
| இரும்போந்து | - | பருத்தபனைமரம் |
| சந்து | - | சந்தனமரம் |
| நாகம் | - | நாகமரம் |
| காஞ்சி | - | ஆற்றுப்பூவரசு |

### இலக்கண குறிப்பு

- கருங்குவளை, செந்நெல் - பண்புத்தொகை
- விரிமலர் - வினைத்தொகை
- தடவரை - உரிச்சொல் தொடர்

### நூல்வெளி

- சுந்தரரின் திருத்தொண்டத்தொகை அடியவர் பெருமையை ஓர் அடியில் கூறுகிறது.
- இதைச் சிறிது விரித்து நம்பியாண்டார் நம்பியால் எழுதப்பட்ட திருத்தொண்டர் திருவந்தாதி ஒவ்வொரு பாடலிலும் அவ்வடியார்களின் சிறப்பைக் கூறுவதாக அமைந்துள்ளது.
- இந்த இரண்டு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு சேக்கிழாரால் ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வோர் அடியாராக அறுபத்துமூவரின் சிறப்புகளை விளக்கி பாடப்பட்டது திருத்தொண்டர் புராணம்.
- இதன் பெருமை காரணமாக இது பெரியபுராணம் என்று அழைக்கப்படுகிறது.
- கி.பி.12ஆம் நூற்றாண்டை சோழ அரசன் இரண்டாம் குலோத்துங்கன் அவையில் சேக்கிழார் முதலமைச்சராக இருந்தார். ‘பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ’ என்று இவரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பாராட்டுகிறார்.
- வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம் கானலின் நீரோ?

–பாரதியார்.

### புறநானூறு

- நீர்நிலைகளை உருவாக்குபவர்களை ‘உயிரை உருவாக்குபவர்கள்’. என்று போற்றினர்.

Padasalai.Net

**நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்.**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரோ**
**நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே!**

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது

திணை : பொதுவியல்

துறை : பொருண் மொழிக்காஞ்சி

## பொதுவியல் திணை

- வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளையும் முன்னர் விளக்கப்படாத செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.

## பொருண்மொழிக்காஞ்சித் துறை:

- சான்றோர் தெளிவாய் ஆராய்ந்து தெளிந்த பொருள்களைப் பிறர்க்குப் பயன்படுமாறு எடுத்துரைப்பது. - பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும்.

## சொல்லும் பொருளும்

- யாக்கை – உடம்பு
- தாட்கு – முயற்சி,ஆளுமை

## நூல்வெளி

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு.
- பண்டைய வேந்தர்களின் வீரம், வெற்றி, கொடை குறித்தும் குறுநில மன்னர்கள், புலவர்கள், சான்றோர்கள் உள்ளிட்டவர்களின் பெருமைகளைப் பற்றியும் அன்றைய மக்களின் புறவாழ்க்கையைப் பற்றியும் கூறுகிறது.
- பண்டைத் தமிழர்களின் அரிய வரலாற்றுச்செய்திகள் அடங்கிய பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கிறது.
- குளம்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்து
  உளம்தொட்டு உழுவயல் ஆக்கி
  – **சிறுபஞ்சமூலம்.**

## புறநானூற்று பாடல் வரிகள்

- உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே (புறம்-18)
- உண்பது நாழி உடுப்பவை இரண்டே (புறம்- 189)
- யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறம் - 192)
- சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே (புறம் - 312)
- நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே.
- ஊற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்.
- பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே (புறம் - 183)

## இயல் -3
## மணிமேகலை
## – சீத்தலைச் சாத்தனார்

**மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்**
**இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டும்**
**சமயக் கணக்கரும் தந்துறை போகிய**
**அமயக் கணக்கரும் அகலா ராகிக்**

## சொல்லும் பொருளும்

- சமயக் கணக்கர் - சமயத் தத்துவவாதிகள்
- பாடைமாக்கள் - பல மொழி பேசும் மக்கள்
- கோட்டி - மன்றம்
- பொலம் - பொன்
- வேதிகை - திண்ணை
- தூணம் - தூண்
- தாமம் - மாலை

www.Padasalai.Net www.CBSEtips.in


- விலோதம் - துணியாலான கொடி
  - வசி - மழை
  - செற்றம் - சினம்
  - கலாம் - போர்
- துருத்தி - ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவே இருக்கும் மணல்திட்டு)
- புகார் நகரோடு அதிகம் தொடர்புடையதாகத் திகழ்ந்த இந்திரவிழா சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் விவரிக்கப்படுகிறது.
- தொடர்நிலைச் செய்யுள் வரிசையில் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் தமிழ் மக்களின் வாழ்வியலைச் சொல்லும் கருவூலங்களாகத் திகழ்கின்றன.
- மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு.

**ஐம்பெருங்குழு**

1. அமைச்சர்
2. சடங்கு செய்விப்போர்
3. படைத்தலைவர்
4. தூதர்
5. சாரணர் (ஒற்றர்)

**எண்பேராயம்**

1. கரணத்தியலவர்
2. கருமவிதிகள்
3. கனகச்சுற்றம்
4. கடைக்காப்பாளர்
5. நகரமாந்தர்
6. படைத்தலைவர்
7. யானை வீரர்
8. இவுளி மறவர்

- பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம். பண்பாட்டுக் கூறுகளைக் காட்டும் தமிழ்க்காப்பியம்.
- சொற்சுவையும் பொருட்சுவையும் இயற்கை வருணனைகளும் நிறைந்தது. பௌத்த சமயச் சார்புடையது. முப்பது காதைகளாக அமைந்துள்ள மணிமேகலையின் முதல் காதையே விழாவறை காதை.
- மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர். கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். சாத்தன் என்பது இவரது இயற்பெயர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்.
- இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவர் என்பர். தண்டமிழ் ஆசான். சாத்தன். நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.

> **அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்**
> **மறவாது இதுகேள்! - மணிமேகலை**

## திருக்குறள்

### பொறையுடைமை

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

**- உவமையணி**

**பொருள்:** தன்னைத் தோன்டுபவரைத் தாங்கும் நிலம் போலத் தன்னை இகழ்வரைப் பொறுப்பது தலைசிறந்தது.

2. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

**பொருள்:** பிறர் தனக்குத் தரக்கூடாத துன்பத்தைத் தந்தாலும் மனம் நொந்து அறம் அல்லாத செயல்களைச் செய்யமலிருப்பதே நன்றாம்.

3. மிகுதியான்’ மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

**பொருள்:** செருக்கினால் துன்பம் தந்தவரை நம்முடைய பொறுமையால் வெல்ல வேண்டும்.

### தீவினை அச்சம்

4. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்.

பொருள்: தீயவை தீயவற்றையே தருதலால் தீயைவிடக் கொடியதாகக் கருதி அவற்றைச் செய்ய அஞ்சவேண்டும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

5. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

**பொருள்:** மறந்தும் கூடப் பிறருக்குக் கெடுதல் செய்ய நினைக்கக் கூடாது. நினைத்தால், நினைத்தவருக்குக் கெடுதல் செய்ய அறம் நினைக்கும்.

**கேள்வி**

6. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.''

**- சொற்பொருள் பின்வருநிலையணி**

**பொருள்:** செல்வத்தில் சிறந்ததுசெவியால் கேட்டறியும் கேள்விச் செல்வம். அது பிற வழிகளில் வரும் செல்வங்களைவிடத் தலைசிறந்தது.

7. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

**பொருள்:** எவ்வளவு சிறிதானாலும் நல்லவற்றைக் கேட்டால், கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்.

8. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

**பொருள்:** நுட்பமான கேள்வியறிவு இல்லாதவர் அடக்கமான சொற்களைப் பேசுவது அரிது.

9. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவயினும் வாழினும் என்.

**பொருள்:** கேட்பதன் சுவையை உணராமல் நாவின் சுவை மட்டும் உணர்பவர் இறந்தால்தான் என்ன! இருந்தால்தான் என்ன!

**தெரிந்துதெளிதல்**

10. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

**- சொற்பொருள் பின்வருநிலையணி**

**பொருள்:** ஒருவரின் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் மிகுதியானதைக் கொண்டு அவரைப் பற்றி முடிவு செய்க.

11.பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்''

**- ஏகதேச உருவக அணி**

**பொருள்:** ஒருவரின் பெருமைக்கும் சிறுமைக்கும் அவரது செயல்பாடுகளே ஆராய்ந்து அறியும் உரைகல் ஆகும்.

12. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயறவும்
தீரா இடும்பை தரும்.

**பொருள்:** ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும் அவ்வாறு தேர்வு செய்தபின் அவரைப் பற்றி ஐயப்படுதலும் தீராத துன்பம் தரும்.

**ஒற்றாடல்**

13. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

**பொருள்:** ஒற்றர் ஒருவர் சொன்ன செய்தியை மற்றோர் ஒற்றரால் அறிந்து முடிவு செய்க.

**வினைத்தூய்மை**

14. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

**பொருள்:** வாழ்வில் உயர நினைப்பவர் புகழைக் கெடுக்கும் செயல்களைப் புறம் தள்ளவேண்டும்.

15. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

பொருள்: தாயின் பசியைக் கண்டபோதும் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யாதே.

16. சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமணி
கலத்துநீர் பெய்திரீஇ யற்று

**– உவமையணி**

**பொருள்:** தீய செயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தல் கூடாத மண்கலத்தில் நீருற்றி வைப்பதைப் போன்றது.

**பழைமை**

17. விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

**பொருள்:** நட்பின் உரிமையில் தம்மைக் கேட்காமலேயே ஒரு செயலைச் செய்தாலும் நட்பு பாராட்டுவோர் விருப்பத்தோடு அச்செயலுக்கு உடன்படுவர்.

**தீ நட்பு**

18. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

**பொருள்:** செயல் வேறு, சொல் வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.

**பேதைமை**

19. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

**பொருள்:** தகாத செயலுக்கு வெட்கப்படாமை, தக்கவற்றை நாடாமை, பிறரிடம் அன்பு

Padasalai.Net

இல்லாதமை, ஏதொன்றையும் பாதுகாக்காமை ஆகியவை பேதையின் செயல்கள்.

20. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையின் பேதையார் இல்.

**பொருள்:** படித்தும் படித்ததை உணர்ந்தும் உணர்ந்ததை மற்றவருக்குக் கூறியும் தான் அதன்படி செயல்படாத பேதையைப் போலப் பேதை யாருமில்லை.

## நூல்வெளி

- உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல் திருக்குறள் இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை இந்நூல்.
- இது முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் பதின்மரால் திருக்குறளுக்கு உரை எழுதப்பெற்றது.
- அதில் பரிமேலழகர் உரையே சிறந்தது. குறளைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலை.
- வள்ளுவருக்கு நாயனார்,தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி செந்நாப்போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

### திருக்குறள் பற்றிய சில ஆராய்ச்சிச் செய்திகள்

- திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.
- திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது.
- திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் **- அனிச்சம், குவளை**
- திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் **- நெருஞ்சிப்பழம்**
- திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை **- குன்றிமணி**
- திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் **- குறிப்பறிதல்**
- திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் **- பனை, மூங்கில்**
- திருக்குறள் நூலை முதன் முதலில் அச்சிட்டவர் **- தஞ்சை ஞானப்பிரகாசர்**
- திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் **- மணக்குடவர்**
- திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழு இடங்களில் இடம்பெற்றுள்ளது.
- ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.
- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் - **ஜி.யு.போப்**
- திருக்குறள் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் வெளிவந்துள்ளது.

## இயல் - 4
## ஓ! என் சமகாலத் தோழர்களே

**அறிவியல் என்னும் வாகனம் மீதில்**
**ஆளும் தமிழை நிறுத்துங்கள்**
**கரிகா லன்தன் பெருமை எல்லாம்**
**கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்**
**ஏவும் திசையில் அம்பைப் போல**
**இருந்த இனத்தை மாற்றுங்கள்**
**ஏவு கணையிலும் தமிழை எழுதி**
**எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்**

**- வைரமுத்து**

## நூல்வெளி

- கவிஞர் வைரமுத்து தேனி மாவட்டத்திலுள்ள மெட்டூர் என்னும் ஊரில் பிறந்தவர்.
- இந்திய அரசின் உயர்ந்த விருதுகளுள் ஒன்றான பத்மபூஷண் விருதினைப் பெற்றவர்.

- கள்ளிக்காட்டு இதிகாசம் புதினத்துக்காக 2003ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
- இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை ஏழு முறையும் மாநில அரசின் விருதினை ஆறு முறையும் பெற்றவர். இந்தி, தெலுங்கு, மலையாளம், வங்காளம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் வைரமுத்து கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி"
**- புறநானூறு**

'ஓர் எந்திர வூர்தி இயற்றுமின்'
**- சீவக சிந்தாமணி**

## உயிர்வகை

**ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே**
**- தொல்காப்பியர்**

### நூல்வெளி

- தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கணநூல் தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம்.
- எழுத்து, சொல், பொருள், என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது.
- எழுத்து, சொல் அதிகாரங்கள் மொழி இலக்கணங்களை விளக்குகிறது. பொருளதிகாரத்தில் தமிழரின் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளையும், தமிழ் இலக்கியக் கோட்பாடுகளையும் இந்நூல் விளக்குகிறது.
- பிறப்பியலில் எழுத்துகள் பிறக்கும் இடங்களை உடற்கூற்றியல் அடிப்படையில் விளக்கியிருப்பது சிறப்பு.

| அறிவுநிலை | அறியும் ஆற்றல் | உரையாசிரியர் எ.கா |
|---|---|---|
| ஓரறிவு | உற்றறிதல் (தொடுத்தல் உணர்வு) | புல், மரம் |
| ஈரறிவு | உற்றறிதல் + சுவைத்தல் | சிப்பி, நத்தை |
| மூவறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் | கரையான், எறும்பு |
| நான்கறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் | நண்டு, தும்பி |
| ஐந்தறிவு | உற்றறிதல் + சுவைத்தல் +நுகர்தல் + காணல் + கேட்டல் | பறவை, விலங்கு |
| ஆறறிவு | உற்றறிதல் +சுவைத்தல் +நுகர்தல் +காணல் + கேட்டல் + பகுத்தறிதல் (மனம்) | மனிதன் |

## இயல் - 5
## குடும்ப விளக்கு– பாரதிதாசன்

**கல்வி இல்லாத பெண்கள்**
**களர்நிலம் அந்நி லத்தில்**
**புல்விளைந் திடலாம் நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை**
**கல்வியை உடைய பெண்கள்**
**திருந்திய கழனி அங்கே**
**நல்லறிவு உடைய மக்கள்**
**விளைவது நவில வோநான்!**
**இந்நாளில் பெண்கட்கு எல்லாம்**
**ஏற்பட்ட பணியை நன்கு**
**பொன்னேபோல் ஒருகை யாலும்**
**விடுதலை பூணும் செய்கை**
**இன்னொரு மலர்க்கை யாலும்**
**இயற்றுக கல்வி இல்லா**
**மின்னாளை வாழ்வில் என்றும்**
**மின்னாள் என்றே உரைப்பேன்.**


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



- தணல் - நெருப்பு
- தாழி - சமைக்கும் கலன்
- களர்நிலம் - உவர்நிலம்
- கலன் அணித்து- அருகில்
- தவிர்க்கஒணா - தவிர்க்க இயலாத
- யாண்டும் - எப்பொழுதும்.

**நூல்வெளி**

- பாரதிதாசனின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதை மீதுகொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார்.
- பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்டவீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவர் படைப்புகள்.
- இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்.**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.**
**- பாரதி**

**மங்கையாராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்**
**செய்திடல் வேண்டுமம்மா......**
**- கவிமணி**

**பெண்ணினில் பேதை என்ற எண்ணம்**
**இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்**
**உருப்படல் என்பது சரிப்படாது.**
**- பாரதிதாசன்**

## சிறுபஞ்ச மூலம்

**பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,**
**மூவாது மூத்தவர், நூல் வல்லார் தாவா**
**விதையாமை நாறுவ வித்துஉள மேதைக்கு**
**உரையாமை செல்லும் உணர்வு.**

**சொல்லும் பொருளும்**

- மூவாது – முதுமை அடையாமல்
- நாறுவ – முளைப்ப
- தாவா – கெடாதிருத்தல
- விதையாமை, உரையாமை – எதிர்மறைத் தொழிற்பெயர்

**நூல்வெளி**

- தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன.
- ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன.
- சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான். மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்.
- காரி என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்தபெயர். மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.

**(சாதனைக்கு வயது தடையன்று)**

- 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும், பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.
- 11ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி ‘பாரதி’ என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார்.
- 15ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.
- 16 ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- 17 ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் விஞ்ஞானி கலீலியோ.

**இதை படிங்க முதலில்**

- ♦ சிறுபஞ்சமூலத்தின் பாடலில் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன.
- ♦ திரிகடுகத்தில் உள்ள பாடலில் மூன்று கருத்துகள் இடம்பெற்றுள்ளன.
- ♦ ஏலாதியில் உள்ள பாடலில் ஆறு கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

## இயல் - 6
## இராவண காவியம் - புலவர் குழந்தை

**அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி**
**பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்**
**அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை**
**மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால்**
**கல்லிடைப் பிறந்த ஆறும்**
**கரைபொரு குளனும் தோயும்**
**முல்லைஅம் புறவில் தோன்று**
**முருகுகான் யாறு பாயும்**
**நெல்லினைக் கரும்பு காக்கும்**
**நீரினைக் கால்வாய் தேக்கும்**
**மல்லல்அம் செறுவில் காஞ்சி**
**வஞ்சியும் மருதம் பூக்கும்.**

- புலவர் குழந்தை

**சொற்பொருள்**

- மைவனம் - மலைநெல்
- முருகியம் - குறிஞ்சிப்பறை
- பூஞ்சினை - பூக்களை உடைய கிளை
- சிறை - இறகு
- சாந்தம் - சந்தனம்
- முருகு - தேன்
- கரிக்குருத்து - யானைத்தந்தம்
- பூவை - நாகணவாய்ப்பறவை
- கடறு - காடு
- துவரை - பவளம்
- மதியம் - நிலவு
- மல்லல் - வளம்
- கோடு - கொம்பு

- 'இராவண காவியம் காலத்தின் விளைவு ஆராய்ச்சியின் அறிகுறி. புரட்சிப் பொறி உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்'– பேரறிஞர் அண்ணா
- இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம்.
- இந்நூல் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க்காண்டம் என ஐந்து காண்டங்களையும் 3100 பாடல்களையும் கொண்டது.
- இந்நூல் புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்டது. தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்.
- யாப்பதிகாரம், தொடையதிகாரம், உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

## நாச்சியார் திருமொழி

**மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்**
**மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்**

- நாச்சியார் திருமொழி

**சொல்பொருள்**

- தீபம் - விளக்கு
- சதிர் - நடனம்

- தாமம் - மாலை
- ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு - 'நாலாயிரம் திவ்வியப்பிரபந்தம்'

- இத்தொகுப்பில் ஆண்டாள் பாடியதாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு தொகுதிகள் உள்ளன.
- நாச்சியார் திருமொழி மொத்தம் 140 பாடல்களைக் கொண்டுள்ளது.
- திருமாலை வழிபட்டுச் சிறப்புநிலை எய்திய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவருள் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார்.
- இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என அழைக்கப் பெற்றார். இவரைப் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர்.

## திருக்குறள்

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்

- **அணி : ஏகதேச உருவக அணி**

ஊழிபெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்

- **அணி : ஏகதேச உருவக அணி**

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

- **அணி : ஏகதேச உருவக அணி**

## இயல் - 7
## சீவக சிந்தாமணி

**காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்**
**பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து**
**தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்**
**ஏமாங்கதம் என்று இசையால்திசை போயது உண்டே!**

**- திருத்தக்கத்தேவர்**

- சீவகனைத் தலைவனாகக் கொண்டு தோன்றிய காப்பியம் சீவகசிந்தாமணி. இன்பங்களைத் துறந்து துறவு பூணவேண்டும் என்பதே காப்பியத்தின் மையக் கருத்தாகும்.

### சொல்லும் பொருளும்:

- தெங்கு – தேங்காய்
- இசை – புகழ்
- வருக்கை – பலாப்பழம்
- நெற்றி – உச்சி
- மால்வரை – பெரியமலை
- மடுத்து – பாய்ந்து
- கொழுநிதி – திரண்ட நிதி
- மருப்பு – கொம்பு
- வெறி – மணம்
- கழனி – வயல்
- செறி – சிறந்த
- இரிய – ஓட
- அடிசில் – சோறு
- மடிவு – சோம்பல்
- கொடியன்னார் – மகளிர்

- சீவக சிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களும் ஒன்று இது விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியமாகும்.
- 'இலம்பகம்' என்ற உட்பிரிவு காணப்படுகிறது. 13 இலம்பகங்களைக் கொண்டுள்ள இந்நூல் 'மணநூல்' எனவும் அழைக்கப்படுகிறது.

Padasalai.Net

**சீவகசிந்தாமணி - இலம்பகங்கள்**

- நாமகள் இலம்பகம்
- கோவிந்தையார் இலம்பகம்
- காந்தருவதத்தையார் இலம்பகம்
- குணமாலையார் இலம்பகம்
- பதுமையார் இலம்பகம்
- கேமசரியார் இலம்பகம்
- கனகமாலையார் இலம்பகம்
- விமலையார் இலம்பகம்
- சுரமஞ்சியார் இலம்பகம்
- மண்மகள் இலம்பகம்
- பூமகள் இலம்பகம்
- இலக்கணையார் இலம்பகம்
- முத்தி இலம்பகம்

- நாமகள் இலம்பகத்தில் நாட்டுவளம் என்னும் பகுதி பாடமாக அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் திருத்தக்கத்தேவர்.
- சமண சமயத்தைச் சார்ந்த இவர் இன்பச்சுவை மிக்க இலக்கியமும் இயற்றமுடியும் என்று நிறுவும் வகையில் இக்காப்பியத்தை இயற்றினார்.
- இவரது காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. சீவக சிந்தாமணி பாடுவதற்கு முன்னோட்டமாக ‘நரிவிருத்தம்’ என்னும் நூலைப் பாடினார்.

## முத்தொள்ளாயிரம்

**சேரநாடு:**

**அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ**
**வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்**
**கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை**
**உடைத்தரோ நச்சிலைவேல் கோக்கோதை நாடு**

**சோழநாடு:**

**காவல் உழவர் களத்துஅகத்துப் போர் ஏறி**
**நாவலோஓ என்றழைக்கும் நாளோதை – காவலன்தன்**
**கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தால் போலுமே**
**நல்யானைக் கோக்கிள்ளி நாடு**

**பாண்டியநாடு:**

**நந்தின் இளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்**
**பந்தர் இளங்கமுகின் பாளையும் - சிந்தித்**
**திகழ்முத்தம் போல்தோன்றும் செம்மற்றே தென்னன்**
**நகைமுத்த வெண்குடையான் நாடு**

**சொல்லும் பொருளும்:**

- அள்ளல் - சேறு
- பழனம் - நீர்மிக்க வயல்
- வெரீஇ - அஞ்சி
- பார்ப்பு - குஞ்சு
- நாவலோ - நாள் வாழ்க என்பது போன்ற வாழ்த்து
- இசைத்தால் - ஆரவாரத்தோடு கூவுதல்
- நந்து - சங்கு
- கமுகு - பாக்கு

**சோழநாடு**

- நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போர் மீதேறி நின்று கொண்டு மற்ற உழவர்களை ‘நாவலோ’ என்று கூவி அழைப்பர்.

**நூல்வெளி**

- வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம். மன்னர்களின் பெயரைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது.
- மூன்று மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்ட 900 பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் முத்தொள்ளாயிரம் என்று பெயர்பெற்றது.
- நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் நூலிலிருந்து 108 செய்யுள்கள் கிடைத்துள்ளன. அவை முத்தொள்ளாயிரம் என்னும் பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

- ஆசிரியரின் பெயரை அறியமுடியவில்லை. இவர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்நதவராகக் கருதப்படுகிறார்.
- சேரநாட்டை அச்சமில்லாத நாடாகவும் சோழநாட்டை ஏர்க்களச் சிறப்பும் போர்க்களச் சிறப்பும் உடைய நாடாகவும் பாண்டி நாட்டை முத்துடை நாடாகவும் பாடப்பகுதி காட்டுகிறது.

## மதுரைக்காஞ்சி

**மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்**
**விண்உற ஓங்கிய பல்படைப் புரிசை**
**தொல்வலி நிலைஇய, அணங்குடை நெடுநிலை**
**நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்**
**மழைஆடும் மலையின் நிவந்த மாடமொடு**
**– மதுரைக் காஞ்சி**

- மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் - மாங்குடி மருதனார்.
- நாளங்காடி - பகல் சந்தை
- அல்லங்காடி - இரவு சந்தை
- விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் - பெருங்காற்று புகுந்த கடலொலி போல் ஒலிக்கும்.
- நாளங்காடி, அல்லங்காடி ஓவியம் போல் காட்சியளிக்கும்.
- **“பொறிமயிர்வாரணம் கூட்டுகிறை வயமாப் புலியொடு குழும”** - மதுரைக்காஞ்சி மதுரையில் வனவிலங்குச் சரணாலயம் இருந்த செய்தியை குறிப்பிடுகிறது.
- பத்துப் பாட்டு ஆராய்ச்சி-மா. ராசமாணிக்கனார்.
- காஞ்சி என்றால் - நிலையாமை.
- மொத்தப்பாடல் 782.
- மதுரையை மட்டும் சிறப்பித்துக் கூறும் பாடல் -354.
- பாட்டுடைத் தலைவன் - தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.
- மாங்குடி (திருநெல்வேலி) மருதனார் எட்டுத்தொகையில் பாடிய பாடல்கள் -13

## இயல் - 8
## ஒளியின் அழைப்பு – நா. பிச்சமூர்த்தி

**பிறவி இருளைத் துளைத்து**
**சூழலின் நிழலை வெறுத்து முகமுயர்த்தி**
**முண்டி மோதும் துணிவே இன்பம்**
**உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி**
**– ந.பிச்சமூர்த்தி**

### சொல்லும் பொருளும்:

- விண் - வானம்
- ரவி - கதிரவன்
- கமுகு - பாக்கு
- “இயற்கையையும் வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்து, அறிவுத் தெளிவுடன் நல்வாழ்க்கைக்கான மெய்யியல் உண்மைகளைக் காணும் முயற்சிகளே பிச்சமூர்த்தியின் கவிதைகள்”. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், என்னும் நூலில் வல்லிக்கண்ணன்.
- பாரதியாரின் வசன கவிதையைத் தொடர்ந்து புதுக்கவிதை படைக்கும் முயற்சியில் ந.பிச்சமூர்த்தி ஈடுபட்டார்.
- எனவே அவர் **“புதுக்கவிதையின் தந்தை”** என்று போற்றப்படுகிறார்.
- புதுக்கவிதையை இலகு கவிதை, கட்டற்ற கவிதை, விலங்குகள் இலாக் கவிதை, கட்டுக்குள் அடங்காக் கவிதை என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றனர்
- ந.பிச்சமூர்த்தி தொடக்க காலத்தில் வழக்குரைஞராகவும் பின்னர் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத் துறை அலுவலராகவும் பணியாற்றினார்.
- ஹனுமான், நவஇந்தியா ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகவும் இருந்தார். இவர் புதுக்கவிதை, சிறுகதை, ஓரங்க நாடகங்கள்,

கட்டுரைகள் ஆகிய இலக்கிய வகைமைகளைப் படைத்தவர்.

- இவரின் முதல் சிறுகதை –‘ஸயன்ஸீக்கு பலி’ என்பதாகும்.
- 1932 இல் கலைமகள் பரிசுபெற்றார். பிகூஷீ, ரேவதி ஆகிய புனைபெயர்களில் படைப்புகளை எழுதினார்.

## தாவோ தேஜிங் - லாவோட்சு

**ஆரக்கால் முப்பதும்**
**சக்கரத்தின் மையத்தில் இணைகின்றன**
**ஆனால், சக்கரத்தின் பயன்**
**அதன் காலிப் பகுதியால் கிடைக்கிறது.**

**எனவே, ஒரு பக்கம்**
**இருத்தலின் பலன் கிடைக்கிறது**
**இன்னொரு பக்கம்**
**இருத்தலின்மையைப் பயன்படுத்திக்**
**கொள்கிறோம்.**

- எந்த ஒன்றும் உருவாக வேண்டுமென்றால் உண்டும் வேண்டும் இல்லையும் வேண்டும் என்ற கருத்தைக் கூறுவது - சீனக்கவிஞர் லாவோட்சு.
- இன்மை என்று எதையும் புறக்கணிக்க வேண்டாம் என்பது லாவோட்சு.

### கருத்து

- லாவோட்சு, சீனாவில் கி.மு (பொ.ஆ.மு.) 2ஆம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்தவர். சீனஞானி கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர்.
- அக்காலம், சீனச் சிந்தனையின் பொற்காலமாக இருந்தது.
- லாவோடசு ‘தாவோவியம்’ என்ற சிந்தனைப் பிரிவைச் சார்ந்தவர்.
- ஒழுக்கத்தை மையமாக வைத்துக் கன்பூசியஸ் சிந்தித்தார்.
- லாவோட்சுவோ இன்றைய, வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்னும் சிந்தனையை முன்வைத்தார்.
- தாவோவியம் அதையே வலியுறுத்துகிறது. இப்பாடப் பகுதியில் உள்ள கவிதையை மொழிபெயர்த்தவர் சி.மணி.

## யசோதர காவியம்

**ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக**
**போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக**
**நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக**
**காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே**
**– யசோதர காவியம்**

### சொல்லும் பொருளும்:

- அறம் - நற்செயல்
- வெகுளி - சினம்
- ஞானம் - அறிவு
- விரதம் - மேற்கொண்ட நன்னெறி
- ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று யசோதர காவியம் இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவப்பெற்றதாகும். இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.
- இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர். யசோதர காவியம் ‘யசோதரன்’ என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது.
- இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது பாடல்கள் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் குறிப்பிடப்படுகிறது.

## இயல் - 9
## அக்கறை

**சைக்கிளில் வந்த**
**தக்காளிக் கூடை சரிந்து**
**முக்கால் சிவப்பில் உருண்டது**
**பழங்களை விடவும்**
**நசுங்கிப் போனது**
**அடுத்த மனிதர்கள்**
**மீதான அக்கறை**

**– கல்யாண்ஜி**

- கல்யாண்ஜியின் இயற்பெயர்- கல்யாணசுந்தரம்
- வண்ணதாசன் என்ற பெயரில் கதை இலக்கியத்திலும் பங்களிப்பு செய்துவருகிறார்.
- புலரி, முன்பின், ஆதி, அந்நியமற்ற நதி, மணல் உள்ள ஆறு ஆகியவை அவரின் கவிதை நூல்களுள் சில. இவை தவிர, அகமும் புறமும் என்ற கட்டுரைத் தொகுப்பும் வெளிவந்திருக்கிறது.
- பல கடிதங்கள் தொகுக்கப்பட்டு,'சில இறகுகள் சில பறவைகள்'என்ற பெயரில் வெளியானது.
- கலைக்க முடியாத ஒப்பனைகள், தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள், உயரப் பறத்தல், ஒளியிலே தெரிவது உள்ளிட்டவை இவரது குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுப்புகள்.
- **ஒரு சிறு இசை** என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக இவருக்கு 2016ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி பரிசு வழங்கப்பட்டது.

## குறுந்தொகை

**நசை பெரிது உடையர் நல்கலும் நல்குவர்**
**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**
**மென்சினை யாஅம் பொளிக்கும்**
**அன்பின் தோழி அவர் சென்ற ஆறே**

**– பாலை பாடிய பெருங்கடுங்கோ**

### சொல்லும் பொருளும்:

- நசை - விருப்பம்
- நல்கல் - வழங்குதல்
- யா - ஒரு வகை மரம், பாலைநிலத்தில் வளர்வது
- பிடி - பெண்யானை
- பொளிக்கும் - உரிக்கும்
- வேழம் - ஆண்யானை

### நூல்வெளி

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இது, தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது.
- கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது. இதன் பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டவை.
- 1915 ஆம் ஆண்டு சௌரிப்பெருமாள் அரங்கனார் முதன் முதலில் இந்நூலைப் பதிப்பித்தார்.
- இப்பாடலின் ஆசிரியர் “பாலை பாடிய பெருங்கெடுங்கோ” இவர் சேர மரபைச் சேர்ந்த மன்னர்; கலித்தொகையில் பாலைத் திணையைப் பாடியதால் “பாலை பெருங்கடுங்கோ” என அழைக்கப்பட்டார்.

## உரைநடை உலகம்
## இயல் -1

### திராவிட மொழிக் குடும்பம்

- திராவிட மொழிகளுக்குள் மூத்த மொழியாய் விளங்குவது தமிழ் எத்தகைய கால மாற்றத்திலும் எல்லாப் புதுமைகளுக்கும் ஈடுகொடுத்து இயங்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு.
- தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1300. இவற்றை நான்கு மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கின்றனர்.
  1. இந்தோ ஆசிய மொழிகள்
  2. திராவிடமொழிகள்
  3. ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
  4. சீன திபெத்திய மொழிகள்.
- இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று ச. அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.
- உலகின் குறிப்பிடத்தக்க பழைமையான நாகரிகங்களுள் இந்தியா நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ ஹரப்பா அகழாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதை திராவிட நாகரிகம் என்று கருதுவர்.
- திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர்.
- திராவிடம் என்ற சொல்லை பயன்பாட்டுக்கு கொண்டுவந்தவர் கால்டுவெல்.
- ஹீராஸ் பாதிரியார் என்பார் இம்மாற்றத்ததைத் தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என்று விளக்குகின்றார்.
- அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் வடமொழியை ஆராய்ந்து மற்ற ஐரோப்பியமொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன்முதலில் குறிப்பிட்டார்.
- 1816ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப், ராஸ்க், கிரிம் முதலானோராலும் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்,போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனவும் பெயரிட்டார்.
- மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. ஹோக்கன் என்பார் இம்மொழிகள் அனைத்தையும் இணைத்துத்தமிழியன் என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை என்றும் கருதினார்.
- மாக்ஸ் முல்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார்.
- 1856-இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல். திராவிட மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்கு செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.
- ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, ஆந்திரனோவ்,பரோ தெ.பொ.மீனாட்சிசுந்தரம் முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.
- 24 மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகள் சேர்த்து மொத்தம் திராவிடமொழிகள் 28.

| தென்திராவிடம் | நடுத்திராவிடம் | வடதிராவிடம் |
|---|---|---|
| தமிழ் | தெலுங்கு | குரூக் |
| மலையாளம் | கூயி | மால்தோ |
| கன்னடம் | கூவி(குவி) | பிராகுய் (பிராகுயி) |
| குடகு(கொடகு) | கோண்டா | |
| துளு | கோலாமி(கொலாமி) | |
| கோத்தா | நாய்க்கி | |
| தோடா | பெங்கோ | |
| கோரகா | மண்டா | |
| இருளா | பர்ஜி | |
| | கதபா | |
| | கோண்டி | |
| | கோயா | |

**சில திராவிட மொழிகளின் பழமையான இலக்கிய இலக்கணங்கள்**

| மொழி | இலக்கியம் | காலம் | இலக்கணம் | காலம் | ஆதாரம் |
|---|---|---|---|---|---|
| தமிழ் | சங்கஇலக்கியம் | பொ.ஆ.மு5-பொ.ஆ.2ஆம் நூற்றாண்டு அளவில் | தொல்காப்பியம் | பொ.ஆ.மு.3ஆம் நூற்றாண்டு அளவில் | தமிழ் இலக்கிய வரலாறு (மு.வ) சாகித்திய அகாதெமி |
| கன்னடம் | கவிராஜ மார்க்கம் | பொ.ஆ.9ஆம் நூற்றாண்டு | கவிராஜமார்க்கம் | பொ.ஆ.9ஆம் நூற்றாண்டு | இந்திய இலக்கணக் கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம்- செ.வை. சண்முகம் |
| தெலுங்கு | பாரதம் | பொ.ஆ.11ஆம் நூற்றாண்டு | ஆந்திர பாஷா பூஷணம் | பொ.ஆ.12ஆம் நூற்றாண்டு | |
| மலையாளம் | ராம சரிதம் | பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டு | லீலா திலகம் | பொ.ஆ. 15 ஆம் நூற்றாண்டு | மலையாள இலக்கிய வரலாறு - சாகித்திய அகாதெமி |

சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். தமிழ் வடமொழியின் மகளன்று அது தனிக் குடும்பத்திற்கு உரியமொழி சமஸ்கிருதக் கலப்பின்றி அஃது தனித்தியங்கும் ஆற்றல் பெற்றமொழி. தமிழுக்கும் இந்தியாவின்பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம். **- கால்டுவெல்**

**சான்று**

திராவிட மொழிகளில் ஆராய்ந்தால் அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருக்கும்.

| அடிச்சொல் | திராவிடமொழிகள் |
|---|---|
| ➢ கண் | - தமிழ் |
| ➢ கண்ணு | - மலையாளம், கன்னடம் |
| ➢ கன்னு | - தெலுங்கு, குடகு |
| ➢ ஃகன் | - குருக் |
| ➢ கென் | - பர்ஜி |
| ➢ கொண் | - தோடா |

**திராவிட மொழிகளில் எண்ணுப் பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன.**

➢ மூன்று - தமிழ்
➢ மூனு - மலையாளம்
➢ மூடு - தெலுங்கு
➢ மூரு - கன்னடம்
➢ மூஜி - துளு

**குறில் நெடில் வேறுபாடு**

➢ திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

➢ அடி – குறில் ஆடி – நெடில்

**பால்பாகுபாடு**

➢ திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு

அமைந்துள்ளது. ஆனால் வடமொழியில் இவ்வாறு அமையவில்லை.

- கைவிரல்கள் பெண்பால் கால்விரல்கள் ஆண்பால்.
- ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது. வாய், ஆண்பால். மூக்கு-பெண்பால், கண்-பொதுப்பால்.
- திராவிட மொழிகளில் ஆண்பால் பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது.
- அ∴றிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை. எ.கா. கடுவன்-மந்தி, களிறு-பிடி
- ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொற்கள் காலத்தை மட்டுமே காட்டும் திணை,பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை. திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாக காட்டுகின்றன.
- மலையாள மொழியில் திணை,பால்,எண் ஆகியவற்றைக் காட்டும் விகுதிகள் இல்லை.

## தமிழ்மொழி பேசப்படும் நாடுகள்

- இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென்ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ்மொழி.

| |
|---|
| மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாளில் தமிழ்மொழி இடம்பெற்றுள்ளது. |

- திராவிட மொழிகளுள் பிற மொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.
- இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.
- தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன.

## இயல் -2
## நீரின்றி அமையாது உலகு

- ஒவ்வோர் ஆண்டும் ஜீன் 5-ஆம் நாள் உலகச் சுற்றுச்சூழல் நாளாகக் கொண்டாடப்படுகிறது
- மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது. நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழவேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன எனக் கூறியவர் மாங்குடி மருதனார் கூறினார்.
- அகழி, ஆழிக்கிணறு, உறைக்கிணறு, அணை, ஏரி, குளம், ஊருணி, கண்மாய், கேணி-எனப் பல்வேறு பெயர்களில் நீர்நிலைகள் உள்ளன.
- பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் கண்மாய் என்று அழைப்பர். கம்மாய் என்பது வட்டார வழக்குச் சொல்லாகும்.
- மணற்பாங்கான இடத்தில் தோண்டிச்சுடுமண் வளையமிட்ட கிணற்றுக்கு உறைக்கிணறு என பெயர்.
- மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலை ஊருணி.
- கல்லணையின் நீளம் 1080 அடி அகலம் 40 முதல் 60 அடி உயரம் 15 முதல் 18 அடி.
- **"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்"** குறட்பாவில் நாட்டின் சிறந்த அரண்களுள் நீருக்கே முதலிடம் தருகிறார் திருவள்ளுவர்.

- உணவெனப்படுவது நிலத்தொடு நீரே (புறநானூறு-18)

> - **இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை சர் ஆர்தர் காட்டன்.**
> - 1829இல் காவிரிப் பாசனப் பகுதிக்குத் தனிப் பொறுப்பாளராக ஆங்கிலேய அரசால் சர் ஆர்தர் காட்டன் நியமிக்கப்பட்டார்.
> - கல்லணைக்கு கிராண்ட் "அணைக்கட்" என்ற பெயரையும் சூட்டினார்.
> - கல்லணையின் கட்டுமான உத்தியைக்கொண்டுதான் 1873ஆம் ஆண்டு கோதாவரி ஆற்றின் குறுக்கே தௌலீஸ்வரம் அணையைக் கட்டினார்.

- நாம் வாழும் தமிழ்நாடு வெப்பமண்டலப் பகுதியில் உள்ளது. தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே என்பது சொல் வழக்கு.
- தமிழ் மரபில் நீரும் நீராடலும் வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவையாக விளங்குகின்றன என்பார் பேராசிரியர் தொ.பரமசிவன்.
- "குள்ளக் குளிரக் குடைந்து நீராடி என்கிறார் ஆண்டாள்". தெய்வச்சிலைகளைக் குளிர் வைப்பதற்கு திருமஞ்சனம்ஆடல் என்று பெயர்.
- வாரம் தோறும் நல்லெண்ணெய் தேய்த்துக் குளிப்பதைத் தமிழர்கள் மரபாகவே வைத்திருந்தனர். சனி நீராடு என்பது ஔவையின் வாக்கு.
- ஏரி நிரம்பும் போது தூர்வார சோழர்களின் தொழில் நுட்பம் - குமிழித்தும்பு.
- இராஜஸ்தான் மாநிலத்தில் பத்தாண்டுகளுக்கு முன்பே 700 அடிவரை ஆழ்குழாய்கள் இறக்கியும் நீர் கிட்டவில்லை.
- உலகச் சுகாதார நிறுவனம், உலகம் விரைவில் குடிநீருக்கான கடும் சிக்கலை எதிர்கொள்ளும் என எச்சரிக்கிறது.

> **குமிழித்தும்பு**
>
> - மழைக்காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவார். அடியில் இரண்டு துளைகள் காணப்படும். மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும். கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும். இதனால் தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

## தமிழகத்தின் நீர்நிலைப் பெயர்களும் விளக்கமும்

- அகழி - கோட்டையின் புறத்தே அகழ்ந்து அமைக்கப்பட்டட நீர் அரண்.
- அருவி - மலைமுகட்டுத் தேக்க நீர் குத்திட்டுக் குதிப்பது.
- ஆழிக்கிணறு- கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு.
- ஆறு - இரு கரைகளுக்கிடையே ஓடும் நீர்ப்பரப்பு.
- இலஞ்சி - பலவகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம்.
- உறைக்கிணறு- மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணறு.
- ஊருணி - மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலை.
- ஊற்று - அடியிலிருந்து நீர் ஊறுவது.
- ஏரி - வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம்.
- கட்டுக்கிணறு- சரளை நிலத்தில் தோண்டி கல், செங்கற்களால் அகச்சுவர் கட்டிய கிணறு.
- கடல் - அலைகளைக் கொண்ட உப்புநீர்ப் பெரும் பரப்பு.
- கண்மாய் - பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர்.

- குண்டம் - சிறியதாய் அமைந்த குளிக்கும் நீர்நிலை.
- குண்டு - குளிப்பதற்கேற்ற சிறுகுளம்.
- குமிழி ஊற்று- அடிநிலத்து நீர், நிலமட்டத்திற்குக் கொப்புளித்து வரும் ஊற்று.
- கூவல் - உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை.
- கேணி - அகலமும் ஆழமும் உள்ள பெருங்கிணறு.
- புனற்குளம் - நீர்வரத்து மடையின்றி மழைநீரையே கொண்டுள்ள குளிக்கும் நீர்நிலை.
- பூட்டைக் கிணறு - கமலை நீர்பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு.
- தமிழ் தென் மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் விவசாயத்திற்கும் குடிநீர்க்கும் உதவும், முல்லைப்பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக்.
- அப்பகுதி மக்கள் தம்மக்களுக்கு பென்னிக்குவிக் எனப் பெயர் சூட்டி நன்றி பாராட்டுகின்றனர்.

## இயல் -3
## ஏறுதழுவுதல்

- சங்க இலக்கியமான கலித்தொகையில் ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ‘எழுந்தது துகள், ஏற்றனர் மார்பு, கவிழ்ந்தன மருப்பு, கலங்கினர் பலர்’- கலித்தொகை.
- காளைப்போர் பற்றிய சித்திர செய்திகள் இடம் பெற்றுள்ள இடங்கள் - பெனிஹாசன் - எகிப்து கினோஸஸ் - கிரீட்தீவு.

**நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை,**
**மாறுஏற்றுச் சிலைப்பவை, மண்டிப் பாய்பவையாய்**
**துளங்கு இமில் நல்ஏற்றினம் பல களம்புகும்**
**மள்ளர் வனப்பு ஒத்தன**

**– கலித்தொகை**

- கலித்தொகை தவிர, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலும் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
- ஏறுதழுவுதல் பற்றிப் பிற்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பள்ளு இலக்கியத்திலும் குறிப்புகள் உள்ளன.
- எருதுகட்டி என்னும் மாடு தழுவுதல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது.
- சேலம் மாவட்டத்தில் கருவந்துறையில் எருது விளையாடி மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட எருது பொருதார்கல் ஒன்று உள்ளது.
- கருவந்துறை என்னும் ஊரில் எருதோடு போராடி இறந்துபட்டவனாகிய சங்கன் என்பவனுக்கு அவனுடைய மகன் பெரிய பயல் எடுத்த நடுகல் என்பது இதன் பொருள்.
- கூரிய கொம்புகளும் சிலிர்த்த திமில்களும் கொண்ட மூன்று எருதுகளைப் பலர் கூடி விரட்டுவதுபோன்ற பண்டைய ஓவியம் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள கரிக்கையூரில் காணப்படுகிறது.
- திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள கல்லூத்து மேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டது.
- திமிலுடன் கூடிய காளை ஓவியம் - தேனி மாவட்டம் மயிலாடும்பாறை – சித்திரக்கல் புடவியில் கண்டறியப்பட்டுள்ளது.
- சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் கல் முத்திரை ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறுதழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.
- ஏறுதழுவுதல் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. மாடு பிடித்தல், மாடு அணைதல், மாடு விடுதல், மஞ்சுவிரட்டு, வேலி


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

மஞ்சுவிரட்டு, எருதுகட்டி, காளை விரட்டு, ஏறுவிடுதல், சல்லிக்கட்டு.

**தெரிந்து கொள்வோம்**

- தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் உள்ளவை காங்கேயம் மாடுகள். தமிழக மாட்டினங்களின் தாய் இனம் காங்கேயம் பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும். ஆறு மாதம் வளர்நத பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன.
- பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன.
- கேரளம், கர்நாடகம், ஆந்திரம் மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
- கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு.முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

➢ சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும். புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் தற்போதும் உள்ளது.

➢ அக்காலத்தில் புழங்கிக் கொண்டிருந்த சல்லி நாணயங்களை, துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கமும் இருந்தது.

➢ தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் நாடு - ஸ்பெயின். அந்நாட்டில் காளையை கொன்று அடக்குபவனே வீரன்.

➢ தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறுதழுவுதல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தொன்மையுடையது.

## இயல் - 4
## இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்

### ஒளிப்படி இயந்திரம்(Photo Copies)

➢ நியூயார்க் நகரைச் சேர்ந்த **(செஸ்டர் கார்ல்சன்)** கண்டறிந்தார்.

➢ கந்தகம் தடவிய துத்தநாகத் தட்டைக்கொண்டு 1938இல் உலகின் முதல் ஒளிப்படியை எடுத்தார்.

➢ கிரேக்க மொழியில் சீரோகிரா∴பி என்றால் உலர் எழுத்துமுறை என்று பொருள்.

➢ 1959இல் இந்த இயந்திரம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

### தொலைநகல் இயந்திரம்(FAX)

➢ 1846இல் ஸ்காட்லாந்துக் கண்டுபிடிப்பாளர் அலெக்சாண்டர் பெயின் குறியீடுகளை மின்னாற்றல் உதவியுடன் அச்சிடுவதில் வெற்றிகண்டு அதற்குரிய காப்புரிமையைப் பெற்றார்.

➢ இத்தாலி நாட்டு இயற்பியல் அறிஞர் **'ஜியோவான்னி காசில்லி'** பான்டெலிகிரா∴ப் என்ற தொலைகநகல் கருவியை உருவாக்கினார்.

➢ 1865இல் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்குத் தொலைநகல் சேவை தொடங்கப்பட்டது.

➢ தொலைபேசியைக் கண்டுபிடிப்பதற்குப் பதினோராண்டுகளுக்கு முன்பே இந்நிகழ்வு நடந்தது.

➢ 1985இல் அமெரிக்காவின் 'ஹாங்க் மாக்னஸ்கி' என்பவர் கணினி மூலம்

தொலைநகல் எடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார்.

- அந்த இயந்திரத்திற்கு காமா ∴பேக்ஸ் என்று பெயரிட்டு விற்பனைக்குக் கொண்டுவந்தார்.

## தானியக்கப் பண இயந்திரம் - (Antomated Teller Machine)

- இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளரான **ஜான் ஷெப்பர்டு பாரன்**(John shepherd Barron) என்பவர் தலைமையிலான குழுவொன்று, பார்க்லேஸ் வங்கிக்காக இலண்டனில் 1967 ஜீன் 27இல்தானியக்கப் பண இயந்திரத்தை நிறுவியது.

**தெரிந்து தெளிவோம்.**

- நான் இங்கிலாந்திலோ உலகின் எந்த மூலையிலோ இருந்தாலும் என் வங்கிப் பணத்தை எடுத்துப் பயன்படுத்துவதற்கொரு வழியைச் சிந்தித்தேன். சாக்லேட்டுகளை வெளித்தள்ளும் இயந்திரத்திலிருந்து யோசனை கிடைத்தது. அங்கு சாக்லேட்; இங்கே பணம்.

– ஜான் ஷெப்பர்டு பாரன்

## அட்டை தேய்ப்பி இயந்திரம் (Swiping Machine)

- இது கட்டணம் செலுத்தும் கருவி என்றும் விற்பனைக் கருவி என்றும் அழைக்கப்படுகிறது.
- **ஆட்ரியன் ஆஷ்∴பீல்டு** என்பவர் 1962-இல் கடவுச்சொல்லுடன் கூடிய அட்டைக்கு இங்கிலாந்தில் காப்புரிமை பெற்றிருந்தார்.
- தற்காலத்தில் பயன்படுத்தப்படும் அட்டைகளில் சில்லு (chip) என்று சொல்லப்படும் பகுதி மூலம் வணிகப் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன.
- தமிழக மக்கள் பயன்படுத்தும் குடும்ப அட்டைகள் திறன் அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன.
- தமிழக அரசின் நியாயவிலைக்கடை – திறன் அட்டைக் கருவி (TNePDS) பயன்பாட்டில் உள்ளது.

## ஆளறிசோதனைக் கருவி (Biometric Device)

- அரசு நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் வருகைப் பதிவுக்காகவும் வெளியேறுகைப் பதிவுக்காகவும் இருக்கருவி பயன்படுகிறது.

## இணைய வணிகம்

- இங்கிலாந்தைச் சேர்ந்த **மைக்கேல் ஆல்ட்ரிச்** 1979இல் இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தார்.
- 1989ல் அமெரிக்காவில் இணையவழி மளிகைக்கடை தொடங்கப்பட்டது.
- 1991இல் இணையம், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வந்தது.

◆ 1990-இல் டிம்பெர்னெர்ஸ் லீ வையக விரிவு வலை (WWW-Server) வழங்கியை உருவாக்கினார்.

◆ “இணையத்தில் இது இல்லையெனில் உலகத்தில் அது நடைபெறவேயில்லை” என்பது லீயின் புகழ் பெற்ற வாசகம்.

## இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழக இணைய வழிப் பதிவு (IRCTC)

- இது பயணச்சீட்டு வழங்குவதையும் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்வதையும் திறம்படச் செய்து வருகிறது.
- 2002ஆம் ஆண்டு இந்த வசதி அறிமுகப்படுத்தப்பட்ட போது சராசரியாக ஒரு நாளைக்கு 29 பயணச்சீட்டுகள் இணையவழியே பதிவு செய்யப்பட்டன.

- 13 ஆண்டு கழித்து 2015 ஏப்ரல் 1 அன்று ஒரே நாளில் 13 இலட்சம் பயணச்சீட்டுகள் பதிவு செய்யப்பட்டது ஒரு சாதனை.
- தற்போது ஒரு நிமிடத்துக்கு 1500 பயணச்சீட்டுகள் பதிவு செய்யும் வகையிலும் 3 இலட்சம் பயனர்கள் ஒரே நேரத்தில் இணையவழிச் சேவையைப் பயன்படுத்தவும் உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## இணையப் பயன்பாடு

- பிறப்புச் சான்றிதழ் வருமானவரிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், போன்றவை அரசின் மின்னணுச் சேவை மையங்களின் உதவியை நாடியும் மேற்கண்ட சேவைகளைப் பெறலாம்.
- நடுவண் அரசும் மாநில அரசும் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு ஆண்டு தோறும் பல போட்டித் தேர்வுகளை நடத்துகின்றன.
- பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் தேசியத் திறனாய்வுத் தேர்வு (NTSE - National Talent Search Exam), எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குத் தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு (NMMS - National Means-Cum-Merit Scholarship Scheme Exam).
- கிராமப்புற பள்ளிகளில் படிக்கும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST -Tamilnadu Rural Students Talent Search Examination) நடத்தப்படுகின்றன.

# இயல் - 5
# கல்வியில் சிறந்த பெண்கள்

### சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் சிலர்

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார். பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார். வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

- சமண மதமும் புத்த மதமும் வளர்ந்த காலத்திலே மாதவி மகள் மணிமேகலை கல்வி கற்ற பெண்ணாக இருந்தார்.
- பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் முதலிய பெண்கள், தம் இறைவனுக்குப் பாமாலை சூட்டினார்கள்.

## பெண்மை – புரட்சி முத்துலெட்சுமி (1886 – 1968)

- தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர். இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர் சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.
- தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர்.
- அடையாற்றில் 1930இல் அவ்வை இல்லம், 1952-இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவினார்.
- 1882-இல் ஹண்டர் குழு முதன்முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்தது.
- மராட்டிய மாநிலத்தில் ஜோதிராவ் பூலே, சாவித்திரியாய் பூலே இணையர் முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினார்கள்.

**பெண்மை – துணிவு - மூவலூர் இராமாமிர்தம் (1883 – 1962)**

- தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர், தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர்.
- தமிழக அரசு 8ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கிவருகிறது.

**இதைப்படியுங்கள் முதலில்...**

- இந்தியாவில் குழந்தையைப் பாதுகாப்போம் என்ற அமைப்பை நிறுவி, இதுவரைக்கும் 80 ஆயிரம் குழந்தைகள் கல்விபெற உதவியாக,இருந்தவர்.
- 2014இல் நோபல் பரிசு வாங்கிய பெருமைக்குரியவர் அவர்தான் கைலாஷ் சத்யார்த்தி.
- பெண் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி அதற்காகப் போராடிய வீரச்சிறுமி **மலாலா** ‘நோபல் பரிசு’ வாங்கினார்.
- பாகிஸ்தானில், பெண்கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கியபோது மலாலாவின் வயது பன்னிரண்டு.

**பெண்மை – உயர்வு - பண்டித ரமாபாய் (1858 – 1922)**

- இவர் சமூகத் தன்னார்வலர்.
- தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

**பெண்மை- சிறப்பு - ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் (1870 - 1960)**

- பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் மருத்துவராகி, தமிழகத்திற்கு வந்து, வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்.

**பெண்மை – அறிவு - சாவித்திரிபாய் பூலே (1831 – 1897)**

- 1848இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர்.

**(பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்)**

- ஈ.வெ.ரா. – நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் பட்டமேற்படிப்பிற்கு உரியது.
- சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் கல்வி, திருமண உதவித் தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது.

**தனித்தமிழில் சிறந்த நீலாம்பிகை அம்மையார் (1903 – 1943)**

- மறைமலையடிகளின் மகள் ஆவார்.
- இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனள்ளனவாக விளங்குகின்றன.

**கோத்தாரி கல்விக்குழு**

- 1964 ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

### சாரதாசட்டம்.

- பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே, அதைத் தடுக்க 1929ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

### ஈத. இராஜேஸ்வரி அம்மையார் (1906 – 1955)

- தமிழ், இலக்கியம் அறிவியல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார் திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.
- இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாகப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

## இயல் - 6
## சிற்பக்கலை

**கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்**
**மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**
**கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை**
**பத்தே சிற்பத் தொழிற்குஉறுப் பாவன**
**- திவாகர நிகண்டு**

- தெய்வ உருவங்கள் இயற்கை உருவங்கள் கற்பனை உருவங்கள், முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

### பல்லவர் காலம்

- பல்லவர் காலத்தில் சுதையினாலும் கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன.
- தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது.
- சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலைவடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல சிற்பங்களில் சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை மணிமேகலை மூலம் அறிய முடிகிறது.
- பஞ்சபாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.
- காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் (முழுவதும்) சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது.

### பாண்டியர் கால சிற்பங்கள்

- திருப்பரங்குன்றம் பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருமயம் மற்றும் கோவில் பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான் கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

### சோழர்கள் கால சிற்பங்கள்

- கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும் சிங்கமுகக் கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கது.
- திருவரங்கக்கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சோழர்காலச் சிற்பக்கலைக்குச் சான்றாகும்.
- சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் நுட்பத்திற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும்.
- செப்புத்திருமேனிகளின் பொற்காலம் என்று அழைக்கப்படும் அளவிற்கு சோழர்காலம் அழகுற அமைந்துள்ளன.
- தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்கம் ‘சிற்பச்செந்நூல்’ என்ற நூலை வெளியிட்டுள்ளது.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- குதிரையின் உருவங்களைச் சிற்பங்களில் இடம் பெறச் செய்தனர்- விஜயநகர மன்னர் காலம்
- கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு என்று கூறலாம்.
- விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை படைக்கப்பட்டுள்ளன.

### பௌத்த சமணச் சிற்பங்கள்

- விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள திருநாதர்குன்று என்னும் இடத்தில் ஒரு பாறையில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.
- மதுரைக்கு அண்மையில் சமணர்களின் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பாறைகளில் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

### இன்றைய சிற்பங்கள்

- தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச் சிற்பங்களும் கற்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.
- பைஞ்சுதை(சிமெண்ட்) கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன.

## இயல் - 7
## இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு

**- மா.சு. அண்ணாமலை**

- இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த 1942 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் நாள் ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தன.
- இப்படையில் இருந்த இந்திய வீரர்களைக் கொண்டு ஜப்பானியர்கள், மோகன்சிங் என்பவரின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் (ஐ.என்.ஏ) என்ற படையை உருவாக்கினர்.
- ஜப்பானியர்கள் ஒற்றர்படையில் இருந்த வீரர்களை இந்தியாவில் உள்ள ஆங்கிலேய இராணுவத்தைப்பற்றி ஒற்றறிய நீர்மூழ்கிக்கப்பல் மூலம் கேரளாவுக்கும் குஜராத்திற்கும் தரைவழியில் பர்மா காடுகள் வழியாகவும் அனுப்பினர்.

### தூண்களாத் திகழ்ந்தவர்கள்:

- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க 91 நாள்கள் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தார்.
- 1943ஆம் ஆண்டு சூலை மாதம் 9ஆம் தேதி பதவியேற்றார்.
- டெல்லியை நோக்கி செல்லுங்கள் என்ற போர்முழக்கம் செய்தார் - ‘டெல்லி சலோ’

### வான்படைப் பிரிவு

- இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
- அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் டோக்கியோ கேடட்ஸ்.
- யுத்த சூழலுக்கு நடுவில் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் டோக்கியோ செல்வது ஒரு சவாலாக இருந்தது.
- பர்மாவில் இருந்து காட்டுவழியாகப் பயணம் செய்து சயாம் மரண ரயில் பாதையைக் கடந்து

Padasalai.Net

அங்கிருந்து படகு வழியாகத் தப்பிச் சென்று பழைய கப்பல் ஒன்றில் ஏறி, சீறும் அலைகளில் சிக்கித் தவித்து முடிவில் 'ஜப்பானின் கியூசு' தீவை அடைந்தனர்.

- அந்தத் தீவு, கடற்படையின் வசம் இருந்தது. அங்கே, கடற்படைக்கான பயிற்சிகள் நடைபெற்றன.
  - காலை 5 மணிக்கு எழுந்து மூன்று மைல் தூரம் ஓடவேண்டும். அப்போது குளிர், பூஜ்யத்திற்குக் கீழ்இருக்கும். உதடுகள் வெடித்து வலி தாங்க முடியாது. பனிப்புகை படர்ந்த மைதானத்தில் ஓடுவார்கள்.
  - மூன்று மைல் தூரம் ஓடியதும் ஐந்து நிமிடங்கள் ஓய்வு, பிறகுதான் சிறப்புப் பயிற்சிகள்.
  - அதை முடித்துக்கொண்டு அவசரமாகக் குளித்துத் தயாராகி வரவேண்டும்.

- பசும்பொன் மடல்,
மடல்32, இதழ்8, ஜனவரி 2018

## பெண்கள் படை உருவாக்கம்:

- இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் இலட்சுமி.
- இப்படையில் தமிழ்ப்பெண்கள் பெருமளவில் பங்கேற்றனர். இதில் தலைசிறந்த தலைவர்களாக ஜானகி, இராஜாமணி போன்றோர் விளங்கினர்.
- நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள்.
- சிறந்த தலைவர்களை உருவாக்க நேதாஜி 45 இளைஞர்களை டோக்கியோ அனுப்பினார். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்.
- அதில் பயிற்சி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கேப்டன் தாசன் ஆவார். அவர் பின்பு சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றினார்.

## இரண்டாம் உலகப்போர்க் காலம்:

- தமிழ் மக்களை வைத்துப் போராடிய நேதாஜியைக் கண்டு ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் கொண்டார்.
- 'மலேசியாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என்று சர்ச்சில் கூறினார்.
- அதற்கு நேதாஜி இந்தத் தமிழினம்தான் ஆங்கிலேயர்களை அழிக்கும் என்று பதில் கூறினார்.

## நேதாஜியின் பொன்மொழிகள்:

- விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும் சுதந்திரத்தினால் உண்டாகும் மனத்திருப்தியும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலையுண்டு அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும் தான்.
- இரண்டாம் உலகப்போரில் பர்மாவில் நடந்த போர் 'மிகவும் கொடூரமானதாகும்'
- இந்திய தேசிய இராணுவம் 1944 ஆம் ஆண்டு மார்ச் 18அன்று ஆங்கிலேயரை வென்று இந்தியாவிற்குள் மணிப்பூர்ப் பகுதியில் 'மொய்ராங்' என்ற இடத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றியது.
- இப்போரில் ஒரு இலட்சம் இந்தியரும் ஜப்பானியரும் வீரமரணம் எய்தினர்.

## மரணம் பெரிதன்று:

- இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த பதினெட்டு இளைஞர்கள், 1943-1945 ஆம் ஆண்டுகளில் சென்னைச் சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.
- 1944ஆம் ஆண்டு பதினெட்டே வயதான இராமு என்பவர் தூக்கிலிடப்பட்டார். 'நான் என்

உயிரைக் கொடுப்பதற்குக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஏனெனில் நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை' என்று கூறினார்.

- மரணதண்டனை பெற்ற அப்துல்காதர் பின்வருமாறு கூறினார். "வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர்நீத்த முழுநிலவினைப் போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்".
- பேராசிரியர் மா.சு.அண்ணாமலை 'இந்திய தேசிய இராணுவம் - தமிழர் பங்கு' என்ற நூலுக்காகத் தமிழக அரசின் பரிசு பெற்றவர்.

## இயல் - 8
## பெரியாரின் சிந்தனைகள்

### தந்தை பெரியார்:

- வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் பலவாறு சிறப்பிக்கப்படுபவர் தந்தை பெரியார்.
- மூடப்பழக்கத்தில் மூழ்கிக்கிடந்த தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றவர். அடிமையாய் உறங்கிக் கிடந்த சமூகம் விழிப்பதற்குச் சுயமரியாதைப் பூபாளம் இசைத்தவர்.
- மானமும் அறிவும் கொண்டவர்களாகத் தமிழர்கள் வாழவேண்டும் என்று அரும்பாடுபட்டவர். தானே முயன்று கற்று தானாகவே சிந்தித்து அறிவார்ந்த கருத்துகளை வெளியிட்டவர்.

### பகுத்தறிவு கொள்கை – பெரியார்

- சமூகம், மொழி, கல்வி, பண்பாடு, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் பெரியாரின் சிந்தனை புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.
- சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும் என்றார் - பெரியார்.
- கடவுள் மறுப்புக்கொள்கையைக் கடைப்பிடித்தார் - பெரியார்.
- சமூக வளர்ச்சிக்குக் கல்வியை மிகச் சிறந்த கருவியாகப் பெரியார் கருதினார்.
- "மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டன" என கூறியவர் - பெரியார்.
- பெண்களுக்குக் கல்வியறிவு புகட்ட முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றவர் - பெரியார்.
- மனப்பாடத்திற்கு முதன்மை அளிக்கும் தேர்வு முறையையும், மதிப்பெண்களுக்கு முதன்மை அளிக்கும் முறையையும் பெரியார் கடுமையாக எதிர்த்தார்.
- இந்தியாவிலேயே பழமையான மொழி தமிழ் மொழியாகும். திருக்குறளில் அறிவியல் கருத்துகளும் தத்துவக்கருத்துகளும் அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால் அதை மதிப்புமிக்க நூலாகப் பெரியார் கருதினார்.
- காலவளர்ச்சிக்கேற்பத் தமிழ் எழுத்துகளைச் சீரமைக்கத் தயங்கக் கூடாது என்று பெரியார் கருதினார். 'மொழி என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும்.

உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும் 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

ஐயா – அய்யா ஔவை – அவ்வை

- பெரியாரின் இக்கருத்தின் சில கூறுகளை 1978 ஆம் ஆண்டு தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.
- நாட்டு விடுதலையைவிட பெண் விடுதலைதான் முதன்மையானது என்று கூறினார் பெரியார்.

www.Padasalai.Net www.CBSEtips.in


- வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும் என்றார் பெரியார்.
- சொத்தில் ஆண்களுக்குச் சமமான உரிமையைப் பெண்களுக்கும் வழங்க வேண்டும்.
- 1938 நவம்பர் 13இல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராவுக்குப் பெரியார் என்னும் பட்டம் வழங்கித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 27.06.1970 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு யுனெஸ்கோ நிறுவனம் தந்தை பெரியாரைத் **தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்** எனப் பாராட்டிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.
- தம் வாழ்நாள் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புரை செய்தார்.
- “தொண்டு செய்து பழுத்த பழம் தூயதாடி மார்பில் விழும்” - புரட்சிக்கவி பாரதிதாசன் பெரியாரைப் பற்றி பாடியுள்ளார்.

**பெரியார் இயக்கமும் இதழ்களும்:**

- தோற்றுவித்த இயக்கம் - சுயமரியாதை இயக்கம், தோற்றுவித்த ஆண்டு - 1925
- நடத்திய இதழ்கள் - குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்)
- பெரியாரின் சிந்தனைகள் அறிவுலகின் திறவுகோல்.
- பெரியாரின் மனைவி நாகம்மையார் பகுத்தறிவு வாழ்க்கை நெறிக்குள் ஆட்படுத்தப்பட்டதோடு, அவருடன் இணைந்து பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டார்.
- அகில இந்திய காங்கிரசுக் கட்சியின் தமிழ் மாநிலத்தின் முதல் பெண் சார்பாளராகத்(பிரதிநிதியாக) தேர்வாகிப் பங்கு பெற்றிருக்கிறார்.
- இவரும் பெரியாருடைய தங்கை கண்ணம்மாவும் தென்னகத்தில் மதுவிலக்குப் போராட்டத்தை மகாத்மாகாந்தியின் ஆணையையேற்று முன்னின்று நடத்தினர்.
- அப்போதெல்லாம் கள்ளுக்கடைகள ஊருக்கு வெளியே பெண்கள் போக முடியாதபடி அமைந்திருக்கும்.
- அங்கேயே சென்று பெண்கள் மறியல் நடத்தியது, ஆங்கில ஆட்சியாளரை அதிர வைத்தது.
- காந்தியடிகளிடம் மதுவிலக்குப்போராட்டத்தைக் திரும்பப் பெறுமாறு கேட்டபோது மும்பையிலிருந்து அவர் சொன்னார் ‘அது என் கையில் இல்லை ஈரோட்டிலிருநக்கும் இரண்டு பெண்கள் கையில்தான் இருக்கிறது’ என்று வைக்கம் போராட்டத்தில் பெரியார் சிறை பிடிக்கப்பட்ட பின் அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து அவர்கள் நடத்தினர்.
- ஆண்களின் போராட்டத்தை எளிதாகக் கையாண்ட ஆங்கிலேய அரசு பெண்களின் இந்தப் போராட்டத்தைக் கண்டு திகைத்தது.
- **“வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய் வளைந்துசெல் கால்களால் ஆறே”** – வாணிதாசன்.

## இயல் - 9
## விரிவாகும் ஆளுமை

- கணியன் பூங்குன்றனாரின் “**யாதும் ஊரே யாவருங் கேளிர்**” என்னும் கொள்கை எல்லா நூற்றாண்டுகளுக்கும் பொருத்தமாக உள்ளது.
- இம்மேற்கோள்கள் காட்டும் **பரந்த ஆளுமையும்** (Personality) **மனித நலக்கோட்பாடும்** (Humanism) இலத்தீன் புலவர் தெறென்ஸ் (Terence) கூறிய கூற்றுடன் ஒப்பிடத்தக்கவை ஆகும்.
- “நான் மனிதன்; மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று” என்பதே அவரது கூற்று.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

Padasalai.Net

**மூன்று இலக்கணங்கள்**

- முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றியமையாதவை என்கிறார் கோர்டன் ஆல்போர்ட் (Gordon Allport) என்னும் உளநூல் வல்லுநர்.
- முதலாவதாக மனிதன், தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும்.
- இரண்டாவதாக, ஒருவன் பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறானோ அதை அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருத்தல் வேண்டும் (Self Objectification).
- மூன்றாவதாக அவனது வாழ்க்கைக்குத் தன் ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும் (unifying Philosophy of life – self - Unification).
- குறிக்கோள் இல்லாதவன் வெறும் சதைப்பிண்டம் என்பதைப் "பூட்கையில்லோன் யாக்கை போல" (புறம்) என்னும் அடியில் புலவர் ஆலத்துார்கிழார் நிலைநாட்டுகிறார்.

**பிறர் நலவியல்**

- பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்கத் தத்துவ ஞானிகள் கிரேக்கக் குடியினரை மட்டுமே தம் சிந்தனைக்கு உட்படுத்தினர்.
- தமிழ் மக்களிடம் ஸ்டாயிக்வாதிகள் கூறியதுபோல மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்; பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது என்னும் நம்பிக்கை பண்டுதொட்டே நிலவியுள்ளது.
- ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றிக் கூறும்போது "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது" என்பார்.
- பிறநாடுகளைக் குறிப்பிடும் போது வேற்று நாடு, பிறநாடு என்று குறிக்காது மொழிபெறும் நாடு – மொழிபெயர் தேயம் - என்றே வரையறுத்துக் கூறியுள்ளனர்.

**இலக்கணத்தில் பரந்த மனப்பான்மை**

- **"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும் அறவிலை வணிகன் ஆய் அலன்" - புறம் 134**
- பிறர்க்காக வாழும் மக்கள் இவ்வுலகில் இல்லையென்றால், நாம் வாழ்வது அரிது.
- **"உண்டாலம்ம இவ்வுலகம்"** என்ற புறப்பாட்டு இந்தப் பண்பை அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

**இமயத்துக்**
**கோடு உயர்ந்தன்ன தம் இசை நட்டுத்**
**தீது இல் யாக்கையொடு மாய்தல்**
**தவத்தலையே – புறம்**

- **இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்**
**கொண்டல் மாமழை பொழிந்த**
**நுண்பல் தளியினும் வாழிய பலவே**
**– புறம் 34**

**ஒவ்வொருவரும் சான்றோர் ஆகலாம்**

- திருக்குறளில் பூட்கைமகன் அல்லது குறிக்கோள் மாந்தனின் இயல்புகள் பல கூறப்பட்டிருக்கின்றன.
- இத்தாலிய நாட்டில் உரோமையர் "Sapens" (அறிவுடையோன்) எனப்படும். இலட்சிய புருஷனைப் போற்றி வந்தனர்.

**ஒன்றே உலகம்**

- உரோம நாட்டுச் சிந்தனையாளர்களும் ஏறத்தாழத் தமிழ்ப் புலவர்களைப் போல அதே காலத்தில் ஒன்றே உலகம் என்ற கொள்கையைப் பாராட்டி வந்தனர்.
- "எல்லாருடைய நாடுகளும் நமக்குத் தாய் நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்"

➤ மார்க்ஸ் அரேலியஸ் என்னும் பேரரசர் கூறியதாவது; "நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்; நான் அன்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்; நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன்".

**நூல்வெளி**

➤ தமிழுக்குத் தொண்டாற்றிய கிறித்துவப் பெரியார்களுள் தனிநாயகம் அடிகள் குறிப்பிடத்தக்கவர்.

➤ அகில உலகத் தமிழாய்வு மன்றம் உருவாகவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாகவும் இவர் காரணமாக இருந்தார்.

➤ இவர் தொடங்கிய தமிழ்ப் பண்பாடு என்ற இதழ் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கிறது.

## விரிவானம்
## இயல் -1
## வளரும் செல்வம்

➤ சாப்ட்வேர் - மென்பொருள்
➤ ப்ரௌசர் - உலவி
➤ க்ராப் - செதுக்கி
➤ கர்சர் - ஏவி அல்லது சுட்டி
➤ சைபர்ஸ்பேஸ் - இணையவெளி
➤ சாவர் - வையக விரிவுவலை வழங்கி
➤ ∴போல்டர் - உறை
➤ லேபடாப் - மடிக்கணினி

➤ கலைச்சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்தோ மொழிபெயர்ப்புச் செய்தோ உருவாக்கலாம்.

➤ தமிழ்ச்சொல்லாகிய நாவாய் என்பதே ஆங்கிலத்தில் நேவி என ஆகியுள்ளது.

➤ உலகின் தொன்மையான மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் திகழ்வது கிரேக்க மொழியாகும்.கடல் சார்ந்த சொற்களில் தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ள மொழி – கிரேக்கம்.

➤ எறிதிரை (எறுதிரான்), கலன் (கலயுகோய்) நீர் (நீரியோஸ்), (நீரிய) நாவாய்(நாயு), தோணி(தோணீஸ்) போன்ற தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் இடம்பெற்றுள்ளன.

➤ 'பா'சொல் என்றால் கிரேக்க மொழியின் தொன்மையான காப்பியமாகிய இலியாத்தில் பாய்யியோனா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

| பெயர் | அளவுஎண் |
|---|---|
| முந்திரி | 1/320 |
| அரைக்காண் | 1/160 |
| அரைக்காணிமுந்திரி | 3/320 |
| காணி | 1/160 |
| கால்வீசம் | 1/64 |
| அரைமா | 1/40 |
| அரை வீசம் | 1/32 |
| முக்கணி | 3/80 |
| முக்கால் வீசம் | 3/64 |
| ஒருமா | 1/20 |
| மாகாணி (வீசம்) | 1/16 |
| இருமா | 1/10 |
| அரைக்கால் | 1/8 |
| மூன்றுமா | 3/20 |
| மூன்றுவீசம் | 3/16 |
| நாலுமா | 1/5 |

➤ அப்போலோ என்னும் கடவுளுக்குப் பாடப்படுவது 'பா' எனக் கிரேக்கத்தில் குறிக்கப்படுகிறது.

➤ வெண்பாவின் ஓசையானது செப்பலோசை ஆகும். கிரேக்கத்தில் வெண்பா வடிவப் பாடடல்கள் 'சாப்போ' என அழைக்கப்படுகின்றன.

➤ கிரேக்கத்திலிருந்து இலத்தீன் மொழிக்கு வந்துபின் ஆங்கிலத்தில் சேப்பிக் ஸ்டேன்சா என இன்றும் வழங்கப்படுகிறது.

➤ பாவின் சுவைகளில் ஒன்றாக **இளிவரல்** என்ற துன்பச் சுவையினைத் தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன. கிரேக்கத்தில் துன்பச் சுவையுடைய பாடல்கள் **'இளிகியா'** என அழைக்கப்படுகின்றன.

- இலியாத் காப்பியம் கி.மு. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது.
- கிரேக்கத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கடலில் எவ்வழியாக வரவேண்டும் என்பதைக் கிரேக்க நூல் எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ் குறிப்பிடுகிறது.
- **'எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ்'** - எறிதிரை கடலைச் சார்ந்த பெரிய புலம்.

**விறகுநான் வண்டமிழே உன்னருள் வாய்த்த**
**பிறகுநான் வீணையாய்ப் போனேன்**
**- கவிஞர் வாலி**

- திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் - ராபர்ட் கால்டுவெல்
- மொழிபெயர்ப்பும், ஒலிபெயர்ப்பும் - மணவை முஸ்தபா.
- தமிழ்நடைக் கையேடு – மாணவர்களுக்கான தமிழ் - என். சொக்கன்

## இயல் -2
## தண்ணீர் - (கந்தர்வன்)

- கதையில் வரும் பெண் - இந்திரா
- கந்தர்வனின் இயற்பெயர் நாகலிங்கம். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். தமிழ்நாடு அரசின் கருவூலக் கணக்குத்துறையில் பணியாற்றியவர்.
- சாசனம், ஒவ்வொரு கல்லாய், கொம்பன் இவரது சிறுகதைத் தொகுப்புகள்

### கலைச்சொற்கள்

- குமிழிக்கல் - Conical Stone
- நீர் மேலாண்மை - water Management
- பாசனத் தொழில்நுட்பம் - Irrigatin Technology
- வெப்ப மண்டலம் - Tropical Zone

1. அழகின் சிரிப்பு - பாவேந்தர் பாரதிதாசன்
2. தண்ணீர் தண்ணீர் - கோமல் சுவாமிநாதன்
3. தண்ணீர் தேசம் - வைரமுத்து
4. வாய்க்கால் மீன்கள் - வெ.இறையன்பு
5. மழைக்காலமும் குயிலோசையும் } - மா. கிருஷ்ணன்

### மறைநீர் (தண்ணீர்)

ஒரு கிலோ ஆப்பிள் உற்பத்தி செய்ய 822 லிட்டர், ஒரு கிலோ சர்க்கரையை உற்பத்தி செய்ய 1780லிட்டர், ஒரு கிலோ அரிசியை உற்பத்தி செய்ய 2500 லிட்டர் தண்ணீரும், ஒரு கிலோ காப்பிக் கொட்டையை உற்பத்தி செய்ய 18,900லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகின்றது.

(மா.அமரேசன் - கண்ணுக்குப் புலப்படாத தண்ணீரும் புலப்படும் உண்மைகளும்)

## இயல் -3
## அகழாய்வுகள்

- மதுரை நகர்க்கு அருகில் உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப் பொருள்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருள்கள், மான்கொம்புகள்,சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு-கறுப்புப் பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர் முனைகள் கிடைத்தன.
- தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக்கிணறுகள், சுடுமண் கூரை ஓடுகள் போன்ற பல்வேறு தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன.
- மூன்று வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன.
- இதுவரை அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பான்மையான இடங்கள், இறப்புத்

Padasalai.Net

தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன.

- ஆனால், கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப்பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப்பொருள்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.
- 1863 ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார்.
- இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம்.
- ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டெடுத்தோம்.
- அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால், ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.
- 1914 ஆம் ஆண்டுஆதிச்ச நல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- பட்டிமண்டபம் என்பதே இலக்கிய வழக்கு.

> மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்,
> பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்
> - **சிலப்பதிகாரம்**
>
> பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்
> - **மணிமேகலை**
>
> பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை: எட்டினோடு
> இரண்டும் அறியேனையே - **திருவாசகம்**
>
> பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம்
> - **கம்பராமாயணம்**

- பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே– நன்னூல்
- நன்னூலை இயற்றியவர் - பவணந்தி முனிவர்.
- 1863இல் ஆரம்பித்த அகழாய்வுப் பணி 2018ஆம் ஆண்டிலும் தொடரும்போது பல உண்மைகள் உறைக்கத்தொடங்கி இருக்கின்றன.
- அறிவியலில் இரண்டு வகையுண்டு, ஒன்று வணிக அறிவியல். மற்றொன்று மக்கள் அறிவியல். வணிக அறிவியல், மூலதனத்தைப் பெருக்குவதற்காகப் பொருள்களைக் கண்டுபிடிக்கிறது.

## கூடுதல் தகவல்கள்

- தமிழர் நாகரிகமும் பண்பாடும் - அ. தட்சிணாமூர்த்தி
- தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் - மா. இராசமாணிக்கனார்
- தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் பறவைகள் - க. ரத்னம்
- தொல்லியல் நோக்கில் சங்க காலம் - கா. ராஜன்
- தமிழர் சால்பு - சு.வித்யானந்தன்.

## கலைச்சொற்கள்

- அகழாய்வு - Excavation
- கல்வெட்டியல் - Epigraphy
- நடுகல் - Hero stone
- பண்பாட்டுக் குறியீடு - Cultural symbol
- புடைப்புச் சிற்பம் - Embossed Sculpture
- பொறிப்பு - Inseription

## இயல் - 4
## விண்ணையும் சாடுவோம்

- தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர் சிவன்.
- இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர், இந்தப் பதவியை ஏற்றிருக்கும் முதல் தமிழர். 2015ஆம் ஆண்டில் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக இருந்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

Padasalai.Net

- சொந்த ஊர், நாகர்கோவில் பக்கம் வல்லங்குமாரவிளை. அங்குள்ள அரசுப் பள்ளியில்தான் தமிழ்வழியில் படித்தார். அப்பா கைலாச வடிவுக்கு, மாங்காய் வியாபாரம்.
- கல்லூரியில் கணிணி அறிவியல் இளங்கலைப் படிப்பில் முதலாவதாக வந்தார்.
- எம்.ஐ.டி-யில் வானூர்திப் பொறியியல் என்னும் துறையை எடுத்துப் படித்தார். எம்.இ படித்து முடித்து, விக்ரம் சாராபாய் நிறுவனத்தில் பொறியாளர் ஆனார்.
- 1983ஆம் ஆண்டு, முதன்முதலில் பி.எஸ்.எல்.வி திட்டத்தைத் தொடங்க, அரசாங்கம் இசைவு தந்தது.

**விக்ரம் சாராபாய்**

'இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை'- விக்ரம் சாராபாய் ஆவார். ஆரியபட்டா என்ற முதல் செயற்கைக்கோள் ஏவுதலுக்குக் காரணமானவர்.

செயற்கைக்கோள் உதவியுடன் தொலைக்காட்சி வழியாக 24,000 இந்திய கிராமங்களில் உள்ள ஐம்பது இலட்சம் மக்களுக்கு கல்வியை எடுத்துச் செல்ல உதவினார்.

இவரின் பெயரால் 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்' திருவனந்தபுரத்தில் செயல்பட்டுவருகிறது. இவருடைய முயற்சியால்தான் இஸ்ரோ தொடங்கப்பட்டது.

- 'சித்தாரா' இது, செயற்கைக்கோள் ஏவு ஊர்தி பற்றிய முழு விவரங்களையும் மின்னிலக்க முறையில் சேகரிக்கும். 'சித்தாரா'(SITARA) செயலியை உருவாக்கியவர் சிவன்.
- ஒரு கல்லைத் தூக்கி வீசும்போது, அந்தக் கல் எந்தத் திசையில், எவ்வளவு கோணத்தில், எவ்வளவு நேரத்தில், எந்த இடத்தில் எவ்வளவு அழுத்தத்தில் விழும் என்று சொல்வதுதான் 'சித்தாரா'வின் பணி.
- இப்போதுவரை நம்முடைய நாட்டிலிருந்து ஏவப்படும் அனைத்துச் செயற்கைக்கோள் ஏவு ஊர்திகளும் 'சித்தாரா' செயலியைப் பயன்படுத்தித்தான் விண்ணில் ஏவப்படுகின்றன.

- **அப்துல்கலாம்:** இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவர். ஊர் - இராமேசுவரம்
- 'இந்திய ஏவுகணை நாயகன்'
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திலும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் விண்வெளிப் பொறியாளராகப் பணியாற்றினார்.
- பாரதரத்னா விருது பெற்றவர்.

**வளர்மதி:**

- அரியலூரில் பிறந்த இவர், 2015இல் தமிழ்நாடு அரசின் அப்துல்கலாம் விருதைப் பெற்ற முதல் அறிவியல் அறிஞர். இஸ்ரோவில் 1984 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார்.
- 2012இல் உள் நாட்டிலேயே உருவான முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் (RISAT - 1) திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றினார்.
- இஸ்ரோவின் செயற்கைக்கோள் திட்ட இயக்குநராகப் பணியாற்றிய இரண்டாவது பெண் அறிவியல் அறிஞர் ஆவார்.

- "நேவிக்" என்ற செயலியைக் கடல் பயணத்திற்காக உருவாக்கி இருக்கிறோம்.
- விண்வெளி துறையில் மூன்று வகையான தொழில்நுட்பங்கள் இருக்கின்றன. செயற்கைக்கோளை ஏவுவதற்கான தொழில்நுட்பம், செயற்கைக்கோளை

ஏற்றிச்செல்லும் ஏவு ஊர்தி, அந்த ஏவு ஊர்தியிலிருந்து விடுபட்ட செயற்கைக்கோள் தரும் செய்திகளைப் பெற்று அதைப் பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் கொண்டுவருதல்.

- ஜி.எஸ்.எல்.வி. மார்க்-2 ஏவுகணை 2.25டன்களிலிருந்து 3.25டன்கள் சுமக்கும் திறனாக மாற்றப்படும்.
- ஜி.எஸ்.எல்.வி. மார்க்-3 ஏவுகணையின் சுமக்கும் திறன் 3டன்களிலிருந்து 6டன்களாக அதிகரிக்கப்படும்.
- இதுவரை இந்தியாவுக்காக 45 செயற்கைக்கோள்கள் செலுத்தப்பட்டுள்ளன.

## விண்வெளித்துறையில் எதிர்காலச் செயல் திட்டம்

- மூன்று ஆண்டுகள், ஏழு ஆண்டுகள், 15 ஆண்டுகள் என இஸ்ரோவில் மூன்று வகையான திட்டங்கள் எப்போதும் இருக்கும்.

## அருணன் சுப்பையா

- இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் அறிவியலாளர் மற்றும் திட்ட இயக்குநர் ஆவார்.
- திருநெல்வேலி மாவட்டத்தின் ஏர்வாடி அருகில் உள்ள கோதைசேரி என்னும் ஊரைச் சேர்ந்தவர்.
- 1984இல் திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம்சாராபாய் விண்வெளி மையத்தில் பணியில் சேர்ந்து, தற்போது பெங்களூரில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணிபுரிகிறார்.
- 2013இல் மங்கள்யான் செயற்கைக்கோளை உருவாக்கிய இந்தியாவின் செவ்வாய் சுற்றுகலன் திட்டத்தின் திட்ட இயக்குநராக இருக்கின்றார்.

## மயில்சாமி அண்ணாதுரை

- ‘இளைய கலாம்’ என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம், கோதவாடி என்னும் சிற்றூரில் பிறந்தவர்.
- மேல்நிலை வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் தமிழ்வழியில்படித்தவர். இதுவரை 5 முனைவர் பட்டங்கள் பெற்றுள்ளார்.
- 1982ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியில் சேர்ந்தார்.
- நம் நாடு நிலவுக்கு முதன் முதலில் அனுப்பிய ஆய்வுக்கலம் சந்திரயான்-1 திட்டத்தின் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்.
- சந்திரயான்-2 திட்டத்திலும் பணியாற்றிவருகிறார். சர்.சி.வி.இராமன் நினைவு அறிவியல் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.
- தமது அறிவியல் அனுபவங்களை, “கையருகே நிலா” என்னும் நூலாக எழுதியுள்ளார்.

## இயல் - 5
## வீட்டிற்கோர் புத்தகசாலை

- ‘நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கிவந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்’ என்றவர் ஆபிரகாம் லிங்கன்.
- 2009ஆம் ஆணடு நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது.
- 2010ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## இன்றும் நிலைபெற்றுள்ள பேரறிஞர் அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகளுள் சில

1. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.
2. கத்தியைத் தீட்டாதே உன் புத்தியைத் தீட்டு. வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.
3. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
4. சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
5. மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை. தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை.
6. நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
7. இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை.
8. இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்.
9. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

## நூல்வெளி

- பேரறிஞர் அண்ணா தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கியவர். எழுத்தாளரான அண்ணாவைத் ‘தென்னகத்துப் பெர்னாட்ஷா’ என்று அழைத்தனர்.
- “சிவாஜி கண்ட இந்த சாம்ராஜ்யம்” முதல் இன்பஒளி வரை பல படைப்புகளை தந்தவர். அவரது பல படைப்புகள் திரைப்படங்களாயின.
- தம்முடைய திராவிட சீர்திருத்தக் கருத்துகளை நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக முதன்முதலில் பரப்பியவர்
- இவர் 1935இல் சென்னை, பெத்தநாயக்கன் பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார்.
- ஹோம்ரூல், ஹோம்லேண்ட, நம்நாடு, திராவிடநாடு, மாலைமணி, காஞ்சி போன்ற இதழ்களில் ஆசிரியராகவும் குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் இருந்தார்.
- முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார். சென்னை மாகாணத்தை ‘தமிழ்நாடு’ என்று மாற்றித் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்.

## தெரிந்து தெளிவோம்

- ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது - தஞ்சை சரசுவதி மகால் நூலகம்.
- இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்குப் பாதுகாக்கப் படுகின்றன.
- உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமரா நுலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.
- இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது - திருவனந்தபுரம் நடுவண் நூலகம்.
- கொல்கத்தாவில் 1836ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1953இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப்பெரிய நூலகமாகும். இது ஆவணக்காப்பக நூலகமாகவும் திகழ்கிறது.
- உலகின் மிகப்பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள **“லைப்ரரி ஆப் காங்கிரஸ்”**

- **"வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்படவேண்டும்!"** – அறிஞர் அண்ணா
- உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே! – கதே
- சீர்காழி இரா.அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் ஒன்பதாம் நாள் தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுகிறது.

## இயல் - 6
## செய்தி - தி. ஜானகிராமன்

**சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள்**

- 1970 - அன்பளிப்பு (சிறுகதைகள்) - கு.அழகிரிசாமி
- 1979- சக்தி வைத்தியம் (சிறுகதைத்தொகுப்பு) – தி. ஜானகிராமன்
- 1987 – முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) – ஆதவன்
- 1996 - அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத்தொகுப்பு) – அசோகமித்ரன்
- 2008 – மின்சாரப்பூ (சிறுகதைகள்) – மேலாண்மை பொன்னுசாமி
- 2010 - சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) – நாஞ்சில் நாடன்
- 2016 – ஒரு சிறு இசை (சிறுகதைகள்) – வண்ணதாசன்

- தி. ஜானகிராமன் அவர்கள் தனது ஜப்பான் பயண அனுபவங்களை உதயசூரியன் என்னும் தலைப்பில் சுதேசமித்திரன் வார இதழில் எழுதினார்.
- இது 1967இல் நூலாக வெளியிடப்பெற்றது. ரோம், செக்கோஸ்லோவோக்கியா சென்ற அனுபவங்களைக் 'கருங்கடலும் கலைக் கடலும்' என்னும் தலைப்பில் 1974இல் நூலாக வெளியிட்டார்.
- தமது காவிரிக்கரை வழியான பயணத்தை 'நடந்தாய் வாழிகாவேரி' என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார்.
- இவரது மற்றுமொரு பயணக்கட்டுரை, 'அடுத்த வீடு ஐம்பது மைல்' என்பதாகும்.

**நூல்வெளி**

- தி. ஜானகிராமன் தஞ்சைமண்வாசனையுடன் கதைகளைப் படைத்தவர். உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகவும் வானொலியில் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகவும் பணியாற்றியவர்.
- வடமொழி அறிவும் சிறந்த இசையறிவும் கொண்ட இவர்தம் கதைகள் மணிக்கொடி, கிராம ஊழியன், கணையாழி, கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்களில் வெளிவந்தன. நாவல்களையும் நாடகங்களையும் இவர் படைத்துள்ளார்.
- 'அவரவர் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை' என்னும் கோட்பாட்டைக் கொண்டவர் இவர்.
- தமிழ்க் கதையுலகம் நவீனமயமானதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.
- செய்தி என்னும் சிறுகதைச் 'சிவப்பு ரிக்ஷா' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- மிகவும் உயர்ந்த இசை சிறந்த கலைஞனால் கையாளப்படும்போது சொற்களின் எல்லையைத் தாண்டி இசையின் மூலமாகவே பொருள் கொடுக்கிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது.
- தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடை உ.வே.சாமிநாதர், மௌனி, தி.ஜானகிராமன், தஞ்சை பிரகாஷ், தஞ்சை இராமையா தாஸ், தஞ்சாவூர்க் கவிராயர் ஆகியோர்.

www.Padasalai.Net www.CBSEtips.in


## தெரிந்து தெளிவோம்

- இந்திய இசையின் அழகான நுட்பங்களைத் தெளிவாக வாசித்துக் காட்டக்கூடிய இசைக் கருவிகளில் நாகசுரமும் ஒன்று மங்கலமான பல நிகழ்வுகளில் இக்கருவி இசைக்கப்படுகிறது.
- இந்தச் சிறப்பான கருவி 600 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழகத்தில் வாசிக்கப்பட்டது. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத இரத்னாகரம் என்னும் நூலில் இந்தக் கருவி கூறப்படவில்லை.
- 13ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள எந்தப் பதிவுகளிலும் இந்தக் கருவி பற்றிக் குறிப்பிடப்படவில்லை. தமிழகப் பழமை வாய்ந்த கோவில் சிற்பங்களிலும் இந்தக் கருவி காணப்படவில்லை.
- ஆகவே இந்தக் கருவி 13ம் நூற்றாண்டிற்குப் பின் ஏற்பட்டிருக்கலாம் என்று அறியமுடிகிறது.
- நாகசுரம் என்ற பெயரே சரியானது. நாகசுரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படுகிறது. வெட்டப்பட்ட ஆச்சா மரத்துண்டுகளை நீண்ட நாள்கள் வைத்திருந்த பிறகே இக்கருவி உருவாக்கப்படுகிறது.
- நாகசுரத்தின் மேல்பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படுகிறது. சீவாளி, நாணல் என்ற புல் வகையைக் கொண்டு செய்யப்படுகிறது.

**எத்தனை பெரிய வானம்**
**எண்ணிப்பார் உனையும் நீயே**
**பித்தேறி மேல்கீழ்என்று**
**மக்கள் தாம் பேசல் என்னே!**

**– பாவேந்தர் பாரதிதாசன்**

## அறிவை விரிவுசெய்

- நட்புக்காலம் - கவிஞர் அறிவுமதி
- திருக்குறள் கதைகள் - கிருபானந்தவாரியார்
- கையா, உலகே ஒரு உயிர் - ஜேம்ஸ் லவ்லாக் (தமிழில்: சா.சுரேஷ்)

## இயல் - 8
## மகனுக்கு எழுதிய கடிதம்
## நா. முத்துக்குமார்

- கடித வடிவில் இலக்கியங்கள் படைத்துள்ளவர்கள்

**தூர்**

**வேப்பம் பூ மிதக்கும்**
**எங்கள் வீட்டுக் கிணற்றில்**
**தூர் வாரும் உற்சவம்**
**வருடத்திற்கொரு முறை**
**விசேஷமாய் நடக்கும்.**

**இன்றுவரை அம்மா**
**கதவுகளின் பின்னிருந்துதான்**
**அப்பாவோடு பேசுகிறாள்.**
**கடைசிவரை அப்பாவும்**
**மறந்தே போனார்**
**மனசுக்குள் தூரெடுக்க.**

**– நா. முத்துக்குமார்**

## இயல் - 9
## தாய்மைக்கு வறட்சி இல்லை!
## சு. சமுத்திரம்

- தாய்மை வழியே மனிதம் காக்கப்படுவதை, சு. சமுத்திரம் அவர்களின் சிறுகதை உணர்த்துகிறது.

## நூல்வெளி

- சு. சமுத்திரம் திருநெல்வேலி மாவட்டம் திப்பணம்பட்டியைச் சேர்நதவர். 300க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.
- இவரின் புகழபெற்ற சிறுகதைகள் - வாடாமல்லி, பாலைப்புறா, மண்சுமை, தலைப்பாகை, காகித உறவு
- **“வேரில் பழுத்த பலா”** புதினம் சாகித்திய அகாதெமி விருதையும், குற்றம் பார்க்கில் சிறுகதைத்தொகுதி தமிழக அரசின் பரிசையும் பெற்றுள்ளது.
- “வளத்தம்மா” சிறுகதை மிகவும் புகழ்பெற்றது.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## இலக்கணம்
## இயல் - 1
## தொடர் இலக்கணம்

### எழுவாய், பயனிலை

**எட்வர்டு வந்தான்**

- ❖ இந்தச் சொற்றொடரில் பெயர்ச்சொல். எட்வர்டு என்பதாகும்.
- ❖ இந்தச் சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம்.

**கனகாம்பரம் பூத்தது**

- ❖ இந்தச் சொற்றொடரில் வினைச்சொல், பூத்தது. இந்த வினைச்சொல்லே பயனிலை ஆகும்.
- ❖ ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தைப் பயனிலை என்கிறோம்.

### செயப்படு பொருள்

**மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்**

- ❖ இத்தொடரில், கனகாம்பரம் என்பது செயப்படுபொருள் என்று அழைக்கப்படுகிறது.
- ❖ எழுவாய் ஒரு வினையைச் செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே செயப்படுபொருள் ஆகும்.
- ❖ ஒரு தொடரில் செயப்படுபொருள் இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை.

### தோன்றா எழுவாய்

**படித்தாய்**

- ❖ இத்தொடரில் படித்தாய் என்பது பயனிலை நீ என்னும் எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை. இதைத் தோன்றா எழுவாய் என்று கூறுகிறோம்

### வினைப் பயனிலை

**நான்வந்தேன்**

- ❖ இத்தொடரில் வினைமுற்று பயனிலையாக வந்தது.

### பெயர்ப் பயனிலை

**சொன்னவள் கலா**

- ❖ இங்கு கலா என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக வந்துள்ளது.

### வினாப்பயனிலை

**விளையாடுபவன் யார்?**

- ❖ இங்கு யார் என்னும் வினாச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது வினாப் பயனிலை எனப்படும்.

### குறிப்பு

- ❖ ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில் தான் வர வேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தமிழின் தொடர் அமைப்பின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

(எ.கா)

நான் பாடத்தைப் படித்தேன்

**(எழுவாய், செயப்படுபொருள், பயனிலை)**

பாடத்தை நான் படித்தேன்

**(செயப்படுபொருள் , எழுவாய், பயனிலை)**

படித்தேன் நான் பாடத்தை

**( பயனிலை, எழுவாய், செயப்படுபொருள்)**

### பெயரடை

**அன்பரசன் நல்ல பையன்**

- ❖ இத்தொடரில் நல்ல என்னும் சொல், எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லுக்கு

அடையாக வருகிறது. இவ்வாறு அமைவதனைப் பெயரடை என்கிறோம்.

## வினையடை

**மகிழ்நன் மெல்ல வந்தான்**

- இத்தொடரில் மெல்ல என்னும் சொல், வந்தான் என்னும் வினைப் பயனிலைக்கு அடையாக வருகிறது. இதை வினையடை என்கிறோம்.

## தன்வினை - பிறவினை

- பந்து உருண்டது என்பது தன்வினை.
- பந்தை உருட்டினான் என்பது பிறவினை.
- வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.
- வினையின் பயன் எழுவாயையன்றிப் பிறிதொன்றைச் சேருமாயின் பிறவினை எனப்படும் .
- பிறவினைகள், வி, பி போன்ற விகுதிகளைக் கொண்டும் செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளை இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **தன்வினை** | அவன் திருந்தினான்.<br>அவர்கள் நன்றாகப் படித்தனர். |
| **பிறவினை** | அவனைத் திருத்தச் செய்தான்.<br>தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்.<br>பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார். |

## செய்வினை , செயப்பாட்டுவினை

- கமலா பாட்டுப் பாடுகிறாள். - செய்வினைத் தொடர்
- பாட்டு கமலாவால் பாடப்பட்டது. - செயப்பாட்டுவினைத் தொடர்

- ‘படு’ என்னும் துணை வினைச்சொல் செயப்பாட்டு வினைத்தொடரில் சேர்ந்துவிடுகிறது.
- ‘படு‘ என்பதைப் போல ‘உண்,பெறு’ முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன.
- அவற்றைப் போலவே, எச்சங்களுடன் சேர்ந்து ஆயிற்று, போயிற்று போனது முதலான துணை வினைகள் செயப்பாட்டு வினைகளை உருவாக்குகின்றன.

எ.கா:-

கோவலன் கொலையுண்டான்.
ஓவியம் குமரனால் வரையப்பட்டது
வீடு கட்டியாயிற்று.
சட்டி உடைந்து போயிற்று
பணம் காணாமல் போனது

> செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை செய்வினை, செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை செயப்பாட்டு வினை.

## பயன்பாட்டுத் தொடர்கள்

| | |
|---|---|
| அப்துல் நேற்று வந்தான் | தன்வினைத் தொடர் |
| அப்துல் நேற்று வருவித்தான் | பிறவினைத் தொடர் |
| கவிதா உரை படித்தாள் | செய்வினைத் தொடர் |
| உரை கவிதாவால் படிக்கப்பட்டது | செயப்பாட்டு வினைத் தொடர் |
| குமரன் மழையில் நனைந்தான் | உடன்பாட்டு வினைத் தொடர் |
| குமரன் மழையில் நனையவில்லை | எதிர்மறைவினைத் தொடர் |
| என் அண்ணன் நாளை வருவான் | செய்தித்தொடர் |

| | |
|---|---|
| எவ்வளவு உயரமான மரம்! | உணர்ச்சித் தொடர் |
| உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் யார்? | வினாத் தொடர் |
| பூக்களைப் பறிக்காதீர் | கட்டளைத் தொடர் |
| இது நாற்காலி அவன் மாணவன் | பெயர்ப் பயனிலைத் தொடர் |

## பகுபத உறுப்பிலக்கணம்

- பதம்(சொல்) இருவகைப்படும் அவை பகுபதம், பகாப்பதம் ஆகும், பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும், இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்
- பகுபத உறுப்புகள் 6 வகைப்படும்

| | |
|---|---|
| **பகுதி (முதனிலை)** | சொல்லின் முதலில் நிற்கும்: பகாப் பதமாக அமையும், வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| **விகுதி (இறுதிநிலை)** | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டும். |
| **இடைநிலை** | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| **சந்தி** | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| **சாரியை** | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும், பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| **விகாரம்** | தனி உறுப்பு அன்று, மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

## பகுதி

- ஊரன் - ஊர்
- நடிகன் - நடி
- பார்த்தான் - பார்
- வரைந்தான் - வரை
- மடித்தார் - மடி
- மகிழ்ந்தாள் - மகிழ்

## விகுதி

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் - ஆண்பால்வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பாடுகிறாள் | ஆள் - பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம்- தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம்,ஆம், எம்,ஏம். ஓம் |
| செய்தாய் | ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ,ஆய், இ |
| பாரீர் | ஈர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர்,ஈர் |
| அழகிய,பேசும் | அ, உம் - பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ - வினையெச்ச விகுதிகள் | உ, இ |

| | | |
|---|---|---|
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் - தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு. |

## இடைநிலைகள்

| | | |
|---|---|---|
| **வென்றார்** | ற் - இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| **உயர்கிறான்** | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று. ஆநின்று |
| **புகுவான், செய்கேன்** | வ், க் - எதிர்கால இடைநிலைகள் | ப், வ், க் |
| **பறிக்காதீர்** | ஆ- எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| **மகிழ்ச்சி, அறிஞன்** | ச், ஞ் - பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

## சந்தி

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் - சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய்- உடம்படுமெய் சந்தி | ய், வ் |

## சாரியை

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் - சாரியை | அன், ஆன். இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம்,நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

## எழுத்துப்பேறு

- பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும்.
- மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும், பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு. (எ,கா)
- செய்யாதே: செய் + ய் + ஆ + த் + ஏ
  - செய் - பகுதி
  - ய் - சந்தி
  - ஆ - எதிர்மறை இடைநிலை
  - த் - எழுத்துப்பேறு
  - ஏ - முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி
- வந்தனன்: வா(வ)+ த்(ந்) + த் + அன் + அன்
  - வா– பகுதி ('வ' ஆனது விகாரம்)
  - த்(ந்) – சந்தி (ந் ஆனது விகாரம்)
  - த்- இறந்தகால இடைநிலை
  - அன் - சாரியை
  - அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

# இயல் - 2
# துணைவினைகள்

## வினைவகைகள்

- வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு, பொருள், சொற்றொடரில் அவை தொழிற்படும் விதம் முதலான அடிப்படைகளில் பலவகையாகப் பாகுபடுத்தலாம்.

## தனிவினையும் கூட்டுவினையும்

- வினைச்சொற்களை அமைப்பின் அடிப்படையில் தனிவினை, கூட்டுவினை என இரு வகைப்படுத்தலாம்.

## தனிவினை

- ❖ படி, படியுங்கள், படிக்கிறார்கள்.
- ❖ படி என்பது வினையடி, பகாப்பதம் ஆகும். அதை மேலும் பொருள்தரக்கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது.
- ❖ தனிவினையடிகளைக் கொண்ட வினைச் சொற்களைத் தனிவினை என்பர்.

## கூட்டு வினை

- ❖ ஆசைப்பட்டேன் கண்டுபிடித்தார்கள், தந்தியடித்தேன், முன்னேறினோம்.
- ❖ ஆசைப்படு, கண்டுபிடி, தந்தியடி. முன்னேறு என்பன அவற்றின் வினையடிகள். அவை பகுபதங்கள் ஆகும். இவ்வாறு பகுபதமாக உள்ள வினையடிகளைக் கூட்டுவினையடிகள் என்பர்.
- ❖ அவ்வகையில் கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் கூட்டுவினை என்பர்.
- ❖ கூட்டு வினைகள் பொதுவாக மூன்று வகையாக ஆக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| பெயர் +வினை | – வினை |
| தந்தி + அடி | - தந்தியடி |
| ஆணை + இடு | - ஆணையிடு |
| கேள்வி+ படு | - கேள்விப்படு |

| | |
|---|---|
| வினை+வினை | - வினை |
| கண்டு + பிடி | - கண்டுபிடி |
| சுட்டி+ காட்டு | - சுட்டிக்காட்டு |
| சொல்லி + கொடு | - சொல்லிக்கொடு |

| | |
|---|---|
| இடை+வினை | - வினை |
| முன் + ஏறு | - முன்னேறு |
| பின் + பற்று | - பின்பற்று |
| கீழ் + இறங்கு | - கீழிறங்கு |

## முதல் வினை

- ❖ ஒரு கூட்டு வினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை முதல் வினை (Main verb) எனப்படும்.

**எ.கா:- ஓடப்பார்த்தேன்**

**ஓடு - முதல்வினை**

- ❖ ஒரு கூட்டுவினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை விட்டுவிட்டு முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை துணைவினை எனப்படும்.

**எ.கா:- எழுதிப்பார்த்தாள்**

**பார் - துணைவினை**

- ❖ துணைவினையே திணை,பால், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெறும். தமிழில் ஏறத்தாழ 40 துணைவினைகள் உள்ளன.
- ❖ அவற்றுள் பெரும்பாலானவை முதல் வினையாகவும் செயல்படுகின்றன.
- ❖ பார், இரு, வை, கொள், போ, வா, முடி, விடு, தள்ளு, போடு, கொடு, காட்டு முதலானவை இருவகை வினைகளாகவும் செயல்படுகின்றன.

## துணைவினைகளின் பண்புகள்

- ❖ துணைவினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றைப் புலப்படுத்துகின்றன.
- ❖ இவை முதல் வினையைச் சார்ந்து அதன் வினைப்பொருண்மைக்கு மெருகூட்டுகின்றன.
- ❖ பேச்சு மொழியிலேயே துணைவினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.
- ❖ ஆங்கில மொழியில் துணை வினைகள் முதல் வினைகளுக்கு முன்பாக இடம் பெறும்.

(எ.கா) I will go to school இத் தொடரில் go முதல் வினை : will துணைவினை

Padasalai.Net

- தமிழ் மற்றும் ஜப்பானிய மொழிகளில் அத்தகைய உறுப்புகள் முதல் வினைகளுக்குப் பின்பே இடம் பெறும்.

(எ.கா) கீழே விழப் பார்த்தான்.

இத்தொடரில் விழு (விழ) என்பது முதல்வினை; பார்த்தான் என்பது துணைவினை

- தமிழின் துணைவினைக் கொள்கை ஆங்கிலத்தின் துணைவினைக் கொள்கையிலிருந்து வேறுபட்டது.
- அதாவது, தமிழில் துணைவினையாக வரும் வேர்ச்சொல் சில தொடர்களில் முதல் வினையாகவும் வரும்.

| வினையடி | முதல்வினை | துணைவினை |
|---|---|---|
| இரு | புத்தகம் மேசையில் இருக்கிறது. என்னிடம் பணம் இருக்கிறது. | நான் மதுரைக்குப் போயிருக்கிறேன். அப்பா வந்திருக்கிறார். |
| வை | அவள் நெற்றியில் பொட்டு வைத்தாள். அவன் வானொலியில் பாட்டு வைத்தான். | நீ என்னை அழ வைக்காதே அவர் ஒருவரைப் பாட வைத்தார். |
| கொள் | பானை நான்கு படி அரிசி கொள்ளும். நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை. | நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான் நோயாளியைப் பார்த்துக் கொள்கிறேன். |
| போ | அவன் எங்கே போகிறான்? நான் கடைக்குப் போனேன். | மழை பெய்யப் போகிறது. நான் பயந்துபோனேன். |
| வா | நீ நாளைக்கு வீட்டுக்கு வா. எனக்கு இப்போதுதான் புத்தி வந்தது. | அந்நியர் நம்மை ஆண்டு வந்தனர் வானம் இருண்டு வருகிறது |
| விடு | யாரையும் உள்ளே விடாதே மழைவிட்டதும் போகலாம். | அடுத்த மாதம் நான் போய்விடுவேன் அப்பா இனி வந்துவிடுவார் |
| தள்ளு | அவன் என்னைக் கீழே தள்ளினான். காய்கறி வண்டியைத் தள்ளிச் சென்றார். | அவர் கதைகதையாக எழுதித்தள்ளுகிறார் அவன் அனைத்தையும் வாசித்துத் தள்ளுகிறான் |
| போடு | புத்தகத்தைக் கீழே போடாதே. தலையில் தொப்பியைப் போடு. | மலிவான விலையில் வாங்கிப் போட்டேன். விழித்தவுடன் பாயைச் சுருட்டிப் போட வேண்டும். |
| கொடு | நான் அவருக்குப் பணம் கொடுத்தேன். அவன் உயிரைக்கொடுத்து வேலை செய்கிறான். | பசித்தவனுக்குச் சோறு வாங்கிக் கொடுத்தான். பாடம் சொல்லிக் கொடுப்பேன். |
| காட்டு | தாய் குழந்தைக்கு நிலவைக் காட்டினாள். சான்றோர் காட்டிய பாதையில் செல். | ஆசிரியர் செய்யுளைப் பாடிக் காட்டினார். படித்தபடி நடந்துகாட்ட வேண்டும். |

## இயல் - 3
## வல்லினம் மிகும் இடங்கள்

- வல்லெழுத்துகள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும்.
- இவை நிலைமொழியுடன் புணர்கையில் அவற்றின் மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும்.
- இதை வல்லினம் மிகுதல் என்பர்.

## வல்லினம் மிகும் இடங்கள்

| | | |
|---|---|---|
| 1 | அச்சட்டை<br>இந்தக்காலம்<br>எத்திசை?<br>எந்தப்பணம்? | அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும்,'எ' என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். |
| 2 | கதவைத் திற<br>தகவல்களைத் திரட்டு<br>காட்சியைப் பார் | ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர் களில் வல்லினம் மிகும். |
| 3 | முதியவருக்குக் கொடு<br>மெட்டுக்குப் பாட்டு<br>ஊருக்குச் செல் | கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| 4 | எனக்கேட்டார்<br>வருவதாகக் கூறு | என, ஆக போன்ற செல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும். |

| | |
|---|---|
| அதற்குச் சொன்னேன்<br>இதற்குக் கொடு<br>எதற்குக் கேட்கிறாய்? | அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லனம் மிகும் |
| இனிக் காண்போம்<br>தனிச்சிறப்பு | இனி, தனி ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| மிகப் பெரியவர் | மிக என்னும் சொல்லின் பின் வல்லினம் மிகும். |
| எட்டுத் தொகை<br>பத்துப் பாட்டு | எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகும். |
| தீப் பிடித்தது<br>பூப் பந்தல் | ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும். |
| கூவாக் குயில்<br>ஓடாக் குதிரை | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும். |

| | |
|---|---|
| கேட்டுக் கொண்டான்<br>விற்றுச் சென்றான் | வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். |
| ஆடச் சொன்னார்<br>ஓடிப் போனார் | (அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். |
| புலித்தோல் | ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| கிழக்குப் பகுதி<br>வடக்குப் பக்கம் | திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும். |
| மல்லிகைப் பூ<br>சித்திரைத் திங்கள் | இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும். |
| தாமரைப் பாதம் | உவமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| சாலப் பேசினார்<br>தவச் சிறிது | சால, தவ, தட, குழ என்னும் உரிச் சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| நிலாச்சோறு<br>கனாக்கண்டேன் | தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும். |
| வாழ்க்கைப் படகு<br>உலகப் பந்து | சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# இயல் - 4
# வல்லினம் மிகா இடங்கள்

**வல்லினம் மிகா இடங்கள்**

| | |
|---|---|
| அது செய், இது காண். | அது,இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| எது கண்டாய்? எவை தவறுகள்? | இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| குதிரைதாண்டியது, கிளி பேசும். | எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது. |
| அண்ணனோடு போ, எனது சட்டை. | மூன்றாம்,ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது |
| தந்தையே பாருங்கள், மகளே தா. | விளித் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| வந்த சிரிப்பு, பார்த்த பையன். | பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| நாடு கண்டான். கூடு கட்டு | இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது |
| வரும்படி சொன்னார்.<br>பெறும்படி சொன்னார். | படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| வாழ்க தமிழ்! வருக தலைவா! | வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது. |
| குடிதண்ணீர், வளர்பிறை,<br>திருவளர்செல்வன் | வினைத்தொகையில் வல்லினம் மிகாது. |
| ஒரு புத்தகம் மூன்று கோடி | எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது. |
| தாய்தந்தை, இரவுபகல் | உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது |
| அன்று சொன்னார், என்று தருவார்.<br>அவராவது தருவதாவது,<br>யாரடா சொல், ஏனடி செல்கிறாய்?<br>கம்பரைப் போன்ற கவிஞர் யார்? | அன்று. இன்று. என்று. ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது |
| அவ்வளவு பெரியது.<br>அத்தனை சிறியது.<br>அவ்வாறு பேசினான்.<br>அத்தகைய பாடங்கள்.<br>அப்போதைய பேச்சு.<br>அப்படிப்பட்ட காட்சி.<br>நேற்றைய சண்டை. | அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு,அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, அத்தகைய, இத்தகைய, எத்தகைய, அப்போதைய, இப்போதைய, எப்போதைய, அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| என்னோடு சேர்.<br>மரத்திலிருந்து பறி.<br>குரங்கினது குட்டி. | மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| தமிழ் படி.(ஐ) கை தட்டு. (ஆல்)<br>வீடு சென்றான். (கு)<br>கரை பாய்ந்தான். (இருந்து) | இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது. |
| தலைவி கூற்று. | நிலைமொழி உயர்திணையாய் அமையும் பெயர்த் தொகையில் |

| | |
|---|---|
| தொண்டர் படை. | வல்லினம் மிகாது. |
| உறு பொருள். நனி தின்றான். கடி காவல். | சால, தட, தவ, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| பார் பார் சல சல | அடுக்குத்தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது. |
| கருத்துகள், பொருள்கள், வாழ்த்துகள் | 'கள்' என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. |

## இயல் - 5
## இடைச்சொல் - உரிச்சொல்

- ❖ இடைச்சொற்கள் பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.
- ❖ இன், கு, உடைய,உம், ஐ, விட,கள், ஆனால் தான், போல, உடன் போன்றவை இடைச் சொற்கள்.
- ❖ இவற்றுள் உம், ஓ, ஏ, தான், மட்டும் , ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்கள் தற்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**இடைச்சொற்களின் வகைகள்**

| | |
|---|---|
| வேற்றுமை உருபுகள் | ஐ, ஆல்,கு, இன், அது, கண் |
| பன்மை விகுதிகள் | கள், மார் |
| திணை, பால்,விகுதிகள் | ஏன்,ஓம்,ஆய்,ஈர்(கள்), ஆன்,ஆள்,ஆர், ஆர்கள், அது, அ, |
| கால இடைநிலைகள் | கிறு, கின்று,..... |
| பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் | அ, உ, இ, மல்,... |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தொழிற்பெயர் விகுதிகள் வியங்கோள் விகுதிகள் | தல், அம், மை |
| சாரியைகள் | அத்து, அற்று, அம்,... |
| உவம உருபுகள் | போல,மாதிரி |
| இணைப்பிடைச் சொற்கள் | உம், அல்லது, இல்லையென்றால்,ஆனால், ஓ, ஆகவே,ஆயினும், எனினும்,...... |
| தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் | உம், ஓ, ஏ, தான், மட்டும் , ஆவது, கூட, ஆ, ஆம் |
| சொல்லுருபுகள் | மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை |
| வினா உருபுகள் | ஆ, ஓ |

### உம்

- ❖ 'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம், என்னும் பொருள்களில் வரும்.

மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை.
(எதிர்மறை உம்மை)

பாடகர்களும் போற்றும் பாடகர்
(உயர்வு சிறப்பு)

### ஓ

- ❖ ஒகார இடைச்சொல் ஒழியிசை, வினா சிறப்பு (உயர்வு, இழிவு) . எதிர்மறை, தெரிநிலை,

கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.

- ❖ தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது.
- ❖ அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூறமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை – அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.
- ❖ இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)
- ❖ பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள். (இது அல்லது அது)
- ❖ பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை – அதுவும் இல்லை)

### ஏ

- ❖ ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண்,ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.
- ❖ தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.

அண்ணல் காந்தி அன்றே சொன்னார்.

நடந்தே வந்தான்.

### தான்

- ❖ ‘தான்’ என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது.
- ❖ ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில் பாடினாள் தான்.

### மட்டும்

- ❖ இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது முடிந்தவரை,குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.
  - ❖ படிப்பு மட்டும் இருந்தால் போதும் (வரையறைப் பொருள்)

### ஆவது

- ❖ இது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.

ஐந்து பேராவது வாருங்கள்(குறைந்த அளவு).

அவனாவது, இவனாவது செய்து முடிக்கவேண்டும்(இது அல்லது அது)

முதலாவது, இரண்டாவது ( வரிசைப்படுத்தல்).

### கூட

- ❖ என்னிடம் ஒரு காசு கூட இல்லை. (குறைந்தபட்சம்)
- ❖ தெருவில் ஒருவர் கூட நடமாடவில்லை. (முற்றுப்பொருள்)
- ❖ அவனுக்கு வரையக்கூடத் தெரியும். (எச்சம் தழுவிய கூற்று)

### ஆ

- ❖ வினாப் பொருளில் வரும் இடைச் சொல்லாகும்.
- ❖ ஆ என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.
- ❖ புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?
- ❖ புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?

### ஆம்

- ❖ சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.

- உள்ளே வரலாம்(இசைவு)
- இனியன் தலைநகர் போகிறானாம் (தகவல்)/செய்தி
- பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி) / பொய்மொழி

**தெரிந்து தெளிவோம்**

- அன்று என்பது ஒருமைக்கும்
- அல்ல என்பது பன்மைக்கும் உரியன.
  (எ.கா) இது பழம் அன்று
  இவை பழங்கள் அல்ல.
- எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும். எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும்.
  (எ.கா) எத்தனை நூல்கள் வேண்டும்?
  எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது.

## உரிச்சொற்கள்

- உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன.
- உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் தனித்து வழங்கப்படுவதில்லை.
- உரிச் சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.

| | |
|---|---|
| கடி மலர் - மணம் மிக்க மலர்<br>கடி நகர் - காவல் மிக்க நகர்<br>கடி விடுதும் - விரைவாக விடுவோம்<br>கடி நுனி - கூர்மையான நுனி | ஒரு சொல் பல பொருளுக்கு உரியது (ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல்) |
| உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.<br>உறு, பசி: தவச் சிறிது: நனி நன்று | பல சொல் ஒருபொருள் (பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்) |

- உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன. மேலும்
- அவை ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு.
- பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு.

## இயல் - 6
## புணர்ச்சி
## நிலைமொழி– வருமொழி

- புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது. ஒரு சொல்லோடு ஒட்டுகளோ. இன்னொரு சொல்லோ இணையலாம்.
- அவ்வாறு இணையும் போது ஒலி நிலையில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு மாற்றம் இல்லாமலும் சேர்வதுண்டு.
- புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொருத்து உயிரீறு, மெய்யீறு எனவும் வருமொழியின் முதல் எழுத்தைப் பொருத்து உயிர் முதல் மெய்ம்முதல் எனவும் பிரிக்கலாம்.

**புணர்மொழியின் இயல்பு**

எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்

| | |
|---|---|
| கலை +அழகு | உயிரீறு |
| மண் + குடம் | மெய்யீறு |
| வாழை + இலை | உயிர் முதல் |
| வாழை +மரம் | மெய்ம்முதல் |

மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்

# தமிழ் - திறனறித் தேர்வு பயிற்சி ஏடு (பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள்)

| | |
|---|---|
| உயிர்முன் உயிர் | மணி (ண் + இ) + அடி - மணியடி |
| உயிர்முன் மெய் | பனி + காற்று - பனிக்காற்று |
| மெய்ம்முன் உயிர் | ஆல் + இலை – ஆலிலை |
| மெய்ம்முன் மெய் | மரம் + (க்+இ ) கிளை – மரக்கிளை |

## இயல்புப் புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

❖ புணர்ச்சியின்போது மாற்றங்கள் ஏதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்புப் புணர்ச்சி எனப்படும்.

வாழை+ மரம் - வாழைமரம்

செடி+ கொடி – செடிகொடி

மண் + மலை – மண்மலை

❖ புணர்ச்சியின் போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். இந்த மாற்றம் மூன்று வகைப்படும்.

அவை

❖ தோன்றல், திரிதல் ,கெடுதல்

நுழைவு + தேர்வு– நுழைவுத்தேர்வு (தோன்றல்)

பல் + பசை – பற்பசை ( திரிதல்)

புறம் +நானூறு - புறநானூறு (கெடுதல்)

### தெரிந்து தெளிவோம்

தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து, பு, று ) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| நாக்கு, வகுப்பு | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| நெஞ்சு, இரும்பு | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு, அமிழ்து | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| முதுகு, வரலாறு | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| எ்.கு, அ்.து | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் |
| காது, பேசு | நெடில் தொடர்க் குற்றியலுகரம் |

## உயிரீற்றுப் புணர்ச்சி

### உடம்படு மெய் (ய், வ்)

❖ நிலை மொழியின் ஈற்றிலும் வருமொழியின் முதலிலும் உயிர் எழுத்து வந்தால் அவை புணராது.

❖ அவற்றை ஒன்று சேர்ப்பதற்காக (உடன்படுத்துவதற்காக) தோன்றக் கூடிய மெய் உடம்படு மெய் எனப்படும்.

❖ எ.கா திரு + ஆரூர் - திரு + வ் + ஆரூர் (திருவாரூர்).

இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.

| | |
|---|---|
| இ,ஈ, ஐ | ய் |
| ஏனைய உயிர் அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ | வ் |
| ஏ | ய், வ் |

www.Padasalai.Net www.CBSEtips.in


- கிளி + அழகு - கிளியழகு
- தீ + அணைப்பான் - தீயணைப்பான்
- தை + இலை - தையிலை
- பூ +அணி - பூவணி
- கோ + இல் - கோவில்
- தே + ஆரம் - தேவாரம் (வ்)
- சே +அழகு - சேயழகு (ய்)

## குற்றிலுகரப் புணர்ச்சி

- நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும் வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.
- வட்டு + ஆடினான் - வட் (ட் + உ) + ஆடினான்- வட(ட்+ஆ)டினான் -வட்டாடினான்
- குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரத்துக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும்
- உறவு+ அழகு – உற (வ் + உ). உற(வ்+அ)ழகு – உறவழகு

## மெய்ம்மயக்கம்

- புணர்ச்சியல் இரு சொற்கள் இனைணயும் போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும் .
- இதை வலி மிகுதல் என்பர். இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு.
- குறிப்பாக ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துகளும் இவ்வாறு மிகும்
- 'ய' கர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்.

எ.கா மெய் + மயக்கம் - மெய்ம்மயக்கம்

மெய் + ஞானம் - மெய்ஞ்ஞானம்

செய் + நன்றி - செய்ந்நன்றி

- வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ய, ர, ழ முன்னர் மெல்லினம் மிகும்

எ.கா

வேய் + குழல் - வேய்ங்குழல்

கூர் + சிறை - கூர்ஞ்சிறை

பாழ் + கிணறு - பாழ்ங்கிணறு

புளி என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமென்றி மெல்லினமும் மிகும்.

எ.கா புளி+ கறி - புளிங்கறி

புளி + சோறு – புளிஞ்சோறு

- உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப் பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.

எ.கா மா+ பழம் -மாம்பழம்

விள+ காய் - விளங்காய்

- 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.

எ.கா பூ + கொடி – பூங்கொடி

பூ + சோலை – பூஞ்சோலை

பூ + தொட்டி - பூந்தொட்டி

# இயல் - 7
# ஆகுபெயர்

- ஒன்றின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.
- ஆகுபெயர்கள் பதினாறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**அவற்றுள் குறிப்பிடத்தக்கவை**

| | |
|---|---|
| முல்லையைத் தொடுத்தாள் | **பொருளாகுபெயர் (முதலாகுபெயர்)** முதற்பொருளாகிய முல்லைக்கொடி, அதன் சினை (உறுப்பு) யாகிய பூவுக்கு ஆகி வந்தது. |
| வகுப்பறை சிரித்தது | **இடவாகுபெயர்** - வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது |
| கார் அறுத்தான் | **காலவாகுபெயர்** - கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது |
| மருக்கொழுந்து நட்டான் | **சினையாகுபெயர்** - மருக்கொழுந்து என்னும் சினைப் (உறுப்பு) பெயர். அதன் செடிக்கு ஆகிவந்தது. |
| மஞ்சள் பூசினாள் | **பண்பாகுபெயர்** - மஞ்சள் என்னும் பண்பு,அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகிவந்தது |
| வற்றல் தின்றான் | **தொழிலாகுபெயர் -** வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப்பொருளுக்கும் ஆகி வந்தது |
| வானொலி கேட்டு மகிழ்ந்தனர் | **கருவியாகு பெயர்** - வானொலி என்னும் கருவி. அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது |
| பைங்கூழ் வளர்ந்தது | **காரியவாகுபெயர்** - கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது |
| அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன் | **கருத்தாவாகுபெயர்** - அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர் அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது |
| ஒன்று பெற்றால் ஒளிமயம் | **எண்ணலளவை ஆகுபெயர்** - ஒன்று என்னும் எண்ணுப் பெயர் அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்தது. |
| இரண்டு கிலோ கொடு | **எடுத்தலளவை ஆகுபெயர்** - நிறுத்தி அளக்கும் எடுத்தல் என்னும் அளவை பெயர். அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |
| அரை லிட்டர் வாங்கு | **முகத்தலளவை ஆகுபெயர்** - முகந்து அளக்கும் முகத்தல் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |
| ஐந்து மீட்டர் வெட்டினான் | **நீட்டலளவை ஆகுபெயர்-** நீட்டி அளக்கும் நீட்டலளவைப் பெயர் அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது |

## இயல் - 8
## யாப்பிலக்கணம்

### யாப்பின் உறுப்புகள்

❖ கவிதை இயற்றும் முறைகளைக் கூறும் இலக்கணமே யாப்பிலக்கணம். யாப்பில் ஆறு உறுப்புகளான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை விளக்கப்படுகின்றன.

### எழுத்து

❖ யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துகள் குறில், நெடில், ஒற்று என மூவகைப்படும்.

### அசை

❖ எழுத்துகளால் ஆனது 'அசை' எனப்படும் ஓரெழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது அசை ஆகும்.

❖ இது நேரசை, நிரையசை என இருவகைப்படும். அசைப் பிரிப்பில் ஒற்றெழுத்தைக் கணக்கிடுவதில்லை.

**நேரசை**

| | |
|---|---|
| தனிக்குறில் | ப |
| தனிக்குறில், ஒற்று | பல் |
| தனிநெடில் | பா |
| தனிநெடில், ஒற்று | பால் |

### நிரையசை

| | |
|---|---|
| இருகுறில் | அணி |
| இருகுறில், ஒற்று | அணில் |
| குறில், நெடில் | விழா |
| குறில், நெடில், ஒற்று | விழார் |

### சீர்

❖ ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட அசைகளின் சேர்க்கை சீர் ஆகும். இதுவே பாடலில் ஓசைக்கு அடிப்படையாய் அமையும்.

❖ ஓரசைச்சீர்,ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் எனச் சீர்கள் நான்கு வகைப்படும்

❖ நேர் என்பதோடு உகரம் சேர்ந்து முடிவது உண்டு. அதனை நேர்பு என்னும் அசையாகக் கொள்வர்.

❖ நிரை என்னும் அசையோடு உகரம் சேர்ந்து முடியம் அசைகள் நிரைபு என்று கூறப்படும்.

❖ இவை வெண்பாவின் இறுதியாய் மட்டுமே அசையாகக் கொள்ளப்படும்.

❖ ஈரசைச்சீர்களுக்கு, 'இயற்சீர்', ஆசிரிய உரிச்சீர் என்னும் வேறு பெயர்களும் உண்டு.

### ஓரசைச் சீர்

| அசை | வாய்ப்பாடு |
|---|---|
| நேர் | நாள் |
| நிரை | மலர் |
| நேர்பு | காசு |
| நிரைபு | பிறப்பு |

### ஈரசைச் சீர்

| அசை | வாய்ப்பாடு | |
|---|---|---|
| நேர் நேர்<br>நிரை நேர் | தேமா<br>புளிமா | மாச்சீர் |
| நேர் நிரை<br>நிரை நிரை | கூவிளம்<br>கருவிளம் | விளச்சீர் |

www.Padasalai.Net www.CBSEtips.in



## மூவகைச் சீர்

**காய்ச்சீர் கனிச்சீர்**

| அசை | வாய்ப்பாடு | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| **நேர் நேர் நேர்** | தேமாங்காய் | நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| **நிரை நேர் நேர்** | புளிமாங்காய் | நிரை நேர் நிரை | புளிமாங்கனி |
| **நிரை நிரை நேர்** | கருவிளங்காய் | நிரை நிரை நிரை | கருவிளங்கனி |
| **நேர் நிரை நேர்** | கூவிளங்காய் | நேர் நிரை நிரை | கூவிளங்கனி |

- ❖ காய்ச்சீர்களை "வெண்சீர்கள்" என்று அழைக்கிறோம்.
- ❖ மூவகைச் சீர்களை அடுத்து நேரசையோ அல்லது நிரையசையோ சேர்கின்ற பொழுது நாலசைச்சீர் தோன்றும்.
- ❖ இது பொதுச்சீர் எனப்படும்.

## அலகிட்டு வாய்பாடு கூறுதல்

- ❖ வெண்பாவில் இயற்சீரும், வெண்சீரும் மட்டுமே வரும், பிற சீர்கள் வாரா. தளைகளில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் மட்டுமே வரும்.
- ❖ பிற தளைகள் ஈற்றடியின் ஈற்றுச் சீர் ஓரசைச் சீர்களில் முடியும்.

(எ.கா)

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

| **சீர்** | **அசை** | **வாய்ப்பாடு** |
|---|---|---|
| பிறர்/ நா /ணத்/ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தக் / கது/ | நேர் நிரை | கூவிளம் |
| தான் /நா /ணா/ | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| னா/யின்/ | நேர் நேர் | தேமா |
| அறம்/ நா /ணத்/ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தக் /க/ | நேர் நேர் | தேமா |
| துடைத் / து | நிரைபு | பிறப்பு |

## தளை

- ❖ நின்ற சீரின் ஈற்றசையும் அதனையடுத்து வரும் சீரின் முதல் அசையும் பொருந்துதல் 'தளை' எனப்படும்.
- ❖ இது ஒன்றியும் ஒன்றாமலும் வரும். அது ஏழு வகைப்படும்.
- ❖ நேரொன்றாசிரியத்தளை - மா முன் நேர்
- ❖ நிரையொன்றாசிரியத்தளை- விளம் முன் நிரை
- ❖ இயற்சீர் வெண்டளை - மா முன் நிரை, விளம் முன் நேர்
- ❖ வெண்சீர் வெண்டளை - காய் முன் நேர்
- ❖ கலித்தளை - காய் முன் நிரை
- ❖ ஒன்றிய வஞ்சித்தளை - கனி முன் நிரை
- ❖ ஒன்றா வஞ்சித்தளை - கனி முன் நேர்

## அடி

- ❖ இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து வருவது 'அடி' எனப்படும். அவை ஐந்து வகைப்படும்.
- ❖ இரண்டு சீர்களைக் கொண்டது குறளடி


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- ❖ மூன்று சீர்களைக் கொண்டது சிந்தடி
- ❖ நான்கு சீர்களைக் கொண்டது அளவடி
- ❖ ஐந்து சீர்களைக் கொண்டது நெடிலடி
- ❖ ஆறு சீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது கழிநெடிலடி

## தொடை

- ❖ தொடை- தொடுத்தல். பாடலின் அடிகளிலோ, சீர்களிலோ எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது தொடை ஆகும்.
- ❖ மோனை, எதுகை, இயைபு, அளபெடை, முரண், இரட்டை, அந்தாதி, செந்தொடை என்று எட்டு வகைகளாகத் தொடை அமைகிறது.

## மேனைத் தொடை:

- ❖ ஒரு பாடலில் அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி அமைவது.

(எ.கா)

**ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர் ஒற்றினால் ஒற்றிக் கொளல்.**

## எதுகைத் தொடை

- ❖ அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து அளவொத்து நிற்க. இரண்டாம் எழுத்து ஒன்றியமைவது எதுகைத் தொடை.

(எ.கா)

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று

## இயைபுத் தொடை

- ❖ அடிகள் தோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ ஒன்றியமைவது

(எ.கா)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்

மந்திசிந்தும் கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்.

# இயல் - 9
# அணியிலக்கணம்

## அணி - அழகு

- ❖ செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும். சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது “அணி” இலக்கண இயல்பாகும்.

## உவமை அணி

- ❖ அணிகளில் இன்றியமையாதது உவமையணி ஆகும். மற்ற அணிகள் உவமையிலிருந்து கிளைத்தவையாகவே உள்ளன
- ❖ மலர்ப்பாதம் - மலர் போன்ற பாதம்
- ❖ இத்தொடரில் பாதத்துக்கு மலர் உவமையாகக் கூறப்படுகிறது
- ❖ பாதம் - பொருள் (உவமேயம்)
- ❖ மலர் - உவமை
- ❖ போன்ற - உவம உருபு
- ❖ உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளது.

**“இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று”**

இதில் உவமையணி அமைந்துள்ளது.

## உருவக அணி

- ❖ கவிஞன், தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணி, அதற்கு உவமையாகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான்.
- ❖ உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக் கூறும் இத்தன்மையே “உருவகம்” எனக் கூறப்படும். உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக்கூறுவது உருவக அணி ஆகும்.

(எ.கா)

**இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி**

**அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்**
**பைங்கூழ் சிறுகாலைச் செய்**

❖ இப்பாடலில் , இன்சொல் - நிலமாகவும், வன்சொல் - களையாகவும், வாய்மை- எருவாகவும், அன்பு – நீராகவும், அறம் - கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன

## பின்வருநிலை அணிகள்

❖ ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லலோ பொருளோ மீண்டும் பல இடத்தும் வருதலே “பின்வருநிலை” அணியாகும் இது மூன்று வகைப்படும்.

## சொல் பின்வருநிலை அணிகள்

❖ முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது சொல் பின்வருநிலை அணியாகும்.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை**

❖ இக்குறளில் ‘துப்பு‘ என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருள்களைத் தருகிறது

❖ துப்பார்க்கு– உண்பவர்க்கு : துப்பு – நல்ல , நன்மை: துப்பு – உணவு என்று பல பொருள்களில் வருவதைக் காணலாம்

## பொருள் பின்வருநிலையணி

❖ செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னர்ப் பல இடங்களிலும் வருவது பொருள் பின் வருநிலையணி ஆகும்.

(எ.கா)

**அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா**
**நெகிழ்ந்தன நேர்முகை முல்லை- மகிழ்ந்திதழ்**
**விண்டன கொன்றை விரிந்த கருவிளை**
**கொண்டன காந்தள் குலை.**

இச்செய்யுளில் அவிழ்ந்தன, அலர்ந்தன. நெகிழ்ந்தன, விண்டன, விரிந்தன, கொண்டன ஆகிய சொற்கள் மலர்ந்தன என்ற ஒரு பொருளையே தந்தன.

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**

❖ இக்குறட்பாவில் செல்வம், மாடு ஆகிய இரு சொற்களுமே செல்வத்தையே குறிக்கின்றன.

## சொற்பொருள் பின்வருநிலையணி

❖ முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பல இடங்களிலும் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

(எ.கா)

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.**

❖ இக்குறட்பாவில் ‘விளக்கு ‘ என்னும் சொல் ஒரே பொருளில் பல முறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

## வஞ்சப் புகழ்ச்சியணி

❖ வஞ்சப்புகழ்ச்சியணி என்பது புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதுமாகும்.

(எ.கா)

**தேவ ரனையர் கயவர் அவருந்தாம்**
**மேவன செய்தொழுக லான்**

❖ கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று புகழப்படுவது போலத் தோன்றினாலும், கயவர்கள் இழிந்த செயல்களையே செய்வர் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துகிறது.

❖ எனவே, இது புகழ்வது போலப் பழிப்பது ஆகும்.

❖ **பாரி பரி என்றுபல எத்தி,**
**ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்;**
**மாரியும் உண்டு,ஈண்டு உலகுபுரப் பதுவே**

- இப்பாடலின் பொருள்: புலவர் பலரும் பாரி ஒருவனையே புகழ்கின்றனர் பாரி ஒருவன் மட்டுமா கைமாறு கருதாமல் கொடுக்கிறான்? மழையும்தான் கைம்மாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகத்தைப் புரக்கிறது. இது பழிப்பது போலப் புகழ்வது ஆகும்.
  - இப்பாடல் பாரியை இகழ்வது போலத் தோன்றினாலும், பாரிக்கு நிகராகக் கொடுப்பவரில்லை என்று புகழ்கிறது.

## சங்கநூல்கள்

### பதினெண்மேற்கணக்கு நூல்கள்

#### எட்டுத்தொகை நூல்கள்

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

#### பத்துப்பாட்டு நூல்கள்

1. திருமுருகாற்றுப்படை (புலவராற்றுப்படை)
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப்படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக்காஞ்சி (மாநகர்ப்பாட்டு)
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)

### பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. இன்னா நாற்பது
4. இனியவை நாற்பது
5. கார் நாற்பது
6. களவழி நாற்பது
7. ஐந்திணை ஐம்பது
8. ஐந்திணை எழுபது
9. திணை மொழி ஐம்பது
10. திணை மாலை நூற்றைம்பது
11. திருக்குறள்
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி நானூறு
15. சிறுபஞ்சமூலம்
16. முதுமொழிக்காஞ்சி
17. ஏலாதி
18. கைந்நிலை (அல்லது) இன்னிலை

Padasalai.Net

## 9th Book Back Question

### இயல் : 1

**சரியான விடையைத் தேர்ந்தெடுக.**

1. தமிழ் விடு தூது ----------------- என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது
   அ) தொடர்நிலைச் செய்யுள்
   ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம்
   ஈ) தனிப்பாடல்
2. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! ......... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
   அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை
   ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
   இ) எதுகை, மோனை, இயைபு
   ஈ) மோகை, முரண், அந்தாதி
3. <u>அழியா வனப்பு, ஒழியா வனப்பு,</u> சிந்தா மணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு
   அ) வேற்றுமைத்தொகை
   ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெறரெச்சம்
   இ) பண்புத்தொகை
   ஈ) வினைத்தொகை

### இயல் - 2

4. "மிசை" எனபதன் எதிர்ச்சொல் என்ன
   அ) கீழே ஆ) மேலே
   இ) இசை ஈ) வசை
5. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு
   இ) இலஞ்சி ஈ) புலரி
6. பொருத்தமான இணை தேர்க
   அ)நீரின்று அமையாது உலகு – திருவள்ளுவர்
   ஆ)நீரின்று அமையாது யாக்கை – ஔவையார்
   இ)மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்
   அ) அ, இ ஆ) ஆ, இ
   இ) அ, ஆ ஈ) அ, ஆ, இ
7. <u>மல்லல்</u> மூதூர் வயவேந்த – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம்
   இ) வளம் ஈ) பெரிய

### இயல் - 3

8. பொருந்தாத இணை எது?
   அ) ஏறுகோள் - எருகட்டி
   ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு
   ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்
9. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று
   அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன
   ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது
   இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது
10. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
    அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
    இ) உரிச்சொற்கள் ஈ)தொகைச்சொற்கள்

### இயல் - 4

11. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
    அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு
    ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு
    இ) தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு
    ஈ) அ, ஆ, இ சரி

**12. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே இரண்டறிவதுவே அதனொடு நாவே இவ்வடிகளில் அதனொடு** என்னும் சொல் எதைக் குறிக்கிறது

அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு
இ) கேட்டல் ஈ) காணல்

13. பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க

1)அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்.
2)எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்.
3)இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்.

அ) இணையம் ஆ) தமிழ்
இ) கணினி ஈ) ஏவுகணை

14. வரிசை படி அமைந்த "செயலி" தேர்வு செய்க.

1) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்
2) இது கடல்பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி

அ. நேவிக், சித்தாரா ஆ. நேவிக், வானூர்தி
இ. வானூர்தி, சித்தாரா ஈ. சித்தாரா, நேவிக்

## இயல் - 5

15. பொருத்தமான விடையைத் தேர்க

அ) சிறுபஞ்சமூலம் -1. காப்பியஇலக்கணம்
ஆ) குடும்ப விளக்கு -2. சங்க இலக்கியம்
இ) சீவகசிந்தாமணி -3 அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை -4. தற்கால இலக்கியம்

1) அ – 3,ஆ - 4, இ - 1, ஈ - 2
2) அ – 2,ஆ - 3, இ - 1, ஈ - 4
3) அ – 3,ஆ - 1, இ - 4, ஈ - 2
4) அ – 4,ஆ - 1, இ - 2, ஈ - 3

16. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக

அ) கலைக்கூடம், திரையரங்கம், ஆடுகளம், அருங்காட்சியகம்
ஆ) கடி, உறு, கூர், கழி
இ) வினவினான், செப்பினான், உரைத்தான், பகன்றான்
ஈ) இன், கூட, கிறு, அம்பு

17. கீழ்க்காண்பனவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுவர் யார்?
இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!
ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக

18. சரியான கூற்றினைத் தெரிவு செய்க

அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை
ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு
இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்

1) ஆ, இ சரி :அ தவறு
2) அ, இ, சரி ஆ தவறு
3) மூன்றும் சரி
4) மூன்றும் தவறு

19. <u>பூவாது</u> காய்க்கும் <u>மலர்க்கை</u> – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை
ஆ) எதிர்மறைப்பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம் , உவமை
ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


## இயல் - 6

20. அ∴கசாலை என்பது ------------- த்தைக் குறிக்கும்
    அ) அங்காடிகள் அமைந்துள்ள இடம்
    ஆ) யவனர்கள் இருக்கின்ற இடம்
    இ) நாணயங்கள் அச்சடிக்கும் இடம்
    ஈ) அரேபியர்களின் பந்தர் இடம்

21. கூற்று 1 – காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் துறைமுகமாகும்
    கூற்று 2 – வண்டியூர் என்னும் ஊர் காஞ்சி மாநகரத்தில் அமைந்துள்ளது
    அ) கூற்று 1, 2 சரி
    ஆ) கூற்று 1, 2 தவறு
    இ) கூற்று 2 சரி, 1 தவறு
    ஈ) கூற்று 1 சரி , 2 தவறு

22. ‘யவனப்பிரியா‘ என்பது எதனைக் குறிக்கும்
    அ) மிளகு ஆ) முத்து
    இ) சங்கு ஈ) தந்தம்

23. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் சங்க நூல்கள்
    அ) பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு
    ஆ) குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்து
    இ) மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு
    ஈ) மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை

24. ஐந்து சால்புகளில் இரண்டு
    அ) வானமும் நாணமும்
    ஆ) நாணமும் இணக்கமும்
    இ) இணக்கமும் சுணக்கமும்
    ஈ) இணக்கமும் பிணக்கமும்

## இயல் - 7

25. பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று -------------
    அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
    இ)திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

26. ‘பொதுவர்கள் பொலி உறப் போர் அடித்திடும்‘ நிலப் பகுதி --------
    அ) குறிஞ்சி ஆ) நெய்தல்
    இ) முல்லை ஈ) பாலை

27. மரவேர் என்பது ------------- புணர்ச்சி
    அ) இயல்பு ஆ) திரிதல்
    இ) தோன்றல் ஈ) கெடுதல்

28. ‘அதிரப் புகுதக் கனாக் கண்டேன்‘ - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?
    அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
    ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
    இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்
    ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

29. திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை-------
    அ) விலங்கு உருவங்கள்
    ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
    இ) தெய்வ உருவங்கள்
    ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

## இயல் - 8

30. வேறுபட்ட குழுவினைக் கண்டறிக
    அ) சிலம்பு, மேகலை, குழை, கடகம்
    ஆ) நோன்பு, நீராடல், திருநாள், விழா
    இ) ஊசல், கழங்காடல், ஓரையாடல், அம்மானைப் பந்தாடல்
    ஈ) கூத்து, பாடினி, இசை, சிற்பம்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

31. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

அ) வருக்கை - இருக்கை

ஆ) புள் - தாவரம்

இ) அள்ளல் - சேறு

ஈ) மடிவு – தொடக்கம்

32. பாதிரி ஒத்த பூ, செய்கோலம் - இலக்கணக்குறிப்புத் தருக.

அ) உவமைத்தொடர், வினைத்தொகை

ஆ) உருவகத்தொடர், வினைத்தொகை

இ) உவமைத்தொடர், வினைத்தொகை

ஈ) வினைத்தொகை, பண்புத்தொகை

33. நச்சிலைவேல் <u>கோக்கோதை</u> நாடு, நல்யானைக் <u>கோக்கிள்ளி</u> நாடு - இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே

அ) பாண்டிய, சேரநாடு ஆ) சோழ, சேர நாடு

இ) சேர, சோழநாடு ஈ) சோழ, பாண்டிய நாடு

34. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே - இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?

அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்

ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்

இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிரந்தனர்

ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

## இயல் - 9

35. கூற்று – பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும் 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்

காரணம் - சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்

அ) கூற்று சரி, காரணம் தவறு

ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி

இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**36. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது**

- இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது?

அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

37. முண்டி மோதும் துணிவே இன்பம் - இவ்வடியில் இன்பமாக உருகிக்கப்படுவது

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு

இ) துணிவு ஈ) மருட்சி

38. ஞானம் என்பதன் பொருள் யாது?

அ) தானம் ஆ) தெளிவு

இ) சினம் ஈ) அறிவு

## Answer Key

| No | key | No | key | No | key | No. | key |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | C | 13. | D | 25. | A | 37. | C |
| 2. | C | 14. | D | 26. | C | 38. | D |
| 3. | B | 15. | A | 27. | D | * | * |
| 4. | A | 16. | B | 28. | D | * | * |
| 5. | D | 17. | C | 29. | B | * | * |
| 6. | D | 18. | C | 30. | D | * | * |
| 7. | C | 19. | D | 31. | A | * | * |
| 8. | B | 20. | C | 32. | A | * | * |
| 9. | C | 21. | D | 33. | C | * | * |
| 10. | D | 22. | A | 34. | A | * | * |
| 11. | B | 23. | D | 35. | A | * | * |
| 12. | B | 24. | D | 36. | D | * | * |

## இயல் - 1
## அன்னை மொழியே
## – பாவலரேறுபெருஞ்சிந்திரனார்

**அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

**– கனிச்சாறு**

- பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி 1) தொகுப்பிலிருந்து இருவேறு தலைப்பில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்) எடுத்தாளப்பட்டுள்ளன.
- தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர் துரை. மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்ட பெருஞ்சித்திரனார்.
- உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு,எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப்பறவைகள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.
- இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது.
- இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.
- **சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்**

**- க. சச்சிதானந்தன்**

## இரட்டுற மொழிதல்
## சந்தக்கவிமணி தமிழழகனார்

### ஆழிக்கு இணை

**முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்**
**மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்**
**அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு**
**இணைகிடந்தே தேதமிழ் ஈண்டு.**

**– தனிப்பாடல் திரட்டு.**

### சொல்லும் பொருளும்

1. துய்ப்பது - கற்பது, தருதல்
2. மேவலால் - பொருந்துதல், பெறுதல்

### இரட்டுற மொழிதல்

- ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும் இதனை சிலேடை அணி என்றும் அழைப்பர்.
- செய்யுளிலும் உரைநடையிலும் மேடைப் பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

| பாடல் அடிகள் | தமிழுக்கு | கடலுக்கு |
|---|---|---|
| முத்தமிழ். | இயல். இசை, நாடகம், ஆகிய முத்தமிழ். | முத்தினை அமிழ்ந்து எடுத்தல். |
| முச்சங்கம். | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கம். | மூன்று வகையான சங்குகள் தருதல். (வெண்சங்கு, சலஞ்சம், பாஞ்சசன்யம்) |
| மெத்த வணிகலன் (மெத்த + அணிகலன்). | ஐம்பெரும் காப்பியங்கள். | மிகுதியான வணிகக் கப்பல்கள். |
| சங்கத்துவர் காக்க. | சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை. | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல். |

### நூல் வெளி

- புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பான தனிப்பாடல் திரட்டு ( ஐந்தாம் பகுதி - கழகப் பதிப்பு) நூலில் இப்பாடல் உள்ளது.
- சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் சண்முகசுந்தரம் . இவர் பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

## இயல் - 2
## காற்றே வா
## – பாரதியார்

**காற்றே, வா.**
**மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா**
**- பாரதியார்**

### சொல்லும் பொருளும்

1. மயலுறுத்து - மயங்கச்செய்
2. ப்ராண ரஸம் - உயிர்வளி
3. லயத்துடன் - சீராக

- சுப்பிரமணிய பாரதியார், "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, சிந்துக்குத் தந்தை" என்று போற்றப்படுகிறார்.
- கேலிச்சித்திரம் - கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்.
- மனைவி - செல்லம்மாள்
- பிறப்பு - 11.12.1882
- இறப்பு - 11.09.1921
- பெற்றோர் - சின்னசாமி - இலக்குமிஅம்மையார்
- சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், பெண்ணடிமைத் தனத்தையும் தன் பாடல்களில் எதிர்த்து எழுதியவர்.
- குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களையும் கண்ணன் பாட்டையும் பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி என குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர், இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றினார்.
- 'பாட்டுக்கொரு புலவன்' எனப் பாராட்டப்பட்டவர் பாரதியார்.
- அமெரிக்கக்கவிஞர் வால்ட் விட்மனின் சாயலில் பாரதியார் வசன கவிதை எழுதினார்.

**வசன கவிதை**

- உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை. ஆங்கிலத்தில் Prose poetry (Free verse) என்றழைக்கப்படும். இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**திக்குகள் எட்டும் சிதறி- தக்கத்**
**தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட........**
**தக்கை யடிக்குது காற்று – தக்கத்**
**தாம் தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட**
**– பாரதியார்**

## முல்லைப்பாட்டு – நப்பூதனார்

**நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்**
**உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்**
**நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய**
**கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர**
**இன்னே வருகுவர், தாயர் என்போள்**
**நன்னர் நன்மொழி கேட்டனம்.**

### சொல்லும் பொருளும்

1. நனந்தலை உலகம் - அகன்ற உலகம்
2. நேமி - வலம்புரிச்சங்கு
3. கோடு - மலை
4. கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல்
5. நறுவீ - நறுமணமுடைய மலர்கள்
6. தூஉய் - தூவி
7. விரிச்சி - நற்செயல்
8. சுவல - தோள்

**இலக்கணக்குறிப்பு**

1. மூதூர் - பண்புத்தொகை
2. உறுதுயர் - வினைத்தொகை
3. கைதொழுது - மூன்றாம் வேற்றுமைத் தொகை
4. தடக்கை - உரிச்சொல்தொடர்

- முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. 103 அடிகளைக் கொண்டது.
- முல்லைப்பாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது, முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.

**விரிச்சி**

ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய் தெய்வத்திடம் நின்று அயலார் பேசுவதைக் கேட்பர். நற்சொற்கள் கேட்டால் நன்மையில் முடியும், தீச்சொல் கேட்டல் தீமையில் முடியும் என்பர்.

- பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் முல்லைப்பாட்டு. இதைப் படைத்தவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.

## இயல் - 3
## காசிக்காண்டம்
## அதிவீரராம பாண்டியர்

**விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்**
**வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்**

**பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்**
**ஒழுக்கமும் வழிபடும் பண்பே**

**சொல்லும் பொருளும்**

அருகுற - அருகில்
முகமன் - ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள்

**இலக்கணக் குறிப்பு**

- நன்மொழி – பண்புத்தொகை
- வியத்தல், நோக்கல், எழுதுதல், உரைத்தல்,
- செப்பல், இருத்தல், வழங்கல் - தொழிற்பெயர்கள்
- காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம். இந்நூல் துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது.
- "இல்லொழுக்கங் கூறிய" பகுதியிலுள்ள பதினேழாவது பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.
- முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீரராம பாண்டியர். இவர் இயற்றிய நூலே காசிக்காண்டம்.
- இவரின் மற்றொரு நூலான 'வெற்றி வேற்கை' என்றழைக்கப்படும் 'நறுந்தொகை' சிறந்த அறக்கருத்துகளை எடுத்துரைக்கிறது. 'சீவலமாறன்' என்ற பட்டப்பெயரும் இவருக்கு உண்டு.
- நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி கூர்மபுராணம் ஆகியனவும் இவர் இயற்றிய நூல்கள்.

**ஒப்புடன் முகம் மலர்ந்தே**
**உபசரித்து உண்மை பேசி**
**உப்பிலாக் கூழ் இட்டாலும்**
**உண்பதே அமிர்தம் ஆகும்**
**– விவேக சிந்தாமணி (4)**

**மலைபடுகடாம் - பெருங்கௌசிகனார்**

**அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,**
**கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து**
**சேந்த செயலைச் செப்பம் போகி,**
**நும்இல் போல நில்லாது புக்கு,**

**கிழவிர் போலக் கேளாது கெழீஇ**
**பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு**
**குருஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்**

## சொல்லும் பொருளும்

1. அசைஇ - இளைப்பாறி
2. கடும்பு - சுற்றம்
3. ஆரி - அருமை
4. வயிரியம் - கூத்தர்
5. இறடி - திணை
6. அல்கி - தங்கி
7. நரலும் - ஒலிக்கும்
8. படுகர் - பள்ளம்
9. வேவை - வெந்தது
10. பொம்மல் - சோறு

- "ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம் நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை"
- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மலைபடுகடாம் 583 அடிகளைக் கொண்ட இது கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கப்படுகிறது.
- மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இதற்கு மலைபடுகடாம் எனக் கற்பனை நயம் வாய்ந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- **நன்னன்** என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது மலைபடுகடாம்.
- கம்பு – கறுப்புநிறக் கரிசல் மண்ணின் இயற்கைத் தங்கம்.

## திருக்குறள்

**வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு** - உவமையணி

✓ **பொருள்** - ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு விரிவிதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.

**பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.** -
- எடுத்துக்காட்டு உவமையணி

✓ **பொருள்** - பாடலோடு பொருந்தவில்லையெனில் இசையால் என்ன பயன்? அது போலவே இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன்?

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

✓ **பொருள்** -எந்தப் பொருள் எந்த இயல்பினதாகத் தோன்றினாலும் அந்தப் பொருளின் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றின்**
**நாமம் கெடக்கெடும் நோய்.**

✓ **பொருள்** - ஆசை, சினம், அறியாமை என்ற மூன்றும் அழிந்தால் அவற்றால் வரும் துன்பமும் அழியும்.

**பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்.**

✓ **பொருள்** - தானொருவனாக நின்று பலரோடு பகைமேற்கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத் தருவது நற்பண்புடையோரின் நட்பைக் கைவிடுதலாகும்.

**நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தொறும் நாடு கெடும்.**

✓ **பொருள்** - தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னவன், தன் நாட்டை நாள் தோறும் இழக்க நேரிடுவான்.

**பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்.**

✓ **பொருள்** - விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டவர்கள், பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் அதனை உண்ணும் பண்பாளர் ஆவார்.

**அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்**

✓ **பொருள்** - ஒரு செயல் முடிப்பதற்கு இயலாதது என்று எண்ணிச் சோர்வு அடையாதிருக்க வேண்டும். அச்செயலை முயற்சியுடன் முடிப்பது பெருமை தரும்.

**தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு.**

✓ **பொருள்** - விடாமுயற்சி என்ற உயர்பண்பு கொண்டவர்களால்தான் பிறருக்கு உதவுதல் என்ற உயர்ந்த நிலையை அடைய முடியும்.

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழா துஞற்று பவர்.**

✓ **பொருள்** - சோர்விலாது முயற்சி செய்வோர் செய்கின்ற செயலுக்கு இடையூறாக வரும். முன்வினையையும் தோற்கடித்து வெற்றியடைவர்.

**கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்**
**கடுக்கியகோடிஉண் டாயினும் இல்.**

✓ **பொருள்** - பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர் அடுக்கடுக்காய்ப் பல கோடிப் பொருள்கள் பெற்றிருந்தாலும் அதனால் பயன் இல்லை.

**நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று.**

✓ **பொருள்** - பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம் ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும்.

**திருக்குறள் பற்றிய கவிதை**

**உரை(றை) ஊற்றி ஊற்றிப்**
**பார்த்தாலும்**
**புளிக்காத பால்!**
**தந்தை தந்த**
**தாய்ப்பால்**
**முப்பால்! –அறிவு மதி**

## இயல் - 4
## பெருமாள் திருமொழி குலசேகராழ்வார்

**வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்**
**மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ**
**ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே**

**– பாசுர எண் - 691**

➢ மாயம் - விளையாட்டு
➢ மாளாத - தீராத
➢ சுடினும் - சுட்டாலும்
➢ வித்துவக்கோடு என்னும் ஊர்,கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது,குலசேகர ஆழ்வார் அங்குள்ள இறைவனான உய்யவந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடுகிறார்.

**இப்பாடல்**

➢ நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் 691ஆவது பாசுரம். பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது. இதில் 105 பாடல்கள் உள்ளன.
➢ பாடியவர் குலசேகராழ்வார். காலம் எட்டாம் நூற்றாண்டு


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


## பரிபாடல் - கீரந்தையார்

**விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்**
**கருவளர் வானத்து இசையில் தோன்றி.......**
**மீண்டும் பீடு உயிர்புஈண்டி, அவற்றிற்கும்**
**உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்......**

### சொல்லும் பொருளும்

1. விசும்பு - வானம்
2. ஊழி - யுகம்
3. ஊழ் - முறை
4. தண்பெயல் - குளிர்ந்த மழை
5. ஆர்தருபு - வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த
6. பீடு - சிறப்பு
7. ஈண்டி - செறிந்து திரண்டு

### இல்நுழைகதிர்

- அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924-இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.
- 1300 ஆண்டுகளுக்கு முன் மாணிக்கவாசகர் திருஅண்டப் பகுதியில்

**“அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்..**
**சிறிய ஆகப் பெரியோன் தெரியின்**

(திருவாசகம் 3-1-6) எனப் பாடியுள்ளார்.

- அண்டப் பகுதிகளின் உருண்டை வடிவும், ஒப்பற்ற வளமையான காட்சியும் ஒன்றுக்கு ஒன்று ஈர்ப்புடன் நின்ற அழகினைச் சொல்வது எனின், அவை நூறுகோடிக்கும் மேல் விரிந்து நின்றன. இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத் துகள்போல அவை நுண்மையாக இருக்கின்றன.

### இதைப் படியுங்கள் முதலில்...

- பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இப்பாடலை எழுதியவர் கீரந்தையார் “ஓங்கு பரிபாடல்” என்று புகழுடையது.
- இதுசங்க நூல்களுள் (எட்டுத்தொகை) ஒன்று. இன்று 24 பாடல்களே கிடைத்துள்ளன.
- 70 பாடல்கள் இருப்பதாக உரை ஆசிரியர்கள் கூறியுள்ளனர்.
- ஈராயிரம்ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, சமூக உறவு அறிவாற்றல், இயற்கையைப் புரிந்துகொள்ளும் திறன் போன்றவற்றைச் சங்க இலக்கியம் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்.

## இயல் - 5
## நீதிவெண்பா
## கா.ப. செய்குதம்பிப் பாவலர்

**அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை**
**அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்**
**பொருந்துவதும் கல்வியென்றே போற்று**

- கற்றவர் வழி அரசு செல்லும் என்கிறது சங்க இலக்கியம். தோண்டும் அளவு ஊறும் நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்கிறது திருக்குறள்.
- பூக்களை நாடிச் சென்று தேன் பருகும் வண்டுகளைப் போல, நூல்களை நாடிச் சென்று அறிவு பெறவேண்டும்.

### சதாவதானம்

‘சதம்’ என்றால் நூறு என்று பொருள் ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண் அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# தமிழ் - திறனறித் தேர்வு பயிற்சி ஏடு (பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள்)

## இதைப் படியுங்கள் முதலில்...

- "சதாவதானம்" என்னும் கலையில் சிறந்து விளங்கிய செய்குதம்பிப் பாவலர் (1874-1950) கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்.
- பதினைந்து வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்றவர், சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர், 1907 மார்ச் 10 ஆம் நாளில் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி "சதாவதானி" என்ற பாராட்டுப்பெற்றார்.
- இவரது நினைவைப் போற்றும் வகையில் இடலாக்குடியில் மணிமண்டபமும் பள்ளியும் உள்ளன. இவரது அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

## திருவிளையாடற்புராணம்

**புண்ணியப் புலவீர் யான்இப்போழ்து இடைக்காடனார்க்குப்**
**புண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் - தாழ்ந்தான்**
**நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்**
**தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.**

- காண்டம் : திரு ஆலவாய்க் காண்டம் (3)
- படலம் : இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் (56)
- பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குசேலபாண்டியன்.
- கபிலரின் நண்பர் இடைக்காடனார்.

**படலச்சுருக்கம்**

- பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த குசேலபாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான்.
- கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட, அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான்.
- மனம் வருந்திய இடைக்காடனர், இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிருஆலவாயில் சென்று தாங்கினார்.
- இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான். இறைவனும் கோவிலுக்குத் திரும்பினார்.

## சொல்லும் பொருளும்

1. முனிவு - சினம்
2. தமர் - உறவினர்
3. கேள்வியினான் - நூல்வல்லான்
4. நீபவனம் - கடம்பவனம்
5. மீனவன் - பாண்டிய மன்னன்
6. கவரி - சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)
7. நுவன்ற - சொல்லிய
8. என்னா - அசைச்சொல்

- ✓ மோசிக்கீரனாருக்கு கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
- ✓ **"மாசற விசித்த வளர்புறு வள்பின்"**

**– புறநானூறு**

## திருவிளையாடற்புராணம்

- மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களும் 64 படலங்களும் உடையது.
- பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) பிறந்தவர், பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர், சிவபக்தி மிக்கவர்,

Padasalai.Net

வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி இவர் இயற்றிய வேறு நூல்களாகும்.

## இயல் - 6
## பூத்தொடுத்தல் - உமாமகேஸ்வரி

**இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி?**
**இறுக்கி முடிச்சிட்டால்**
**காம்புகளின் கழுத்து முறியும்.**
**தளரப் பிணைத்தால்**
**மலர்கள் தரையில் நழுவும்.**
**எப்படித் தொடுக்க நான்-**
**ஒருவேளை,**
**என் மனமே நூலாகும்**
**நுண்மையுற்றாலொழிய**

### இதைப்படியுங்கள் முதலில்...

- கவிஞர் உமாமகேஸ்வரி மதுரை மாவட்டம். தற்போது தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் வாழ்ந்து வருகிறார்.
- இவர் நட்சத்திரங்களின் நடுவே. வெறும் பொழுது, கற்பாவை உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார்.
- கவிதை, சிறுகதை, புதினம் என்று பல தளங்களில் படைத்து வருகிறார்.

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
## குமரகுருபரர்

**செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்**
**திருவரை யரைஞா ணரைமணி யொடு**
**-மொளிதிகழரை வடமாடப்**
**வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை**
**ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை**

### சொல்லும் பொருளும்

1. பண்டி - வயிறு
2. அசும்பிய - ஒளிவீசுகிற
3. முச்சி - தலையுச்சிக்கொண்டை

### செங்கீரைப்பருவம்

- செங்கீரைச் செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5-6ஆம் மாதம் மென்மையாக அசையும்.
- குழந்தை தன் இருகை ஊன்றி ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைந்தும் ஆடும்.

### அணிகலன்கள்

1. சிலம்பு, கிண்கிணி - காலில் அணிவது
2. அரைநாண் - இடையில் அணிவது
3. சுட்டி - நெற்றியில் அணிவது
4. குண்டலம்,குழை - காதில் அணிவது
5. சூழி - தலையில் அணிவது

### இதைப்படியுங்கள் முதலில்...

- குமரகுருபரர் இயற்றிய முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்தின் எட்டாம் பாடல் இது. 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ். இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ, பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர்.
- பத்துப் பருவங்கள் அமைத்து பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்கள் பாடப்படும்.
- இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகையாகப் பாடப்பெறும்.
- ஆண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) - சிற்றில், சிறுபறை, சிறுதேர்
- பெண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) – கழங்கு, அம்மானை, ஊசல்

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.
- குமரகுருபாரின் காலம் 17ஆம் நூற்றாண்டு இவர்தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமைமிக்கவர். கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் மதுரைக்கலம்பகம், சகலசகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

## கம்பராமாயணம்

- “கம்பன் இசைத்த கவியெல்லாம் நான் என்று பாரதி பெருமைப்படுகிறார்”

### பாலகண்டம் - ஆற்றுப்படலம்

**தாதுகு சோலைதோறுஞ் சண்பகக் காடுதோறும்**
**போதவிழ் பொய்கைதோறும் புது மணற் றடங்கடோறும்**
**மாதவி வேலிப்பூக வனம்தெறும் வயல்கடோறு**
**மோதிய வுடம்புதோறு முயிரென வுலாயதன்றே.**

### பாலகாண்டம் - நாட்டுப்படலம்

**தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க,**
**கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்து**
**- நோக்க,**
**தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்**
**வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ**

### அயோத்திக்காண்டம் - கங்கைப்படலம்

“ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
ஏழைமை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ?”

### யுத்தக்காண்டம் - கும்பகருணன் வதைப்படலம்

**உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வெ லாம்**
**இறங்குகின்றது! இன்று காண்; எழுந்திராய்! எழுந்திராய்!**
**கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே,**
**உறங்குவாய், உறங்குவாய்! இனிக் கிடந்துஉறங்குவாய்!**

### இதைப்படியுங்கள் முதலில்...

- கம்பர் இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி இராமாவதாரம் எனப் பெயரிட்டார். கம்பராமாயணம் என வழங்கப் பெறுகிறது. ஆறு காண்டம் உடையது.
- பாடல்கள் சந்தநயம் மிக்கவை.
- “கல்வியில் பெரியவர் கம்பர்”“கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்” போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் கம்பர்.
- சோழ நாட்டுத் திருவழுந்துாரைச் சார்ந்தவர், திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்.
- விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன் என்று புகழ்பெற்றவர். சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலைஎழுபது முதலிய நூல்கள் இயற்றியுள்ளார்.

## திருக்குறள்

- **பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
  **பொருளல்ல தில்லை பொருள்**
  - சொற்பொருள் பின்வருநிலைஅணி
- **குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
  **றுண்டாகச் செய்வான் வினை**
  - உவமை அணி
- **இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்**
  **இன்மையே இன்னா தது**
  - சொற்பொருள் பின்வருநிலைஅணி
- **மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
  **ஒப்பாரி யாம் கண்டதில்**
  - உவமையணி


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- தேவர் அனையர் கயவர் அவரும் தாம்
  மேவன செய்தொழுக லான்.
  - வஞ்சப் புகழ்ச்சி அணி
- சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
  கொல்லப் பயன்படும் கீழ்
  - உவமைஅணி

## இயல் - 7
## ஏர் புதிதா?
## கு. ப.ராஜகோபாலன்

- "சங்கத் தமிழரின் திணைவாழ்வு, வேளாண்மையை" அடிப்படையாகக் கொண்டது. உழுவோர் உலகத்தார்க்கு அச்சாணி எனப் போற்றப்பட்டனர்.

**முதல்மழை விழுந்ததும்**
**மேல்மண் பதமாகிவிட்டது.**
**கவலையில்லை!**
**கிழக்கு வெளுக்குது**
**பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்**
**நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை.**

- வேளாண்மை செழிக்கவும் மானுடம் தழைக்கவும் சித்திரைத் திங்களில் நடத்தப்படும் பொன்ஏர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.

### இதைப் படியுங்கள் முதலில்...

- "ஏர் புதிதா?" கு.பா.ரா. படைப்புகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.
- 1902இல் கும்பகோணத்தில் பிறந்த கு.ப. ராஜகோபாலன் மிகச்சிறந்த சிறுகதை ஆசிரியர், கவிஞர். நாடக ஆசிரியர், மறுமலர்ச்சி எழுத்தாளர்.
- இவரின் மறைவுக்குப் பின்னர் இவரது படைப்புகளுள் அகலிகை, ஆத்மசிந்தனை ஆகியன நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு, பாரதமணி, பாரததேவி கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் பணி புரிந்தார்.

### மெய்க்கீர்த்தி - இரண்டாம் இராசராச சோழன்

**இந்தி ரன்முதற் திசாபாலர் எண் மரும்ஒரு வடிவாகி**

**வந்தபடி யென நின்று மனுவாணை தனி நடாத்திய**

**விழிபெற்ற பயனென்னவும் மெய்பெற்ற அருளென்னவும்**

**மொழிபெற்ற பொருளென்னவும் முகம் பெற்ற**
**-பனுவலென்னவும்**

**எத்துறைக்கும் இறைவனென்னவும் யாஞ்செய்...**

- அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள். அழியாத வகையில் அதனைக் கல்லில் செதுக்கினார்கள்.
- சங்க இலக்கியமான பதிற்றுப்பத்துப் பாடல்களின் இறுதியிலுள்ள பதிகங்கள் இதற்கு முன்னோடி! பல்லவர் கல்வெட்டு, பாண்டியர் செப்பேடு. சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி, எனப்பெயர் பெற்றது.
- இராசராசன் காலத் தமிழ் கல்வெட்டு, 11ஆம் நூற்றாண்டு பெரிய கோயில், தஞ்சாவூரில் உள்ளது.
- "இந்திரன் முதலாகத் திசைபாலகர் எட்டுப்பேரும் ஒருருவம் பெற்றதுபோல் ஆட்சி செய்தவன் சோழன்.

### இதைப்படியுங்கள் முதலில்...

- கோப்பரகேசரி, திருபுவனச்சக்கரவர்த்தி என்று பட்டங்கள் கொண்ட இரண்டாம் இராராச சோழனது மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி பாடமாக உள்ளது.
- இம்மெய்க்கீர்த்திப் பகுதியின் இலக்கிய நயம் நாட்டின் வளத்தையும் ஆட்சிச் சிறப்பையும் ஒரு சேர உணர்த்துவதாக உள்ளது.
- மெய்க்கீர்த்திகள் இரண்டு ஒன்று 91 வரிகளைக் கொண்டது.அதில் 16-33 வரையான வரிகள் பாடப்பகுதியாக உள்ளன.
- முதலாம் இராசராசன் காலந்தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன.

மெய்க்கீர்த்திகளே கல்வெட்டின் முதல் பகுதியில் மன்னரைப் பற்றிப் புகழ்ந்து இலக்கிய நயம்பட எழுதப்படும் வரிகள். இவை புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை.

## சிலப்பதிகாரம்
## - இளங்கோவடிகள்

### மருவூர்ப் பாக்கம்

**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்**
**மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்**
**அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா**
**வளம்தலை மயங்கி நனந்தலை மறுகும்;**
**பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு**
**கூலம் குவித்தகூல வீதியும்.**
**சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு**
**மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்**

### சொல்லும் பொருளும்

1. சுண்ணம் - நறுமணப்பொடி
2. காருகர் - நெய்பவர்(சாலியர்)
3. தூசு - பட்டு,
4. துகிர் - பவளம்
5. வெறுக்கை - செல்வம்,
6. நொடை - விலை
7. பாசவர் - வெற்றிலை விற்போர்
8. ஓசுநர் - எண்ணெய் விற்போர்.
9. மண்ணுள் வினைஞர் - ஓவியர்
10. மண்ணீட்டாளர் - சிற்பி,
11. கிழி - துணி

➢ குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என்னும் ஏழு இசைகளை (ஸ, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்கள்) குற்றமில்லாமல் பெரும்பானர் வாசித்தனர்.

**சிந்தாமணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்**
**கந்தா மணிமே கலைபுனைந்தான் - நந்தா**
**வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்**
**திளையாத குண்டல கேசிக்கும்**
**- திருத்தணிகையுலா.**

### பெருங்குணத்துக் காதலாள் நடந்த பெருவழி

➢ காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகியும் கோவலனும் உறையூர் மற்றும் திருவரங்கம் வழியாகக் கொடும்பாளூர் என்னும் இடத்தை அடைந்தனர். தென்னவன் சிறுமலையின் வலப்பக்கம் வழியாகச் சென்றால் மதுரையை அடையலாம், சிறுமலையின் இடப்பக்க வழியாகச் சென்றால் திருமால் குன்றம் (அழகர் மலை) அடையலாம்.

➢ சோலைகளும் காடுகளும் உள்ள இடைப்பட்ட வழியில் கவுந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் மதுரைக்கு அழைத்துச் சென்றார்.

➢ மதுரையில் கணவனை இழந்த கண்ணகி, மதுரையிலிருந்து வைகையின் தென்கரை வழியாக நெடுவேள் குன்றம் (சுருளி மலை) சென்று வேங்கைக் கானல் என்னுமிடத்தை அடைந்தாள்.

### உரைப்பாட்டு மடை
### (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்)

➢ உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில்வரும் தமிழ்நடை. இது உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.

➢ வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


### இதைப்படியுங்கள் முதலில்...

- சிலப்பதிகாரம், புகார்க்காண்டத்தின் இந்திரவிழா ஊரெடுத்த காதையிலிருந்து இப்பகுதி எடுக்கப்பட்டு உள்ளது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம் மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. முப்பது காதைகளையும் உடையது.
- சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள், சேர மரபைச் சேர்ந்தவர், மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார்.
- “அடிகள் நீரே அருளுக” என்று கூறியவர் சீத்தலைச் சாத்தனார்.
- நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச்செய்யுள் - இளங்கோவடிகள்
- புகார்க் காண்டம் 10, மதுரைக்காண்டம் 13, வஞ்சிக்காண்டம் 7,மொத்த காதைகள் 30.

## இயல் 8
## ஞானம்
## - தி. சொ. வேணுகோபாலன்

**சாளரத்தின் கதவுகள், சட்டம்:**
**காற்றுடைக்கும்,**
**தெருப்புழுதி வந்தொட்டும்**
**கரையான் மண் வீடு கட்டும்**
**வாளித்தண்ணீர், சாயக்குவளை**
**கந்தைத்துணி, கட்டைத் தூரிகை**
**அறப்பணி ஓய்வதில்லை**
**ஓய்ந்திடில் உலகமில்லை!**

### இதைப்படியுங்கள் முதலில்...

- கவிதை தி.சொ. வேணுகோபாலனின “கோடைவயல்” என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இவர் திருவையாற்றில் பிறந்தவர்.
- மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர். “எழுத்து” காலப் புதுக்கவிஞர்களில் ஒருவர்.
- இவரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு ‘மீட்சி விண்ணப்பம்’.

### காலக்கணிதம் - கண்ணதாசன்

**“கவிஞன் யானோர் காலக் கணிதம்**
**கருப்படு பொருளை உருப்பட வைப்பேன் !**
**புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்**
**பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!”**
**மாற்றம் எனது மானிடத் தத்துவம்;**
**மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!**
**எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை**
**என்ப தறிந்து ஏகுமென் சாலை!**
**தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;**
**தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!**
**கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!**
**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;**
**நானே தொடக்கம்;நானே முடிவு;**
**நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!**

### இதைப்படியுங்கள் முதலில்...

- “காலக்கணிதம்” கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- “முத்தையா” என்னும் இயற்பெயர் கொண்டவர் கண்ணதாசன்
- சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தவர். பெற்றோர் சாத்தப்பன்- விசாலாட்சி
- 1949 ஆம் ஆண்டு“கலங்காதிரு மனமே” என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியரானார்.
- “சேரமான் காதலி”புதினத்திற்காக சாகத்திய அகாதெமி விருது பெற்றார்.
- ஆயிரம் தீவு, அங்கயற்கண்ணி, வேலங்குடித் திருவிழா இவரின் புதினங்கள் ஆகும்.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மாகாவியம், இயேசுகாவியம், முதலியன நெடுங்கவிதை நூல்கள்

- தென்றல், முல்லை, கண்ணதாசன், தமிழ் மலர்,முதலிய இதழ்களின் ஆசிரியர்.
- இவர் தமிழக அரசின் இரண்டாம் அரசவைக் கவிஞராகவும் சிறப்பிக்கப்பட்டார். ‘இராசதண்டனை’ என்பது கம்பர் அம்பிகாவதி வரலாற்றைப் பற்றிய இனிய நாடகம்.
- தமிழக அரசின் முதல் அரசவைக்கவிஞர் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்.

## இயல் - 9
## சித்தாளு
## – நாகூர் ரூமி

**பொற்காலமாக இருந்தாலும்**
**இவள் தலையில் எழுதியதோ**
**கற்காலம்தான் எப்போதும்.**
**செத்தாலும் சிறிதளவே**
**சலனங்கள் ஏற்படுத்தும்**
**சித்தாளின் மனச்சுமைகள்**
**செங்கற்கள் அறியாது.**

- ஆசிரியர் குறிப்பு– நாகூர்ரூமி
- இயற்பெயர் - முகம்மதுர.ஃ.பி
- தஞ்சைமாவட்டத்தில் பிறந்தவர். இவர் எண்பதுகளில் கணையாழி இதழில் எழுதத் தொடங்கியவர். கவிதை, குறுநாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பலதளங்களில் இயங்கி வருபவர்.
- மீட்சி, சுபமங்களா, புதிய பார்வை, குங்குமம், கொல்லிப்பாவை, இலக்கிய வெளிவட்டம், குமுதம் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன.
- இதுவரை நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன.
- “கப்பலுக்குப் போன மச்சான்” என்ற நாவலையும் படைத்துள்ளார்.

## தேம்பாவணி– வீரமாமுனிவர்

### முன் நிகழ்வு

- கிறித்துவிற்குமுன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான். இவரை “அருளப்பன்” என்றும் குறிப்பிடுவர்.
- இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி . வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இவருக்குக் கருணையன் என்று பெயரிட்டுள்ளார்.
- கருணையன் தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார்.
- அச்சூழலில் அவருடைய தாய் இறந்துவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்கு கொண்டு கலங்கி ஆறுதல் அளிப்பதை இப்பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**நவமணி வடக்கே யில்போல்**
**நல்லறப் படலைப் பூட்டும்**
**தவமணி மார்பன் சொன்ன**
**தன்னிசைக்கு இசைகள் பாடத்**
**துவமணி மரங்கள் தோறும்**
**துணர்அணிச் சுனைகள் தோறும்**
**உவமணி கானம்கொல் ஒன்று**
**ஒலித்து அழுவ போன்றே**

### சொல்லும் பொருளும்

1. சேக்கை - படுக்கை
2. யாக்கை - உடல்
3. பிணித்து - கட்டி
4. வாய்ந்த - பயனுள்ள
5. இளங்கூழ் - இளம்பயிர்
6. தயங்கி - அசைத்து
7. காய்ந்தேன் - வருந்தினேன்

Padasalai.Net

8. கொம்பு - கிளை
9. புழை - துளை
10. கான் - காடு
11. தேம்ப - வாட
12. அசம்பு - நிலம்
13. உய்முறை - வாழும் வழி
14. ஓர்ந்து - நினைத்து
15. கடிந்து - விலக்கி
16. உவமணி - மணமலர்
17. படலை - மாலை
18. துணர் - மலர்கள்

## இலக்கணக் குறிப்பு

1. காக்கென்று – காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம்
2. கணீர் - கண்ணீர் என்பதன் இடைக்குறை
3. காய்மணி, உய்முறை, செய்முறை - வினைத்தொகைகள்
4. மெய்முறை – வேற்றுமைத்தொகை
5. கைமுறை - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

## இஸ்மத் சன்னியாசி - தூய துறவி

- வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக்கொண்டார்.
- இவருடைய எளிமைமையையும், துறவையும் கண்டு வியந்த சந்தாசாகிப் 'இஸ்மத் சன்னியாசி' என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தார்.
- இந்தப் பாரசீகச் சொல்லுக்குத் 'தூய துறவி' என்று பொருள்.

## இதைப்படியுங்கள் முதலில்...

- தேம்பா + அணி எனப் பிரித்து வாடாத மாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்து தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் இந்நூலுக்குப் பொருள்.
- கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினைப் (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியுள்ளார்.
- 3 காண்டங்களையும் 36 படலங்களையும் 3615 பாடல்களைக் கொண்டுள்ளது.
- 17ஆம் நூற்றாண்டில் தேம்பாவணி காப்பியத்தை இயற்றிவர் வீரமாமுனிவர்.
- இவரின் இயற்பெயர் கான்சுடான்சு சோசப் பெசுகி.
- தமிழின் முதல் அகராதியான சதுரகராதி, தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்), சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள், பரமார்த்தக் குருகதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள்ஆகியவற்றை இவர் படைத்துள்ளார்.
- வீரமாமுனிவரின் காலம் 1680- 1747.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# இயல் - 1

## உரைநடை உலகம்

### தமிழ்ச்சொல் வளம் - தேவநேயப் பாவாணர்

- நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்கிறார் மகாகவி பாரதியார். காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ்.
- கால்டுவெல் (திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்)

### அடி வகை

**ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்**

1. தாள் - நெல்,கேழ்வரகு முதலியவற்றின் அடி
2. தண்டு - கீரை, வாழை முதலியவற்றின் அடி
3. கோல் - நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி
4. தூறு - குத்துச் செடி புதர் முதலியவற்றின்அடி
5. தட்டு அல்லது தட்டை - கம்பு, சோளம் முதலியவற்றின் அடி
6. கழி - கரும்பின் அடி
7. கழை - மூங்கிலின் அடி
8. அடி - புளி,வேம்பு முதலியவற்றின் அடி

### கிளைப்பிரிவுகள்

தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்கள்

1. கவை - அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை, கொம்பு அல்லது கொப்பு கவையின் பிரிவு.
2. சினை - கிளையின் பரிவு.
3. போத்து - சினையின் பிரிவு.
4. குச்சு - போத்தின் பிரிவு.
5. இணுக்கு - குச்சியின் பிரிவு.

**காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள்**

1. சுள்ளி - காய்ந்த
2. குச்சு (குச்சி) விறகு - காய்ந்த சிறுகிளை
3. வெங்கழி - காய்ந்த கழி
4. கட்டை, காய்ந்த கொம்பும் கவையும் அடியும்

### இலை வகை

**தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள்**

1. இலை - புளி, வேம்பு
2. தாள் - புல், நெல்
3. தோகை - சோளம் கரும்பு
4. ஓலை - தென்னை, பனை
5. சண்டு - காய்ந்த தாளும் தோகையும்,
6. சருகு - காய்ந்த இலை

### கொழுந்து வகை

**தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்**

1. துளிர் அல்லது தளிர் - நெல், புல்.
2. முறி அல்லது கொழுந்து - புளி, வேம்பு.
3. குருத்து - சோளம், கரும்பு, தென்னை, பனை.
4. கொழுந்தாடை - கரும்பின் நுனிப்பகுதி.

### பூவின் நிலைகள்

**பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்**

1. அரும்பு - பூவின் தோற்றநிலை
2. போது - பூ விரியத் தொடங்கும் நிலை
3. மலர் (அலர்) - பூவின் மலர்ந்த நிலை
4. வீ - மரஞ்செடியினின்று பூ கீழேவிழுந்த நிலை
5. செம்மல் - பூ வாடின நிலை

# தமிழ் - திறனறித் தேர்வு பயிற்சி ஏடு (பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள்)

## பிஞ்சு வகை

**தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள்**

1. வடு - மாம்பிஞ்சு
2. பூம்பிஞ்சு - பூவோடு கூடிய இளம்பிஞ்சு
3. பிஞ்சு - இளம்காய்
4. மூசு - பலாப்பிஞ்சு
5. கவ்வை - எள்பிஞ்சு
6. குரும்பை - தென்னை, பனை,
7. முட்டுக் குரும்பை - சிறு குரும்பை
8. இளநீர் - முற்றாத தேங்காய்
9. நுழாய் - இளம்பாக்கு ,
10. கருக்கல் - இளநெல்,
11. கச்சல் - வாழைப்பிஞ்சு

## குலை வகை

**தாவரங்களின் குலை வகைளைக் குறிப்பதற்கான (காய்களையோ கனிகளையோ) சொற்கள்**

1. கொத்து - அவரை , துவரை
2. குலை - கொடிமுந்திரி
3. தாறு - வாழைக்குலை
4. கதிர் - கேழ்வரகு, சோளம்
5. அலகு அல்லது குரல் - நெல், தினை
6. சீப்பு - வாழைத் தாற்றின் பகுதி

## கெட்டுப்போன காய்கனி வகை

**கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்கள்**

- சூம்பல் - நுனியில் சுருங்கிய காய்
- சிவியல் - சுருங்கிய பழம்
- சொத்தை - புழுபூச்சி அரித்த காய் (அல்லது கனி)
- சொண்டு - பதராய்ப் போன மிளகாய்
- அல்லிக்காய் - தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்,
- ஒல்லிக்காய் - தென்னையில் கெட்ட காய்
- வெம்பல் - சூட்டினால் பழுத்த பிஞ்சு
- அணியல் - குளுகுளுத்த பழம்

## பழத்தோல் வகை

**பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள்**

- தொலி - மிக மெல்லியது
- தோல் - திண்ணமானது
- தோடு - வன்மையானது
- ஓடு - மிக வன்மையானது
- குடுக்கை - சுரையின் ஓடு
- மட்டை - தேங்காய் நெற்றின் மேற்பகுதி
- உமி - நெல், கம்பு முதலியவற்றின் மூடி
- கொம்மை - வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி

## மணிவகை

**"தானியங்களுக்கு வழங்கும் சொற்கள்"**

1. கூலம் - நெல், புல்(கம்பு) முதலிய தானியங்கள்
2. பயறு - அவரை, உளுந்து
3. கடலை - வேர்க்கடலை, கொண்டைக்கடலை
4. விதை - கத்தரி , மிளகாய்
5. காழ் - புளி, காஞ்சிரை (நச்சு மரம்)
6. முத்து - வேம்பு, ஆமணக்கு
7. முதிரை - அவரை, துவரை முதலிய பயறுகள்
8. கொட்டை - மா, பனை

## இளம் பயிர் வகை

**"தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்கள்"**

1. நாற்று - நெல், கத்திரி
2. கன்று - மா, புளி, வாழை

3. குட்டி - விளாவின் இளநிலை
4. மடலி அல்லது வடலி -பனையின் இளநிலை
5. பைங்கூழ் - நெல், சோளம்
6. குருத்து - வாழையின் இளநிலை
7. பிள்ளை - தென்னையின் இளநிலை

➢ தமிழ்நாட்டு அரிசி வகை -சம்பாவில் மட்டும் ஆவிரம் பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

➢ வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை. தமிழ்நாட்டுள்ளும் தென்னாட்டிலேயே அவை விளைகின்றன.

➢ கோதுமை வகைகள் : சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை

**தமிழ்த் திரு. இரா. இளங்குமரனார்**

➢ தமிழாசிரியர் , நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர், சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்

➢ திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில் "திருவள்ளுவர் தவச்சாலை" ஒன்றை அமைத்திருப்பவர்; பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர்.

➢ தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வருபவர்.

➢ விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர்

➢ தமிழ்த்தென்றல் திரு.வி.க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்

➢ இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் , பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம் முதலியன இவர்தம் தமிழ்ப் பணியைத் தரமுயர்த்திய நல்முத்துகள்.

➢ மொழிஞாயிறு என்றழைக்கப்படும் தேவநேயப் பாவாணரின் "சொல்லாய்வுக் கட்டுரைகள்"நூலில் உள்ள தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரையின் சுருக்கம் பாடமாக இடம்பெற்றுள்ளது.

➢ தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித்திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர், உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித்தலைவராக இருந்தவர்.

**கடல் கடந்து முதலில் அச்சேறிய தமிழ்**

➢ போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில் 1554இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ் மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது.

➢ ரோமன் எழுத்துருவில் வெளிவந்த இதன் முழுப்பெயர் Carthila de lingoa Tamul e Portugues இது அன்றைய காலத்திலேயே இரு வண்ணங்களில் (கறுப்பு, சிவப்பு) நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது.

➢ இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்.

➢ தரிசு – போதிய பருவமழை (ம) பராமரிப்பின்றி விளைச்சல் நிலம்

➢ தரிசல் - இந்நிலம் கருப்பாயிருப்பதால் தரிசல் பெயர் பெற்றது

➢ முரம்பு – பருக்கை கல்லுள்ள மேட்டுநிலம்

➢ புறம்போக்கு – அரசுடைய நிலம் மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்ட நிலம்

➢ அவல்- நெற்பயிர் விளையும் பள்ளமான நிலம்.

**தெரியுமா?**

உலகத்திலேயெ ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே, மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே.

– பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார்

## இயல் - 2
## கேட்கிறதா என் குரல்

- “மெல்லத்தொட்டுச் சென்றால் தென்றல், தூக்கிச் சென்றால் புயல்!”
- தொல்காப்பியர் உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார்.
- திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார்.
- பிற்கால ஔவையார் தம் குறளில் வாயுதாரணை எனும் அதிகாரத்தில் **“வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண் டாம்”** - என்று பாடியுள்ளார்.

**நான்கு திசைகளிலும் காற்று**

- கிழக்கு என்பதற்குக் குணக்கு என்னும் பெயருமுண்டு, கிழக்கிலிருந்து வீசும்போது கொண்டல் எனப்படுகிறது மழைக்காற்று எனவும் அழைக்கப்படுகிறது.
- மேற்கு என்பதற்குக் குடக்கு, மேற்கிலிருந்து வீசும்போது கோடை எனப்படுகிறது வெப்பக்காற்று எனவும் அழைக்கப்படுகிறது.
- வடக்கு என்பதற்கு வாடை, வடக்கிலிருந்து வீசும்போது வாடைக்காற்று - குளிர்ச்சியான ஊதைக்காற்று
- தெற்கிலிருந்து வீசும்போது தென்றல் காற்று - வேகம் குறைந்து இதமான இயல்பு கொள்கிறது.

### இலக்கியத்தில் காற்று

- இளங்கோவடிகள் “வண்டொடு புக்க மணவாய்த்தென்றல்”— சிலம்பு 2:24 என்கிறார்.
- பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் எழுதிய பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது என்னும் சிற்றிலக்கியத்தில் பெண்ணொருத்தி **நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே** - எனத் தூது செல்ல காற்றினை அன்போடு அழைக்கிறாள்.

### முந்நீர் நாவாய் ஓட்டியாகக் காற்று

- **“நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி**
  **வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!**
  **களி இயல் யானைக் கரிகால் வளவ!”**
  **- புறம்**

  எனக் கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய பாடலில், சங்காலப் பெண் புலவர் வெண்ணிக்குயத்தியார் “வளி” எனக் குறிப்பிட்டுள்ளார்.
- கிரேக்க அறிஞர் “ஹிப்பாலஸ்” என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார் என்பது வரலாறு,

**ஹிப்பாலஸ் பருவக்காற்று**

- ❖ கி.பி (பொ.ஆ) முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸ் என்னும் பெயர்கொண்ட கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார்.
- ❖ ஹிப்பாலஸ் பருவக்காற்றின் வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று.

### இந்தியாவின் முதுகெலும்பு வேளாண்மை

- இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தென்மேற்குப் பருவக்காற்று கொடுக்கின்றது.
- ஜீன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்கு பருவக்காற்றுக்காலம் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்று வீசும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


**தடம் பதிப்பேன் நான்**

- வளி மிகின் வலி இல்லை (புறம்) என்று ஐயூர் முடவனார் பாடியுள்ளார்.
- மதுரைஇளநாகனார் (புறம்) கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**ஆற்றலாக காற்று**

- நவீன தொலைத்தொடர்பின் மையமாகவும் - காற்று விளங்குகிறது.
- உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம்பெற்றுள்ளது. இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.
- உலகிலேயே அதிகளவு மாசுபடுத்தும் நாடுகளில் இந்தியா இரண்டாம் இடம். இந்தியாவில் மிகுந்த உயிரிழப்பைத் தரும் காரணங்களில் ஐந்தாம் இடம் பெறுவது காற்று மாசுபாடு.
- காற்று மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) தெரிவித்துள்ளது.
- குளோரோ புளோரோ கார்பன் என்னும் நச்சுக்காற்றை வெளிவிடும் இயந்திரம் குளிர்பதனப் பெட்டி. இதைக் குறைக்கும் விதமாக ஹைட்ரோ கார்பன் (HC) என்னும் குளிர்பதனியை இப்போது பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றார்கள்.
- கந்தக டை ஆக்சைடு நைட்ரஜன் - டை - ஆக்சைடு இவை மழை நீரில் கரைந்து விடுவதால் அமிலமழை பொழிகிறது.

**மரம் தரும் வரம் காற்று**

- ஒரு மணித்துளிக்கு 12 முதல் 18 முறை மூச்சுக்காற்றாய் நீங்கள் வெளிவிடும் கார்பன் டை ஆக்சைடை எடுத்துக்கொண்டு உங்கள் நுரையீரலுக்குத் தேவையான உயிர்வளியைத் (ஆக்சிஜன்) தரும் மரங்களை வளருங்கள்.
- ஜீன் 15 உலகக் காற்று நாள்.
- குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு ஒரு இலட்சம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும்.

> மென்துகிலாய் உடல்வருடி
> மாயங்கள் செய்கின்ற
> பூங்காற்றே!
> இத்தனை நாள் உனைப் படாதிருந்து விட்டேன்
> புதுக்கவிதையில் சிக்கிப் போனேன்
> - தேவகோட்டை வா. மூர்த்தி

- தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்களைத்தாய் மொழியில் எழுதிவைத்துப் பாடுகின்றனர்
  **- தனிநாயக அடிகள் (ஒன்றே உலகம்)**

## இயல் -3
## விருந்து போற்றதும்!

- 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**அறவுணர்வும் தமிழர் மரபும்**

- திருவள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே அமைத்திருக்கிறார். – விருந்தோம்பலின் சிறப்பை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளில் எடுத்துரைக்கிறார்.

  **"...................... தொல்லோர் சிறப்பின்**
  **விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"**
  – சிலப்பதிகாரம்.

  விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.
- கல்வியும்செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- கலிங்கத்துப் பரணியிலும் செயங்கொண்டார் விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.
- **“விருந்தினரும் வறியவரும்நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல”**
  **- கலிங்கத்துப் பரணி (477)**
- **“பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே”**
  **- கம்பராமாயணம்.**
- **“உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே............”** - புறநானூறு கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி பாடியுள்ளார்.
- **“அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும் “ – நற்றிணை (142)**

## தெரியுமா?

பண்டைத் தமிழர் விருந்தினரை

ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்.

**“காலின் ஏழடிப் பின் சென்று”** - பொருநராற்றுப்படை

**குரல் உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோ இலள்**
**- புறநானூறு. (333)**

**நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**
**இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்**
**கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்............**
**- புறநானூறு (316)**

- இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை; எனவே, அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.

## நிலத்திற்கேற்ற விருந்து

- “நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை”
- **“பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ”– குறுந்தொகை**
- **“மருந்தே ஆயினும் விருந்தொடு உண்”** என்று கொன்றை வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார்.
- **“வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் முரமுரெனவே புளித்த மோரும்”– ஔவையார்.**
- நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.
- தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
- **“இலையை மடிப்பதற்கு முந்தைய**
  **வினாடிக்கு முன்பாக**
  **மறுக்க மறுக்க**
  **பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில்**
  **நீண்டு கொண்டிருந்தது**
  **பிரியங்களின் நீள் சரடு”** - அம்சப்பிரியா

### வாழை இலையில் விருந்து

அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் வாழையிலை விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது.

அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.

## இயல் - 4
## செயற்கை நுண்ணறிவு

- "உயிரினங்களில் மனிதரை உயர்த்திக்காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே"

### மின்னணுப் புரட்சி

- 1980களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் (Personal Computers) வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் (Digital Revolution) காரணமாயின.
- அவற்றுள் இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு.
- இதழியலில், செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறுதல்களைச் செய்து வருகிறது.
- அவற்றுள் விந்தையான ஒன்று, இயல்பான மொழிநடையை உருவாக்குதல் (Natural language Generation) என்னும் மென்பொருள் அதற்கு வேர்டுஸ்மித் (எழுத்தாளி) என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.
- தகவல்களைக் கொடுத்தால் போதும் வேர்டுஸ்மித் அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கிவிடும்.
- இவ்வுலகை இதுவரை மென்பொருள் (Software) ஆண்டுக்கொண்டிருக்கிறது. இனிமேல் செயற்கை நுண்ணறிவுதான் ஆளப்போகிறது.

### இதைப் படியுங்கள் முதலில்...

2016இல் ஐ.பி. எம் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன், சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

சீனாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் இயந்திர மனிதர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளன.

### தொழில்நுட்ப வரையறைகளின்படி

- செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு (Computer Program) எனலாம்.
- அது தானாகக் கற்றுக்கொள்ளக்கூடியது. இந்த அறிவைக் கொண்டு தனக்கு வரும் புதியபுதிய சூழ்நிலைகளில் மனிதரைப் போல தானே முடிவெடுக்கும் திறனுடையது.

### சீன நாட்டில் தமிழ்க் கல்வெட்டு

- சீன நாட்டில் '**காண்டன்**' நகருக்கு 500 கல் வடக்கே **சூவன்செள** என்னும் துறைமுக நகர் உள்ளது.
- அந்தக் காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர். அதன் காரணமாக சீனாவில் சிவன் கோவில் ஒன்று கட்டப்பட்டது.
- அது சீனப் பேரரசரான **குப்லாய்கானின்** ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் தமிழ்க் கல்வெட்டு இன்றும் இக்கோயிலில் உள்ளது இக்கோயிலில் சோழர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்துகொள்ளவும் முடியும் என்பதே அதன் சிறப்பு.
- மனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது செயற்கை நுண்ணறிவு.
- **"இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்" - பாரதியார்.**
- காணொலிகளைத்தொகுக்கும் மென்பொருள்களில் (Video Editing) இன்றைக்குச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுகிறது.

### வாடிக்கையாளர் சேவை

- இந்தியாவின் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி **“இலா” (ELA – Electronic Live Assistant)** என்னும் உரையாடு மென்பொருளை (Chatbot) உருவாக்கியிருக்கிறது.
- ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் அது உரையாடும். வங்கிக்கு வரும் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் சேவைகளை அது இணையம் மூலம் அளிக்கிறது.
- செயற்கை நுண்ணறிவின் மிகுதியான வளர்ச்சியால் தரவு அறிவியலாளர்களின் (DataScientists) தேவை கூடியுள்ளது.
- இயந்திரக் கற்றல் வல்லுநர்கள் முதலான பல தொழில்நுட்ப வல்லுநர்களின் தேவையும் பெருகிவருகிறது.

### பெப்பர்

- ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே **‘பெப்பர்’.** இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ. வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன.
- பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

## இயல் -5
## மொழிபெயர்ப்புக் கல்வி

- “ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு” என்கிறார் **மணவை முஸ்தபா.**
- “ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவுகொள்ளவும் மொழிப் பெயர்ப்பு இன்றியமையாததாகும், உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்” என்கிறார்

  - மு.கு. ஜகந்நாத ராஜா

### மொழிபெயர்ப்பு – தொடக்கம்

- மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் (98) குறிப்பிட்டுள்ளார்.
- மகாபாரதம் தமிழ்ப்படுத்தும், மதுராபுரிச் சங்கம்வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு. சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது.
- வடமொழியல் வழங்கிவந்த இராமாயண, மகாபாரதத் தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளன.
- பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே.

### மொழிபெயர்ப்பு – தேவை

- மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம் (NBT) தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன.
- ஜப்பான் மொழியில் **“மொகு சாஸ்ட்டு** தொடருக்குப் பொருள் **“விடைதர அவகாசம் வேண்டும்”**

### பாரதியின் மொழிபெயர்ப்பு

- காட்சி, பொருட்காட்சி –Exhibition
- இருப்புப்பாதை- East Indian Railways
- புரட்சி - Revolution
- தொழில் நிறுத்தி இருத்தல், தொழில் நிறுத்தம், வேலைநிறுத்தம் - Strike

## இலக்கிய இறக்குமதி

- பிறமொழி இலக்கியங்களை அறிந்துகெள்ளவும் அவைபோன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.
- பொதுநிலை பெற்ற இலக்கியத்தை மொழிவேலி சிறையிடுகிறது. மொழிவேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது. ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன ஷேக்ஸ்பியர், அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.
- 18ஆம் நூற்றாண்டுவரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கிலம் வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின.
- தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால் தான்.
- இரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு கிடைத்தது.

**இதைப்படியுங்கள் முதலில்...**

- ராகுல் சாங்கிருத்யாயன் 1942 ஆம் ஹஜிராபாக் மத்திய சிறையிலிருந்தபோது வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூலை இந்தி மொழியில் எழுதினார்.
- 1949ஆம் ஆண்டு இந்நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார் இன்றுவரையில் "வால்காவிலிருந்து கங்கை வரை" ஒவ்வொரு தமிழரும் விரும்பிப் படிக்கும் நூலாக இருக்கிறது.
- 1949-கணமுத்தையா மொழி பெயர்ப்பு, 2016- டாக்டர் என்.ஸ்ரீதர் மொழி பெயர்ப்பு, 2016-முத்து மீனாட்சி மொழி பெயர்ப்பு, 2018- யூமா வாசுகி மொழிபெயர்ப்பு

-சா. கந்தசாமி

- Railsleeper என்பது தொடர்வண்டியின் போக்குவரத்துப் பாதையான தண்டவாளத்தில் உள்ள குறுக்குக் கட்டைகளைக் குறிக்கும்
- Camel என்பதற்கு வடம் (கயிறு), ஒட்டகம் என இரு பொருள்
- Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது.
- Transcribe, Transfer, Transform,Transact– படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல்
- ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழிபெயர்க்கப்படுகின்றன.
- புள்ளிவிவரப்படி அதிகமான தமிழ் நூல்கள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம், இரண்டாமிடம் மலையாளம் அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகளில் முறையே தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்யமொழி, வங்கமொழி, மராத்தி மொழி போன்றவை இடம்பெறுகின்றன.
- **"காசினியில் இன்று வரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி பேசி மகிழ் நிலை வேண்டும்"**
  என்றார் குலோத்துங்கன்.
- சாகித்திய அகாதெமி நிறுவனமும் தேசிய புத்தக நிறுவனமும் பல மொழிகளிலிருந்து நல்ல படைப்புகளை எல்லா இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளன.
- **"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் - பாரதி"**
- **"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" – பாரதி**

எத்திசையும் புகழ்மணக்க

- ❖ **பிரான்சு தேசிய நூலகத்தில் தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும்**
- ❖ பிரான்சு "தேசிய நூற்கூடத்தில் (Bibliothque Nationale) ஏறக்குறைய ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள, இவற்றுள் சில இந்தியாவிலேயே கிடைக்காத படிகளும் ஏடுகளமாகும்.
- ❖ "மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ், சரளிப்புத்தகம், புதுச்சேரி அம்மன் பிள்ளைத் தமிழ்"முதலிய நூல்களும் அங்கு உள்ளன.

- தனிநாயக அடிகள்

## இயல் -6
## நிகழ்கலை

- ➢ சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்.

### கரகாட்டம்

- ➢ கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. கரகாட்டத்திற்கு நையாண்டி மேள இசையும் நாகசுரம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றன.
- ➢ கரகாட்டம் நிகழ்த்துதலில் இத்தனைபேர்தான் நிகழ்த்த வேண்டும் என்ற வரையறை இல்லை.
- ➢ **"நீரற வறியாக் கரகத்து"** என்ற புறநானூற்றைப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம் பெறுகிறது. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் "குடக்கூத்து" என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது.
- ➢ தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, முதலிய மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது.

### மயிலாட்டம்

- ➢ கரகாட்டத்தின் துணையாட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது.
- ➢ ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக்கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளைக் கலைஞர்கள் இவ்வாட்டத்தில் ஆடிக்காட்டுவர்.

### காவடியாட்டம்

- ➢ கா- என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள்
- ➢ காவடியின் அமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என்று அவற்றை அழைக்கின்றனர்.
- ➢ இலங்கை, மலேசியா உட்பட புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

### ஒயிலாட்டம்

- ➢ ஒயிலாட்டத்தைப் பெரும்பாலும் ஆண்கள் ஆடுவதே வழக்கில் உள்ளது.
- ➢ ஆட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

### தேவராட்டம், சேவையாட்டம்

- ➢ தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்.
- ➢ உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் **"தேவதுந்துபி"** தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி.

- எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது. தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றது.
- சேவையாட்டம் ஆட்டக்கலைஞர்கள் சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டே ஆடுகின்றனர்.

## பொய்க்கால் குதிரையாட்டம்

- **"போலச் செய்தல்"** பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று.
- அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.
- இவற்றில் பாடல்கள் பயன்படுத்தப்படுவதில்லை, நையாண்டி மேளமும் நாதசுரமும் இசைக்கப்டுகின்றன.
- இது இராஜஸ்தானில் கச்சிகொடி என்றும் கேரளத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுகின்றன.

## தப்பு ஆட்டம்

- **"தப்பு"** என்ற தோற்கருவியை இசைத்துக்கொண்டே, அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும். "தப் தப்" என்று ஒலிப்பதால் அந்த ஒலியின் அடியாகத் "தப்பு" எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.
- "தகக தகதகக தந்தத்த தந்தகக என்று தாளம்

பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக' (திருப்புகழ்)143 அருணகிரிநாதர், தப்பாட்ட இசை குறித்துப் பதிவு செய்துள்ளார். இதனைப் "பறை" என்றும் அழைப்பர்.

- ஒன்றைச் சொல்லுவதற்கென்றே (பறைதல்) இசைக்கப்படும் இசைக்கவல்ல தாளக்கருவி பறை. தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாகப் பறை இடம்பெறுகிறது. தப்பாட்டத்தில் கலைஞர்கள் குழுவாகப் பங்கேற்கின்றனர்.

## புலி ஆட்டம்

- தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.

## தெருக்கூத்து

- நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து. ஒரு கதையை இசை, வசனம், ஆடல், பாடல் , மெய்ப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவர் திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது.
- தெருக்கூத்து, வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது. அருச்சுனன் தபசு என்பது மழை வேண்டி நிகழ்த்தப்படுவதாக இருக்கிறது.
- கதகளி செவ்வியல் கலையாகும்.

> ❖ **கூத்துப்பட்டறை ந. முத்துசாமி**
>
> ❖ தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர், "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர். கூத்துப்பட்டறை ந. முத்துசாமி என்ற கலைஞாயிறு.
>
> ❖ இந்திய அரசின் தாமரைத்திரு விருதையும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றார்.

## தோற்பாவைக் கூத்து

- நிகழ்சியில் பாவையின் அசைவு, உரையாடல், இசை ஆகியனவற்றோடு ஒளியும் முதன்மை பெறுகின்றது. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் காண முடிகிறது.
- தோற்பாவைக் கூத்து கையுறைப் பாவைக் கூத்து பொம்மலாட்டம் என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

**இதைப்படியுங்கள் முதலில்...**

- “மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் புகழ்மிக்க பகுதியில், இராசசோழன் தெரு என்பது இன்றும் உள்ளது.இது மாமன்னன் இராசராச சோழன் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட சிறப்பினை உணர்த்துகின்றது. - ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டுமலர்.”

## இயல் - 7
## சிற்றகல் ஒளி – ம.பொ சிவஞானம்

- 1906ஆம் ஆண்டு காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார்.
- 16.10.1906 - வ.உ.சிதம்பரனார் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
- ம. பொ. சிவஞானம் 1906ம் ஆண்டு ஜீன் 26ஆம் நாள் சென்னை ஆயிரம் விளக்கு வட்டம் சால்வன்குப்பம் என்ற பகுதியில் பிறந்தார்.
- தந்தையார் பெயர் பொன்னுசாமி, அன்னையின் பெயர் சிவகாமி. பெற்றோர் இட்ட பெயர் ஞானப்பிரகாசம். சரபையர் என்ற முதியவர் இவரது பெயரை மாற்றி “சிவஞானி” என்றே அழைத்தார்.
- சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

## செவிச்செல்வம்

- அன்னையார் இளமையிலே பயிற்றுவித்த பாக்கள் இலக்கியப் பயிற்சிக்கான பாலபாடங்களாக அமைந்தன. அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களைப் பாடுவார் அன்னை ம.பொ.சி.
- சித்தர் பாடல்களை விரும்பிப் படித்து மனனம் செய்வார்.
- சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாகவும் இலக்கிய அறிவு பெற்றார். ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள். ஒன்று கல்வி, மற்றொன்று கேள்வி என்று கூறினார்.
- இவரது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமையிலே திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே பங்குண்டு.

**இதைப் படியுங்கள் முதலில்...**

- இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரம், இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச்சொத்து - சிலம்புச்செல்வர் ம.பொ.சி

## புத்தகப்பித்தன்

- புத்தங்களை அதிகம் விரும்பி வாங்கிப் படிப்பதால் இவரை புத்தகப்பித்தன் என்றும் கூறலாம்.

## பேராயக் கட்சி (காங்கிரஸ் கட்சி)

- 1931இல் காந்தி- இர்வின் ஒப்பந்தம். பேராயக் கட்சியால் நடத்தப்பட்ட ஊர்வலங்களிலும் கதர் விற்பனையிலும் தவறாமல் கலந்து கொள்வார்.

**ஆறுமாதக் கடுங்காவல்.**

- 30.09.1932 இல் "தமிழா! துள்ளி எழு" என்னும் தலைப்புடைய துண்டறிக்கை ஒன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காக சிறையிலிடப்பட்டார்.
- 1942ஆகஸ்டு 8 ஆம் நாள் "இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற தீர்மானத்தைப் பம்பாயில் கூடிய அகில இந்திய பேராயக்கட்சி ஒரு மனதாக நிறைவேற்றியது.
- ஆகஸ்டு 13ஆம் நாள் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம், உட்பட தென்னகத்தின் முன்னணித்தலைவர்கள் பலரை அங்கு கண்டார்.

## "தமிழகம் பற்றிய கனவு"

- 1947 ஆகஸ்டு பதினைந்தாம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலை விழாவைக் கொண்டாடினார்.
- வடக்கெல்லைத் தமிழ்மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச்செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார். அவருடன் இணைந்து தமிழக அரசுக் கழகம் சென்னையிலும் திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது.
- சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய இடங்களிலும் வடக்கெல்லைப் போராட்டத்தில் சிவஞானம் மங்கலங்கிழார், விநாயகம், ஈ.எஸ்.தியாகராஜன், ரஷீத் என ஏராளமானோர் சிறைபட்டனர்.
- போராட்டத்தில் ஈடுபட்டு இராஜமுந்திரி சிறையிலிருந்த திருவாலங்காடு , கோவிந்தராசன், பழநி சிறையிலிருந்த மாணிக்கம் ஆகிய இருவரும் சிறையிலேயே உயிர் துறந்தனர்.
- சர்தார் கே.எம். பணிக்கர் தலைமையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட மொழிவாரி ஆணையம், சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திராவிற்குக் கொடுத்துவிட்டது.
- ஆந்திரம் அமைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம், ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க பரிந்துரை செய்தது.
- 25.03.1953 அன்று நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு நடுவணரசின் சார்பில் அதிகாரப்பூர்வமான உறுதிமொழியொன்றை வெளியிட்டார்.
- ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர நாட்டின் எல்லைக்குள் அமையும் என்று உறுதியளிக்கப்பட்டது. சென்னை தமிழருக்கே என்பதும் உறுதியானது.

## தெற்கெல்லைப் போராட்டம்

- 1946 அக்டோபர் 25-இல் நாகர்கோயில் நகரின் ஒரு பகுதியான வடிவீசுவரத்தில் வடிவை வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவில் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றிய முதல் பேச்சு முக்கியமானது. அந்நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானம் தனி அரசாக இருந்தது.
- 1953-54-ஆம் அண்டுகளில் தெற்கெல்லைப் பகுதிகளைக் கேரள (திருவிதாங்கூர்) முடியாட்சியிலிருந்து மீட்கவும் போராடினார். தமிழக வடக்கு –தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளைத் தமிழகம் தழுவிய அளவில் தொடங்கிவைத்தது தமிழரசுக் கழகம்.
- தெற்கெல்லைக் கிளர்ச்சியில் திருவிதாங்கூர் ஆட்சி நடத்திய துப்பாக்கிச் சூடு காரணமாக உயிர்நீத்தவர்கள் தேவசகாயம், செல்லையா ஆகியோர்.
- பசல் அலி ஆணையம் நடுவண் அரசுக்குத் தந்த பரிந்துரை 1955 அக்டோபர் 10ஆம் நாள் வெளியானது. அந்தப் பரிந்துரையில் மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்து அமைக்கும் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டது.

**கடல் கடந்த தமிழ் வணிகம்**

✓ ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரமான வியன்னாவில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச் சுவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

✓ இச்சுவடி சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம்.

✓ இது கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

**நூல்வெளி**

➢ **“எனது போராட்டம்”** என்னும் ம.பொ. சிவஞானத்தின் தன்வரலாற்று நூலில் இருந்து இக்கட்டுரை தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. சிலம்புச்செல்வர் என்றும் போற்றப்படும் ம.பொ. சிவஞானம்.

➢ (1906 - 1995) விடுதலைப் போராட்ட வீரர், 1952 முதல் 1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக பதவி வகித்துள்ளார்.

➢ தமிழக அரசுக் கழகத்தைத் தொடங்கியவர்.

➢ **“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”,** நூலுக்காக 1966 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றார். தமிழக அரசு திருத்தணியிலும் சென்னை தியாகராய நகரிலும் இவருக்குச் சிலை அமைத்துள்ளது.

## இயல் 8
## சங்க இலக்கியத்தில் அறம்

➢ “சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம், சங்க காலம்”.

➢ சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். இவை சமயம் சார்ந்தவை.

➢ “கவிதை வாழ்க்கையின் திறனாய்வு” என்று திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுகிறார்.

**அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை**

➢ அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது.

**“இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்”– புறம்**

➢ சங்ககால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி எணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார்.

**அரசியல்அறம்**

➢ சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

➢ **“அறநெறி முதற்றே அரசின் கொற்றம். அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்”** மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன.

➢ குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் - ஊன் பொதிப் பசுங்குடையார்.

➢ நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிறது மதுரைக்காஞ்சி. **“செம்மை சான்ற காவிதி மாக்கள்”** என்று அமைச்சர்களை மாங்குடி மருதனார் போற்றுகிறார்.

**அறங்கூறவையம்.**

➢ அறம் கூறும் அவையம் பற்றி“அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்” என்கிறது புறநானூறு.

➢ மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது. – புறநானூறு.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## போர் அறம்

- தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.
- **"எறியார் எறிதல் யாவணது எறிந்தார் எதிர்சென்று எறிதலும் செல்லான்" - புறம்**

## கொடை

- **"செல்வத்தின் பயனே ஈதல் துய்ப்பேம் எனினே தப்புந பலவே"– புறம்** என்றார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.
- கடையெழு வள்ளல்களின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.
- ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.
- வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டனர். வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார்.
- வள்ளலின் பொருள் இரவலனின் பொருள். வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார்.
- உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார்.
- பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார், பரணர்.
- தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார்.
- எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாராட்டுகிறார்.
- ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.
- தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் புறநானூற்றில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

## உதவி

- உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் "உதவியாண்மை" என்று குறிப்பிடுகிறார்.

**"பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்"**

**- (கலித்தொகை)**

- உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான் என்கிறார், நல்வேட்டனார்.

  **"சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே" -நற்றிணை**
- உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார். "செல்வம் என்பது சிந்தையின் நிறைவு என்கிறது தமிழ் இலக்கியம். "நிறைவடைகிறவனே செல்வன்" என்கிறது சீன நாட்டுத் தாவோயிசம்.

## நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல்

- “பிழையா நன்மொழி” என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் “பொய் மொழிக் கொடுஞ் சொல்” என்று பொய்யைக் குறிப்பிடுகிறது.
- தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம் தரமானது. இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது. சங்க இலக்கிய அறங்கள் இயல்பான முதல் தரமான அறங்கள்.

## போதி தர்மர்

- கி.பி.(பொ.ஆ) ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதிதர்மர் என்னும் சமயப் பெயர்பூண்டு சீனாவுக்குச் சென்றார். பௌத்த சமயத் தத்துவத்தின் ஒரு பிரிவைப் போதித்தார். அதிலிருந்து உருவானதே “ஜென்” தத்துவம்.
- இது பின்னர் ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் பரவிச் செழித்து விளங்கியது. போதி தருமருக்குச் சீனர்கள் கோவில் கட்டி சிலை வைத்து இன்றளவும் வணங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## வாய்மை

- வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, “பொய்யாச் செந்நா”, “பொய்படுபறியா வயங்கு செந்நா” என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

## இயல் - 9
## ஜெயகாந்தம் - நினைவு இதழ்

- கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமகாலக் கருத்துகளையும் நிகழ்வுகளையும் சமகால மொழியில் சமகால உணர்வில் தந்தவர் அவர்.
- சிறுகதை, புதினம், திரைப்படம், முன்னுரை, பேட்டி என எதைத் தொட்டாலும் தனிமுத்திரை பதித்தவர். இலக்கியத்திற்கான பெரும் விருதுகளை வென்றவர். மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர் ஜெயகாந்தன்.
- காலம் - 24.04.1934 – 08.04.2015
- தர்மார்த்தங்களை உபதேசிக்கவே வியாஸர் பாரதத்தை எழுதினார்.

## விருதுகள்

1. குடியரசுத் தலைவர் விருது (உன்னைப்போல் ஒருவன் - திரைப்படம்)
2. சாகித்திய அகாதெமி விருது - சில நேரங்களில் சில மனிதர்கள் (புதினம்)
3. சோவியத் நாட்டு விருது (இமயத்துக்கு அப்பால்)
4. ஞானபீட விருது
5. தாமரைத்திரு விருது

- எதற்காக எழுகிறேன்? - ஜெயகாந்தன்

## திரைப்பட படைப்புகள்

1. சிலநேரங்களில் சில மனிதர்கள்
2. ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
3. ஊருக்கு நூறுபேர்
4. உன்னைப் போல் ஒருவன்
5. யாருக்காக அழுதான்

## இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன்

- “ஜெயகாந்தன் எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தபாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை”. துவேஷத்தைப் பரப்புவது அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து

பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம். —அசோகமித்திரன்.

- படிக்காத மேதை ஜெயகாந்தன் என்று கா. செல்லப்பன் கூறுகிறார்.

| சிறுகதைத் தொகுப்பு | குறும்புதினங்கள் | புதினங்கள் |
|---|---|---|
| ▪ குருபீடம்<br>▪ யுகசந்தி<br>▪ ஒருபிடிசோறு<br>▪ உண்மைசுடும்<br>▪ இனிப்பும்கரிப்பும்<br>▪ தேவன்வருவாரா<br>▪ புதியவார்ப்புகள் | ▪ பிரளயம்<br>▪ கைவிலங்கு<br>▪ ரிஷிமூலம்<br>▪ பிரம்ம உபதேசம்<br>▪ யாருக்காக அழுதான்?<br>▪ கருணையினால் அல்ல<br>▪ சினிமாவுக்குப் போன சித்தாளு | • பாரீசுக்குப்போ!<br>• சுந்தர காண்டம்<br>• உன்னைப் போல் ஒருவன்<br>• கங்கை எங்கே போகிறாள்<br>• ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்<br>• இன்னும் ஒரு பெண்ணின் கதை<br>• ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் |

- "வாழ்விக்க வந்த காந்தி" (பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம்
- "ஒரு கதாசிரியனின் கதை" (முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு)

## கவிதை

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய ஜெயகாந்தனின் கவிதை

**"எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை**
**கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்**
**பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் - பழைய**
**மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்"**

## நூல்வெளி

- ஜெயகாந்தன் "எதற்காக எழுதுகிறேன்" கட்டுரை யுகசந்தி என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

"தர்க்கத்திற்கு அப்பால்" என்னும் சிறுகதை பாடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

- இது இவருக்கு **'சிறுகதை மன்னன்'** என்ற பட்டத்தைத் தேடித்தந்தது.
- சாகித்திய அகாதெமி விருதையும் ஞானபீட விருதையும் பெற்ற இவருடைய கதைகள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

*****


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# விரிவானம்

## இயல் - 1
## உரைநடையின் அணிநலன்கள்
## எழில் முதல்வன்

- சங்க இலக்கியம் நம் பாட்டனார் தோப்பு, இடைக்கால இலக்கியம் நம் தந்தையார் தோட்டம்; இக்கால இலக்கியம் நம் பூங்கா
- கபிலர் - குறிஞ்சிப்பாட்டு

### தமிழ் மொழியின் வளர்ச்சி

- சங்கப் பாடல்களுக்குப் பின், தமிழ் இலக்கியம் அறஇலக்கியங்களாகி, காப்பியங்களாகி, சிற்றிலக்கியங்களாகி, சந்தக் கவிதைகளாகி, புதுக்கவிதைகளாகி இப்போது நவீன கவிதைகளில் வந்து நிற்கிறது.
- "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப்போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்"குறிஞ்சிமலர் என்ற நூலில் நா. பார்த்தசாரதி உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.
- தண்டி முனிவர் உருவகத்தைப் பற்றி "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும் என்று எழுதியிருக்கிறார்.
- உருவகத்திற்கு எ.கா – முகநிலவில் வியர்வைமுத்துகள் துளிர்த்தன
- "களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது. உண்டு மகிழ்ந்தாய்,"உன் புன்னகைதான் அதற்குச் சான்று" - அறிஞர் அண்ணா அவர்களின் உரைநடை!
- உவம உருபு மறைந்து வந்தால் அதற்கு எடுத்துக்காட்டு உவமையணி என்று பெயர்.
- **எடுத்துக்காட்டு உவமையணியை உரைநடையில் பயன்படுத்துகையில் "இணை ஒப்பு" (analogy) என்கிறோம்.**
- புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை" என்று எழுத்தாளர் வ.ராமசாமி "மழையும் புயலும்" நூலில் குறிப்பிட்டுள்ளார்.
- "சோலையில் புகுவேன், மரங்கள் கூப்பிடும் விருந்து வைக்கும் ஆலமர நிழலில் அமர்வேன் . ஆல், என் விழுதைப் பார், அந்த அரசுக்கு இஃது உண்டா?– தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார்.
- **உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்வதுண்டு என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்.இரண்டையும் 'இலக்கணை' என்கிறோம்.**
- **படிப்பவருக்கு முரண்படுவதுபோல இருக்கும்; உண்மையில் முரண்படாத – மெய்ம்மையைச் சொல்லுவது 'முரண்படு மெய்ம்மை' (Paradox).** எடுத்துக்காட்டு
- 'இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்படவேண்டும்?'
- **'கலப்பில்லாத பொய்'.... இதைச் சொல்முரண் (Oxymoron) என்கிறோம். சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவோம்.... இதனை எதிரிணை இசைவு (Antithersis) என்கிறோம்.**
- பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனிமனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம் ஒரு கால கட்டம் - ஒரு திருப்பம் - என்று கூறுகிறேன்" - இது பெரியரைப் பற்றி அறிஞர் அண்ணா பேசியது.

www.Padasalai.Net www.CBSEtips.in



### நூல்வெளி

- ✓ எழில்முதல்வன் எழுதிய "புதிய உரைநடை" என்னும் நூலிலுள்ள உரைநடையின் அணிநலன்கள் என்னும் கட்டுரையின் சுருக்கம்.
- ✓ மா. இராமலிங்கம் (எ) எழில்முதல்வன் மாநிலக் கல்லூரியில் பயின்று அங்கேயே பேராசியரியர் பணியைத் தொடர்ந்தவர்.
- ✓ குடந்தை அரச ஆடவர் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிசெய்தவர்.
- ✓ மரபுக் கவிதை, புதுக்கவிதை படைப்பதிலும் வல்லவர்.
- ✓ இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய் முதலிய நூல்களை இயற்றிய பெருமைக்குரியவர்.
- ✓ "புதிய உரைநடை" என்னும் நூலுக்காக சாகித்திய அகாதெமி பரிசுபெற்றவர்.

### முதல் தமிழ்க்கணினி

- ➢ தமிழ் மறையான திருக்குறளைத் தந்த "திருவள்ளுவர்" பெயரில் முதல் தமிழ்க் கணினி 1983 செப்டம்பரில் டி.சி.எம் டேட்டா புரொடக்ட்ஸ் என்னும் தனியார் நிறுவனம் உருவாக்கி விற்பனைக்குக் கொண்டுவந்தது. இந்தக் கணினி தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளையும் கையாளக்கூடியதாக அமைந்தது.
- ➢ சென்னை தேனாம்பேட்டையில் இருந்த புள்ளி விவரத்துறை அலுவலகத்திற்கும் தலைமைச் செயலகத்துக்கும் கோப்புகளையும் செய்திகளையும் பறிமாறிக் கொண்ட முதல் நேர்வழிக் கணினியும் "திருவள்ளுவரே"!

- ➢ "இந்தியாதான் என்னுடைய மோட்சம், இந்தியாவின் நன்மைதான் என் நன்மை இந்தியாதான் என் இளமையின் மெத்தை; என் யௌவனத்தின் நந்தவனம், என் கிழக்காலத்தின் காசி" – பாரதி

## இயல் - 2

### புயலிலே ஒரு தோணி – ப. சிங்காரம்

- ➢ புயலிலே ஒரு தோணி புதினம், கடற்பயணத்தில் கண்ட காட்சிகளும், அதன் தொடர்ச்சியாக நடைபெறும் செயல்களையும் விவரிக்கிறது.
- ➢ கப்பித்தான் - தலைமை மாலுமி (கேப்டன்)
- ➢ தொங்கான் - கப்பல்
- ➢ பறவை – மீன், அவுலியா - மீன் வகை
- ➢ பிலவான் - இந்தோனேசியாவிலுள்ள இடம்

### புயலுக்குப் பெயர் சூட்டல் ஏன்?

- ✓ வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை 2000ம் ஆண்டில் தொடங்கியது.
- ✓ புதுதில்லியில் உள்ள உலக வானிலைஅமைப்பின் மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம் 2004 செப்டம்பரில் இருந்து புயல்களுக்குப் பெயர் வைக்க 64 பெயர்களைப்பட்டியலிட்டுள்ளது.
- ✓ சார்க் அமைப்பில் இருக்கும்.வங்கதேசம், இந்தியா, வங்கதேசம்,மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் இந்தப் பெயர்களை வழங்கியுள்ளன.
- ✓ இதில் இந்தியா கொடுத்து ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட பெயர்கள் அக்னி, ஆகாஷ்,பிஜ்லி, ஜல் (நான்கு பூதங்கள்), கடைசியாக லெஹர் (அலை) இன்னும் வரவிருப்பவை மேக், சாஹார், வாயு.
- ✓ "கஜா" புயலின் பெயர் இலங்கை தந்தது. அடுத்து வந்த "பெய்ட்டி" புயல் பெயர் தாய்லாந்து தந்தது.

Padasalai.Net



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

இதைப்படியுங்கள் முதலில்...

- ✓ வங்கக் கடலில் வீசும் புயலும் அமெரிக்காவை, ஜப்பானை, சீனாவைத் தாக்கும் புயல்களும் இடம்புரிப் புயல்கள்!
- ✓ ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரை ஹவாய் தீவுகளைத் தாக்கும் புயல்கள் வலம்புரிப் புயல்கள்!
- ✓ பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கணித வல்லுநர் காஸ்பார்ட் குஸ்டாவ் கொரியாலிஸ் இந்த விளைவை 1835 இல் கண்டுபிடித்தார்.
- ✓ புயலின் இந்த இருவகைச் சுழற்சிக்குக் கொரியாலிஸ் விளைவு என்று பெயர்.

**நூல்வெளி**

**புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம்,** புயலிலே ஒரு தோணி. இந்நூலாசிரியர் ப.சிங்காரம் (1920-1997).

- ✓ ப.சிங்காரம் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியைச் சேர்ந்தவர். வேலைக்காக இந்தோனேசியா சென்றார். மீண்டும் இந்தியா வந்து தினத்தந்தி நாளிதழில் பணியாற்றினார். இவர் அன்றைய சூழலில் அவருடைய சேமிப்பான ஏழரை இலட்சம் ரூபாயை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கினார்.

## இயல் -3
## கோபல்லபுரத்து மக்கள்
## கி. ராஜநாராயணன்

- ➢ பசித்த வேளையில் வந்தவர்களுக்குத் தம்மிடம் இருப்பதையே பகிர்ந்து கொடுக்கிற நேயம் கிராமத்து விருந்தோம்பல்.

**கரிசல் இலக்கியம்**

- ➢ கோவில்பட்டியைச் சுற்றிய வட்டாரப் பகுதிகளில் தோன்றிய இலக்கிய வடிவம் கரிசல் இலக்கியம்.
- ➢ கரிசல் மண்ணின் படைப்பாளி கு. அழகரிசாமி கி. ராஜநாராயணனுக்கு முன் எழுதத் தொடங்கியவர். கரிசல் களத்தையும் அங்குள்ள மக்களையும் மையப்படுத்திக் கரிசல் இலக்கியத்தை நிலைநிறுத்தியவர் கி. ராஜநாராயணன்.
- ➢ அந்தக் கரிசல் இலக்கியப் பரம்பரை இன்றளவும் தொடர்கிறது பா. செயப்பிரகாசம். பூமணி, வீரவேலுசாமி, சோ. தர்மன், வேல ராமமூர்த்தி, இன்னும் பலரின் மூலமாக...

**வட்டார வழக்குச் சொற்கள்**

1. மிடறு - கழுத்து
2. பாச்சல் - பாத்தி
3. பதனம் - கவனமாக
4. நீத்துப்பாகம் - மேல்கஞ்சி
5. கடிச்சுக் குடித்தல் - வாய்வைத்துக் குடித்தல்
6. மகுளி - சோற்றுக் கஞ்சி
7. வரத்துக்காரன் - புதியவன்
8. சடைத்துப் புளித்து- சலிப்பு
9. அலுக்கம் - அழுத்தம் (அணுக்கம்)
10. தொலவட்டையில் - தொலைவில்

**நூல்வெளி**

- ➢ கோபல்ல கிராமம் என்னும் புதினத்தைத் தொடர்ந்து எழுதப்பட்ட கதையே கோபல்லபுரத்து மக்கள்.
- ➢ இந்திய விடுதலைப் போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது இந்நூல், இது 1991 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்றது


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

- கோபல்லபுரத்து மக்கள் கதையின் ஆசிரியர் கரிசல் எழுத்தாளர். கி.ராஜநாராயணன்.
- இவரின் கதைகள் அனைத்தும் கி.ராஜநாராணயன் கதைகள் என்னும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.
- இவர் கரிசல் வட்டாரச் சொல்லகராதி ஒன்றை உருவாக்கியுள்ளார்.
- இவர் தொடங்கிய வட்டாரமரபு வாய்மொழிப் புனைகதைகள் **"கரிசல் இலக்கியம்"** என்று அழைக்கப்படுகின்றன. எழுத்துலகில் இவர் கி.ரா என்று குறிப்பிடப்படுகிறார்.

## இயல் - 4
## விண்ணைத்தாண்டிய தன்னம்பிக்கை

- பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் 1988ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இங்குப் பத்துக் காட்சிக் கூடங்கள் உள்ளன.
- கோளரங்கம் தனித்துவம் வாய்ந்தது. இந்தியாவிலேயே முதன்முதலாக 360 பாகை அரைவட்ட வானத்திரை இங்குதான் உள்ளது. இது 2009ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
- ஸ்டீபன் ஹாக்கின்ஸ் படத்திற்கு கீழுள்ள வாசகம் இடம்பெற்றுள்ளது.
- "மாற்றத்திற்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளும் திறனே புத்திக்கூர்மை"
- "அறியாமை அறிவாற்றலின் மிகப்பெரிய எதிரியல்ல.அது அறிவின் மாயையே"
- **தற்காலத்தின் ஐன்ஸ்டைன் என்ற புகழப்படுபவர் ஸ்டீபன் ஹாக்கிங்தான்.**

### ஸ்டீபன் ஹாக்கின்ஸ் வரலாறு

- இங்கிலாந்தின் மருத்துவமனை ஒன்றில் 1963ஆம் ஆண்டு 21 வயது ஸ்டீபன் ஹாக்கிங் அனுமதிக்கப்பட்டார்.
- பக்கவாதம் (Amyotrophic lateral Scleroses) என்னும் நரம்பு நோய்ப் பாதிப்புடன் அவர், மருத்துவ உலகமே மிரண்டுபோகுமளவு மேலும் 53 ஆண்டுகள் இயங்கினார். 1985 இல் மூச்சுக்குழாய்த் தடங்கலால் பேசும் திறனை இழந்தார்.
- கன்னத் தசையசைவு மூலம் தன் கருத்தைக் கணினியல் தட்டச்சு செய்து வெளிப்படுத்தினார்.
- அவரின் ஆய்வுகளுக்குத் துணையாகச் செயற்கை நுண்ணறிவுக் கணினி செயல்பட்டது.

**இதைப்படியுங்கள் முதலில்...**

✓ பேரண்டப் பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றியான ஸ்டீபன் ஹாக்கிங்கின் ஆராய்ச்சிகள் முக்கியமானவை, இப்பேரண்டம் பெருவெடிப்பினால் (Big Bang theory) உருவானதே என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் விளக்கினார்.

✓ இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னணியில்இருந்தார் என்பதை மறுத்தார். பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றலாகக் கடவுள் என்ற ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை என்றார்.

- ஸ்டீபன் ஹாக்கின்ஸ் கருந்துளை ஆராய்ச்சி முடிவு "ஹாக்கிங் கதிர்வீச்சு" என்று அழைக்கப்படுகிறது.
- முன்னர் அண்டவெளியில் காணப்படும் கருந்துளை அழிவு ஆற்றல் என்று கருதப்பட்டது. ஆனால் ஹாக்கிங், கருத்துளை என்பது படைப்பின் ஆற்றல் என்று நிறுவினார்.
- ஐன்ஸ்டைன், நியூட்டன் முதலானோர் ஸ்டீபன் ஹாக்கின்ஸ் முன்னோடிகள். நியூட்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வகித்த கணக்கியல் துறையின்"லூகாசியன் பேராசிரியர்" என்ற மதிப்பு மிகுந்த பதவியை ஸ்டீபன் ஹாக்கிங்கும் வகித்திருக்கிறார்.

**கருந்துளை**

- ✓ "நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிர்கின்றன. அவற்றுள் நம் ஞாயிறும் ஒன்று. கருந்துளைகள் பற்றிய உண்மைகள் . அறிவியல் உலகம் மிக மெதுவாகவே புரிந்துகொள்ள முயல்கிறது என்று கூறுகிறார் ஸ்டீபன் ஹாக்கிங்.
- ✓ அமெரிக்க அறிவியலாளர் ஜான் வீலர் என்பவர்தாம் கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர் சுருங்கிய விண்மீனின் ஈர்ப்பெல்லைக்குள் தப்ப முடியாது.
- ✓ உள்ளே ஈர்க்கப்படும் இவ்வாறு உள்சென்ற யாவையும் வெளிவரமுடியாததால் இதனைக் கருந்துளை எனலாம் என்று ஜான் வீலர் கருதினார்.

**ஸ்டீபன் ஹாக்கிங் பெற்ற விருதுகள்**

- ➢ அமெரிக்காவின் உயரிய விருதான,அதிபர் விருது (Presidential medal of Freedom)
- ➢ ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது
- ➢ உல்ஃப் விருது (Wolf Foundation prize)
- ➢ காப்ளி பதக்கம் (Copley medal)
- ➢ அடிப்படை இயற்பியல்பரிசு (CFundamental physics prize)

**இதைப்படியுங்கள் முதலில்...**

- ✓ **ஹாக்கிங் கலீலியோவின் நினைவு நாளில் பிறந்து, ஐன்ஸ்டைனின் பிறந்த நாளில் இறந்தது அறிவியலைப் பொறுத்தவரை ஒரு தற்செயல் நிகழ்வாக இருக்கலாம்.**
- ✓ இம்மூன்று அறிவியலாளர்களும் அவரவர் காலத்தில் இந்த பேரண்டத்தைப் பற்றி மனித இனம் நம்பியதைப் புரட்டிப் போட்டவர்கள்.

**"தலைவிதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது"**

**- ஸ்டீபன் ஹாக்கின்ஸ்"**

**மகிழ்ச்சியான தருணங்கள்**

- ➢ 2012இல் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் "தொடக்க விழா நாயகர்" என்ற சிறப்பைப் பெற்றார்.
- ➢ அடுத்த தலைமுறை (The next generation), **"பெருவெடிப்புக் கோட்பாடு"** (The Bigbang Theory) உள்ளிட்ட தொலைக்காட்சித் தொடர்களில் பங்கேற்றார்.
- ➢ சூடான காற்று நிரம்பிய பலூனில் வானில் பறந்து தனது 60ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். போயிங் 727 என்ற விமானத்தில் பூஜ்ஜிய ஈர்ப்பு விசைப் பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை உணர்ந்தார்.

**ஸ்டீபன் ஹாக்கின்ஸ் நூல்கள்**

- ➢ **"காலத்தின் சுருக்கமான வரலாறு"** என்ற நூல் நாற்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது
- ➢ 1988ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் பெருவெடிப்பு, கருந்துகளை ஆகியவை பற்றிய அரிய உண்மைகளைப் பொதுமக்களிடையே பரப்பி, ஒரு கோடிப் படிகளுக்கு மேல் விற்பனையானது.
- ➢ "அறிவை விட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது. கற்பனைத்திறனோ இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தையும் அளப்பது.இன்று நாம்

அறிந்திருப்பதை மட்டுமன்று: இனி நாம் அறிந்து கொள்ளப் போவதையும் உள்ளடக்கியது”

- ஐன்ஸ்டைன்

➢ “வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவேசெய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியால் நான் வெல்வேன். அதன்மூலம் மனித இனம் தொடர வழிவகுப்பேன்”

- ஸ்டீபன் ஹாக்கிங்

## இயல் -5
## புதிய நம்பிக்கை – கமலாலயன்

**நூல்வெளி**

➢ உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களின் ஒரு குரலாக இருந்தவர் அமெரிக்க கறுப்பினப்பெண்மணி மேரி மெக்லியோட் பெத்யூன் (மேரி ஜேன்)

➢ இம் மாபெரும் கல்வியாளரின் வாழ்க்கையை **“உனக்குப் படிக்கத் தெரியாது”** என்ற தலைப்பில் நூலாகப் படைத்துள்ளார் கமலாலயன்.

➢ இவரின் இயற்பெயர் வே. குணசேகரன், வயதுவந்தோர் கல்வித்திட்டத்தில் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.

➢ “கல்வி வாய்ப்பற்ற சூழலில் ஒற்றைச் சுடராக வந்து ஒளியேற்றினார் மேரி மெக்லியோட் பெத்யூன். மேரிக்கு உதவியர் மிஸ்வில்ஸன்.

➢ மேரி ‘மேயெஸ்வில்லி’ எனும் ஊரில் பள்ளிக்கு கல்வி கற்கச் சென்றார்.

## இயல் -6
## பாய்ச்சல் - சா. கந்தசாமி

**நூல்வெளி**

➢ “தக்கையின் மீது நான்கு கண்கள்” சிறுகதை தொகுப்பில் பாய்ச்சல் என்னும் கதை இடம்பெற்றுள்ளது. ஆசிரியர் சா. கந்தசாமி, இவர் மயிலாடுதுறை நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

➢ சாயாவனம் புதினத்தால் எழுத்துலகில் புகழ்பெற்றார். விசாரணைக் கமிஷன் என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருதைப்பெற்றுள்ளார்.

➢ சுடுமண் சிலைகள் என்ற குறும்படத்திற்கு அனைத்துலக விருதையும் பெற்றுள்ளார். நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பதினொன்றுக்கும் மேற்பட்ட புதினங்களையும் எழுதியுள்ளார்.

➢ தொலைந்து போனவர்கள், சூர்யவம்சம், சாந்தகுமாரி முதலியவை இவர் எழுதிய புதினங்கள்.

## இயல் - 7
## மங்கையராய்ப் பிறப்பதற்கே....

**எம்.எஸ். சுப்புலட்சுமி**

➢ உலக அரங்கான ஐ.நா. அவையில் தமிழ் நாட்டின் செவ்வியல் இசையைப் பாடியவர் இசைப்பேரரசி என்று நேருவால் அழைக்கப்பட்ட எம்.எஸ். சுப்புலட்சுமி

➢ மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமிக்கு வீணைக் கலைஞரான தாயே முதல்குரு.

➢ ஐந்தாம் வகுப்புவரைதான் கல்வி, பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகாதெமியின் கச்சேரி. மீரா திரைப்படம் மிகப்பெரிய வெற்றி, அது அவரின் கடைசித் திரைப்படமாகவும் அமைந்தது.

- காற்றினிலே வரும் கீதம், பிருந்தாவனத்தில் கண்ணன் முதலிய பாடல்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு கிடைத்தது. ஜவகர்லால் நேரு, சரோஜினி நாயுடு போன்றோர் பாராட்டினார்.
- காந்தியடிகளைத் தில்லியில் சந்தித்தபோது "இரகுபதி இராகவ இராஜாராம்" என்ற பாடலைப் பாடினார்.
- சென்னை வானொலியில் 1947 இல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று "ஹரி தும் ஹரோ" என்னும் மீரா பஜன் பாடலை காந்தியடிகளின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் பாடினார்.
- 1954இல் தாமரையணி விருது பெற்றபோது என்னைத் தொட்டுத்தடவிப் பாராட்டிய பார்வையிழந்த ஹெலன் கெல்லரை மறக்க முடியாது என்று கூறினார். 1963 இல் இங்கிலாந்திலும் 1966இல் ஐ.நா அவையிலும் பாடினார்.
- அவரது குரலில் வெங்கடேச சுப்ரபாதம் திருப்பதியில் ஒலிக்கத்தொடங்கியது.
- 1974இல் நோபல் பரிசுக்கு இணையான மகசேசே விருது பெற்றார், இவ்விருது பெறும் முதல் இசைக் கலைஞர் இவர் தான்.
- தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம்,இந்தி, மராத்தி, குஜராத்தி ஆகிய மொழிகளிலும், ஆங்கில மொழியிலும் பாடியுள்ளார்.
- இந்திய அரசு, மிக உயரிய விருதான "இந்திய மாமணி"விருதளித்து சிறப்பித்தது.
- **"குறையொன்று மில்லை மறைமூர்த்தி கண்ணாகுறையொன்று மில்லை கோவிந்தா.."**

  - எம்.எஸ். சுப்புலட்சுமி

## பாலசரஸ்வதி

- ஏழு வயதாக இருக்கும் போது காஞ்சிபுரத்தில் பரதநாட்டிய அரங்கேற்றம். பதினைந்து வயதில் சென்னையில் உள்ள சங்கீத சமாஜம் என்னும் அரங்கில் நடன நிகழ்ச்சி நடந்தது.
- இவரது நடனத்தைப் பார்த்த பிறகே மரபுசார் நாட்டியத்தைப் பலரும் தீவிரமாக வரவேற்கத் தொடங்கினர்.
- சென்னையில் நாட்டியக் கச்சேரியைப் பார்த்த பண்டிட் இரவிசங்கர் அவர்கள் மிகவும் பாராட்டினார். கல்கத்தாவிலும் காசியில் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டிலும் சென்னையில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கண்காட்சியிலும் நம் நாட்டுப் பண்ணாகிய "ஜன கண மன" பாடலுக்கு மெய்ப்பாடுகளோடு ஆடினார்.
- நாட்டுப் பண்ணுக்கு நடனமாடியது அதுவே முதலும் இறுதியுமாகும். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய வெளிநாடுகளிலும் நடன நிகழ்ச்சிகளில் ஆடினார்
- டோக்கியோவில் நடைபெற்ற "கிழக்கு மேற்குச் சந்திப்பு" நிகழ்வில் இந்தியாவின் சார்பாகக் கலந்து கொண்டு சிறப்பாக நடனம் ஆடினார்.
- தமிழகத்தில் ஒரு காலத்தில் புறக்கணிக்கப்பட்ட கலைக்கு இந்திய அரங்கிலும் உலக அரங்கிலும் மதிப்பையும், ஏற்பையும் பெற்றுத் தந்தவர், தமிழகத்தின் பெருமைக்குரிய கலைகளில் ஒன்றாகச் செவ்வியல் நடனம் திகழக் காரணமானவர் பரதநாட்டியக் கலைஞர் பாலசரசுவதி.

## ராஜம் கிருஷ்ணன் (வளர்மதி)

- **'வேருக்கு நீர்'** என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர்.
- இந்திய அரசின் தாமரைச் செவ்வணி விருது பெற்றார்.

Padasalai.Net

- பெண்கள் என்றால் குடும்பக்கதை எழுதவேண்டும் என்ற படிமத்தை உடைத்துச் சமூகச் சிக்கல்களைக் கதைகளாக எழுதியவர்.
- "பாஞ்சலி சபதம் பாடிய பாரதி" எனும் பாரதியின் வரலாற்றுப் புதினம் அனைவராலும் பாராட்டப்பெற்ற ஒன்றாகும்.
- தூத்துக்குடியில் பல மாதம் தங்கியிருந்து உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையைக் **"கரிப்பு மணிகள்"** புதினமாக எழுதினார்.
- நீலகிரி, படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்களைக் குறித்து பதிவு செய்தது **"குறிஞ்சித் தேன்"** புதினம், கடலோர மீனவர்கள் வாழ்வின் சிக்கல்களை பேசுவது **'அலைவாய்க் கரையில்'** எனும் புதினம், அமைப்புசாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதைச் சுட்டிக்காட்டியவையே "சேற்றில் மனிதர்கள்", வேருக்கு நீர்" ஆகிய புதினங்கள்.
- குழந்தைகளின் உடலையும் மனத்தையும் நொறுக்கும் அவல உலகைக் **"கூட்டுக் குஞ்சுகள்"** புதினமாக அளித்தவர்.
- பெண் குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதியதே **"மண்ணகத்துப் பூந்துளிகள்"**

## கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் (அன்பரசி)

- மதுரையின் முதல் பட்டதாரிப்பெண்;இந்திய அரசின் தாமரைத்திரு விருது, சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது, சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது பெற்றார்.
- கல்லூரிப்பருவத்தில் காந்தியச்சிந்தனையால் கவரப்பட்டார்..
- ஒத்துழையாமை இயக்கம், சட்டமறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்றார்.
- நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து "பூதான" இயக்கத்தில் பணிபுரிந்தார்.
- **"உழுபவருக்கே நில உரிமை இயக்கம்"** (LAND FOR THE TILLER`S FREEDOM–LAFTI) தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தார்.
- **"உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள் உங்களால் எதையும் சாதிக்க இயலும்"**
  **- கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்**

## மாதவி (சின்னப்பிள்ளை)

- இவர் பள்ளிக்கூடம் கூட செல்லாதவர். "களஞ்சியம்" என்ற குழுவை விவசாயத்திற்காக ஆரம்பித்து முப்பது ஆண்டுகள் நடத்தினார்.
- மாண்புமிகு. வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்) பெற்றதோடு தமிழக அரசின் "ஔவை விருதையும்" துார்தர்ஷனின் "பொதிகை விருதையும்" பெற்றுள்ளார்.
- அண்மையில் "தாமரைத்திரு", விருதையும் பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

# இயல் 8

## இராமானுசர்- நாடகம்

- நாளுக்கு ஒருமுறை மலர்வது சண்பகம்.
- ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது பிரம்ம கமலம்.
- பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி
- தலைமுறைக்கு ஒரு முறை மலர்வது மூங்கில்.
- அதைப்போல் நம் தலைமுறைக்கு ஒரு முறை பிறப்பவர்கள் ஞானிகள்.
- இடம் - திருக்கோட்டியூர் பூரணர் இல்லம்

- பாத்திரங்கள் - இராமானுசர் - கூரேசர் முதலியாண்டான் - பூரணர்
- பரம ஆசிரியர் ஆளவந்தான்
- பூரணர், மூவருக்கு திருமந்திரம் அருளினார்.
- அந்த மந்திரம் **"திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்."**
- இராமானுசர் திருமந்திரத்தை திருக்கோட்டியூர் கோவிலின் கோபுரத்தில் நின்று மக்கள் அனைவரும் கேட்கும் வண்ணம் உரக்கக் கூறினார்.
- பூரணர் மகன் சௌம்ய நாராயணனை இரமானுசரிடம் அளித்தார்.

## இயல் -9
## ஒருவன் இருக்கிறான் - கு. அழகிரிசாமி

**நூல்வெளி**

- ஒருவன் இருக்கிறான் கதை "கு. அழகிரிசாமி சிறுகதைகள்" என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- அரசுப்பணியை உதறிவிட்டு முழுதாக எழுத்துப்பணியை மேற்கொண்டவர்.
- கு. அழகிரிசாமி மென்மையான நகைச்சுவையும் சோக இழையும் ததும்பக் கதைகளைப் படைப்பதில் பெயர் பெற்றவர்.
- கரிசல் எழுத்தாளர்கள் வரிசையில் மூத்தவர்.
- கி.ராவுக்கு இவர் எழுதிய கடிதங்கள் இலக்கியத்தரம் வாய்ந்தவை.
- மலேசியாவில் இருந்தபோது அங்குள்ள படைப்பாளர்களுக்குப் படைப்பு தொடர்பான பயிற்சி அளித்தவர்.
- இவர் பதிப்புப் பணி, நாடகம், எனப் பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர்.
- தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டு திறனாய்வு நூல்களையும் படைத்தவர்.

## இயல் - 1
## இனிக்கும் இலக்கணம்

**எழுத்து சொல்**

- ❖ மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணம்.
- ❖ மொழியின் சிறப்புகளை அறியவும் இலக்கணம் துணை செய்யும்

**எழுத்து**

- ❖ உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை. ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துகள் ஆகும்.
- ❖ அளபெடுத்தல் - நீண்டு ஒலித்தல்
- ❖ பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசுவோம். அவ்வாறு பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது. எ.கா:- அம்மாஅ, தம்பீஇ

**1. உயிரளபெடை**

- ❖ செய்யுளில் ஓசை குறையும் போது, அதனை நிறைவுசெய்ய மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும். அதைக் குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும்.
- ❖ இவ்வாறு வருவது உயிரளபெடை எனப்படும்.

**உயிரளபெடை மூன்று வகைப்படும்**

**அ) செய்யுளிசை அளபெடை**

- ❖ செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள்

அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்போம்.

- இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.
- ஓஒதல் வேண்டும் - மொழி முதல்
- உறாஅர்க்கு உறுநோய் - மொழியிடை
- நல்ல படாஅ பறை - மொழியிறுதி

## ஆ) இன்னிசை அளபெடை

- செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

**"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை."**

## இ) சொல்லிசை அளபெடை

- செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

**"உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் வரனசைஇ இன்னும் உளேன்"**

- நசை- விருப்பம், விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது.
- பெயர்ச்சொல் வினை அடையாக மாறியது.

## 2. ஒற்றளபெடை

- செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந்,ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும் ∴ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும். (மொத்தம் 11 எழுத்துக்கள்).

**எ∴∴கிலங்கிய கையராய் இன்னுயிர் வெ∴∴குவார்க்கில்லை வீடு.**

## சொல்

- "பூ மலர்ந்தது", "மாடு புல் தின்றது"

- ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். அது,

அ) இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.

ஆ) மூவகை இடங்களிலும் வரும்.

இ) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.

ஈ) வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்.

## மூவகை மொழி

- தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழி மூன்று வகையாக அமையும்.

> ஒரு மொழி ஒருபொரு ளவாம் தொடர்மொழி
> பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன
> - நன்னூல்(260)

## தனிமொழி

- ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது தனிமொழி எனப்படும்
- எ.கா:- கண்,படி – பகாப்பதம்
  கண்ணன், படித்தான் - பகுபதம்

## தொடர்மொழி

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.
- எ.கா கண்ணன் வந்தான்.
  மலர் வீட்டுக்குச் சென்றாள்.

## பொதுமொழி

- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**எ.கா:-** எட்டு - எட்டு என்ற எண்ணைக் குறிக்கும். வேங்கை - வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும். இவையே எள்+ து எனவும் வேம் + கை எனவும் தொடர்மொழிகளாகப் பிரிந்து நின்று எள்ளை உண், வேகின்ற கை எனவும் பொருள் தரும்.

❖ இவை இருபொருள்களுக்கும் பொதுவாய் அமைவதால் பொது மொழியாகவும் இருக்கிறது.

## தொழிற்பெயர்

❖ ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.

**எ.கா:-** ஈதல், நடத்தல்

### விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்

❖ வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.

| வினையடி | விகுதி | தொழிற்பெயர் |
|---|---|---|
| நட | தல் | நடத்தல் |
| வாழ் | கை | வாழ்க்கை |
| ஆள் | அல் | ஆளல் |

❖ ஒரே வினையடி பல விகுதிகளையும் ஏற்கும்.

எ.கா:- நட என்பது வினையடி
நடை, நடத்தை, நடத்தல்

## எதிர்மறைத் தொழிற்பெயர்

❖ எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் ஆகும்.

எ.கா:- நடவாமை, கொல்லாமை

## முதனிலைத் தொழிற்பெயர்

❖ விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற் பெயராகும்.

எ.கா:- தட்டு, உரை, அடி

❖ இச்சொற்கள் முறையே தட்டுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும்போது, முதனிலைத் தொழிற் பெயர்களாகின்றன.

## முதனிலை திரிந்த தொழிற்பெயர்

❖ இவை விகுதி பெறாமல் முதனிலை திரிந்த வரும் தொழிற்பெயர்களாகும்.

**எ.கா**

| தொழிற் பெயர் | முதனிலைத் தொழிற்பெயர் | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
|---|---|---|
| கெடுதல் | கெடு | கேடு |
| சுடுதல் | சுடு | சூடு |

## வினையாலணையும் பெயர்

❖ ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும்

❖ அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

❖ எ.கா:- வந்தவர் அவர்தான்.
பொறுத்தார் பூமியாள்வார்.

## தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடு

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினை, பெயர்த்தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும் | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும் |
| காலம் காட்டாது | காலம் காட்டும் |
| படர்க்கைக்கே உரியது | மூவிடத்திற்கும் உரியது |
| எ.கா – பாடுதல், படித்தல் | எ.கா-பாடியவள், படித்தவர் |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## இயல் - 2
## தொகைநிலைத் தொடர்கள்

### சொற்றொடர்

❖ சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது "சொற்றொடர்" அல்லது "தொடர்" எனப்படும்.

❖ **எ.கா** நீர் பருகினான், வெண்சங்கு ஊதினான்.

### தொகை நிலைத்தொடர்

❖ பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில், வேற்றுமை உருபுகளோ, வினை பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி (மறைந்து) நிற்குமானால் அதனைத் தொகைநிலைத் தொடர் என்று கூறுவர்.

**எ.கா** கரும்பு தின்றான்

❖ கரும்பைத்தின்றான் என்னும் பொருளை உணர்த்துகிறது.

❖ இத்தொடரில் உள்ள இரண்டு சொற்களுக்கும் நடுவில் 'ஐ' என்னும் உருபு மறைந்து நின்று, அப்பொருளைத் தருகிறது.

❖ தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும்.

❖ அவை வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பன ஆகும்.

### வேற்றுமைத் தொகை

**எ.கா** மதுரை சென்றார்

❖ இத்தொடர் மதுரைக்குச் சென்றார் என விரிந்து நின்று பொருள் தருகிறது. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களுக்கு இடையில்"கு" என்னும். வேற்றுமை உருபு இல்லை. அது தொக்கி நின்று பொருளை உணர்த்துகிறது.

❖ இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது,, கண்) ஆகியவற்றுள் ஒன்று மறைந்து வந்து பொருள் உணர்த்துவது வேற்றுமைத்தொகை எனப்படும்.

### உருபும் பயனும் உடன்தொக்கதொகை

**எ.கா** தேர்ப்பாகன்

❖ இத்தொடர் "தேரை ஓட்டும் பாகன்" என விரிந்து பொருளை உணர்த்துகிறது.

❖ கொடுக்கப்பட்டுள்ள தேர், பாகன் என்னும் சொற்களுக்கடையில் "ஐ" என்னும் வேற்றுமை உருபும் "ஓட்டும்" என்னும் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வந்துள்ளன.

❖ இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்க தொகை எனப்படும். இதுவும் வேற்றுமைத் தொகையே ஆகும்.

### வினைத்தொகை

❖ காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப் பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடப்பது "வினைத்தொகை" எனப்படும்.

❖ காலம் கரந்த பெயரெச்சமே வினைத்தொகையாகும்

**எ.கா** வீசுதென்றல், கொல்களிறு

❖ இவை வீசிய காற்று, வீசுகின்ற காற்று, வீசும் காற்று எனவும் கொன்ற களிறு, கொல்கின்ற களிறு, கொல்லும் களிறு எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி விரிந்து பொருள் தருகின்றன.

❖ வினைப்பகுதியும் அடுத்துப் பெயர்ச்சொல்லும் அமைந்த சொற்றொடர்களிலேயே வினைத்தொகை அமையும்.

### பண்புத்தொகை

❖ நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும் அது தழுவிநிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் "மை" என்னும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

❖ செங்காந்தள்- செம்மையாகிய காந்தள்,

❖ வட்டத்தொட்டி – வட்டமான தொட்டி

❖ இன்மொழி - இனிமையான மொழி

### இரு பெயரெட்டுப் பண்புத்தொகை

❖ சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

**எ.கா** - மார்கழித் திங்கள், சாரைப்பாம்பு.

❖ திங்கள், பாம்பு ஆகிய பொதுப்பெயர்களுக்கு முன் மார்கழி, சாரை எனும் சிறப்புப் பெயர்கள் வந்து மார்கழி ஆகிய திங்கள் என்றும் சாரை ஆகிய பாம்பு என்றும் இருபெயரொட்டாக வந்துள்ளன.

### உவமைத்தொகை

❖ உவமைக்கும் பொருளுக்கும் (உவமேயம்) இடையில் உவமஉருபு மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.

**எ.கா** மலர்க்கை (மலர் போன்ற கை)

### உம்மைத்தொகை

❖ இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் "உம்" என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகையாகும்.

❖ உம்மைத்தொகை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்.

**எ.கா** அண்ணன் தம்பி, தாய்சேய்

❖ அண்ணனும் தம்பியும், தாயும் சேயும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன.

### அன்மொழித்தொகை

❖ வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத்தொடர்கள் அவை அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்றுபொருள் தருவது அன்மொழித்தொகை

**எ.கா:-** சிவப்புச் சட்டை பேசினார்.

முறுக்கு மீசை வந்தார்.

❖ இவற்றில் சிவப்புச் சட்டை அணிந்தவர் பேசினார், முறுக்கு மீசையை உடையவர் வந்தார் எனத் தொகைநிலைத் தொடர் அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருகின்றன.

## இயல் - 3
## தொகாநிலைத் தொடர்கள்

### தொகாநிலைத் தொடர்

❖ ஒரு தொடர் மொழியில் இருசொற்கள் இருந்து அவற்றின் இடையில் சொல்லோ உருபோ இல்லாமல் அப்படியே, பொருளை உணர்த்துவது தொகாநிலைதொடர் எனப்படும்.

### தொகாநிலைத் தொடரின் ஒன்பது வகைகள்

#### 1. எழுவாய்த்தொடர்

❖ எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது எழுவாய்தொடர் ஆகும்.

❖ இனியன் கவிஞர் - பெயர்

❖ காவிரி பாய்ந்தது – வினை

❖ பேருந்து வருமா? – வினா

## 2. விளித்தொடர்

- ❖ விளியுடன் வினை தொடர்வது விளித்தொடர் எனப்படும்.
- ❖ நண்பா எழுது! "நண்பா" என்னும் விளிப்பெயர் "எழுது" என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்துள்ளது

## 3. வினைமுற்றுத்தொடர்

- ❖ வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினைமுற்றத்தொடர் ஆகும்- பாடினாள் கண்ணகி

## 4. பெயரெச்சத்தொடர்

- ❖ முற்றுப் பெறாத வினை, பெயர்ச்சொல்லைத் தொடர்வது பெயரெச்சத்தொடர் எனப்படும்.
- ❖ கேட்டபாடல் - "கேட்ட" என்னும் எச்சவினை "பாடல்" என்னும் பெயரைக்கொண்டு முடிந்துள்ளது.

## 5. வினையெச்சத்தொடர்

- ❖ முற்றுப் பெறாத வினை வினைச்சொல்லைத் தொடர்வது வினையெச்சத் தொடர் ஆகும்.
- ❖ பாடி மகிழ்ந்தனர்- "பாடி" என்னும் எச்சவினை மகிழ்ந்தனர் என்னும் வினையைக் கொண்டு முடிந்துள்ளது.

## 6. வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

- ❖ வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்கள் ஆகும்.
- ❖ கட்டுரையைப் படித்தாள்.
- ❖ இத்தொடரில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது.

## 7. இடைச்சொல் தொடர்

- ❖ இடைச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது இடைச்சொல் தொடர் ஆகும்.
- ❖ மற்றொன்று – மற்று +ஒன்று "மற்று" என்னும் இடைச்சொல்லை அடுத்து "ஒன்று" என்னும் சொல் நின்று பொருள் தருகிறது.

## 8. உரிச்சொல் தொடர்

- ❖ உரிச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது உரிச்சொல் தொடர் ஆகும்.
- ❖ சாலச்சிறந்தது. "சால" என்பது உரிச்சொல் அதனைத் தொடர்ந்து "சிறந்தது" என்ற சொல் நின்று மிகச் சிறந்தது என்ற பொருளைத் தருகிறது.

### கூட்டுநிலைப் பெயரெச்சங்கள்

- ❖ ஒன்றிற்கு மேற்பட்ட வினையெச்சங்கள் சேர்ந்து பெயரைக்கொண்டு முடியும் கூட்டுநிலைப் பெயரெச்சங்களை இக்காலத்தில் பெருமளவில் பயன்படுத்துகிறோம்.
- ❖ வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை, செய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் உருவாகின்றன.
- ❖ எ.கா கேட்க வேண்டிய பாடல், சொல்லத்தக்க செய்தி.

## 9. அடுக்குத்தொடர்

- ❖ ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது அடுக்குத் தொடர் ஆகும்.
- ❖ வருக!வருக! வருக! –ஒரே சொல் உவகையின் காரணமாக மீண்டும் மீண்டும் அடுக்கி வந்துள்ளது.

Padasalai.Net

## இயல் - 4
## இலக்கணம் - பொது

### இருதிணை

- ❖ ஆறறிவுடைய மக்களை உயர்திணை என்றும் மற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் அ∴றிணை (அல்திணை) என்றும் வழங்குவர்.

### ஐம்பால்

- ❖ பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும் (பால்- பகுப்பு- பிரிவு) இ∴து ஐந்து வகைப்படும்.
- ❖ உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பிரிவுகளை உடையது. அ∴றிணை ஒன்றன்பால்,பலவின்பால் என இரு பிரிவுகளை உடையது.

### உயர்திணைக்குரிய பால் பகுப்புகள்

- ❖ வீரன், அண்ணன், மருதன் - ஆண்பால்
- ❖ மகள், அரசி, தலைவி – பெண்பால்
- ❖ மக்கள், பெண்கள் , ஆடவர் - பலர்பால்

### அ∴றிணைக்குரிய பால் பகுப்புகள்

- ❖ அ∴றிணையில் ஒன்றனைக் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்.

  **எ.கா:-** யானை, புறா, மலை
- ❖ அ∴றிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின் பால் ஆகும்.

  எ.கா பசுக்கள், மலைகள்

### மூவிடம்

- ❖ தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

| இடம் | பெயர், வினை | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| **தன்மை** | தன்மைப் பெயர்கள் | நான், யான், நாம், யாம் |
| | தன்மை வினைகள் | வந்தேன், வந்தோம் |
| **முன்னிலை** | முன்னிலைப் பெயர்கள் | நீ, நீர், நீவிர், நீங்கள் |
| | முன்னிலை வினைகள் | நடந்தாய் , வந்தீர், சென்றீர்கள்…. |
| **படர்க்கை** | படர்க்கைப் பெயர்கள் | அவன், அவள், அவர். அது, அவை... |
| | படர்க்கை வினைகள் | வந்தான், சென்றாள், படித்தனர், பேசினார்கள் பறந்தது, பறந்தன.. |

### வழு– வழாநிலை – வழுவமைதி

- ❖ இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.
- ❖ இலக்கணமுறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்
- ❖ வழுவானது திணை, பால், இடம், காலம், வினா, விடை, மரபு என ஏழு வகைப்படும்.

### வழுவமைதி

- ❖ இலக்கணமுறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

### 1. திணை வழுவமைதி

- ❖ "என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது திணைவழுவமைதி ஆகும்.
- ❖ இங்கு உவப்பின் காரணமாக அ∴றிணை உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.

Padasalai.Net

## 2. பால் வழுவமைதி

- "வாடா இராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பாத்த்துத் தாய் அழைப்பது பால் வழுவமைதி ஆகும்.
- இங்கு உவப்பின் காரணமா பெண்பால் ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது

## 3. இடவழுவதி

- மாறன் என்பான் தன்னைப் பற்றிப் பிறரிடம் கூறும்போது,"இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்" என, தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவது இடவழுவமைதி ஆகும்.

## 4. கால வழுவமைதி

- குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்
- இத்தொடர் குடியரசுத் தவைர் நாளை வருவார் என அமைத்தல் வேண்டும்.

## 5. மரபு வழுவமைதி

- "கத்துங் குயிலோசை –சற்றே வந்து காதிற் படவேணும் - பாரதியார்"
- குயில் கூவும் என்பதே மரபு. குயில் கத்தும் என்பது மரபு வழு ஆகும்.
- இங்குக் கவிதையில் இடம்பெற்றிருப்பதால் இது மரபு வழுமைதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

## இயல் - 5
## வினா விடைவகை, பொருள்கோள்

### வினாவகை

- அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என்று வினா ஆறு வகைப்படும்

| | | |
|---|---|---|
| **அறிவினா** | தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது | மாணவரிடம், "இந்தக் கவிதையின் பொருள்யாது?" என்று ஆசிரியர் கேட்டல். |
| **அறியா வினா** | தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக்க வினவுவது | ஆசிரியரிடம் "இந்தக் கவிதையின் பொருள் யாது?" என்று மாணவர் கேட்டல் |
| **ஐய வினா** | ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது | 'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' என வினவுதல் |
| **கொளல்வ ினா** | தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது | 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல். |
| **கொடை வினா** | பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது | என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன.உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா? என்று கொடுப்பதற்காக வினவுதல் |
| **ஏவல் வினா** | ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது | வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல் |

**வினா**

அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார் - நன்னூல்,385

**விடை**

"சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற(து) உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும் எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும் அப் பொருண்மையின் நேர்பு"
- நன்னூல்,386

## விடை வகை

❖ சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை, ஏவல்விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல்விடை, உறுவது கூறல் விடை, இனமொழிவிடை என்று விடை எட்டு வகைப்படும்.

❖ முதல் மூன்று வகையும் நேரடி விடைகளாக இருப்பதால் வெளிப்படை விடைகள் எனவும் அடுத்த ஐந்து விடைகளும் குறிப்பாக இருப்பதால் குறிப்பு விடைகள் எனவும் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| **சுட்டு விடை** | சுட்டிக் கூறும் விடை | 'கடைத்தெரு எங்குள்ளது?' என்ற வினாவிற்கு 'வலப்பக்கத்தில் உள்ளது' எனக் கூறல். |
| **மறைவிடை** | மறுத்துக் கூறும் விடை. | 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறல் |
| **நேர் விடை** | உடன்பட்டுக் கூறும் விடை | 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப்போவேன் என்று உடன்பட்டுக் கூறல் |
| **ஏவல் விடை** | மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை | "இது செய்வாயா?" என்று வினவியபோது "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது |
| **வினா எதிர் வினாதல் விடை** | வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது | "என்னுடன் ஊருக்கு வருவாயா?" என்ற வினாவிற்கு "வராமல் இருப்பேனா?" என்று கூறுவது. |
| **உற்றது உரைத்தல் விடை** | வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறல் | 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் கால் வலிக்கிறது என்று உற்றதை உரைப்பது |
| **உறுவது கூறல் விடை** | வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறல் | நீ விளையாடவில்லையா? என்ற வினாவிற்குக் கால்வலிக்கும் என்று உறுவதை உரைப்பது |
| **இனமொழி விடை** | வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல் | "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத்தெரியும்" என்று கூறுவது. |

## பொருள்கோள்

❖ செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் பொருள்கோள் என்று பெயர் பொருள்கோள் எட்டு வகைப்படும்

1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்
2. மொழிமாற்றுப் பொருள்கோள்
3. நிரல்நிறைப்பொருள்கோள்
4. விற்பூட்டுப் பொருள்கோள்
5. தாப்பிசைப் பொருள்கோள்
6. அளைமறிபாப்புப் பொருள்கோள்
7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்
8. அடிமறிமாற்றுப் பொருள்கோள்

## ஆற்றுநீர்ப் பொருள்கோள்

**சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்**
**மெல்லவே கரு இருந்து ஈன்று மேலலார்**
**செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்**
**கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே**

**– சீவகசிந்தாமணி**

❖ "நெல்" என்னும் எழுவாய் அதன் தொழில்களான இருந்து ஈன்று நிறுவி இறைஞ்சி என்னும் வினையெச்சங்களைப் பெற்றுக் காய்த்தவே என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

❖ பாடலின் தொடக்கம் முதல் முடிவுரை ஆற்றுநீரின் போக்கைப்போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்ததால் இது 'ஆற்றுநீர்ப் பொருள்கோள்" ஆகும்.

**'மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்**
**அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே'**

**- நன்னூல் 412**

## நிரல் நிறைப் பொருள்கோள்

- ❖ ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல்நிறையாக (வரிசையாக) அமைந்து வருவது நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும்.
- ❖ இது முறை நிரல் நிறைப் பொருள்கோள், எதிர்நிரல்நிறைப் பொருள்கோள் என இரு வகைப்படும்.

### அ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்

- ❖ செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச்சொற்களை வரிசையாக நிறுத்தி அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் "முறை நிரல் நிறைப் பொருள்கோள்" ஆகும்.
- ❖ **"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"– குறள் 45**
- ❖ அன்புக்குப் பண்பும் அறத்துக்குப் பயனும் பயனிலைகளாக – நிரல்நிறையாக- நிறுத்திப் பொருள்கொள்வதால், இப்பாடல் முறை நிரல்நிறைப் ொருள்கோள் எனப்படும்.

### ஆ) எதிர்நிரல் நிறைப் பொருள்கோள்

- ❖ செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும்.

  **"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர்"**
- ❖ இக்குறளில் முதல் அடியில் விலங்கு ,மக்கள் என்று எழுவாய்களை வரிசைப்படுத்திவிட்டு, அடுத்த அடியில் பயனிலைகளாக் கற்றார், கல்லாதார் (ஏனையவர்) என வரிசைப்படுத்தியுள்ளார்.
- ❖ அவற்றைக் கற்றார் மக்கள் என்றும், கல்லாத ஏனையவர் விலங்குகள் என்றும் எதிர் எதிராகக் கொண்டு பொருள்கொள்ள வேண்டும்.
- ❖ எனவே இக்குறள் "எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

### 3. கொண்டு கூட்டுப் பொருள்கோள்

- ❖ ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோளாகும்.
- ❖ எ.கா **ஆலத்து மேல குவளை குளத்துள**

  **வாலின் நெடிய குரங்கு - மயிலைநாதர் உரை**
- ❖ பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொருத்தமற்றதாகிவிடும்.
- ❖ இதில் ஆலத்து மேல குரங்கு குளத்துள குவளை - என்று கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது "கொண்டு கூட்டுப் பொருள்கோள்'' எனப்படும்.

**யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை**
**ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே"**

**– நன்னூல் 417**

## இயல் -6
## அகப்பொருள் இலக்கணம்

- ❖ பொருள் என்பது ஒழுக்கமுறை. நம் தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வியலை அகம், புறம் என வகுத்தார்கள். இதனைப் பொருள் இலக்கணம் விளக்குகிறது.
- ❖ அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவுநிலைகளைக் கூறுவது அகத்திணை.
- ❖ குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவே அன்பின் ஐந்திணைகளாகும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593
Padasalai.Net

- முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன ஐந்திணைகளுக்கு உரியன.
- நிலமும், பொழுதும் முதற்பொருள் எனப்படும்.
- பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்.
- ஓராண்டின் ஆறு கூறுகளைப் பெரும்பொழுது என்று நம் முன்னோர் பிரித்துள்ளனர்.

| ஐவகை நிலங்கள் | |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலைசார்நத இடமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | வயலும் வயல் சார்நத இடமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்நத இடமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த இடமும் |

**பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)**

1. கார்காலம் - ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை
3. முன்பனிக்காலம் - மார்கழி, தை
4.. பின்பனிக்காலம் - மாசி, பங்குனி
5. இளவேனிற்காலம் - சித்திரை, வைகாசி
6. முதுவேனிற்காலம் - ஆனி, ஆடி

**சிறுபொழுது (ஒரு நாளின் ஆறு கூறுகள்)**

- ஒரு நாளின் ஆறு கூறுகளைச் சிறுபொழுது என்று பிரித்துள்ளனர்.

1. காலை - காலை 6 மணி முதல் 10 மணிவரை
2. நண்பகல்- காலை 10 மணி முதல் 2 மணிவரை
3. எற்பாடு - பிற்பகல் 2 மணி முதல் 6 மணிவரை
4. மாலை - மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
5. யாமம் - இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை
6. வைகறை - இரவு 2மணி முதல் காலை 6மணி வரை

("எல்" என்றால் ஞாயிறு,"பாடு" என்றால் மறையும் நேரம். எல்+பாடு - எற்பாடு சூரியன் மறையும் நேரம்)

**திணையும் பொழுதும்**

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

Padasalai.Net

# தமிழ் - திறனறித் தேர்வு பயிற்சி ஏடு (பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள்)

## கருப் பொருள் அட்டவணை

| கருப் பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| **தெய்வம்** | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| **மக்கள்** | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல்,ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| **உணவு** | மலைநெல், திணை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| **விலங்கு** | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| **பூ** | குறிஞ்சி, காந்தாள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| **மரம்** | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| **பறவை** | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| **ஊர்** | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| **நீர்** | அருவிநீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| **பறை** | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| **யாழ்** | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| **பண்** | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| **தொழில்** | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதுல், நிரைமேய்த்தல் | நெல்லரிதல் களை - பறித்தல் | மீன்பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# இயல் - 7
# புறப்பொருள் இலக்கணம்

❖ புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை, புறத்திணைகள், வெட்சி முதலாகப் பன்னிரண்டு வகைப்படும்

❖ ஆநிரைகளைப் கவர்ந்துவர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வர். எனவே ஆநிரை கவர்தல்வெட்சித் திணை எனப்பட்டது.

❖ “அழகுச்செடியாக வீட்டுத் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் வளர்க்கப்படுகிற சிவந்த நிறமுடைய வெட்சிப்பூ, **இட்லிப்பூ** என்று அழைக்கப்படுகிறது”

❖ கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்கச் செல்வர் . அப்போது கரந்தைப் பூவைச் சூடிக்கொள்வர்.

❖ “சிறிய மட்டை வடிவில் கொத்தாகப் பூக்கக் கூடிய கரந்தை ஒரு சிறிய செடி நறுமணம் மிக்க இது செம்மை, நீலம் , இளஞ்சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு ஆகிய நிறங்களில் பூக்கின்றது. இதனைக் “**கொட்டைக்கரந்தை**” என்றும் கூறுவர்.

❖ மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணை

❖ “பளபளப்பான, மெல்லிய பூவின் இதழ்களில் வெள்ளி பஞ்சு போன்ற நுண்மயிர் அடர்ந்துள்ளது வஞ்சி”

❖ நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை.

❖ “கொத்துக் கொத்தாகப் பூக்கும் நீலநிற மலர்கள் கொண்ட அழகான மணமுள்ள **காஞ்சி என்பது ஒரு வகைக் குறுமரம்**”

❖ கோட்டையைக் காத்தல் வேண்டி உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடி உள்ளிருந்தே போரிடுவது நொச்சித்திணை.

❖ “மருத நிலத்துக்குரிய நொச்சி, கொத்துக் கொத்தான நீலநிறப் பூக்கள்கொண்டது. இதில் மணிநொச்சி, கருநொச்சி, மலைநொச்சி, வெண்ணொச்சி எனப் பலவகைகள் உள்ளன.

❖ மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை

❖ “வேலிகளில் ஏறிப்படரும் நீண்ட உழிஞைக்கொடி. இதன் கூட்டிலைகளும் மலர்களும் சிறியவை. மலர்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதனை **முடக்கத்தான்** (முடக்கொற்றான்) எனக் கூறுகின்றனர்”

❖ பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச் சூடிப் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் போரிடுவது தும்பைத் திணை.

❖ “எல்லா இடங்களிலும் வளரக்கூடிய தூய வெண்ணிற மலர்களைக் கொண்ட சிறிய செடி தும்பை”

❖ போரிலே வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது, வாகைத்திணை

❖ “மங்கிய வெண்ணிற நறுமணம் கொண்ட கொத்துக் கொத்தாக மலரும் வாகைப் பூ”

❖ பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது பாடாண்திணை (பாடு+ஆண் +திணை - பாடாண்திணை)

❖ வெட்சி முதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும் அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது. பொதுவியல் திணை

- கைக்கிளை என்பது ஒருதலைக் காமம்
- பெருந்திணை பொருந்தாக் காமத்தைக் குறிக்கிறது.

## இயல் - 8
## பா- வகை அலகிடுதல்

- எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்று ஆறு உறுப்புகளைக் கொண்டது யாப்பு. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்பாக்கள் உள்ளன.
- செப்பலோசை வெண்பாவிற்குரியது, அறம் கூறும் குறளும் நாலடியாரும் வெண்பாவில் அமைந்துள்ளன.
- அகவல் ஓசை ஆசிரியப்பாவுக்கு உரியது. இலக்கணக் கட்டுக்கோப்புக் குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருப்பது அகவற்பா என்னும் ஆசிரியப்பா.
- சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களும் அகவற்பாவில் அமைந்தவை.
- செய்யுளில் இடையிடையே உயர்ந்து வருவது துள்ளல்ஓசை, இது கலிப்பாவுக்கு உரியது
- தூங்கல் ஓசை வஞ்சிப்பாவுக்கு உரியது
- குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, ப∴றொடை
- வெண்பா என்று ஐந்துவகை வெண்பாக்கள் உள்ளன.
- நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என்று நான்கு வகை ஆசிரியப்பாக்கள் உள்ளன.
- குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும். முதலடி நான்கு சீராகவும் (அளவடி) இரண்டாம் அடி மூன்று சீராகவும் (சிந்தடி) வரும்.

| பொது இலக்கணம் | ஓசை | சீர் | தளை | அடி | முடிப்பு |
|---|---|---|---|---|---|
| வெண்பா | செப்பல் ஓசை பெற்று வரும் | ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும் | இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டுமே பயின்று வரும் | இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும். (கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்) | ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டில் முடியும். |
| ஆசிரியப்பா (அகற்பா) | அகவல் ஓசை பெற்று வரும் | ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும் | ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும். | மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும் | ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு |

1. செப்பலோசை- இருவர் உரையாடுவது போன்ற ஓசை
2. அகவலோசை- ஒருவர் பேசுதல் போன்ற – சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை
3. துள்ளலோசை கன்று துள்ளினாற்போலச் சீர்தோறுந் துள்ளிவரும் ஓசை. அதாவது தாழ்ந்து உயர்ந்து வருவது.
4. தூங்கலோசை – சீர்தோறுந் துள்ளாது தூங்கிவரும் ஓசை, தாழ்ந்தே வருவது.

- யாப்பதிகாரம் புலவர் குழந்தை.

| | | |
|---|---|---|
| **ஓரசைச்சீர்** | நேர்- நாள்<br>நிரை- மலர் | நேர்பு - காசு<br>நிரைபு- பிறப்பு |
| **ஈரசைச் சீர்** | நேர்நேர் -தேமா<br>நிரை நேர்-புளிமா<br>நிரைநிரை -கருவிளம்<br>நேர்நிரை -கூவிளம் | |
| **மூவகைச்சீர்** | நேர்நேர்நேர்- தேமாங்காய்<br>நிரைநேர்நேர்-புளிமாங்காய்<br>நிரைநிரைநேர் - கருவிளங்காய்<br>நேர்நிரைநேர் - கூவிளங்காய் | நேர்நேர்நிரை - தேமாங்கனி<br>நிரைநேர்நிரை -புளிமாங்கனி<br>நிரை நிரை நிரை- கருவிளங்கனி<br>நேர்நிரை நிரை- கூவிளங்கனி |

# இயல் - 9
## அணி

### தற்குறிப்பேற்ற அணி

- இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்
- **“போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி “வாரல் என்பன போல் மறித்துக்கை காட்ட”**

### பாடலின் பொருள்

- கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பது போல கை காட்டியது என்பது பொருள்.

### அணிப்பொருத்தம்

- கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்ற போது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன.
- ஆனால் இளங்கோவடிகள் கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக்கருதி அக்கொடிகள் கைஅசைத்து, இம்மதுரைக்குள் வரவேண்டா என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார்.

### தீவக அணி

- **தீவகம்** என்னும் சொல்லுக்கு **“விளக்கு”** என்று பொருள். ஓர் அறையில் ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல,
- செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள

www.Padasalai.Net www.CBSEtips.in


சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.

❖ இது முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம் கடைநிலைத்தீவகம் என்னும் மூன்று வகையாக வரும்.

**சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்**

**ஏந்து தடந்தோள், இழிகுருதி-பாய்ந்து**

**திசை அனைத்தும், வீரச் சிலைபொழிந்தஅம்பும்,**

**மிசை அனைத்தும் பள்குலமும் வீழ்ந்து.**

❖ சேர்ந்தன – சிவந்தன
❖ தெவ் - பகை
❖ புள் - பறவை

## பாடலின் பொருள்

❖ அரசனுடைய கண்கள் கோபத்ததால் சிவந்தன, அவை சிவந்த அளவில் பகை மன்னர்களுடைய பெரிய தோள்கள் சிவந்தன.

❖ குருதி பாய்ந்து திசைகள் அனைத்தும் சிவந்தன. வலிய வில்லால் எய்யப்பட்ட அம்புகளும் சிவந்தன.

❖ குருதி மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன.

## அணிப் பொருத்தம்

வேந்தன் கண் சேந்தன
தெவ்வேந்தர் தோள் சேந்தன
குருதி பாய்ந்து திசை அனைத்தும் சேந்தன
அம்பும் சேந்தன
புள் குலம் வீழ்ந்து
மிசை அனைத்தும் சேந்தன

❖ இவ்வாறாக முதலில் நிற்கும் "சேந்தன" (சிவந்தன) என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள்.

❖ அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது. அதனால் இது தீவக அணி ஆயிற்று.

## நிரல் நிறை அணி

❖ நிரல் - வரிசை, நிறை- நிறுத்துதல்

❖ சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை அணி எனப்படும்.

**எ.கா**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.** – குறள் 45

❖ இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணி ஆகும்.

## தன்மையணி

❖ எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும்.

❖ இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர். இவ்வணி நான்கு வகைப்படும்.

1. பொருள்தன்மையணி
2. குணத்தன்மையணி
3. சாதித்தன்மையணி
4. தொழிற்தன்மையணி

**எ.கா:-**

மெய்யிற் பொடியும் வரித்த கருங்குழலும்

கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக் கோன்

கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்

உண்டளவே தோற்றான் உயிர்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

❖ சிலம்பு – வழக்குறை காதை வெண்பா.

**பாடலின் பொருள்**

❖ உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும்.
கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை நதி பாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான் .

❖ அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிரை நீத்தான்

**அணிப்பொருத்தம்**

❖ கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மை நவிற்சியணி எனப்படும்

❖ **"எவ்வகை பொருளு மெய்வகை விளக்குஞ் சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்"**

**– தண்டியலங்காரம் -27**

| வ. எண் | பாடல் வரி | நூல் | ஊர் |
|---|---|---|---|
| 1 | "வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும் மாவும் பலாவும் சூழ்அடுத்து ஓங்கி தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும் | சிலப்பதிகாரம் - காடுகாண் காதை; 53 - 55 | திண்டுக்கல் - சிறுமலை |
| 2 | "பல் பழுப் பலவின் பயங்கெழு கொல்லி" | அகநானூறு | நாமக்கல் - கொல்லிமலை |
| 3 | "கறங்கு இசை விழவின் உறந்தை" | அகநானூறு | திருச்சி - உறையூர் |
| 4 | "கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை" | அகநானூறு | கரூர் - கருவூர் (கரூர்) |
| 5 | "கொற்கை கோமான் கொற்கையம் பெருந்துறை" | ஐங்குறுநூறு | தூத்துக்குடி - கொற்கை |
| 6 | "ஓங்கு இரும் பரப்பின் வங்க ஈட்டத்து தொண்டி யோர்" | சிலப்பதிகாரம், ஊர்காண்காதை | இராமநாதபுரம் - தொண்டி |
| 7 | "ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து அரசு பட அமர் உழக்கி" | மதுரைக்காஞ்சி | திருவாரூர் - ஆலங்கானம் |

Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


## 10th Book Back Question

### இயல் - 1

**சரியான விடையைத் தேர்வு செய்க**

1. “மெத்த வணிகலன்” என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
   அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
   ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்.

2. ‘காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்” நிலத்துக்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
   அ) இலையும் சருகும்
   ஆ) தோகையும் சண்டும்
   இ) தாளும் ஓலையும்
   ஈ) சருகும் சண்டும்

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் +நா ஈ) எந்தம் +தமிழ் + நா

4. “கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது” – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெரும் வினையாலணையும் பெயரும் முறையே
   அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
   இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
   அ) குலை வகை ஆ) மணி வகை
   இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

### இயல் - 2

6. “உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்” – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
   அ) உருவகம், எதுகை
   ஆ) மோனை, எதுகை
   இ) முரண், இயைபு
   ஈ) உவமை, எதுகை

7. கூற்று 1 – ஒவ்வோர் ஆண்டும் ஜீன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
   கூற்று 2 – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே
   கூற்று 3 – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்
   அ) 1 சரி ஆ) 1, 2 சரி
   இ) 3 சரி ஈ) 1, 3 சரி

8. “பாடு இமிழ் பனிக்கடல் பருகி” என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்து யாது?
   அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்
   ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல் நீர் ஒலித்தல்
   ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

9. “பெரிய மீசை” சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
   இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

10. பொருத்துக
   அ) கொண்டல் - 1. மேற்கு
   ஆ) கோடை - 2. தெற்கு
   இ) வாடை - 3. கிழக்கு
   ஈ) தென்றல் - 4. வடக்கு
   அ) 1 2 3 4 ஆ) 3 1 4 2
   இ) 4 3 2 1 ஈ) 3 4 1 2

### இயல் - 3

11. பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது?
   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
   ஆ) தமிழர் வாழை இலைக்கு பண்பாட்டில் தனித்த இடமுண்டு
   இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


12. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர்
இ) பேரூர் ஈ) சிற்றூர்

13. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவமஉருபு ஈ) உரிச்சொல்

14. காசிக்காண்டம் என்பது
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

15. "விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு" - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
அ) நிலத்திற்கேற்ற விருந்து
ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து
ஈ) உற்றாரின் விருந்து

## இயல் - 4

16. "உனதருளே பார்ப்பேன் அடியேனே " – யாரிடம் யார் கூறுயது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன்
ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி
ஈ) நோயாளியிடம் மருத்துவர்

17. பரிபாடல் அடியில் "விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையம் பாட்டையும்
ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும்
ஈ) வானத்தையும் பேரொலியையும்

18. குலசேகர ஆழ்வார் "வித்துவக்கோட்டம்மா" என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுமைதி முறையே-
அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி
ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுமைதி, திணை வழுவமைதி
ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

19. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா
இ) குலா ஈ) இலா

## இயல் - 5

20. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கிக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

21. அருந்துணை என்பதைப் பிரித்தால் ----------------
அ) அருமை + துணை ஆ) அரு + துணை
இ) அருமை + இணை ஈ) அரு + இணை

22. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது ----------வினா
"அதோ, அங்கே நிற்கும்," என்று மற்றொருவர் கூறியது -----------விடை
அ) ஐயவினா, வினா எதிர் வினாதல்
ஆ) அறிவினா, மறை விடை
இ) அறியா வினா, சுட்டு விடை
ஈ) கொளல் வினா, இனமொழி விடை

23. " அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல்

இ) கல்வி ஈ) இலக்கியம்

24. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ------------- இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ------------

அ) அமைச்சர், மன்னன்

ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன்

ஈ) மன்னன், இறைவன்

## இயல் - 6

25. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்

ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

26. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர், இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது?

அ) ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடுவர்.

ஆ) ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது.

இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

27. மலர்கள் தரையில் நழுவும், எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால்

ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால்

ஈ) காம்பு முறிந்தால்

28. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

## இயல் - 7

29. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) உழவு, மண், ஏர், மாட

அ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு

ஈ) ஏர், உழவு, மாடு, மண்

30. "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே

அ) திருப்பதியும், திருத்தணியும்

ஆ) திருத்தணியும், திருப்பதியும்

இ) திருப்பதியும், திருச்செந்தூரும்

ஈ) திருப்பரங்குன்றமும், பழனியும்

31. "தன்நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்

ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்

ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

32. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் -----

அ) நாட்டைக் கைப்பற்றல்

ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல்

ஈ) கோட்டையை முற்றுகையிடல்

33. தமிழனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

## இயல் - 8

34. மேன்மை தரும் அறம் என்பது ------------

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

35. “வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்” இவ்வடி குறிப்பிடுவது ----------
அ) காலம் மாறுவதை
ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை
ஈ) வண்ணம் பூசுவதை

36. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
அ) உதியன் ; சேரலாதன்
ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகன் ; கிள்ளிவளவன்
ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

37. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் ---
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

38. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் -------------
அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

## இயல் - 9

39. “இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும் …..” இவ்வடிகளில் கற்காலம் என்பது
அ) தலைவிதி அ) பழைய காலம்
இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

40. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம்
ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

41. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ------- வேண்டினார்
அ) கருணையன் எலிசபெத்துக்காக
ஆ) எலிசபெத் தமக்காக
இ) கருணையன் பூக்களுக்காக
ஈ) எலிசபெத் பூமிக்காக

42. வாய்மையே மழைநீராகி- இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
இ) உருவகம் ஈ) தீவகம்

## விடைக் குறிப்பு

| No. | key | No | key | No | key |
|---|---|---|---|---|---|
| 1. | A | 15. | B | 29. | C |
| 2. | D | 16. | B | 30. | A |
| 3. | C | 17. | D | 31. | D |
| 4. | D | 18. | C | 32. | C |
| 5. | B | 19. | D | 33. | D |
| 6. | B | 20. | A | 34. | A |
| 7. | D | 21. | A | 35. | C |
| 8. | B | 22. | C | 36. | B |
| 9. | C | 23. | C | 37. | A |
| 10. | B | 24. | D | 38. | A |
| 11. | C | 25. | C | 39. | A |
| 12. | D | 26. | C | 40. | B |
| 13. | B | 27. | B | 41. | A |
| 14. | C | 28. | D | 42. | B |

## மாதிரி வினாவங்கி
## 6 முதல் 10ம் வகுப்பு வரை
## புதியபாடத்திட்டம்

1. i) சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் சண்முக சிகாமணி,
ii) இவர் சிற்றிலக்கிய நூல்களில் 22 நூல்களைப் படைத்துள்ளார்.
அ) இரண்டும் சரி ஆ) இரண்டும் தவறு
இ) i சரி ii தவறு ஈ) i தவறு ii சரி

2. i) ஒற்றளபெடை - வ், ய், ழ், ல், ∴
ii) செய்யுளிசை அளபெடை - ஓ ஒதல்
iii) இன்னிசை அளபெடை - எடுப்பதூஉம்
iv) சொல்லிசை அளபெடை - நசைஇ
தவறானதைத் தேர்ந்தெடு
அ) 1 தவறு ஆ) 2 தவறு
இ) 3 தவறு ஈ) 4 தவறு

3. வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம் - பாடியவர் யார்?
அ) திருமூலர் ஆ) திருவள்ளுவர்
இ) ஔவையார் ஈ) சொக்கநாதப் புலவர்

4. தவறானதை தேர்ந்தெடு
அ) குயில்பாட்டு - பாரதியார்
ஆ) அதோ அந்தப் பறவை போல - ச.சலீம் அலி
இ) உலகின் மிகச்சிறிய தவளை -எஸ்.ராமகிருஷ்ணன்
ஈ)

5. “கட்டிய சூழியு முச்சியும்” - ‘சூழி’ _____ அணிவது
அ) காலில் ஆ) இடையில்
இ) நெற்றியில் ஈ) தலையில்

6. “கறங்கு இசை விழாவின் உறந்தை” எனும் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்
அ) புறநானூறு ஆ) அகநானூறு
இ) நற்றிணை ஈ) பரிபாடல்

7. கூற்று: வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை ‘செய’ என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் “கூட்டுநிலைப் பெயரெச்சங்கள்” உருவாகின்றன.
காரணம்: (எ.டு) கேட்க வேண்டிய பாடல் சொல்ல தக்க செய்தி
அ) 1,2 தவறு ஆ) 1 மட்டும் சரி
இ) 2 மட்டும் சரி ஈ) 1, 2 சரி

8. i) சீனாவின் “காண்டன்” நகருக்கு வடக்கே “சூவன்சௌ” எனும் துறைமுக நகர் உள்ளது.
ii) தமிழ் வணிகர்கள் அடிக்கடி வந்து சென்றால் இங்கு சிவன்கோவில் ஒன்று கட்டப்பட்டுள்ளது.
iii) குப்லாய்கானின் ஆணையின் கீழ்கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் தமிழ் கல்வெட்டு இங்கு உள்ளது.
அ) i,ii சரி iii தவறு ஆ) அனைத்தும் சரி
இ) i தவறு ii, iii சரி ஈ) அனைத்தும் தவறு

9. **“கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை திருமா வியல் நகர் கருவூர் முன் துறை”**
-இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) புறநானூறு ஆ) குறுந்தொகை
இ) நற்றிணை ஈ) அகநானூறு

10. i) பரிபாடல் “செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு” எனும் பாடலை கீரந்தையார் பாடியுள்ளார்
ii) தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, சமூக உறவு, அறிவாற்றல், இயற்கையைப் புரிந்துகொள்ளும் திறன் போன்றவற்றை எட்டுத்தொகையில் மட்டும் அறியலாம்.
அ) i சரி ii தவறு ஆ) i, ii சரி
இ) i, ii தவறு ஈ) i தவறு ii சரி

11. வாடா இராசா, வாடா கண்ணா” என்று தாய் தன் மகளைப் பார்த்து அழைப்பது
அ) பால் வழு ஆ) பால் வழுவமைதி
இ) திணை வழு ஈ) வழா நிலை

12. பொருத்துக:
i) நீபவனம்- 1.சினம்
ii) கவரி - 2. கடம்பவனம்
iii) தமர் - 3. சாமரை
iv) முனிவு - 4. உறவினர்
a) 3 4 2 1 b) 4 3 1 2 c) 2 3 4 1 d) 2 3 1 4

13. “ஆலத்து மேல குவளை குளத்துள வாலின் நெடிய குரங்கு”- இப்பாடலில் பயின்று வந்துள்ள பொருள்கோள் எது?
அ) நிரல் நிறைப் பொருள்கோள்
ஆ) கொண்டுகூட்டு பொருள் கோள்
இ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
ஈ) தாப்பிசை பொருள்கோள்

14. கூற்றுக்களைக் கவனி.
a) வசன கவிதைகளையும், சீட்டுக்கவிதைகளையும் எழுதியவர் பாரதிதாசன்.
b) சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம்பாட வந்த மறவன் என பாரதியாரை பாரதிதாசன் புகழ்ந்துள்ளார்.
c)இந்தியா, விஜயா முதலான இதழ்களை நடத்தியவர் பாரதிதாசன்.
அ) a,b,c சரி ஆ) a,b சரி c தவறு
இ) a,c தவறு b சரி ஈ) a,b,c தவறு

15. தமிழ்மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என்பதற்கு சான்று உள்ள கல்வெட்டுகள் எங்கு உள்ளது?
அ) உத்திரமேரூர் கல்வெட்டு ஆ)அரச்சலூர் கல்வெட்டு
இ) அரிச்சலூர் கல்வெட்டு ஈ)அரசனூர் கல்வெட்டு

16. 1. பன்மொழிப்புலவர் என்று அழைக்கப்படுபவர் தேவநேயப் பாவணர்
2.தேவநேயம் எனும் நூலைத் தொகுத்தவர் இரா.இளங்குமரனார்
3.தமிழில் ''சொல்'' என்பதற்கு ''நெல்'' என்பது ஒரு பொருள்
அ) 1,2 சரி ஆ) 2,3 சரி
இ) 1,3 சரி ஈ) அனைத்தும் சரி

17. **"கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும் நாவாயும் ஓடா நிலத்து"**
- இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி
அ) எடுத்துக்காட்டு உவமையணி
ஆ) பிறிது மொழிதல் அணி
இ) இல்பொருள் உவமை அணி
ஈ) உவமை அணி

18. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?
1.ஒன்றன் செயலை முடிவடைந்ததை கூறுவது வினைமுற்று
2.வினைமுற்று 2 வகைப்படும்
3.பொருள், இடம், காலம், சினை, குணம் தொழில் ஆகிய ஆறும் வெளிப்படுமாறு வருவது தெரிநிலை வினைமுற்று.
4.செய்பவர், கருவி, நிலம், செயல் காலம், செய்பொருள் ஆகிய ஆறும் வெளிப்படையாகக் காட்டாதது குறிப்பு வினைமுற்று.
அ) 1,2,3 சரி ஆ) 1,3 சரி 2,4 தவறு
இ) 1,2 சரி 3,4 தவறு ஈ) 1,4 சரி 2,3 தவறு

19. பொருத்துக:
1) உலக ஈர நில நாள் - a) அக்டோபர் 3
2) உலக ஓசோன் நாள் - b) அக்டோபர் 5
3) உலக இயற்கை தினம் - c) பிப்ரவரி 2
4) உலக இயற்கை சீரழிவு தடுப்பு தினம் - d) செப்டம்பர் 16
அ) a b c d ஆ) b c a d இ) c a d b ஈ) c d a b

20. சமயத் தத்துவங்களை விவரிக்கும் தருக்க நூல் எது?
அ) குண்டலகேசி ஆ) நீலகேசி
இ) சூடாமணி ஈ) சித்தர் பாடல்கள்

21. உமர்கய்யாம் பாடல்ளை மொழிபெயர்த்தவர்? எத்தனை ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றினார்?
அ) 32 ஆ) 33 இ) 34 ஈ) 36

22. "கயிலை கலம்பகம்" நூலின் ஆசிரியர் யார்?
அ) குமரகுருபரர் ஆ) மயிலை நாதர்
இ) உமறுபுலவர் ஈ) சேக்கிழார்

23. யார் கூற்று:- கல்வி வளர்ச்சியின் வாயில்
அ) குலோத்துங்கன் ஆ) காந்தியடிகள்
இ) அண்ணா ஈ) பெரியார்

24. "மாக்சான் முரசம்" என்று முரசைப் பற்றிக் கூறும் நூல்?
அ) பட்டினப்பாலை ஆ) மதுரைக்காஞ்சி
இ) சிலப்பதிகாரம் ஈ) நெடுநல்வாடை

25. "கலை உணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்" அடிகள் இடம்பெற்ற நூல்
அ) புறநானூறு ஆ) நாச்சியார் திருமொழி
இ) பெரியபுராணம் ஈ) மதுரைக்காஞ்சி

26. இவற்றில் சரியானவை அல்லாதவை எவை?
1) வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு - தொல்காப்பியம்
2) மீனோடு தெற்குவைஇ மிசையம்பியின் மனை மறுக்குந்து - புறநானூறு
3) கலந்தந்த பொற்பரிசம் கழித்தோணியால் கரைசேர்க்குந்து - அகநானூறு
4) நெல்லும் உப்பும் நேரே ஊரீர் - புறநானூறு
அ) 1,2 சரி 3,4 தவறு ஆ) 1,4 சரி 2,3 தவறு
இ) 4,2 சரி 1,3 தவறு ஈ) அனைத்தும் சரி

www.Padasalai.Net www.CBSEtips.in



27. தொல்காப்பியத்தில் **“போந்தை வேம்பே ஆரென உருஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்”** என எந்த மன்னரை பற்றி குறிப்பிடுகிறது.
அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

28. பொருத்துக:-
i) மறலி - 1) தழுவி ஓடுவர்
ii) அருவர் - 2) காலன்
iii) உடன்றன் - 3) சினந்து எழுந்தன
iv) வழிவர் - 4) தமிழர்
அ) 2 3 1 4 ஆ) 4 2 3 1 இ) 2 4 3 1 ஈ) 1 4 3 2

29. ‘அன்னம் விடுதூது’ என்னும் இதழை நடத்தியர்.
அ) சுரதா ஆ) மீரா இ) சுஜாதா ஈ) இந்திரன்

30. மனிதனுக்குள் நிறைந்திருக்கும் பண்புகளை எந்த நூலின் மூலம் அறியலாம்.
அ) திருப்பாவை ஆ) திருவெம்பாவை
இ) கன்னிப்பாவை ஈ) பாவியக்கொத்து

31. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க:-
1) பெருமாள் திருமொழியைப் பாடியவர் ஆண்டாள்.
2) திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள், பிறபெண்களை எழுப்புவதாக பாடப்பட்ட நூல் - திருவெம்பாவை
3) சிவபெருமானை வழிபடச் செல்வும் பெண்கள் பிறபெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல் - திருப்பாவை
4) கன்னிப்பாவை, திருப்பாவை என்னும் நூலை தழுவி எழுதப்பட்டது
ஈ) அ) 1,2,4 தவறு 3 சரி ஆ) 1,2,3 தவறு 4 சரி
இ) 1,3,4 தவறு 2 சரி ஈ) 2,3,4 தவறு 1 சரி

32. சரியான இணை (அம்பேத்கார்)
1) 1923 - ரூபாய் பற்றிய பிரச்சனை - முனைவர்பட்டம்
2) 1924 - ஒடுக்கப்பட்ட பாரதம் இதழ்
3) 1927 - ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை
4) 1930 - நாசிக்கோயில் நுழைவு போராட்டம்
அ) 1,4 சரி 2,3 தவறு ஆ) 1,3 சரி 2,4 தவறு
இ) 1,4 தவறு 2,3 சரி ஈ) அனைத்தும் சரி

33. பூனா ஒப்பந்தம் பற்றியது
1) 1931, செப்டம்பர் 24
2) அம்பேத்காருக்கும், காந்தியடிகளுக்கும் போடப்பட்ட ஒப்பந்தம்
3)ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாக பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது
அ) 1,2 சரி 3 தவறு ஆ) 1,3 சரி 2 தவறு
இ) 2,3 சரி 1 தவறு ஈ) அனைத்தும் சரி

34. கீழ்கண்டவற்றுள் சரியானதை தேர்ந்தெடு
i) திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் - ச.அகத்தியலிங்கம்
ii) வடமொழியை ஆராய்ந்து ஜெர்மானிய மொழிகளுடன் தொடர்புடையது. அறிஞர் வில்லியம் ஜோன்ஸ்
iii) தமிழ் என்ற சொல்லிலிருந்து திராவிடா என்ற சொல் பிறந்தது - கால்டுவெல்
iv) தென்னிந்திய மொழிகளுடன் மால்தோ, தோடா, கோண்டி ஆகியவற்றை இணைத்து ‘தமிழியன்’ என்று பெயரிட்டவர் - ஹோக்கன்
அ) i,ii சரி iii,iv தவறு ஆ) i,ii, iii தவறு iv சரி
இ) i,ii, iii சரி iv தவறு ஈ) i,ii தவறு iii,iv சரி

35. திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பாலறி கிளவிகள் இல்லாத மொழி
அ) தெலுங்கு, கன்னடம் ஆ) மலையாளம், குடகு
இ) தமிழ், ஆங்கிலம் ஈ) மலையாளம், ஆங்கிலம்

36. கீழ்கண்ட கூற்றை ஆராய்க:
1) ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ என கவிதை நூல்களைத் தந்தவர் - தமிழ் ஒளி
2) இவர் ‘வணக்கம் வள்ளுவ’ எனும் நூலுக்கு 2004-ல் சாகித்ய அகாதெமி விருது வாங்கியுள்ளார்.
3) தமிழர் சமுதாயம் எனும் நூலை இயற்றியவர் – தமிழ்ஒளி
4) பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர் - தமிழ்ஒளி
அ) 1,2 தவறு 3,4 சரி ஆ) 1,3 சரி 2,4 தவறு
இ) 1,3 தவறு 2,4 சரி ஈ) 1,2 சரி 3,4 தவறு

37. i) வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்றழைக்கப்படுவது - தூது
ii) அன்னம் முதல் வண்டு ஈறாக உள்ள பன்னிரண்டையும் தூது விடுவதாக பாடப்படுவது.
iii) தூது 286 கண்ணிகளைக் கொண்டுள்ளது.
iv) முதன் முதலில் உ.வே.சா. 1936-ல் பதிப்பித்தார்.
அ) 1,2 தவறு 3,4 சரி ஆ) 1 தவறு 2,3,4 தவறு
இ) 1,3 சரி 2,4 தவறு ஈ) 1 சரி 2,3,4 தவறு

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

38. ஜெயகாந்தனோடு தொடபற்ற விருது
அ) ஞானபீட விருது
ஆ) தாமரைத்திரு விருது
இ) சோவியத் நாட்டு விருது
ஈ) இந்திய மாமணி விருது

39. பின்வருவனவற்றுள் சரியானது எது?
i) இந்திய நீர் பாசனத்தின் தந்தை சர் ஆர்தர் காட்டன் ஆவார்.
ii) 1839-ம் ஆண்டு காவிரி நீர் பாசனத்திற்கு தனிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.
iii) இவர் கல்லணைக்கு கிராண்ட் அணைக்கட் எனப் பெயரிட்டார்.
iv) 1873-ல் கங்கை ஆற்றின் குறுக்கே தௌலீஸ்வரம் அணையையைக் கட்டினார்.
அ) i,iv சரி ii,iii தவறு ஆ) i,iii சரி ii,iv தவறு
இ) i,ii சரி iv, iii தவறு ஈ) ii,iv சரி i,iii தவறு

40. பொருத்துக:
i) குண்டம் - 1. உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை
ii) கூவல் - 2. குளிப்பதற்கேற்ற சிறு குளம்
iii) குண்டு - 3. சுடுமண் வளையமிட்டக் கிணறு
iv) கேணி - 4. குளிக்கும் நீர்நிலை
v) உறைக்கிணறு - 5. அகலமும், ஆழமும் உள்ள பெருங்கிணறு
அ) 4,2,1,3,5 ஆ) 4,1,2,5,3 இ) 1,4,2,3,5 ஈ) 1,2,4,3,5

41. கூற்றுக்களை கவனி.
i) உணவெனப்படுவது நிலத்தொடு நீரே- குறுந்தொகை
ii) குள்ளக் குளிர குடைந்து நீராடி - தொ.பாரமசிவன்
iii) குளம் தொட்டக் கோடு பதித்து வழிசித்து உளம் தொட்டு உழவியல் ஆக்கி - சிறுபஞ்சமூலம்
iv) யாதும் ஊரே யாவரும் கேளிர் - புறநானூறு
அ) ii சரி i,iii, iv தவறு ஆ) iv சரி i,ii,iii தவறு
இ) i,iii சரி ii, iv தவறு ஈ) iii,iv சரி i,ii தவறு

42. சரியானது எது?
i) கண்ணுக்குப் புலப்படாத தண்ணீரும் புலப்படும் உண்மை - மா.குமரேசன்
ii) தண்ணீர் தண்ணீர் - கந்தர்வன்
iii) ஒவ்வொரு கல்லாய் - கந்தர்வன்
iv) வாய்க்கால் மீன்கள் - வைரமுத்து
அ) i சரி ii,iii,iv தவறு ஆ) iii சரி i,ii,iv தவறு
இ) ii சரி i,iii,iv தவறு ஈ) iv சரி i,ii,iv தவறு

43. சரியானது எது?
i) 1 கிலோ ஆப்பிளை உற்பத்தி செய்ய 832 லி தண்ணீர் தேவைப்படுகிறது.
ii) 1 கிலோ அரிசியை உற்பத்தி செய்ய 2500 லி தண்ணீர் தேவைப்படுகிறது.
iii) 1 கிலோ காப்பி கொட்டையை உற்பத்தி செய்ய 18,900 லி தண்ணீர் தேவைப்படுகிறது.
iv) 1 கிலோ சர்க்கரையை உற்பத்தி செய்ய 1720 லி தண்ணீர் தேவைப்படுகிறது.
அ) i,iv சரி ii,iii தவறு ஆ) ii, iii சரி i,iv தவறு
இ) ii,iv சரி i,iii தவறு ஈ) i,ii சரி iii,iv தவறு

44. பொருத்துக
i) திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் - **சித்திரக்கல் புடவி**
ii) மூன்று எருதுகளை பலர் கூடி விரட்டுவது போன்ற ஓவியம் - **கரூர், அமராவதி**
iii) திமிலுடன் கூடிய காளை ஓவியம்- **கல்லூத்து, மேட்டுப்பட்டி**
iv) காங்கேய மாடு உருவம் பொறித்த நாணயங்கள் - **கரிக்கையூர்**
அ) 2 3 1 4 ஆ) 3 4 1 2 இ) 3 2 4 1 ஈ) 2 1 3 4

45. **எழுந்தது துகள்,**
**ஏற்றனர் மார்பு,**
**கவிழ்ந்தன மருப்பு**
**கலங்கினர் பலர்** - என்று எக்கலியில் ஏறுதழுவுதல் பற்றி கூறப்பட்டுள்ளது.
அ) நெய்தல் கலி ஆ) முல்லைக் கலி
இ) மருதக் கலி ஈ) குறிஞ்சிக் கலி

46. பொருத்துக:-
1) வன்தொடர், குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகுந்து வராது.
2) தனிக்குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகார எழுத்தின் பின் வல்லினம் மிகும்.
3) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது.
4) ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.
அ) 1,3 சரி 2,4 தவறு ஆ) 1,2 சரி 3,4 தவறு
இ) 1,4 தவறு 2,3 சரி ஈ) 1,3 தவறு 2,4 சரி

47. அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மாறவாது இது கேள்! என்று கூறுவது
அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம்
இ) புறநானூறு ஈ) குண்டலகேசி


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



48. பொருத்துக
i. ஒளிப்படி இயந்திரம் - 1.ஜியோவான்னி காசில்லி
ii. தானியக்க பண இயந்திரம்- 2.மைக்கேல் ஆல்ட்ரிச்
iii. தொலை நகல் இயந்திரம் - 3.செஸ்டர் கார்ல்சன்
iv. இணைய வணிகம் - 4.ஜான் ஷெப்பர்டு பாரன்
அ) 3 2 4 1 ஆ) 3 4 1 2 இ) 2 3 1 4 ஈ) 2 4 1 3

49. உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல்
அ) சிப்பி, நத்தை ஆ) நண்டு, தும்பி
இ) பறவை, விலங்கு ஈ) கரையான் எறும்பு

50. 2012-ல் உள் நாட்டிலேயே உருவான முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் திட்டத்தின் இயக்குநராக பணியாற்றியவர்
அ) மயில்சாமி அண்ணாதுரை ஆ) அப்துல்கலாம்
இ) சிவன் ஈ) வளர்மதி

51. தவறானது எது?
1) புதுக்கவிதையின் தந்தை - ந.பிச்சமூர்த்தி
2) இவர் ஹனுமான், நவ இந்தியா ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராக இருந்தார்.
3) இவர் 1932-ம் ஆண்டு கலைமகள் இதழ் வழங்கிய பரிசைப் பெற்றார்.
அ) 1தவறு ஆ) 2 தவறு
இ) 3 தவறு ஈ) அனைத்தும் தவறு

52. தவறான கூற்றைத் தோந்தெடு:-
i) ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று - யசோதாகாவியம்
ii) இந்நூல் 5 சருக்கங்களைக் கொண்டது
iii) இந்நூலின் பாடல்களில் எண்ணிக்கை 340 எனவும் குறிப்பிடப்படுகிறது.
iv) சீவகன் என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது.
அ) i,ii சரி iii,iv தவறு ஆ) i, iii சரி ii,iv தவறு
இ) ii,iii சரி i,iv தவறு ஈ) i,iv சரி ii,iii தவறு

53. பொருத்துக:
i) கலித்தளை - காய் முன் நேர்
ii) ஒன்றாத வஞ்சித்தளை - விளம் முன் நிரை
iii) வெண்சீர் வெண்டளை - கனி முன் நிரை
iv) ஒன்றிய வஞ்சித்தளை - காய் முன் நிரை
v) நிரையொன்றாசிரியத் தளை - கனி முன் நேர்
அ) 1 4 3 5 2 ஆ) 4 1 5 3 2
இ) 4 5 1 3 2 ஈ) 1 3 4 5 2

54. கூற்றுகளைக் கவனி.
i) இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும் அறவிலை வணிகன் ஆய் அலன் - கலித்தொகை
ii) படுதிரை வையம் பாத்திய பண்பே - பரிபாடல்
மேற்கண்ட பாடல்களில் தவறானது எது?
அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி
இ) இரண்டும் தவறு ஈ) 2 மட்டும் தவறு

55. **பொருத்துக :- [உலகத்தமிழ் மாநாடுகள்]**
1. பிரான்ஸ் (பாரிசு) - 1981
2. இந்தியா (மதுரை) - 1970
3. இந்தியா (தஞ்சாவூர்) - 1974
4. இலங்கை (யாழ்ப்பாணம்) - 1966
5. மலேசியா ( கோலாம்பூர்) - 1995
அ) 2 5 1 4 3 ஆ) 1 3 5 2 4
இ) 1 2 3 5 4 ஈ) 2 1 5 3 4

56. கூற்றுகளில் தவறானது எது?
1) சு.சமுத்திரம் திப்பணம்பட்டியைச் சேர்ந்தவர்
2) இவரின் புகழ்பெற்ற சிறுகதைகள் - பாலைப்புறா, தலைப்பாகை
3) இவரின் ‘வேரில் பழுத்த பலா’ நாவல் தமிழக அரசின் பரிசைப் பெற்றுள்ளது.
அ) 2 மட்டும் தவறு ஆ) 3 மட்டும் தவறு
இ) 2, 3 தவறு ஈ) அதைத்தும் தவறு

57. திருவாதிரை விழா, இந்திர விழா, இளவேனில் விழா போன்ற விழாக்களைச் சிறப்பாக கொண்டாடினர் என்பதை கூறும் இலக்கியங்கள்:-
அ) அகநானூறு பதிற்றுப்பத்து
ஆ) அகநானூறு, கலித்தொகை
இ) குறுந்தொகை, கலித்தொகை
ஈ) புறநானூறு, நற்றிணை

58. தவறான கூற்றைத் தோந்தெடு:-
1) வெண்பா-வால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம்
2) சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்று மன்னர்களைப் பற்றி பொதுவாகப் பாடுவது - தூது இலக்கியம்.
3) முத்தொள்ளாயிரம் 900 பாடல்களைக் கொண்டது.
4) புறத்திரட்டு என்றும் நூலிலிருந்து 106 செய்யுள்களைக் கிடைத்துள்ளன.
அ) 1,2 சரி 3,4 தவறு ஆ) 1,3 சரி 2,4 தவறு
இ) 2,3 சரி 1,4 தவறு ஈ) 3,4 சரி 1,2 தவறு

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

கோ. செந்தில்குமார் எம்.ஏ. எம்பில். பிஎட். முதுகலை தமிழ் ஆசிரியர்
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, அல்லிநகரம், தேனி மாவட்டம். பேசுவதற்கு: 99420 52222

59. கூற்றை ஆராய்க:
   i) தேன் நிறைந்த ஆத்திமலர் மாலையை அணிந்தவன்
   ii) காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்பவன் சோழ மன்னன்.
   iii) கழுத்தில் சூடுவது தார் எனப்படும்.
   iv) ஓர் எழுத்து ஒரு சொல்லாகிப் பொருள் தருவதும் உண்டு, பல பொருளை தருவதும் உண்டு.
   அ) i, ii சரி iii தவறு ஆ) i, ii தவறு iii சரி
   இ) ii, iii சரி i தவறு ஈ) அனைத்தும் சரி

60. பறவைகள் எதை அடிப்படையாகக் கொண்டு இடம் பெயர்கின்றன.
   அ) நிலவு ஆ) இருப்பிடம்
   இ) தட்பவெப்ப நிலை ஈ) இனப்பெருக்கம்

61. கூற்றை ஆராய்க
   1. ஆய்த எழுத்து தனிவடிவம் பெற்றது.
   2. நுட்பமான ஒலிப்புமுறை இல்லை
   3. தனித்து இயங்கும் தன்மை கொண்டது.
   4. முதல் எழுத்துக்களாகிய உயிரையும், மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்து ஆகும்.
   அ) 1,4 சரி 2,3 தவறு ஆ) 3,4 சரி 1,2 தவறு
   இ) 1,3 சரி 2,4 தவறு ஈ) அனைத்தும் சரி

62. சதுரங்கப் போட்டி I.B.M நிறுவனம் எந்த ஆண்டு நடைபெற்றது.
   அ) 1996 ஆ) 1997 இ) 1998 ஈ) 1930

63. ராமன் விளைவில் பயன்படுத்தாத பொருள்
   அ) பாதரச ஆவி விளக்கு ஆ) பென்சீன்
   இ) நிறமாலைக்காட்டி ஈ) முப்பட்டகம் (ம) நிறப்பிரிகை

64. பொருத்துக. (தவறானது)
   1) பாம்பு - அகநானூறு
   2) முதலை - குறுந்தொகை
   3) உயிர் - தொல்காப்பியம்
   4) பார் - பெரும் பாணாற்றுப்படை
   அ) 2,3 மட்டும் ஆ) 1 மட்டும்
   இ) 3,2 மட்டும் ஈ) ஏதுமில்லை

65. **“நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு”**- எந்த நூலில் உள்ளது.
   அ) தொல்காப்பியம் ஆ) கார்நாற்பது
   இ) பதிற்றுப்பத்து ஈ) நற்றிணை

66. மண் உரிமைக்காகவும் பெண் உரிமைக்காகவும் பாடியவர்
   அ) அம்பேத்கார் ஆ) பாரதிதாசன்
   இ) பாரதியார் ஈ) பெரியார்

67. இவற்றில் எது பொருத்தமானது அன்று
   1) உமணர் போகலும் - நற்றிணை
   2) பாலொடு வந்து கூழொடு பெயரும்-குறுந்தொகை
   3) பொன்னொடு வந்து கறியொடு பெயரும்-அகநானூறு
   4) தந்நாடு விளைந்த வெண்ணெல் தந்து - புறநானூறு
   அ) 2,3 சரி 1,4 தவறு ஆ) 1,3 சரி 2,4 தவறு
   இ) அனைத்தும் சரி ஈ) எதுவுமில்லை

68. வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக்கடவுளை வழிபடும் நோக்கில் அக்காலத்தில் போகிப்பண்டிகை எவ்விழாவாகக் கொண்டாடப்படுகிறது?
   அ) சித்திரா பௌர்ணமி ஆ) உழவர் திருநாள்
   இ) இந்திரவிழா ஈ) அறுவடைத்திருவிழா

69. பொருத்துக:
   1. பள்ளிக்கூடம் - வாழும் வீடு
   2. புயல் - கண்ணாடி
   3. முழுநிலவு - ஊஞ்சல்
   4. கட்டுமரம் - கூத்து
   5. விண்ணில் இடி - விரிகடல்
   அ) 5 4 3 2 1 ஆ) 2 1 3 4 5
   இ) 5 3 2 1 4 ஈ) 3 4 1 5 2

70. நூலகத்தில் படித்து உயர்நிலை அடைந்தவர்களுள் சரியானவை அன்று.
   அ) காரல் மார்க்ஸ் ஆ) ஜவஹர்லால் நேரு
   இ) அறிஞர் அண்ணா ஈ) காமராசர்

71. இவற்றில் எது/எவை சரியானவை?
   1) நடுவு நின்ற நன்னெஞ்சினோர் - பட்டினப்பாலை
   2) கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைபடாது - பட்டினபாலை
   3) கல்விக்கு எல்லை இல்லை – ஔவையார்
   4) வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோல் செயின் - திருக்குறள்.
   அ) 1,2 தவறு 3,4 சரி ஆ) 3,4 தவறு 1,2 சரி
   இ) அனைத்தும் சரி ஈ) 1,3,4 தவறு 2 சரி

72. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம் என்ற பாடல்வரி யாருடையது
   அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
   இ) முடியரசன் ஈ) சக்திவேல்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

73. அஞ்சாமை மிக்கவன் தான் ஆனாலும் சான்றோர்கள் அஞ்சுவதை அஞ்சி அகற்றி விலக்கிடுவான்.
அ) கல்யாணசுந்தரம் ஆ)திருவள்ளுவர்
இ) முடியரசன் ஈ) பாரதியார்

74. கூற்றுகளை கவனி
i) பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது இடைச்சொல்
ii) பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் உரிச்சொல்.
அ) i, ii சரி ஆ) i சரி ii தவறு
இ) i தவறு ii சரி ஈ) i, ii தவறு

75. மணிமேகலையின் அமுதசுரபி தோன்றும் நாள்?
அ) வைகாசி பௌர்ணமி ஆ) சித்திரா பௌர்ணமி
இ) வைகாசி அமாவாசை ஈ) சித்திரா அமாவாசை

76. இவற்றில் பொருந்தாதது எது/எவை?
அ) உபபாண்டவம் ஆ) சுகுணா விலாசம்
இ) கதா விலாசம் ஈ) தேசாந்திரி

77. தமக்கென முயலா நோன்றாள் பிறர்கென முயலுநர் உண்மையானே என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?
அ) கலித்தொகை ஆ) நற்றிணை
இ) அகநானூறு ஈ) புறநானூறு

78. **"குளிர்நீரில் குளித்தால்**
**கூந்தல் அடிக்குமென்று**
**வெந்நீரில் குளித்தால்**
**மேலே கருக்குமென்று"** - என்ற பாடலில் பயின்றுவரும் அணி?
அ) இயல்பு நவிற்சி அணி ஆ) உயர்வு நவிற்சி அணி
இ) பிரிது மொழிதல் அணி ஈ) ஏகதேச உருவக அணி

79. "எடுத்தல் படுத்தல் நலிதல் அழுப்பில்
திரிபும் தத்தமிழ் சிறிது உளவாகும்"
a) தொல்காப்பியம் b) அகத்தியம்
c) நன்னூல் d) நாலடியார்

80. தவறான கூற்றைக் கண்டறிக:
அ) வெட்சிப் பூ - இட்லிப்பூ
ஆ) உழிஞைப் பூ - முடக்கொற்றான்
இ) தும்பை பூ - நீலநிறமுடையது
ஈ) வாகை பூ - மங்கிய வெண்ணிற முடையது

81. கூற்றுகளைக் கவனி
**கூற்று:** இளநாகனார் மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்.
**காரணம்:** இவர் கலித்தொகையின் மருதத்திணையில் 33 பாடல்களை பாடியுள்ளார்.
a) கூற்று சரி b) காரணம் சரி
c) கூற்று, காரணம் சரி d) கூற்று, காரணம் தவறு

82. **"கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇய"** - எனும் பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்
a) சிலப்பதிகாரம் b) கம்பராமாயணம்
c) மணிமேகலை d) சீவகசிந்தாமணி

83. கீழ்கண்டவற்றை கவனி
1) கடியலூர் உருத்திரங்கண்ணனார் சங்ககாலப்புலவர்
2) இவர் பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
a) 1,2 சரி b) 1 மட்டும் சரி
c) 2 மட்டும் சரி d) 1 தவறு 2 சரி

84. **"உலகு கிளிர்ந்தன்ன உருகெழு வங்கம்"** - எனும் அடி இடம்பெற்றுள்ள நூல்
a) நற்றினை b) குறுந்தொகை
c) அகநானூறு d) நிகண்டு

85. "ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னதுவான" - என்ற பாடலின் ஆசிரியரை கூறுக.
a) பாரதியார் b) மு.வரதநஞ்சை பிள்ளை
c) தமிழ்தென்றல் d) பாரதிதாசன்

86. "கற்றோர்க்கு கல்வி நலனே கலனல்லால் மற்றோர் அணிகலன் வேண்டாவாம்" என்ற பாடலை பாடியவர் யார்?
a) தமிழ் தென்றல் b) பெரியார்
c) குமரகுருபரர் d) பாரதியார்

87. கூற்றுக்களை கவனி.
1) திருக்குறள் வகுப்புகள் நடத்தியும், தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப் பரப்பும், பணி செய்தவர் வீ.முனிசாமி
2) வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி, திருக்குறளில் நகைச்சுவை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

3) பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்வோம் எங்கள் பாரத தேசமென்று தோள் கொட்டுவோம் என்று பாரதி சொன்னார்.
4) பாரதிதாசன் கல்வியறிவு இல்லாதவரை விலங்கு என கூறுகிறார்.

a) அனைத்தும் சரி b) 1,2,3 சரி 4 தவறு
c) 1,4 சரி 2,3 தவறு d) 1,3,4 சரி 2 தவறு

88. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது,
1) கலம்காரி, ஓவியம் - துணி ஓவியம்
2) இதிகாசம், புராண கதை- செப்பேடு ஓவியம்
3) மன்னர்கள் ஆணைகள் மற்றும் ஆவணங்கள் - ஓலைச்சுவடிகள்
4) கோட்டோவியம் - குகை ஓவியம்

a) 1தவறு b) 3,4 தவறு c) 2,3 தவறு d) ஏதுமில்லை

89. பொருத்துக
அ) சிற்பகலைகூடம் - 1. 2000
ஆ) வள்ளுவர் கோட்டம் - 2. 1981
இ) திருவள்ளுவா சிலை - 3. 1976
ஈ) உ.வே.சா நூலகம் - 4. 1973

a) 2 3 5 1 4 b) 3 4 1 5 2
c) 4 3 5 1 2 d) 4 3 1 5 2

90. காவற்பெண்டு சங்ககாலப் பெண்பாற்புலவர் எந்த மன்னனின் செவிலித்தாயாக விளங்கினார்.
a) கரிகாலன் b) கோப்பெரு நற்கிள்ளி
c) கோப்பெருஞ்சோழன் d) கிள்ளி வளவன்

91. கூற்றுகளை கவனி.
i) முண்டந்துறை புலிகள் காப்பகம் தமிழ்நாட்டில் இரண்டாவது மிகப்பெரிய காப்பகம். 985ச.கி.மீ பரப்பளவு கொண்டது.
ii) ஒரு யானை நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகளை உணவாக உட்கொள்ளும்.
iii) கரடி உரு அனைத்துண்ணி, நன்கு வளர்ந்த கரடி 150 கிலோ எடை இருக்கும்.
iv) புலிதான் ஒரு காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு. கருவுற்ற புலியானது 90 நாட்களில் 2 (அ) 3 குட்டி ஈனும்.

a) i, ii சரி b) ii, iv சரி
c) iii, iv சரி d) iii, i சரி

92. இந்திய வனமகன் என்று ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் ஜாதவுக்கு எந்த ஆண்டு பட்டம் வழங்கியது?
a) 2010 b) 2012 c) 2013 d) 2011

93. **“மாடுகட்டிப் போராடித்தால் மாளது செந்நெல்லென்று”**
a) முத்தொள்ளாயிரம் b) நாட்டுப்புறப்பாடல்
c) சீவகசிந்தாமணி d) நற்றினை

94. தண்பொருநை - கிளை ஆறுகளிர் பொருந்தாதது?
a) பச்சையாறு, மணிமுத்தாறு b) சிற்றாறு, காரையாறு
c) சேர்வலாறு, கடனாநதி d) ஆன்பொருநை,பேரியாறு

95. கீழ்கண்டவற்றுள் எது தவறானது?
1) இரசிகமணி என சிறப்பிக்கப்பட்டவர் – டி.கே.சி
2) தமது வீட்டில் “பட்டத்தொட்டி” என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தார்
3) கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர்

a) 1,2 தவறு b) 2,3 தவறு
c) 2 மட்டும் தவறு d) 1,3 தவறு

96. மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டேன்” என்று வெளிப்படையாக அறிவித்தவர்?
a) குன்றகுடி மஸ்தான் b) முகமது இஸ்மாயில்
c) முகமது அபி d) காத்தவராயன்

97. **“சுடர் ஆழியான் அடிக்கே கூட்டினேன் சொல்மாலை…”** - என்ற பாடலை இயற்றியவர்
a) பொய்மை ஆழ்வார் b) பூதத்தாழ்வார்
c) நம்மாழ்வார் d) பேயாழ்வார்

98. முனைப்பாடினியார் காலம் நூற்றாண்டுகள்
a) 13 b) 14 c) 15 d) 16

99. ‘வாழ்வு அறநிலையைப் பாதுகாவல் வாழ்வாக அமைய வேண்டும்’ – என்று கூறியவர்
a) அப்பர் b) சுந்தரர் c) மாணிக்கவாசகர் d) சம்பந்தர்

100. தேசிய நூலகநாள் அனுசரிக்கப்படும் நாள்
a) ஆகஸ்ட் 9 b) சூலை 5
c) அக்டோபர் 4 d) நவம்பர் 8

## விடைக்குறிப்பு

| No | key | No | key | No | key | No. | key |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | B | 26. | A | 51. | B | 76. | B |
| 2. | A | 27. | A | 52. | A | 77. | D |
| 3. | C | 28. | C | 53. | C | 78. | B |
| 4. | B | 29. | B | 54. | C | 79. | C |
| 5. | D | 30. | C | 55. | D | 80. | A |
| 6. | B | 31. | B | 56. | B | 81. | C |
| 7. | D | 32. | A | 57. | B | 82. | A |
| 8. | B | 33. | D | 58. | B | 83. | C |
| 9. | D | 34. | B | 59. | C | 84. | B |
| 10. | A | 35. | D | 60. | A | 85. | C |
| 11. | B | 36. | A | 61. | A | 86. | D |
| 12. | C | 37. | D | 62. | B | 87. | C |
| 13. | B | 38. | D | 63. | D | 88. | B |
| 14. | C | 39. | B | 64. | B | 89. | C |
| 15. | B | 40. | B | 65. | C | 90. | D |
| 16. | B | 41. | D | 66. | C | 91. | B |
| 17. | B | 42. | B | 67. | A | 92. | B |
| 18. | A | 43. | B | 68. | C | 93. | B |
| 19. | D | 44. | B | 69. | C | 94. | B |
| 20. | B | 45. | B | 70. | D | 95. | D |
| 21. | D | 46. | D | 71. | C | 96. | C |
| 22. | A | 47. | A | 72. | B | 97. | B |
| 23. | A | 48. | B | 73. | C | 98. | A |
| 24. | B | 49. | D | 74. | D | 99. | A |
| 25. | A | 50. | D | 75. | A | 100. | A |